www.onlineuthayan.com

பக்கங்கள்: 28

# உதயன்

சுடர் 27
கதிர் 89

வள்ளுவர் ஆண்டு 2042 மாசி 12 வியாழக்கிழமை (23/02/2012) UTHAYAN - A Lively National Tamil Daily

# மார்ச் மாத முதல் வாரத்தில் கூட்டமைப்பு இந்தியாவுக்கு

## இலங்கைக்கு எதிரான பிரேரணையை ஆதரிக்க மன்மோகனை வலியுறுத்தும்

கொழும்பு, பெப்ரவரி 23
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் மார்ச் மாத முதல் வாரத்தில் புதுடில்லிக்குச் செல்லவுள்ளனர். இந்தப் பயணத்தின் போது, ஜெனிவாவில் இலங்கைக்கு எதிரான பிரேரணையை ஆதரிக்குமாறு இந்தியத் தலைவர்களுக்குக் கூட்டமைப்பு அழுத்தம் கொடுக்கும் என்று தெரிகிறது.

ஜெனிவாவில் இலங்கைக்கு எதிராகக் கொண்டு வரப்படவுள்ள பிரேரணையை ஆதரிக்கப் போவதாக அமெரிக்கா வெளிப்படையாகவே அறிவித்துள்ளது. எனினும் அந்தப் பிரேரணையை ஆதரிப்பதா இல்லையா என்பது குறித்து புதுடில்லி தொடர்ந்து அமைதி காத்து வருகின்றது.

இந்த விடயத்தில் புதுடில்லி எந்தத் தரப்பையும் ஆதரிக்காமல் நடுநிலைமை வகிக்கக் கூடும் என்ற எதிர்வுகூறல்களும் உள்ளன. இந்த நிலையில் மார்ச் மாதம் முதல் வாரத்தில் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் இந்தியாவுக்குச் செல்லவுள்ளனர். அவர்கள் அங்கு இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கைச் சந்தித்து தமது கோரிக்கைகளை வலியுறுத்துவர் என்று தெரிவிக்கப்படுகிறது.

இந்தப் பயணத்தின்போது மன்மோகன் சிங்கைச் சந்திப்பதே கூட்டமைப்பின் முக்கிய நோக்கம் என்றபோதும் இதுவரை அவரைச் சந்திப்பதற்கான திகதி உறுதி செய்யப்படவில்லை என்று தெரிகிறது. அதேவேளை, ஜெனிவாவில் இந்தியா 27

## கோத்தபாயவின் இரகசிய கருத்தரங்கு நுவரெலியாவில்

கொழும்பு, பெப்.23
அமைச்சர்கள் மற்றும் ஆளும்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களுக்குப் பாதுகாப்பு அமைச்சு தியத்தலாவ பாதுகாப்புக் கல்லூரியில் ஒழுங்கு செய்துள்ள இரண்டு நாள் இரகசியக் கருத்தரங்கு தொடர்பாகச் சந்தேகங்கள் எழுந்துள்ளதாகக் கொழும்பு ஊடகம் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

மார்ச் 3ஆம் மற்றும் 4ஆம் திகதிகளில் நடைபெறவுள்ள இந்தக் கருத்தரங்கு முன்னதாக நுவரெலியாவில் நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது.

நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷவின் அறிவுறுத்தலுக்கிணங்க, பாதுகாப்பு காரணங்களுக்காகவே தியத்தலாவ பாதுகாப்புக் கல்லூரிக்கு இது மாற்றப் 27

## மதுரைக்கு நேரடி விமான சேவை

இலங்கையிலிருந்து மதுரைக்கு நேரடி விமான சேவை ஆரம்பிப்பது தொடர்பாக ஆய்வு செய்ய இலங்கை விமான சேவை அதிகாரிகள் விரைவில் மதுரை செல்லவுள்ளனர். இலங்கை - மதுரை விமானப் போக்குவரத்து தொடர்பாக இரு நாடுகளிடையே ஏற்கனவே ஒப்பந்தம் கைச்சாத்தாகியுள்ளது. அதேபோல், அரபு நாடுகளிலிருந்தும் மதுரைக்கு விமானம் இயக்குவது தொடர்பாக அந்த நாடுகளின் விமான நிறுவனங்களுடன் ஒப்பந்தம் செய்ய நடவடிக்கை எடுக்குமாறு மத்திய விமான போக்குவரத்து அமைச்சர் அஜித் சிங்கை, மாணிக்கம் தாகூர் எம்பி கேட்டுக்கொண்டுள்ளார்.

## ஈரானில் இருந்து எரிபொருள் இறக்குமதி நிறுத்தம்

ஈரானிலிருந்து எரிபொருள் இறக்குமதி செய்வதை நிறுத்தியுள்ளதாக இலங்கை அரசு நேற்று அறிவித்துள்ளது. ஈரானில் நிலவும் நெருக்கடி காரணமாக அங்கிருந்து எண்ணெய் இறக்குமதி செய்வதை அரசு நிறுத்தி மாற்று வழிகளை நாடியுள்ளதாகப் பெற்றோலியத்துறை அமைச்சர் சுசில் பிரேமஜயந்த நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

## எவர் தடுத்தாலும் தனியார் பல்கலைக்கழகம்

எவ்வாறான இடையூறுகள் வந்தாலும் இலங்கையில் தனியார் பல்கலைக்கழகம் அமைக்கப்படும் என உயர்கல்வி அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்க கூறியுள்ளார். கல்கிசையில் நேற்று இடம்பெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றிய போதே உயர் கல்வி அமைச்சர் இதனைத் தெரிவித்துள்ளார்.

## அரசுக்கு ஆதரவு தேடி டக்ளஸும் ஜெனிவாவுக்கு

இலங்கைக்கு எதிராக மனித உரிமை மீறல்கள் குறித்துத் தீர்மானம் நிறைவேற்ற மேற்குலக நாடுகள் முயற்சி செய்து வரும் வேளையில், டக்ளஸ் தேவானந்தாவையும் கூட்டத்தொடரில் கலந்துகொள்ள அழைத்துச் சென்றமையானது, அரசு இலங்கைக்குச் சாதகமான கருத்துக்களை முன்வைக்கவே என நம்பத்தகுந்த வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன. அவர் இலங்கைத்தீவில் நிலவும் வன்முறைகளற்ற சூழலை மேலும் வலுப்படுத்தி, இனங்களுக்கிடையில் இணக்கத்தை உருவாக்குவதற்காக மனித உரிமைகள் பேரவையில் தனது கருத்துக்களை அவர் முன்வைக்கவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## புத்தளத்தில் குண்டுகள் மீட்பு

புத்தளம், தில்லையடி பிரதேசத்தில் நேற்றுப் பிற்பகல் நூற்றுக்கும் மேற்பட்ட ஆர்.பி.ஜி. ரகக் குண்டுகள் கைப்பற்றப்பட்டுள்ளன. பிற்பகல் இடம்பெற்ற வெடிப்புச் சம்பவத்தினையடுத்து பொலிஸார் மேற்கொண்ட சுற்றிவளைப்பு தேடுதலில் போதே இந்த குண்டுகள் மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். குண்டு வெடிப்பின் போது வீடொன்று சேதமடைந்ததாக தெரிவிக்கப்படுகின்றது.

# நியாயத்தை நேரில் கூறிவிட்டேன் தீர்வை தருவது அரசின் பொறுப்பு

## சம்பந்தன் திட்டவட்டம்

கொழும்பு, பெப்.23
ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் நான் சொல்லவேண்டியதை நேரடியாகவே சொல்லிவிட்டேன். இனித் தமிழர் பிரச்சினை விடயத்தில் என்ன செய்யவேண்டும், எப்படி செய்யவேண்டும் என்பதை அரசுதான் தீர்மானிக்க வேண்டும்.

- இவ்வாறு நேற்றுக் கருத்து வெளியிட்டார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான இரா. சம்பந்தன்.



ஜனாதிபதியின் அழைப்பின் பேரில் நேற்று முன்தினம் மாலை அலரிமாளிகைக்குச் சென்றிருந்த சம்பந்தனிடம் அங்குநடைபெற்ற பேச்சின் விவரம் குறித்துக் கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு:-

பேச்சு மூலம் நியாயமான ஒரு தீர்வைப் பெற்றுக்கொள்வதில் நாம் உறுதியாக இருக்கின்றோம். அதில் எந்தவித சந்தேகமும் இல்லை. இருதரப்புப் பேச்சு இணக்கப்பாடு முதலில் ஏற்படவேண் 27

# ஜெனிவா கூட்டத்தொடரில் அமெ. உயர்மட்ட அதிகாரி

## இலங்கைக்கு எதிரான தீர்மானத்தை நிறைவேற்றுவதற்குக் காய்நகர்த்தல்

வாஷிங்டன், பெப். 23
அமெரிக்க அரசின் வெளியுறவுத்துறை அதியுயர் மட்ட இராஜதந்திரியொருவர் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் ஜெனிவா அமர்வில் பார்வையாளராகக் கலந்துகொள்ளவிருப்பதாக இராஜதந்திர வட்டாரங்கள் நேற்றுத் தெரிவித்தன.

ஐ.நா. மனித உரிமைகள் ஆணைக்குழுவின் இம்முறை அமர்வின்போது இலங்கைக்கு எதிரான தீர்மானமொன்றை கொண்டுவருவதில் அமெரிக்கா வெகுவான அக்கறை காட்டிவருகின்ற நிலையில் மேற்படி தகவல் நேற்று வெளியாகியுள்ளது.

மனித உரிமைகள் ஆணைக்குழுவின் அமர்வுகளில் இலங்கைக்கு எதிரான தீர்மானம் மார்ச் முதல் வாரத்தில் முன்வைக்கப்படும் சந்தர்ப்பத்தில் அன்றையதினம் அமெரிக்காவின் அந்த உயர்மட்ட இரா 27

# ஜெனிவாவுக்கு கொண்டு செல்லும் திட்டத்தை மூடி மறைக்கிறது அரசு

## குற்றம் சாட்டுகிறார் ரணில்

கொழும்பு, பெப்.23
நல்லிணக்க ஆணைக் குழுவினால் முன்வைக்கப்பட்டுள்ள பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதற்கு நாடாளுமன்றத்தின் ஆதரவையும் ஒத்துழைப்பையும் வேண்டிய அரசு இவ்விடயங்கள் தொடர்பாக ஜெனிவா மாநாட்டில் மனித உரிமை பேரவைக்குச் சமர்ப்பிக்கவுள்ள தேசிய செயல்திட்டம் குறித்து நாடாளுமன்றத்துக்கு மூடி மறைப்பது ஏன்? என எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக் கிரமசிங்க கேள்வி 27

# மேற்குலகுக்குத் தகுந்த பாடம்

## சூளுரைக்கிறார் விமல்

கொழும்பு, பெப்.23
மத்திய கிழக்கு நாடுகளில்ஏற்படுத்தியதுபோன்று இலங்கையிலும் வசந்தப் புரட்சியை ஏற்படுத்துவதற்கு அமெரிக்கா உள்ளிட்ட மேற்குலகம் கடும் பிரயத்தனத்தில் ஈடுபட்டாலும் அதனை முறியடிப்பதற்கான சக்தி எமக்குள்ளது. வசந்தப் புரட்சியை ஏற்படுத்தும் ஏகாதிபத்தியவாதிகளுக்கு இலங்கையில்தக்க பாடம்புகட்டப்படும் - என்று சூளுரைத்துள்ளார் வீடமைப்பு நிர்மாணத் துறை அமைச்சர் விமல் வீரவன்ஸ.

'13 பிளஸ்' 27

## சவேந்திர சில்வாவால் ஆசிய நாடுகளுக்கு கடும் அழுத்தம்

கொழும்பு,பெப். 23
ஐ.நா. அமைதிப்படை நடவடிக்கைகள் தொடர்பான சிறப்பு ஆலோசனைக் குழுவுக்கு ஆசிய நாடுகள் குழுவின் சார்பில் நியமிக்கப்பட்ட, மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வாவை விலக்கிக் கொள்ளுமாறு சர்வதேச அளவில் அழுத்தங்கள் அதிகரித்து வருகின்றன எனத் தெரியவருகிறது.

போர்க்குற்றம் சாட்டப்பட்ட மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வா இந்த ஆலோசனைக் குழுவுக்கு நியமிக்கப்பட்ட விவகாரம் கடும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

இந்தநிலையில் அமெரிக்கா தலைமையிலான மேற்குலக நாடுகளும், மனிதஉரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளையும், பல்வேறு மனித உரிமை அமைப்புகளும், 27

# இறுதி போர்க் குற்றச் சாட்சியான அமெ. ஊடகவியலாளர் படுகொலை

## சிரியாவில் செய்தி சேகரிப்பு வேளை

டமஸ்கஸ், பெப்.23
இலங்கைப் படைகளின் போர்க்குற்றங்களுக்கு சாட்சியாக இருந்தவரும், போரின் இறுதிக்கட்டத்தில் சரணடைய முன்வந்த விடுதலைப் புலிகளின் தலைவர்களுக்கும் அனைத்துலக சமூகத்துக்கும் இடையில் தொடர்பாளராக செயற்பட்டவருமான லண்டன் சண்டே ரைம்ஸ் ஊடகவியலாளர் மேரி கொல்வின் சிரியாவில் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.



ஹோம்ஸ் நகரில் அவர் தங்கியிருந்த வீட்டின் மீது நடத்தப்பட்ட எறிகணைத் தாக்குதலிலேயே ஊடகவியலாளர் மேரி கொல்வினும், பிரெஞ்சு படப்பிடிப்பாளரும் கொல்லப்பட்டுள்ளனர்.

மூன்றாம்கட்ட ஈழப் போரின் இறுதிப்பகுதியில்- 2001 ஏப்ரல் மாதம் வன்னிப் பகுதி நிலவரங்கள் குறித்து செய்தி சேகரிக்கச் சென்றிருந்த மேரி கொல்வின், வவுனியாவில் முன்னரங்க நிலையைக் கடக்க முயன்றபோது, 27

# சர்வதேசக் குற்றவியல் நீதிமன்றில் இலங்கையர் நிற்கவேண்டி வராது

## இது அரசின் போலி நாடகம் என்கிறது ஐ.தே.க.

கொழும்பு, பெப்.23

சர்வதேசக் குற்றவியல் நீதிமன்றத்தில் ஜனாதிபதியும், இராணுவத்தினரும் குற்றவாளிகளாக நிற்கவேண்டிய நிலை வராது. இதனைத் துரும்பாகப் பயன்படுத்தி அரசு நாட்டு மக்களை அச்சுறுத்தி வருகின்றது. ஜெனிவா மனித உரிமைகள் ஆணைக் குழுவில் இலங்கைக்கு எதிரான சர்வதேச அழுத்தங்களை எதிர்கொள்வதற்கான அடித்தளத்தை அமைத்துக் கொள்ளாமல் அரசு களமிறங்கப்போகின்றது. நாட்டுக்கும் நாட்டு மக்களுக்கும் பெரும் பாதிப்பை ஏற்படுத்துவதற்கே அரசு முயற்சிக்கின்றது என ஐ.தே.க. குற்றஞ்சாட்டியுள்ளது.

நாட்டின் இனப்பிரச்சினைத் தீர்வு விடயத்தில் முக்கிய பங்காளியான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைப் புறக்கணித்துவிட்டு அரசு தன்னிச்சையாகத் தீர்மானங்களை எடுக்கமுடியாது. அவ்வாறு தீர்மானங்களை எடுக்குமாயின், அவை நாட்டில் பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தும் என ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க எச்சரிக்கை விடுத்துள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவரின் உத்தியோகபூர்வ இல்லத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இதன்போது அவர் மேலும் கூறியவை வருமாறு:-

ஜனாதிபதியையும், இராணுவத்தினரையும் சர்வதேச குற்றவியல் நீதிமன்றில் குற்றவாளிகளாக இனங்காண்பிப்பதற்கு எதிர்க்கட்சிகள் சதிசெய்து வருகின்றன என அரசு கூறுகின்றது. இது முற்றிலும் பொய். ஏனெனில், 2002 ஆம் ஆண்டு சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் தொடர்பாகக் கொண்டுவரப்பட்டரோம் உடன்படிக்கையில் எமது கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க கைச்சாத்திடவில்லை. அதனால் இலங்கையின் எந்தப் பிரஜையும் சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் குற்றவாளிகளாக நிற்கவேண்டிய தேவையில்லை. அரசு இதைக் காரணங்காட்டிக்கொண்டு நாட்டு மக்களை அச்சுறுத்தும் வகையில் பொய்யானவற்றைக் கூறிவருகின்றது.

ஜெனிவா மனித உரிமைகள் ஆணைக்குழுவில் சர்வதேச தரப்பிலிருந்து இலங்கைக்கு எதிராக அழுத்தங்கள் பிரயோகிக்கப்படும் என்பதை அரசு அறிந்திருந்தும்கூட, இவற்றிற்கு முகங்கொடுப்பதற்கு சரியான அடித்தளத்தை இடாமல் கூட்டத் தொடரில் களமிறங்குகின்றது. இதனால் நாடும் நாட்டு மக்களுமே பெரும் பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்கவேண்டிய அவலநிலை ஏற்படும். மனித உரிமைகள் ஆணைக்குழுவில் வெளிக்கிளம்புகின்ற எதிர்ப்புகளுக்கு முகங்கொடுப்பதற்கு அரசு இராஜதந்திர ரீதியில் நடவடிக்கை எடுக்க வேண்டும். ஆனால், அப்படியான எந்தவித நடவடிக்கைகளிலும் அரசு ஈடுபடவில்லை என்பது அவர்களின் செயற்பாடுகளினூடாகத் தெரிகின்றது - என்றார்.

(த-சி)

## சமுர்த்தி நிவாரணப் பொருள்களின் தரத்தை உறுதிப்படுத்த ஏற்பாடு

யாழ்ப்பாணம், பெப்.23

சமுர்த்தி நிவாரணத்துக்கு விநியோகிக்கப்படும் பொருள்களின் தரங்களைப் பாவனையாளர்கள் உறுதிப்படுத்திக் கொள்ளவதற்கு உரிய வசதிகள் சங்கக் கிளைகளில் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக யாழ். மாவட்டக் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் வி.கே. அருந்தவநாதன் தெரிவித்தார்.

ஜனவரி, பெப்ரவரி ஆகிய இரண்டு மாதங்களுக்குமான சமுர்த்தி நிவாரணம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் ஊடாக பயனாளிகளுக்கு விநியோகிக்கப்படவுள்ளது.

இந்த நிவாரண விநியோகம் தொடர்பான சங்கப் பொது முகாமையாளர்களுடனான கலந்துரையாடல் நேற்று யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்றது.

இந்தக் கலந்துரையாடல் குறித்து கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் தெரிவித்தவை வருமாறு:-

நிவாரணத்துக்கு விநியோகிக்கப்படும் அரிசி, சீனி, கோதுமைமா, பருப்பு போன்ற அத்தியாவசியப் பொருள்களின் மாதிரிகளை கிளைகளின் முன்பாக பயனாளிகள் பார்க்கக் கூடியவாறு தொங்கவிடவேண்டும்.

*குறைபாடுகள் இருந்தால் சங்கங்களின் பொது முகாமையாளர்களுக்கு முறைப்பாடு செய்யமுடியும்.*

பாவனையாளர்கள் தாம் கொள்வனவு செய்யும் பொருள்களின் தரத்தை இந்த மாதிரிகளின் ஒப்பிட்டுப் பார்த்து அதில் குறைபாடுகள் இருந்தால் சங்கங்களின் பொது முகாமையாளர்களுக்கு முறைப்பாடு செய்யமுடியும்.

அதேபோன்று சங்கங்களுக்கான பொருள் கொள்வனவின் போதும் முன்னர், மாதிரிகள் பெறப்பட்டுத் தரம் உறுதிப்படுத்தப்பட்ட பின்னரே பொருள் கொள்வனவு இடம்பெறும்.

கூட்டுறவுச் சங்கங்கள் ஊடாகத் தரமான பொருள்களைப் பாவனையாளர்களுக்கு விநியோகிப்பதற்காகவே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது. சமுர்த்தி நிவாரணப் பொருள்களின் மாற்றங்கள் செய்யும் சங்கங்களுக்கு எதிராகக் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் - என்றார். (த-17)

## நஞ்சருந்திவிட்டு பொலிஸ் நிலையம் சென்ற யுவதி

நஞ்சருந்திவிட்டு நஞ்சுப் போத்தலுடன் பொலிஸ் நிலையத்துக்குச் சென்ற யுவதி மயங்கிய நிலையில் சிகிச்சைக்காக சாவகச்சேரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இந்தச் சம்பவம் நேற்றுப் பிற்பகல் 3.30 மணியளவில் இடம்பெற்றது. தோட்டப் பயிர்களுக்குப் பாவிக்கும் நஞ்சையே அருந்திவிட்டு அந்தப் போத்தலுடன் சாவகச்சேரிப் பொலிஸ் நிலையத்துக்குச் சென்றுள்ளார் யுவதி. அங்கு சென்றதும் அவர் மயங்கி விழுந்துவிட்டார்.

உடனடியாக அவர் சாவகச்சேரி வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார். தற்போது அவர் தேறி வருவதாகத்தெரிவிக்கப்படுகிறது. (த-4)



இலங்கை வந்துள்ள மாலைதீவின் விசேட பிரதிநிதி மொஹமட் வஹுதுபீன் அலரி மாளிகையில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை நேற்றுச் சந்தித்து கலந்துரையாடினார்.

## மு.காவுக்குள் மீண்டும் பிளவு?

கொழும்பு, பெப். 23

முஸ்லிம் காங்கிரஸுக்குள் மீண்டுமொரு பிளவு ஏற்படுவதற்கான சூழல் தற்போது உருவாகியிருப்பதாக அரசியல் வட்டாரங்களிலிருந்து நம்பகரமாகத் தெரிய வருகின்றது.

கல்முனைத் தொகுதியிலேயே இப்பிளவுக்கான பிள்ளையார் சுழி போடப்பட்டுள்ளது எனவும் அவ்வட்டாரங்கள் குறிப்பிட்டன.

கல்முனை மாநகரில் பல்வேறு அபிவிருத்திப் பணிகளை ஆரம்பித்து வைக்கும் முகமாக கிழக்கு மாகாண ஆளுநர் நேற்றுமுன்தினம் வருகைதரவிருந்தார். இவரின் இந்த வருகையை கல்முனை மேயரே (மு.கா.) ஒழுங்குசெய்திருந்தார். ஆனால், ஆளுநரின் வருகை திடீரெனத் தடுத்துநிறுத்தப்பட்டதே மு.காவுக்குள் பாரிய பிளவொன்றைத் தோற்றுவித்துள்ளது.

மு.காவுக்குள் மீண்டுமொரு பிளவு விரைவில் ஏற்படுவது நிச்சயமென கட்சியின் முக்கிய பிரமுகர் ஒருவர் நேற்று 'உதயனு'க்குப் பிரத்தியேகமாகக் கருத்துத் தெரிவித்து உறுதிசெய்தார்.

கல்முனைக்கான ஆளுநரின் வருகையைத் தடுத்தமைக்கு வேறு காரணங்கள் கூறப்பட்ட போதிலும், மு.காவின் இரண்டு மாகாண சபை உறுப்பினர்கள் பின்னணியில் பலமாகவிருந்து செயற்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதனையடுத்து கிழக்கு ஆளுநரைக் கல்முனைக்கு அழைக்கும் கல்முனை மேயருக்கு உறுதுணையாகச் செயற்பட்ட மு.கா.எம்.பி. ஹரிஸுக்கும் கட்சித்தலைவருக்குமிடையில் கடும் வாக்குவாதம் ஏற்பட்டது எனவும் நம்பகரமாகத் தெரிய வருகின்றது.

கிழக்கு மாகாண ஆளுநரை கல்முனைக்குச் செல்லவிடாது மு.கா. தலைவரே தடுத்துள்ளார். கட்சியின் மாகாணசபை உறுப்பினர்கள் இருவரதும் அழுத்தம் காரணமாகவே இந்த விஜயம் தடுக்கப்பட்டதாக கல்முனை மேயரின் மிக நெருக்கமான வட்டாரமொன்று 'உதயனு'க்கு சுட்டிக்காட்டியது.

இதேவேளை, மாகாண சபை உறுப்பினர்கள் இருவரதும் பேச்சுக்கே மு.கா. தலைவர் தொடர்ச்சியாகச் செவிசாய்க்கிறார் என்ற குற்றச்சாட்டைச் சுமத்திவரும் கல்முனைத் தொகுதி மு.கா. நாடாளுமன்ற உறுப்பினர் எச்.எம்.எம். ஹரீஸ், கட்சியில் தொடர்ந்து இருப்பதா, இல்லையா என்பது குறித்து தனது நெருக்கமான சிலருடன் கலந்தாலோசித்து வருவதாகக் கட்சிப்பிரமுகரொருவர் நம்பகமாக 'உதயனு'க்கு சுட்டிக்காட்டினார்.

கல்முனை மாநகரசபைத் தேர்தலில் கூட நாடாளுமன்ற உறுப்பினர் ஹரீஸ் கட்சித் தலைமையால் துரோகமிழைக்கப்பட்டும் கூட கல்முனை மக்கள் அவரது கருத்துக்கே முன்னுரிமையளித்து அவர் விரும்பியவரை மேயராக்கினார்கள் என்று குறிப்பிட்ட மேற்படி கட்சிப் பிரமுகர், நாடாளுமன்ற உறுப்பினர் ஹரீஸ் கட்சிமாறி கல்முனையை அபிவிருத்தி செய்யவேண்டுமென சுட்டிக்காட்டினார்.

மேற்படி விடயங்கள் தொடர்பாக கல்முனை மேயர் சிராஸ் மீராசாஹிபை தொலைபேசியூடாகத் தொடர்புகொண்டு வினவியபோது, ஆளுநரின் கல்முனை விஜயத்தைத் தடுத்ததில் கட்சியின் மாகாண சபை உறுப்பினர்களுக்கு முக்கிய பங்கு உண்டு என்று தெரிவித்தார்.

(த-சி)

## 95 ஆயிரத்து 860 வாக்காளர்கள் தவறான முறையில் விண்ணப்பம்

### மீளத் திருத்த நடவடிக்கை என்கிறார் குகநாதன்

யாழ்ப்பாணம், பெப்.23

யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்தில் தமது தேசிய அடையாள அட்டை இலக்கத்தைத் தவறாக அல்லது குறிப்பிடாமல் 95 ஆயிரத்து 860 பேர் வாக்காளர் பெயர்ப் பதிவுக்கு விண்ணப்பித்துள்ளதாக யாழ். மாவட்ட செயலக உதவித் தேர்தல் ஆணையாளர் பொ. குகநாதன் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

2011 ஆம் ஆண்டுக்கான வாக்காளர் பெயர் பட்டியல் பதிவு நடவடிக்கைகள் 'பி.சி.' படிவத்தினூடாக மேற்கொள்ளப்பட்டன. இதன்போது 95 ஆயிரத்து 860 பேர் தமது தேசிய அடையாள அட்டையின் இலக்கத்தை தவறாகக் குறிப்பிட்டோ அல்லது குறிப்பிடாமலோ அனுப்பியுள்ளனர்.

இவர்களில் தவறாகத் தேசிய அடையாள அட்டை இலக்கத்தைக் குறிப்பிட்டு அனுப்பிய ஆயிரத்து 838 பேருக்கு கடிதம் அனுப்பப்பட்டு, அவர்களில் 709 பேர் தமது தேசிய அடையாள அட்டை இலக்கத்தைத் திருத்தி அனுப்பியுள்ளனர். அதிலும் 682 பேரினது இலக்கங்கள் மட்டுமே ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளன.

அத்துடன் மக்கள் மீளக் குடியமர அனுமதிக்கப்படாத இடங்களில் பழைய வாக்காளர் பெயர் பட்டியலே மீண்டும் பயன்படுத்தப்பட்டுள்ளது. இந்தப் பகுதிகளில் முன்னர் தேசிய அடையாள அட்டை இலக்கத்தைக் குறிப்பிடாமல் பதிவு செய்திருந்தனர். இவர்களது எண்ணிக்கையும் 95 ஆயிரத்து 860 பேரினுள் உள்ளடக்கப்பட்டுள்ளது.

இருப்பினும் தனியே 52 ஆயிரத்து 154 பேர் தேசிய அடையாள அட்டை இலக்கம் குறிப்பிடாமல் அனுப்பியுள்ளமை இனங்காணப்பட்டுள்ளது. இவ்வாறு அடையாள அட்டை இலக்கத்தை குறிப்பிடத் தவறியவர்களுக்கு அவர்களது அடையாள அட்டை இலக்கத்தை மீள இணைத்துக்கொள்ளவும், இல்லாதவர்களுக்கு அதற்கான காரணங்களைக் கோரியும் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது- என்றார். (10-05)

## ஆர்ப்பாட்டத்தில் பொலிஸார் துப்பாக்கிச்சூடு நடத்தவில்லை

### அமைச்சர் தினேஷ் கூறுகிறார்

கொழும்பு, பெப்.23

ஆர்ப்பாட்டத்தின்போது பொலிஸார் துப்பாக்கிப் பிரயோகம் செய்யவில்லை. ஜனநாயக நாட்டில் பொதுமக்கள் தமது அடிப்படை மனித உரிமை மற்றும் தேவைகள் தொடர்பாக அமைதியான போராட்டங்களை நடத்த பொலிஸாரிடமோ அல்லது இராணுவத்தினரிடமோ அனுமதி பெறவேண்டிய அவசியம் இல்லை. அந்த உரிமை அனைவருக்கும் உண்டு - என்கிறார் ஆளும் கட்சிப் பிரதம கொறடாவும் அமைச்சருமான தினேஷ் குணவர்த்தன.

நேற்று நாடாளுமன்றத்தில் ஜே.வி.பி. உறுப்பினர் அனுர குமார திஸாநாயக்க பொதுமக்கள் அமைதியாக நடத்தும் போராட்டங்கள் மீது இராணுவமும் பொலிஸாரும் மேற்கொள்ளும் அடக்குமுறைகள் தொடர்பாக விசேட உரை ஒன்றை நிகழ்த்தினார்.

இதற்குப் பதில் அளித்த அமைச்சர் தினேஷ் குணவர்த்தன மேலும் கூறியதாவது:

*அரச உடைமைகளுக்கு சேதம் ஏற்படுத்தியதால் குழப்பம் ஏற்பட்டது.*

கடந்த 2011 ஆம் ஆண்டில் நாடளாவிய ரீதியில் 111 ஆர்ப்பாட்டங்கள் இடம் பெற்றுள்ளன. ஆனால் எந்த ஒரு ஆர்ப்பாட்டத்திலும் இராணுவ பொலிஸ் அடக்கு முறைகள் மேற்கொள்ளப்படவில்லை.

அதேபோன்று இவ்வருடத்திலும் ஆறு ஆர்ப்பாட்டங்கள் இடம் பெற்றுள்ளன. ஆனால் கடைசியாக இடம் பெற்ற இரண்டு ஆர்ப்பாட்டங்கள் வன்முறையாக வெடித்ததனாலும், அரச உடைமைகளுக்கு சேதம் ஏற்படுத்தியதாலுமே கண்ணீர்ப்புகை குண்டுகளைப் பாவிக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. என்றாலும் கூட ஆர்ப்பாட்டக்காரர்கள்மீது எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் துப்பாக்கி வேட்டுக்களைத் தீர்க்கவோ குண்டாந்தடிப்பிரயோகமோ மேற்கொள்ளப்படவில்லை - என்றும் கூறினார் தினேஷ் குணவர்த்தன. (த-2)

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## உறுதி குலையாத அரசியல் ஆண்மை காலம் கழிந்தாவது பயன் தரட்டும்

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் கூட்டத் தொடர் ஆரம்பமாவதற்கு இடைவெளி நாள்களை, இலங்கை அரசாங்கம் பதற்றத்துடனும் பரபரப்புடனும் விரல் விட்டு இறங்கு வரிசையில் (Count down) எண்ணிக்கொண்டிருக்கிறது என்பதனை எவரும் சொல்லித் தெரிய வேண்டியதில்லை. உலகளாவிய ரீதியில் இது இப்போது குறிப்பிடத்தக்க ஒரு விவகாரமாகிவிட்டது.

மூன்று ஆண்டுகளுக்கு முன்னர், இலங்கையில், அரசாங்கப் படைகளுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நடைபெற்ற இறுதிப்போரின் போது, இடம்பெற்றதாகக் கூறப்படும் மனித உரிமை மீறல்கள் குறித்து சர்வதேச மட்டத்திலான, தரத்திலான நீதி விசாரணை நடத்தப்பட வேண்டும் என்ற பிரேரணை இக் கூட்டத்தொடரில் கொண்டு வரப்படவுள்ளது. இந்தப் பிரேரணை அமெரிக்காவின் அழுத்தத்தின் பேரில் கொண்டு வரப்படும் என்பது அனேகமாக நிச்சயமாகி விட்டது.

இந்தப் பிரேரணையை எவ்வாறெனினும் ஜெனிவா மாநாட்டில் கொண்டுவராமல் தடுத்து விட வேண்டும், இல்லை எனில் தோற்கடித்து விட வேண்டும் என்பதற்காக, இலங்கை அரசாங்கம் தன்னாலான, தனது சக்திக்கு உட்பட்ட சகல முயற்சிகளையும் துரிதமாக மேற்கொண்டு வருகிறது. வெளிவிவகார அமைச்சர் ஜி.எல். பீரிஸ், மனித உரிமைகளுக்கான ஜனாதிபதியின் விசேட தூதுவர் அமைச்சர் மஹிந்த சமரசிங்க ஆகியோரும் அவர்களின் பரிவாரங்களும் ஜெனிவா விரைந்துள்ளன.

ஐ.நா. மனித உரிமை ஆணைக்குழுவின் கூட்டத்தில் பங்குபற்றவுள்ள நாடுகளின் பிரதிநிதிகளைச் சந்தித்து, இலங்கை தொடர்பில் கொண்டு வரப்படும் பிரேரணையை ஆதரிக்க வேண்டாம் என்று ஆதரவு திரட்டுவதே அங்கு சென்றுள்ள இலங்கை அரச குழுக்களின் குறித்துரைக்கப்பட்ட பணி (Assignment) ஆகும். இன்னொரு குழு நேர காலத்துடனேயே ஆரம்ப ஆதரவு திரட்டுதலைச் செய்து முடித்துத் திரும்பி உள்ளது.

இந்தக் கலகலப்புக்கு இடையில், -

மனித உரிமைகள் மற்றும் அமைதியை நிலைநாட்டுவதற்கான உலகப் புகழ் பெற்ற நிறுவனமான, அமைப்பான ' த எல்டேர்ஸ்' (The Elders) குழுமம் இலங்கைக்கு எதிரான மனித உரிமை மீறல்கள் குறித்த பிரேரணையை ஆதரிக்குமாறு ஐ.நா. அங்கத்துவ நாடுகளிடம் கோரியுள்ளது, வலியுறுத்தி உள்ளது; அவசர வேண்டுகோள் விடுத்துள்ளது. இலங்கை அரசாங்கத்தின் இதயத்தைப் பதறச் செய்யும் புதிய, காத்திரமான, கனமான இடி என்று கூட இதனைக் கொள்ளலாம்.

உலக சமாதானத்தையும் மனித உரிமைகளையும் வலியுறுத்தி வளர்க்கும் இந்த அமைப்பில், ஜனநாயக விடுதலைப் போராளியான தென்னாபிரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி நெல்சன் மண்டேலாவை தலைவராகக் கொண்டு இயங்கும் ' த எல்டேர்ஸ்' அமைப்பில், சர்வதேச மட்டத்தில் மக்களைத் திரட்டி மனித உரிமைகளுக்காகப் போராடிய பல உலகத் தலைவர்கள் அங்கத்தவர்களாக உள்ளனர்.

முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி ஜிம்மி கார்ட்டர், முன்னாள் ஐ.நா. செயலாளர் கொபி அனான், முன்னாள் பின்லாந்து ஜனாதிபதி மார்ட்டி அட்ஸாரி, ஐ.நா. மனித உரிமை ஆணைக்குழுவின் முன்னாள் ஆணையாளர் மேரி றொபின்சன், பேராயர் எட்மன் டுட்டு, சர்வதேச நீதிபதி கிரேஸா மச்சல், அல்ஜீரியாவின் சுதந்திரப் போராளி எனக் கருதப்படும் லக்தர் ப்ராஹ்மி உட்பட உலகப் புகழ்பெற்ற பல தலைவர்கள், பிரமுகர்கள் 'த எல்டேர்ஸ்' அமைப்பில் அங்கம் வகிக்கின்றனர்.

மனித உரிமைகளும் ஜனநாயக உரிமைகளும் அதன்பாற்பட்ட கோட்பாடுகளும் கசங்கலின்றி மக்களுக்கு வழங்கப்பட வேண்டும் என்பதில் உறுயுடனும், காத்திரமான அமைவிலும் உழைக்கும், உலகப் பிரசித்தி பெற்றவர்களின் மூத் தோர் அமைப்பு - உலகளாவிய ரீதியில் செல்வாக்கு மிகுந்த அமைப்பு - இத்தகையை கோரிக்கையை விடுத்திருப்பது மனித நேயத்துக்கு வலுவூட்டும் சிறப்பம்சமாக அமைகிறது.

இலங்கையின் இறுதிப் போரின் போது இடம்பெற்றதாகக் கூறப்படும் மனித உரிமை மீறல்கள் குறித்தான விசாரணைக்கு, சர்வதேச அழுத்தம் தேவையென்று மூத்தோர் அமைப்பு வலியுறுத்தி உள்ளதால், இலங்கை அரசு தன்மீது விழப்போகும் இறுங்குப் பிடியில் இருந்து (பேச்சு வழக்கில் பூட்டிலிருந்து) விடுபடுவது மிகவும் கடினமான காரியமாகி விட்டது.

இத்தகைய கஷ்டத்தை உணர்ந்து, இலங்கை அரசு, தமிழ் மக்களின் பிரதான அரசியல் கட்சியான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை, ஏதோ ஒரு வகையில் உத்தேச நாடாளுமன்றத் தெரிவுக்குழுவுக்குள் இழுத்துப்போட முயல்கின்றது. அவ்வாறு செய்வதன் மூலம் தமிழர் தரப்புத் தன்னுடன் சமரசமாவதற்குத் தயாராகி விட்டது, இணங்கி விட்டது என்று சர்வதேசத்துக்கு பூச்சு முகம் காட்டுவதற்கு மெத்தவும் அவசரப்படுகிறது. அதன் கடைசிக்கட்ட அங்கமே, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனை தனிப்பட்ட முறையில் அழைத்து, அவரது கட்சியை அரசின் உத்தேச நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் பங்குபற்றுமாறு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நேற்றுமுன்தினம் விடுத்த வேண்டுகோள்; அக்குழுவில் கூட்டமைப்பு சார்பில் கலந்துகொள்வோரின் பெயர்களைத் தருமாறு கேட்ட 'ராஜதந்திரம்' கலந்த வேண்டுதல்.

கடந்த வருடத்திலும், ஐ.நா. மனித உரிமை ஆணைக்குழுவின் கூட்டத்தொடரில், போர்க்குற்றச்சாட்டு குறித்த பிரேரணை கொண்டு வரப்படலாம் என்ற அச்சத்தில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரை ஜனாதிபதி பேச்சுக்கு அழைத்ததும், அது நிராகரிக்கப்பட்டதும் ஞாபகமிருக்கலாம்.

அப்போதும், நொந்து நொடிந்து, போரில் தமது உறவுகளைக் கொத்துக்கொத்தாகப் பறிகொடுத்த தமிழ் மக்களுக்குத் துரோகம் இழைக்க விரும்பாது, கூட்டமைப்பு அரசாங்கத்தின் தாலாட்டை ஒலிக்க விடாது, விழவிடாது தனது செவியைப் பஞ்சினால் இறுக அடைத்துக்கொண்டது.

போர்க் குற்றச்சாட்டு விசாரணைகள் தொடர்பில் சர்வதேச மட்டத்தில் வெண்ணெய் திரண்டு வரும் வேளை பார்த்து, தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு மாயமான் காட்டி, தனது ஆட்சிப் பலத்தையும் அதிகார பலத்தையும் முறுக்கி இறுக்கி முஷ்டி தட்டுவதன் மூலம், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை தனது பக்கம் இழுப்பதற்கு-

அரச தலைமைப்பீடம் வீசிய சூழ்ச்சி வலைக்குள் விழாமல், தனது மக்கள் மீது மண் விழாமல் தடுக்கும் வகையில், கொண்ட கொள்கையை இறுகப்பற்றி, ஆணித்தரமாக, அழுத்தம் திருத்தமாகப் பதிலளித்து, நிராகரித்துத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரின் ஆளுமையும் சாதுரியமும் வரவேற்கப்பட வேண்டியவை, பாராட்டப்பட வேண்டியவை. தருணம் பார்த்து வைக்கப்பட்ட பொறிக்கு அருகிலேனும் செல்லாமல் தூர விலகி வந்தமை போன்று, ஈழத் தமிழ் மக்களின் அரசியல் தலைவர்கள் இனிமேலும் செயற்படுவார்கள் என்ற பாடம் அரசாங்கத்துக்குப் புகட்டப்பட்டிருக்கிறது. நியாயத்தின் பக்கம் நின்று தமது மக்களின் உரிமைகளை வென்றெடுக்கும் அரசியல் ஆண்மை, உறுதி தலைமைத்துவத்துக்கு உள்ளது போன்று ஏனையவர்களிடமும் அது பரவிப் படரட்டும்.

# போக்குவரத்துக் கொடுப்பனவை உயர்த்துமாறு கோரிக்கை

## மருத்துவர்கள் சங்கம் ஜனாதிபதிக்குக் கடிதம்

கொழும்பு.பெப்.23

மருத்துவர்களின் போக்குவரத்துக் கொடுப்பனவை 29 ஆயிரம் ரூபாவாக அதிகரித்து வழங்குமாறு அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

மருத்துவர் ஒருவருக்குத் தற்போது மாதமொன்றில் வழங்கப்பட்டு வரும் போக்குவரத்துக் கொடுப்பனவான 15ஆயிரம் ரூபா எந்தவிதத்திலும் போதுமானதல்ல எனவும், இந்தக் கொடுப்பனவை 29ஆயிரம் ரூபா வரையில் அதிகரித்து வழங்குமாறும் அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் செயலாளர் மருத்துவர் சந்திக்க எப்பிட்டகடுவ ஜனாதிபதிக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

மருத்துவர்களுக்கான போக்குவரத்துக் கொடுப்பனவு 29ஆயிரம் ரூபாவாக அதிகரிக்கப்படும் என்று கடந்த 2007 ஆம் ஆண்டில் ஜனாதிபதி உறுதியளித்திருந்தமையை சுட்டிக்காட்டி, அதற்கமைய அந்த உறுதி மொழியை நிறைவேற்றுமாறு வேண்டி நிற்பதாகவும் அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

நாட்டில் யுத்தமொன்று நிலவியதன் காரணமாகக் கடந்த காலத்தில் இந்தக் கோரிக்கை பிற்போடப்பட்டிருந்தது.

தற்போது எரிபொருள்களின் விலைகள் உயர்வடைந்துள்ள நிலையில் போக்குவரத்துக் கொடுப்பனவை அதிகரித்துக் கொள்ளும் அவசியம் நேர்ந்துள்ளதாகவும் இந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-22)

# மகஸீன் சிறைச்சாலைக்குள் 50 கைத்தொலைபேசிகள்

## சோதனையில் சிக்கின

கொழும்பு.பெப்.23

பொறளை மகஸீன் சிறைச்சாலைக்குள் கடந்த 19 ஆம் திகதி திடீர் தேடுதல் வேட்டையொன்று மேற்கொள்ளப்பட்டது. இதன் போது சிறைச்சாலைக் கூடங்களில் இருந்து 50 கைத்தொலைபேசிகள், வேறு சட்டவிரோத உபகரணங்களும் கைப்பற்றப்பட்டுள்ளதாக சிறைச்சாலைகள் தலைமையகத்தின் உயரதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இந்தச் சிறைச்சாலைக்குள் இருந்து இவ்வளவு தொகையான கைத்தொலைபேசிகள் கைப்பற்றப்பட்டிருப்பது இதுவே முதல் தடவை எனவும் அவர் மேலும் கூறினார்

குறிப்பாகப் போதைப் பொருள் விற்பனை மற்றும் பாதாள உலக அடாவடித்தனங்கள், குற்றங்கள் ஆகியவற்றுடன் தொடர்புடைய பிரபல சந்தேக நபர்கள் தங்கவைக்கப்படுள்ள சிறைக் கூடங்கள் அனைத்தும் அன்றைய தினம் கடும் சோதனைக்குள்ளாக்கப் பட்டதெனவும் அவர் கூறினார் .

இவர்கள் மீது சட்டநடவடிக்கைகள் மேற்கொள்வதற்காக இந்தச் சந்தேக நபர்கள் சிறைச்சாலைகள் நீதி ஆயமொன்றின் முன் நிறுத்தபட்டுள்ளதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

கடந்த மாதம் 24 ஆம் திகதி மகஸீன் சிறச்சாலையில் இடம்பெற்ற மோதலின் பின்புலத்தில் இந்தத் தரப்பினரின் பங்களிப்பு இருந்ததாகவும் விசாரணைக் குழுக்களுக்குத் தகவல்கள் கிடைத்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (த-22)

## "உங்களுக்குத் தெரியுமா?" பாடசாலை மட்டப் போட்டி

யாழ்ப்பாணம், பெப்.23

வடமாகாணத் திணைக்களத்தின் ஏற்பாட்டில் பாடசாலை மட்டத்தில் ''உங்களுக்குத் தெரியுமா?'' போட்டி நடத்தப்படவுள்ளது.

இதற்கென மாகாணக் கல்வித் திணைக்களத்தால் பாடசாலைகளில் தரம் 10 இல் கல்வி கற்கும் மாணவர்களிடையே எழுத்துப் பரீட்சை ஒன்று நடத்தப்படவுள்ளது.

மாணவர்களின் அறிவாற்றலை வெளிப்படுத்தும் நோக்குடன் போசாக்கு, குடிதண்ணீர், எயிட்ஸ் போன்ற தலைப்புகளை உள்ளடக்கியதாகப் பரீட்சை எதிர்வரும் 27 ஆம் திகதி நடத்தப்படவுள்ளது.

இதில் உயர் புள்ளிகளைப் பெறும் மாணவர்கள் தெரிவுசெய்யப்பட்டு வலயமட்டக் குழு உருவாக்கப்படும்.

இவ்வாறு தெரிவுசெய்யப்படுபவர்களுக்கு வதிவிடப் பயிற்சி வழங்கப்படவுள்ளது.

வலயமட்டக் குழுக்களிடையே வினாடி வினாப் போட்டிகள் நடத்தப்பட்டு மாகாண மட்டக் குழு தெரிவு செய்யப்படும். இக்குழு ஏனைய மாகாணக் குழுக்களுடன் போட்டி யிடும் என்று கூறப்பட்டது. (ம-38)

# லஞ்ச ஊழல் ஆணைக்குழுவுக்கு முறைப்பாடுகள் அதிகரிப்பு

கொழும்பு.பெப்.23

லஞ்ச ஊழல் ஆணைக்குழுவுக்கு பெரும் எண்ணிக்கையில் முறைப்பாடுகள் கிடைத்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

லஞ்ச ஊழல் விசாரணை ஆணைக் குழுவால் வழங்கப்பட்டுள்ள 1954 என்ற இலக்கத்தை கொண்ட அவசர அழைப்பு மூலமே இவ்வாறான முறைப்பாடுகள் வழங்கப்பட்டு வருவதாக ஆணைக்குழுவின் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

லஞ்சங்கள், ஊழல்கள் மற்றும் சொத்துக்கள் சம்பந்தப்பட்ட 300 வரையிலான முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்த முறைப்பாடுகளை அடுத்து உடனடி நடவடிக்கை எடுக்கப்படுவதாகவும் கூறப்படுகிறது. இதனால் அவசர அழைப்புக்கள் மூலம் முறைப்பாடுகளை முன்வைப்பதற்கு மக்கள் பெரிதும் அக்கறை காட்டுவதாகவும் கூறப்பட்டுள்ளது.

இவ்வாறான முறைப்பாடுகளையடுத்து மேற்கொள்ளப்படும் சுற்றிவளைப்புகளில் சாதகமான வெற்றி கிடைப்பதும் சுட்டிக் காட்டப்பட்டது.

பல்வேறு விதமான வகையில் அதிக எண்ணிக்கையான முறைப்பாடுகளை புறமொதுக்கிவிட நேர்ந்துள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த அவசர அழைப்பு தொலைபேசி எண்ணுக்குரிய பிரிவு 24 மணி நேரமும் செயற்படும் என்பது குறிப்பிடத்தக்கது.

(ம-22)

# நிகழ்வுகள் இன்று

### கண்காட்சி

வடக்கு மாகாண கிராம அபிவிருத்தித் திணைக்களத்தின் பருத்தித்துறை மகளிர் அபிவிருத்தி நிலையதையல், மனையியல் கண்காட்சி தம்பசிட்டியிலுள்ள மகளிர் அபிவிருத்தி நிலையத்தில் முற்பகல் 10 மணிக்கு இடம்பெறவுள்ளது. பருத்தித்துறைப் பிரதேச செயலர் இ.த.ஜெயசீலன் தலைமையில் இடம்பெறவுள்ள இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக மாவட்ட கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி. ந.அ.ஜெயராஜன் கலந்து கொள்வார். (ம-8)

### ஜெயந்தி தினம்

இராமகிருஷ்ண மிஷன் நலன்புரி நிலையத்தின் ஜெயந்தி தின நிகழ்வுகள் இல.17 மருதனார் மடம் வீதி உரும்பிராய் சந்தியில் அமைந்துள்ள நிலையத்தில் மாலை 5 மணிக்கு இடம்பெறவுள்ளன. பஜனையுடன் ஆரம்பமாகித் தொடர்ந்து மங்களாரத்தி இடம்பெறும். (ம-14)

### கலந்துரையாடல்

புனர்வாழ்வு அதிகாரசபையின் சுயதொழில் கடன் ஊக்குவிப்புப் பயிற்சிக்கு கோப்பாய் பிரதேச செயலகத்தில் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கான கலந்துரையாடல் காலை 9 மணிக்கு யாழ். மாவட்ட செயலகத்தில் இடம் பெறவுள்ளது. (ம-14)

# மகாஜனாவில் பல்துறை வளாகம் கோத்தபாய திறந்து வைக்கிறார்

யாழ்ப்பாணம்.பெப்.23

தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரியில் அமைக்கப்பட்டுள்ள விளையாட்டு அழகியல் பல்துறை வளாகத்தை பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ திறந்து வைக்கவுள்ளார்.

இந்தக் கட்டடத் திறப்பு விழா நாளை வெள்ளிக் கிழமை நண்பகல் 12 மணிக்கு வைபவ ரீதியாக இடம்பெறவுள்ளது. இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளவுள்ள பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் குறித்த கட்டடத்தை திறந்து வைக்கவுள்ளார்.

நிகழ்வில் கௌரவ விருந்தினராக தேசமான்ய க.பாலேந்திரா கலந்து கொள்ளவுள்ளார்.

இந்தப் புதிய கட்டடத் தொகுதியில் பார்வையாளர் அரங்கு, அழகியல், விளையாட்டு வகுப்பறைகள் என்பன உள்ளடக்கப்பட்டுள்ளன. (ம-14)

# 'பூத்திடும் பனந்தோப்பு' நூல் வெளியீடு

யாழ்ப்பாணம்.பெப்.23

வேதநாயகம்தபேந்திரனின்'பூத்திடும் பனந்தோப்பு' எனும் தொகுப்பு நூல் வெளியீட்டு விழா எதிர்வரும் ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 10 மணிக்கு நல்லூர், நாவலர் வீதியில் அமைந்துள்ள சொர்ணாம்பிகை மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

ஆறுதல் நிறுவன இயக்குனர் சு.டிவகலாலா தலைமையில் இடம்பெறவுள்ள இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக வணிக முகாமைத்துவக் கற்கைகள் பீடாதிபதி பேராசிரியர் தி.வேல்நம்பி கலந்து கொள்வார்.

சிறப்புவிருந்தினர்களாக யாழ்.இந்துக் கல்லூரி அதிபர் வீ.கணேசராசா, சென். சாள்ஸ் மகாவித்தியாலய அதிபர் மா. ஞானப்பிரகாசம் ஆகியோர் கலந்து கொள்வர். நிகழ்வில் யாழ்.வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் மு.இராசநாயகம் நூலை வெளியிட்டு வைக்க முதற்பிரதியியைக் கைதடி மேற்கைச் சேர்ந்த என்.கே.துரைசிங்கம் பெற்றுக் கொள்வார். (ம)

# ‘வடக்கின் வசந்தம்’ அபிவிருத்தி அமைச்சர்களுக்கு மட்டும்தானா?

வடக்கின் வசந்தம் என்பது அதைக் கொண்டு நடத்தும் அமைச்சர்களுக்கு மட்டும் தானா? அந்தப் பிரதேச மக்களுக்கு இல்லையா? ஏன் இந்த மாற்றான்தாய் மனப்பான்மை? என்று அடுக்கடுக்காக் கேள்விகளை எழுப்பினார் ஐ.தே.க.வின் பிரதித் தலைவரும் அம்பாந்தோட்டை நாடாளுமன்ற உறுப்பினருமான சஜித் பிரேமதாஸ.

நேற்று நாடாளுமன்றத்தில் வாய் மூல விடைக்கான கேள்வி நேரத்தின் போதே அவர் இந்தக் கேள்விக் கணைகளைத் தொடுத்தார்.

நாடாளுமன்றம் நேற்றுப் பிற்பகல் ஒரு மணிக்கு சபாநாயகர் சமல் ராஜபக்ஷ தலைமையில் கூடியது.

வழமையான, சபாநாயகரின் உத்தியோகபூர்வ அறிவித்தல்கள் மற்றும் பிரதேசவாசிகளின் கோரிக்கைகள் தொடர்பாக உறுப்பினர்களால் மனுக்கள் சமர்ப்பிக்கப்பட்டபின் வாய் மூல விடைக்கான கேள்வி நேரம் ஆரம்பமானது. நேற்றைய அமர்வில் 15 கேள்விகள் கேட்கப்படுவதற்கான முன் அறிவித்தல்கள் வழங்கப்பட்டிருந்தன.

கேள்விக்கு முன்னறிவித்தல் கொடுத்த உறுப்பினர்கள் பலர் கேள்விநேரத்தில் சபையில் இருக்கவில்லை இதனால் ஒரு சில கேள்விகளுக்கு மட்டுமே நேரடியான பதில்கள் அளிக்கப்பட்டன.

**தமிழில் பதில் அளித்து தேரரை தடுமாறவைத்த பிரதி அமைச்சர் காதர்**

ஆளும் கட்சி உறுப்பினரான வண.எல்லாவல மேத்தானந்த தேரர் சுற்றாடல் பாதுகாப்பு அமைச்சரிடம் கேள்வி ஒன்றை எழுப்பினார். அதாவது 2006ஆம் ஆண்டு முதல் அண்மைக் காலம் வரை சுற்றாடல் பாதுகாப்பு அமைச்சு மக்களுக்காகச் செய்துள்ள நடவடிக்கைகளை தெரிவிக்க முடியுமா? என்று கேட்டார்.

இந்தக் கேள்விக்குப் பதில் அளிக்க அமைச்சர் சபையில் இல்லை.

இதனால் பிரதி அமைச்சர் ஏ.ஆர்.எம் அப்துல்காதர் பதில் அளித்தார். கௌரவ உறுப்பினர் கேட்ட கேள்விகளுக்கான விடை மிகவும் நீண்டதாக இருக்கின்றன. எனவே அதனை சபாபீடத்தில் சமர்ப்பிக்கின்றேன் என்று கூறினார்.

இல்லை இல்லை சுருக்கமாகவாவது பதிலை அளியுங்கள் என்றார் சபாநாயகர். அப்படியா சங்கதி எனது விடையைத் தமிழில் அளிக்கின்றேன். முடியுமானால் புரிந்துகொள்ளுங்கள் என்று பதிலைத் தமிழில் வாசித்தார்.

இவர் என்ன செய்கிறார் என்பது தேரருக்குப் புரியவில்லை சில நிமிடங்களில் துள்ளிக் குதித்து எழுந்தார். அமைச்சர் அவர்களே நீங்கள் உங்கள் பதிலை சபா பீடத்திலேயே வையுங்கள் நான் எப்படியாவது பார்த்து அறிந்து கொள்கின்றேன் என்றார் எல்லாவல மேதானந்த தேரர்.

இது சபையில் சுவாரஸ்யமாக இருந்தது. அதன் பின்னர் பிரதி அமைச்சரான காதர் தனது பதிலை சபாபீடத்தில் சமர்ப்பித்தார்.

**17000 ரயில்வே ஊழியர்கள் 325 ரயில்கள்**

ஜே.வி.பி. உறுப்பினரான அனுரகுமாரதிஸாநாயக்க வட பகுதிக்கான ரயில்ப்பாதை அமைப்புத் தொடர்பாகப் போக்குவரத்து அமைச்சரிடம் கேள்வி எழுப்பினார்.

இலங்கை ரயில்வே திணைக்களத்தில் தகுதியும் திறமையும் உள்ள அதிகாரிகளும் ஊழியர்களும் இருக்கும் போது வட பகுதிக்கான ரயில் பாதை சீரமைப்பு நடவடிக்கைகள் அனைத்தும் இந்திய அரச நிறுவனத்திடமே ஒப்படைக்கப்பட்டுள்ளன. நம்மவர்களிடம் கொடுத்திருந்தால் குறைந்த செலவில் செய்திருக்க முடியும் தானே என்று கேட்டார் அனுரகுமார.

**இந்தியாவின் சேவையும் கடன் உதவியும்**

இந்தக் கேள்விக்குப் பதில் அளித்தார் பிரதி அமைச்சர் ரோகண திஸாநாயக்க. இப்பொழுது ரயில்வே திணைக்களத்தில் 17 ஆயிரம் பேர் கடமையாற்றுகின்றனர். 325 ரயில்கள் இருக்கின்றன. 337 பாதைகளில் சேவைகள் நடத்தப்படுகின்றன. இவற்றுடன் பாதைப் பராமரிப்பு நடவடிக்கை தனியாக இடம் பெறுகின்றது.

வட பகுதிக்கான ரயில் பாதைகள் முற்று முழுதாக திருத்தி அமைக்கப்பட வேண்டியவை. பாதை அபிவிருத்திப் பணியில் ஈடுபட போதிய ஆள் பலம் இல்லை. ஆனால் இந்தியா கடன் உதவியுடன் புனரமைப்பு பணிகளை ஏற்றுள்ளது. மேலும் ரயில் பாதை சமிக்ஞைகளையும் இலவசமாகவே பொருத்திக் கொடுக்கின்றது என்று பதில் அளித்தார் பிரதி அமைச்சர் ரோகண திஸாநாயக்க.

**கொடுத்ததையும் ஏன் பிடுங்கி எடுத்தீர்கள்**

வட பகுதிக்கான மூன்று ரயில் பாதைகளில் ஒன்றை ரயில்வே திணைக்களத்திடம் வழங்கி இருந்தீர்கள். அவர்கள் தண்டவாளங்களையும் பாலங்களையும் இறக்குமதி செய்துவிட்டனர். ஆனால் இப்போது அதனையும் பறித்து இந்தியாவிடம் கொடுத்து விட்டீர்கள். பல கோடி ரூபா பெறுமதியான இந்தப் பொருள்களை என்ன செய்வது என்றார் அனுரகுமார.




இறக்குமதி செய்யப்பட்ட அந்தத் தண்டவாளங்களும் பாலங்களும் வட பிரதேசத்துக்குப் பொருத்தமானது அல்ல. என்றாலும் பயன்படுத்தப்பட முடியும் என ஒரே மூச்சில் பதில் அளித்துவிட்டார் பிரதி அமைச்சர் ரோகண திஸாநாயக்க.

**விமல் வீரவன்ஸவின் ஒரு பாடலுக்கு 4 லட்சம் ரூபா**

வீடமைப்பு நிர்மாணத் துறைகள் அமைச்சர் விமல் வீரவன்ஸவிடம் ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர ஒரு கேள்வியை எழுப்பினார்.

அதாவது, தேசிய வீடமைப்பு நிர்மாணத்துறைகள் அமைச்சினால் வீடமைப்புக் கீதம் ஒன்று தயாரிக்கப்பட்டுள்ளது. அதற்கென பல லட்சம் ரூபா செலவிடப்பட்டுள்ளது. அந்தப் பாடலை எழுதி தயாரித்தவர் யார்? என்று கேள்வி எழுப்பினார்.

இந்தக் கேள்விக்குப் பிரதி அமைச்சர் பதில் அளித்தார். பாடலை அமைச்சர் விமல் வீரவன்ஸ எழுதி உள்ளார். அதனைத் தயாரிப்பதற்கு நான்கு லட்சம் ரூபா செலவாகி உள்ளது என்று பதில் அளித்தார்.

அமைச்சர் வீரவன்ஸ எழுதிய இந்தப் பாடலுக்கு நான்கு லட்சம் ரூபா செலவிடப்பட்டுள்ளது. ஆனால் அந்தப் பாடலை அமைச்சரே பாடியிருந்தால் இன்னும் செலவு குறைந்திருக்கும் அதே வேளை ஒரு அமைச்சரின் பாடலுக்கு 4 லட்சம் என்றால் 60 அமைச்சுகளும் கீதங்களைத் தயாரிக்க ஆரம்பித்தால் என்ன ஆவது? எத்தனை கோடி வேண்டும் என்று ஒரு போடு போட்டார் நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர.

**வடமராட்சி மக்களுக்கு எப்பொழுது வெளிச்சம்**

ஆளும் கட்சி உறுப்பினரான ஏ.எச்.எம். அஸ்வர் வடமராட்சிப் பிரதேசத்தில் மணற்காடு கிராம மக்கள் மின்சாரம் இன்றிப் பெரிதும் சிரமப்படுகின்றனர். அமைச்சர்கள் அரச அதிபர்கள் உட்பட பலருக்கும் கோரிக்கை விடுத்தும் எந்தப் பலனும் இல்லை. நான்கு மாதங்களுக்கு முன் மின்சாரம் வழங்குவதாகக் கூறி வெற்றுத் தூண்களை மட்டும் நட்டு விட்டுச் சென்றுள்ளனர். எதுவுமே நடக்கவில்லை. எதிர்பார்ப்புடன் காத்திருக்கும் மணற்காடு மக்களுக்கு எதுவுமே நடக்கவில்லை. மணற்காடு மக்களுக்கு எப்போது மின்சாரம் வழங்கப்படும் என அஸ்வர் கேள்வி எழுப்பினார்.

எரிசக்தி மின் சக்தி அமைச்சரிடமே அஸ்வர் இந்தக் கேள்வியை எழுப்பினார். வழமை போலவே கேள்விக்கு ஆளும் கட்சியின் பிரதம கொறடாவும் அமைச்சருமான தினேஷ் குணவர்தனவே பதிலளித்தார். வடமராட்சிப் பிரதேசத்தின் நிலமைகளை உறுப்பினர் நன்கறிவார். இது மிகவும் பாதிக்கப்பட்ட பிரதேசம். அங்கே மின் கம்பிகள், மின் பிறப்பாக்கிகள் மற்றும் தேவையான உபகரணங்களைக் கொண்டு செல்வதில் தாமதம் ஏற்பட்டுள்ளது. இந்த நிலையிலும் கூடிய விரைவில் மணற்காடு கிராம மக்களுக்கு மின்சாரம் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என அமைச்சர் உறுதியளித்தார்.

**சபாநாயகரின் நகைச்சுவை**

நேற்று நாடாளுமன்றத்தில் எதிர்த்தரப்பு உறுப்பினர்களுக்கும் அமைச்சர்களுக்கும் இடையே சர்ச்சைகளும் வாதங்களும் ஏற்பட்ட போதே சபாநாயகர் சமல் ராஜபக்ஷவும் பல நகைச்சுவை வெடிகளை அவ்வப்போது விடுத்தார். அவற்றில் சில.

✱ ரவி கருணாநாயக்கவை கூட்டுறவு வர்த்தகத் துறை அமைச்சின் ஆலோசகராக நியமித்துக் கொள்ளுங்கள் பிரச்சினை குறையும்.

✱ அமைச்சர் லலித் திஸநாயக்கவையும் சஜித் பிரேமதாஸவையும் எங்கேயாவது அனுப்பி விட்டால் சபை அமைதியாகும்.

✱ அமைச்சர்கள் இங்கே பிரச்சாரம் செய்ய வேண்டாம் சரியான பதிலை அளித்தால் போதும்.

✱ பலருக்குத் தலையில் மூளையிருக்கிறது. ஆனால் சிலருக்கு உடம்பெல்லாம் மூளை.

✱ சஜித் பிரேமதாஸவுக்கு எப்படிக் கேள்வி கேட்பது என ஒரு வகுப்பு நடத்த வேண்டும் போல் இருக்கிறது.

சபாநாயகரின் இந்த வெடிகள் சிரிப்பாக இருந்தாலும் கூட அவை சிந்திக்க வைப்பதாகவே இருந்தன. கேள்வி வேளையின் பின் நாடாளுமன்றச் செயலாளர் நாயகமாக இருந்து ஓய்வு பெற்றுச் செல்லும் தம்மிக்க இத்துல்கொடவுக்குச் சேவை நலன் பாராட்டு உரைகளும் இடம்பெற்றன.

ஆளும் தரப்பின் சபை முதல்வரின் சார்பில் தினேஷ் குணவர்தனவும் எதிர்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவும் தமது பாராட்டு உரைகளை நிகழ்த்திய பின் இரு தரப்பினரையும் சேர்ந்த பல உறுப்பினர்களும் பாராட்டுரைகளை நிகழ்த்தினர்.

**எரிபொருள் விலை குறைந்தால் மின்கட்டணம் குறையும்**

சபை ஒத்திவைப்பு வேளையின் போது எதிர்க்கட்சி உறுப்பினரான பாலித ரங்கே பண்டார மின்கட்டணம் அதிகரிக்கப்பட்டிருப்பது தொடர்பான விவாதம் ஒன்றை முன்வைத்தார். எரிபொருள் விலை அதிகரிப்பைத் தொடர்ந்து மின்கட்டனம் அதிகரிக்கப்பட்டுள்ளது. இது நாட்டு மக்களுக்கு .பெரும் சுமையை ஏற்படுத்துகிறது. எனவே மின்கட்டண விலைக் குறைப்பை மேற்கொள்ள அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என கோரினார். இதற்குப் பதிலளித்த மின் சக்தி எரிசக்தி அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்க ஏற்கனவே மின்சாரசபை பலகோடி ரூபா நட்டத்தில் இயங்கியது. ஆனால் அதை மீளக் கட்டியெழுப்பியுள்ளோம். இந்த நிலையில் மீண்டும் எரிபொருள் விலையேற்றம் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. மின் உற்பத்திக்கான எரிபொருள் எங்களுக்கு நாணயமாகவோ சலுகை அடிப்படையிலோ வழங்கப்படுவதில்லை. சந்தை விலைக்கே வாங்க வேண்டியுள்ளது. இதனால் ஏற்பட்டுள்ள நட்டத்தை சமாளிக்கும் வகையில் மின் கட்டணங்களை அதிகரிக்க வேண்டிய கட்டாயம் எமக்கு ஏற்பட்டுள்ளது. எனினும் எரிபொருள்களின் விலை குறையும்போது மின் கட்டணத்தையும் குறைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என அமைச்சர் அங்கு குறிப்பிட்டார்.

நாடாளுமன்றம் இன்று பிற்பகல் ஒரு மணிக்குக் கூடவுள்ளது. (த-10-2)

# வவுனியா முகாம் வாக்காளரும் முல்லைத்தீவிலேயே வாக்களிப்பு

## கூட்டமைப்பின் கோரிக்கை நிராகரிப்பு

முல்லைத்தீவு, பெப்.23

புதுக்குடியிருப்பு, கரைதுறைப்பற்றுப் பிரதேச சபைகளுக்கான தேர்தல் வாக்களிப்பு நிலையங்கள் எதுவும் வவுனியாவில் அமைக்கப்படமாட்டாதெனவும் அந்த மக்கள் முல்லைத்தீவு வித்தியானந்தாக் கல்லூரியில் அமையவுள்ள வாக்களிப்பு நிலையத்திலேயே வாக்களிக்க வேண்டும் எனவும் தேர்தல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

வவுனியா முகாம்களில் தங்கியுள்ள இந்தப் பகுதிகளைச் சேர்ந்த மக்கள் வாக்களிப்பதற்காக வவுனியாவில் வாக்களிப்பு நிலையம் ஒன்றை நிறுவுமாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, முஸ்லிம் காங்கிரஸ் கட்சிகளால் விடுக்கப்பட்ட கோரிக்கையையும் தேர்தல் திணைக்களம் நிராகரித்துள்ளது.

புதுக்குடியிருப்பு, கரைதுறைப்பற்றுப் பிரதேச சபைகளுக்கான தேர்தல் எதிர்வரும் மார்ச் மாதம் 24ஆம் திகதி நடைபெறவுள்ளது. இந்தத் தேர்தலில் போட்டியிடும் கட்சிகளுக்கும் உதவித் தேர்தல் ஆணையாளருக்கும் இடையிலான சந்திப்பு ஒன்று நேற்று முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தில் முல்லைத்தீவு அரச அதிபர் என்.வேதநாயகன் தலைமையில் நடைபெற்றது.

இந்தச் சந்திப்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, ஜே.வி.பி, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆகிய கட்சிகளின் சார்பில் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் கலந்து கொண்டனர்.

முள்ளிவாய்க்கால், இரட்டைவாய்க்கால், வலைஞர் மடம், அம்பலவன் பொக்கணை ஆகிய பகுதிகளைச் சேர்ந்த வாக்காளர்களுக்கான வாக்களிப்பு நிலையமும், வவுனியா முகாம்களில் உள்ள இப்பகுதி வாக்காளர்களுக்கான வாக்களிப்பு நிலையமும் முல்லைத்தீவு வித்தியானந்தாக் கல்லூரியில் அமைக்கப்படும் என உதவித் தேர்தல் ஆணையாளர் இந்தச் சந்திப்பில் தெரிவித்தார். இந்த வாக்காளர்களுக்குத் தேவையான போக்குவரத்து வசதிகளையும் கட்சிகளே மேற்கொள்ள வேண்டும் என்றும் அவர் கூறினார்.

இந்தத் தீர்மானத்துக்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, முஸ்லிம் காங்கிரஸ் கட்சிகளின் வேட்பாளர்கள் கடும் எதிர்ப்புத் தெரிவித்தனர். வவுனியாவில் வாக்களிப்பு நிலையம் ஒன்றை நிறுவுமாறும் அவர்கள் கோரிக்கை விடுத்தனர். இந்தக் கோரிக்கையை உதவித் தேர்தல் ஆணையாளர் நிராகரித்தார்.

இந்தக் கலந்துரையாடலில் அரச தரப்பில் இருந்து போட்டியிடும் வேட்பாளர்கள், வன்னி பிரஜைகள் முன்னணியின் வேட்பாளர்கள் எவரும் கலந்து கொள்ளவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது.

மணலாற்றில் உள்ள கிரிவென்வெவ வித்தியாலயத்திலும் வாக்களிப்பு நிலையம் ஒன்று அமைக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது. ஏனைய வாக்களிப்பு நிலையங்கள் இரு பிரதேச சபை எல்லைகளுக்குள் அடங்கும் பாடசாலைகளில் அமைக்கப்படும் எனவும் கூறப்பட்டது. (த-433)

### ஒரு அங்கத்தவருக்கும் வீட்டுத்திட்டம்

முல்லைத்தீவு துணுக்காய் பிரதேசத்தில் உள்ள 78 தனி அங்கத்தவரைக் கொண்ட குடும்பங்களுக்கும் வீடமைப்புக்கெனத் தலா ஒரு லட்சம் ரூபா வழங்கப்பட்டுள்ளது. முல்லைத்தீவு மாவட்டத்தின் துணுக்காய் பிரதேசத்தில் உள்ள20 கிராம அலுவலர் பிரிவுகளில் 3ஆயிரத்து 486 குடும்பங்கள் மீளக்குடியமர்ந்துள்ளன.

இதில் 585 குடும்பங்கள் ஒரு அங்கத்தவரைக் கொண்ட குடும்பமாக உள்ளது.

இதில் முன்னுரிமை அடிப்படையில் தெரிவு செய்யப்பட்ட 78குடும்பங்களுக்கு வீடமைப்புக்கென ஒரு லட்சம் ரூபா நிதி வழங்கப்பட்டு வீடமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (க-6)

# 600 ஏக்கரில் நெற்பயிர் கட்டாக்காலிகளால் அழிவு

## தனங்கிளப்பு அறுகுவெளியில் இந்த முறை அறுவடை இல்லை

தென்மராட்சி,பெப்.23

தென்மராட்சி தெற்கு தனங்கிளப்பு அறுகு வெளிப் பகுதியில் காலபோகச் செய்கை மேற்கொள்ளப் பட்ட 600 ஏக்கர் வயல் பரப்பிலும் இந்த முறை அறுவடை இடம்பெறவில்லை.

இங்கிருந்து ஒருபிடி நெல் மணிகளைக்கூட பெற முடியவில்லை என்று இந்தப் பகுதியில் விதைப்புச் செய்த விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

கட்டாக்காலி கால்நடைகளாலேயே இந்த நிலைமை ஏற்பட்டுள்ளதாக அவர்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

அதற்கான நஷ்டஈடு வழங்கக்கோரி விவசாய அமைச்சிடம் முறையிடவுள்ளதாகவும் பாதிக்கப்பட்ட விவசாயிகள் உதயனுக்குத் தெரிவித்துள்ளனர்.

இந்தப் பகுதிகளில் நெற்செய்கை மேற் கொண்ட நிலையில் பாதிக்கப்பட்டுள்ள விவசாயிகளில் ஒருவரான சொ.சிவசுதன் இந்த விடயம் தொடர்பாக உதயனுக்கு மேலும் தெரிவித்ததாவது:

கடந்த வருடகால போகத்தில் அனுமதிக்கப்பட்ட இந்த வயல்களில் நெற்செய்கை மேற்கொள்ள கமநல சேவைகள் நிலையத்தால் விதை நெல் விநியோகிக்கப்பட்டது.

**விதைத்தவை பயிராகும் காலத்தில் இந்தப் பகுதியில் கட்டாக்காலியாக அலைந்த மாடுகளுக்கு பயிர்கள் உணவாக மாறியது. கட்டாக்காலி மாடுகளைக் கட்டுப்படுத்த பாதுகாப்பு வேலி அமைக்குமாறு பல தடவைகள் கமநல சேவைகள் நிலையத்தில் முறையிட்டும் பயன் கிடைக்கவில்லை.**

பத்து வருடங்களின் பின்னர் இந்தப் பகுதியில் ஆர்வத்துடன் விதைப்புகளை மேற்கொண்டோம்.

விதைத்தவை பயிராகும் காலத்தில் இந்தப் பகுதியில் கட்டாக்காலியாக அலைந்த மாடுகளுக்கு பயிர்கள் உணவாக மாறியது.

கட்டாக்காலி மாடுகளைக் கட்டுப்படுத்த பாதுகாப்பு வேலி அமைக்குமாறு பல தடவைகள் கமநல சேவைகள் நிலையத்தில் முறையிட்டும் பயன்கிடைக்கவில்லை.

பகல் வேளைகளில் நாங்கள் அங்கு தங்கியிருந்து கூட்டம் கூட்டமாக வரும் மாடுகளைத் துரத்தினோம். இருந்தும் இரவு வேளைகளில் கூட்டமாக வரும் மாடுகளும் பன்றிகளும் அனைத்துப் பயிர்களையும் அழித்து நெற்செய்கையாளர்கள் பயன்பெற முடியாத நிலைக்குச் செய்துள்ளன.

இந்த வயல்களில் விதைத்து உரிய பயன் பெற முடியாத நிலையில் நாம் நஷ்டம் அடைந்துள்ளோம்.

விவசாயத் திணைக்களத்திடம் எமக்கு ஏற்பட்ட செலவுத் தொகையை நஷ்டஈடாக வழங்குமாறு கோரவுள்ளோம். அடுத்த முறை அந்தப் பகுதியில் விதைப்புக் காலம் ஆரம்பிப்பதற்கு முன்னர் கட்டாக்காலி மாடுகளிடமிருந்து பயிர்களைப் பாதுகாக்கும் வேலிகளை அமைக் குமாறும் கோரவுள்ளோம். வேலிகளை அமைத்த பின்னரே விதைநெல் இலவச மாக வழங்கவேண்டும் எனவும் சுட்டிக்காட்டவுள்ளோம்-என்று மிகவும் வேதனையுடன் தெரிவித்தார்.

இதேவேளை, தனங்கிளப்பு, மறவன்புலோ பகுதி வயல்களில் வைக்கப்பட்டுள்ள நெற்குவியல்கள் கட்டாக்காலி மாடுகளால் தினமும் சேதப்படுத்தப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

விதைக்கப்பட்ட நெல் பயிராகி அறுவடை செய்யும்வரை கட்டாக்காலி மாடுகளால் அழிவுகளைச் சந்தித்த நெற் செய்கையாளர், விதைத்த வயல்களில் வைத்த நெற் குவியல்களை சேதப்படுத்தி அழிப்பது குறித்தும் கவலை தெரிவித்தனர்.

சில நெற்செய்கையாளர்கள் அறுவடை செய்த தினத்தன்றே சூடுமிதித்து நெல்களை மூடைகளாக்கிக் கொண்டு செல்கின்றனர்.

சிலர் அறுவடை செய்த நெற்பயிர்களையே வாகனங்களில் ஏற்றி வீடுகளுக்கு கொண்டு செல்வதையும் காணமுடிகிறது.

இதேவேளை, சாவகச்சேரி பிரதேச சபையினரால் இந்தப் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட கட்டாக்காலி மாடுகள் பிடிக்கும் பணிகள் பெரும் சர்ச்சைக்குள்ளாகி இடைநடுவில் நிறுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

(ம-9)

# தீவகத்துக்கு வெளியே செல்ல மண்ணுக்குத் தடை

யாழ்ப்பாணம், பெப்.23

வேலணை பிரதேச சபைக்குட்பட்ட மணல் மண்ணை தீவகத்தை விட்டு வெளியே கொண்டு செல்வதற்கான தீர்மானம் இடைநிறுத்தப்பட்டுள்ளது. கடந்த 17 ஆம் திகதி இடம்பெற்ற சபைக் கூட்டத்தில் பிரதேச சபையில் ஏகமனதாக இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது என்று வேலணை பிரதேச சபைத் தலைவர் சி.சிவ ராஜா தெரிவித்தார்.

தீவகத்தின் மணல் மண், வகை தொகையின்றித் தீவகத்தைவிட்டு வெளியே கடந்த காலங்களில் கொண்டு செல்லப்பட்டுள்ளது.

இதனால் தீவகத்தின் வளம் அழிக்கப்பட்டுள்ளது. தீவகத்தின் எந்தப் பாகத்திலும் மண் தேவைப்படுவோர் பிரதேச சபை நிர்வாகப் பகுதியுடன் தொடர்பு கொண்டு அதற்கான அனுமதி பெறவேண்டும். இதன் மூலம் மணல் திருட்டு முடிவுக்கு கொண்டு வரப்பட்டுள்ளதுடன் கனிய வளமான மணல் மண் பாதுகாக்கப்படுகிறது. இதேவேளை, அனுமதியின்றி மணல் கொண்டு செல்வோர் குறித்த விவரம் தெரிந்தோர் பிரதேச சபைக்குத் தகவல் வழங்குமாறும் கேட்கப்பட்டுள்ளது. (ம)

# கசிப்பு வைத்திருந்த இருவருக்கு ஒரு லட்சத்து 80 ஆயிரம் அபராதம்

கசிப்பு வைத்திருந்த கொடிகாமம் எழுவன் வாசிகள் இருவருக்கு சாவகச்சேரி நீதிமன்றில் ஒரு லட்சத்து 80 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

கொடிகாமம் பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட இரண்டு வழக்குகளும் செவ்வாய்க்கிழமை விசாரணைக்கு எடுக்கப்பட்டன.

வழக்குகளை விசாரித்த நீதிவான் ஏ.ஏ.ஆனந்தராஜா, ஒரு வழக்கின் எதிரிக்கு முன் குற்றம் உள்ளதை நீதிவானின் கவனத்துக்கு பொலிஸார் கொண்டு வந்ததையடுத்து அவருக்கு ஒரு லட்சத்து 50 ஆயிரம் ரூபா அபராதம் விதித்து அபராதத் தொகை செலுத்தத் தவறின் ஆறு மாதங்கள் சாதாரண சிறைத் தண்டனை அனுபவிக்குமாறும் உத்தரவிட்டார். மற்றைய வழக்கில் எதிரி குற்றத்தை ஒப்புக் கொண்டதையடுத்து 30 ஆயிரம் ரூபா அபராதம் விதித்து அபராதத் தொகையைச் செலுத்தத் தவறின் இரண்டு மாதங்கள் சிறைத் தண்டனை அனுபவிக்குமாறும் உத்தரவிட்டார்.

ஒரு லட்சத்து 50 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டவர் அபராதத்தொகையை செலுத்தி வெளியே சென்றுவிட்டார். 30 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டவர் அபராதத் தொகை செலுத்தாததால் சிறைக்கு அனுப்பப்பட்டார். (ம-9)

# சுனாமி எச்சரிக்கை கோபுரம் மண்டைதீவில்

யாழ்ப்பாணம், பெப்.23

மண்டைதீவில் சுனாமி எச்சரிக்கைக் கோபுரம் அமைக்க மண்டைதீவு கடற் படையினர் முயற்சிகளை மேற்கொண்டுள்ளதாக தெரியவருகிறது. இது தொடர்பாக யாழ்.செயலக அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் அதிகாரிகளுடன் கடற்படையினர் தொடர்பு கொண்டுள்ளதாகவும் தெரிகின்றது.

சுனாமி எச்சரிக்கைக் கோபுரம் இந்தப் பகுதியில் அமைக்கப்படும் பட்சத்தில் முன்கூட்டியே சுனாமி தாக்கங்களில் இருந்து மக்கள் பாதுகாப்பான இடங்களை நாடக் கூடியதாக இருக்கும் என்பதால் இந்த நடவடிக்கைகள் குறித்து மக்கள் மகிழ்ச்சியடைந்துள்ளனர். (ம-7)

### தாக்குதல்

அத்துமீறி வீட்டினுள் நுழைந்து தாக்கியதில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவர் காயமடைந்தனர். இந்தச் சம்பவம் திங்கட்கிழமை இரவு கைதடி நவபுரத்தில் இடம்பெற்றது. இதே இடத்தைச் சேர்ந்த மார்க்கண்டு சிவலிங்கம் (வயது- 58) கைமுறிந்த நிலையிலும் இவரது மனைவியான சிவலிங்கம் இராசமணி (வயது - 57) என்பவர் உடலில் ஏற்பட்டுள்ள உட்காயங்களுக்காகவும் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (ம-9)

# நூலக அபிவிருத்தித் திட்டம் முன்னெடுப்பு

யாழ்ப்பாணம்,பெப்.23

யாழ். பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளரினால் முன்னெடுக்கப்பட்ட முப்பரிமாண நூலக அபிவிருத்தித் திட்டம் வேலணை பிரதேச சபையினால் முன்னெடுக்கப்பட்டுள்ளது என வேலணை பிரதேச சபைத் தலைவர் சி.சிவராசா தெரிவித்தார்.

யாழ். மாவட்ட பிராந்திய உள்ளூராட்சி உதவியாணையாளர் செ.பிரணவநாதன் மாவட்ட மட்டத்தில் முப்பரிமாண நூலகத்தை அதாவது-தகவல்கள், நூல்கள், உருக்கள் ஆகிய மையப் பொருள்களைக் கருப்பொருளாகக் கொண்டு மக்களின் பங்களிப்புடன் முப்பரிமாண நூலகம் ஊடாக ஓர் செய்தியை மக்களுக்கும், மாணவர்களுக்கும் பரப்புமாறு கோரியிருந்தார்.

இதன் அடிப்படையில் வேலணைப் பிரதேச சபையின் கீழ் உள்ள நயினாதீவு, மண்டைதீவு, அல்லைப்பிட்டி, வேலணை, புங்குடுதீவு ஆகிய உபஅலுவலக நூலகங்களுக்கு முப்பரிமாண தகவல்களை அறிமுகப்படுத்தும் பதாகைகளை வெளிக்கொண்டுவந்துள்ளோம்.

விரைவில் நூலக அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் முப்பரிமாண செய்திகளை சகல மக்களுக்கும் தெரிவிப்போம் என சபைத் தலைவர் சி.சிவராசா தெரிவித்தார்.

# புனரமைப்பு இன்றி கலாசார மண்டபம்

நவாலி,பெப்.23

சமூக சேவை அமைச்சின் நிதி ஒதுக்கீட்டில் கட்டப்பட்ட கட்டுடை மானிப்பாய் கலாசார மண்டபம் கடந்த 3 வருடங்களாக புனரமைப்பு செய்யப்படவில்லை.

முதலாம் கட்டமாக 5 மில்லியன் நிதி ஒதுக்கப்பட்டு ஆரம்பிக்கட்ட வேலைகள் முன்னெடுக்கப்பட்ட போதிலும் இதுவரை வேலைகள் செய்து முடிக்கப்படவில்லை.

இதனால் இந்த மண்டபம் தற்போது ஆடு, மாடுகளின் உறைவிடமாக உள்ளது. கடந்த 2011 ஆம் ஆண்டு இந்தக் கலாசார மண்டபத்தின் இரண்டாம் கட்ட வேலைக்கு 23 மில்லியன் ரூபா ஒதுக்கப்படுமென தெரிவித்தும் இந்தத் திட்டம் கைமுறிந்துள்ளது.

கடந்த இறுதி பிரதேச ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் இதற்கு அதிக முக்கியத்துவம் அளிக்கப்பட்டும் இதுவரை செயற்படவில்லை என்று யாழ்.மாவட்ட விவசாய சம்மேளனத்தின் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரின் கவனத்துக்கும் கொண்டு வந்துள்ளாரென்று தெரிவிக்கப்படுகின்றது.

(ந-100)

# வாக்காளர்கள் பட்டியலில் 1,962 இரட்டைப் பதிவுகள்

யாழ்ப்பாணம், பெப்.23

யாழ்.தேர்தல் மாவட்டத்தில் 2011 ஆம் ஆண்டு வாக்காளர் பெயர் பட்டியலுக்கான பதிவுகளின் போது ஆயிரத்து 962 பேர் இரட்டைப் பதிவுகள் மாவட்டத்தினுள்ளேயே மேற்கொள்ளப்பட்டது கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக யாழ்.மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர் பொ.குகநாதன் தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தாவது:

யாழ்.மாவட்டத்தில் 2011 ஆம் ஆண்டு வாக்காளர் பெயர்ப் பட்டியல் தயாரிக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதில் பதிவு செய்த வாக்காளர்களின் பெயர்கள் பரிசீலனை செய்யப்பட்டு வருகின்றன.

இதன்போது யாழ்ப்பாண தேர்தல் மாவட்டத்தில் ஆயிரத்து 962 பேர் இரட்டைப் பதிவுகள் மேற்கொண்டமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இது சட்ட ரீதியாக தவறான நடவடிக்கையாயினும் யாழ்ப்பாண தேர்தல் மாவட்டத்துக்கு விசேடமாகத் தேர்தல் ஆணையாளரால் அறிவிக்கப்பட்டதன் பிரகாரம் இரட்டைப் பதிவு மேற்கொண்டவர்களுக்கு உதவித் தேர்தல் ஆணையாளரால் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது..

அதாவது இரட்டைப் பதிவு மேற்கொண்டவர்கள் ஏதாவது ஒரு இடத்தை மட்டும் குறிப்பிட்ட அதில் வாக்காளர் பெயர் பதிவு செய்யுமாறு கோரப்பட்டது. இதற்கமைவாக சிறு தொகையினரே குறிப்பிட்ட இடத்தை மட்டும் தெரிவித்து பதில் அனுப்பியுள்ளனர்.

எனவே, பதிலளிப்பதற்கான காலம் முடிவடைந்தமையால் எஞ்சியவர்களுக்கு ஏதாவதொரு இடத்தில் மட்டும் பதிலை வைத்துக் கொண்டு ஏனைய இடங்களில் நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக உதவித் தேர்தல் ஆணையாளர் மேலும் தெரிவித்தார். (ம-5)

# யாழ். நகர வீதியோரங்களில் வாகனம்; பாய்ந்து அமுக்குகிறது பொலிஸ்

யாழ்ப்பாணம்,பெப்.23

யாழ்.நகரின் பிரதான வீதி ஓரங்களில் வாகனங்களை நிறுத்துவோர் மீது பொலிஸார் நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.

கே.கே.எஸ். வீதி மற்றும் ஆஸ்பத்திரி வீதி யோரங்களில் வாகனங்களை நிறுத்துவோர் மீதே பொலிஸார் நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.

**கே.கே.எஸ். வீதி மற்றும் ஆஸ்பத்திரி வீதி யோரங்களில் வாகனங் களை நிறுத்துவோர் மீதே பொலிஸார் நடவடிக்கை எடுத்து வருகின்றனர்**

பிரதான வீதியோரங்களில் வாகனங்களை நிறுத்துவதால் நெருக்கடி ஏற்படும் நிலையில் பெரும்பாலானோர் இதனைக் கவனத்தில் எடுக்காது செயற்பட்டு வருகின்றனர். இவர்கள் மீதே சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டது.

இவ்வாறான நெருக்கடிகளால் விபத்துகள் ஏற்படுவதும் குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, குறித்த பிரதான வீதியோரங்களில் நிறுத்தப்படும் வாகனங்கள் பொலிஸாரால் அகற்றப்பட்டு வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது. (ம-17)

# படையினர் பயன்படுத்தி வரும் சொத்து விவரங்கள் சேகரிப்பு

வடமராட்சி, பெப்.23

யாழ். மாவட்டத்தில் படையினர், பொலிஸ், கடற்படையினர் முகாமிட்டுள்ள பயன்படுத்தும் காணிகள், கட்டடங்கள், வர்த்தக நிலையங்கள் ஆகியவற்றின் உரிமையாளர்களின் விவரங்கள் கிராம சேவையாளர்களால் சேகரிக்கப்பட்டு வருகின்றன.

யாழ். மாவட்ட அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமாரின் பணிப்பின் பேரில் பிரதேச செயலங்கள், உதவி அரச அதிபர் அலுவலகங்கள் ஊடாக கிராம சேவையாளர்கள் மூலம் இந்த விவரங்கள் திரட்டப்படுகின்றது.

**படையினர், பொலிஸார், கடற்படையினர் கடந்த 20 ஆண்டுகளுக்கு மேலாகக் குறிப்பிட்ட காணிகள், வீடுகள், வர்த்தக நிலையங்களில் நிலை கொண்டுகொள்ள நிலையில் இவற்றின் உரிமையாளர் பலர் வெளி மாவட்டங்களிலும் வெளி நாடுகளிலும் தங்கியுள்ளனர்.**

குறிப்பிட்ட காணி, கட்டடங்கள், வர்த்தக நிலையங்களின் உரிமையாளர்களின் முழுப்பெயர், தற்போதைய முகவரி, தொலைபேசி இலக்கம், உறுதி அல்லது அனுமதிப் பத்திரம், கிராம சேவையாளர் பகுதி, பிரதேச செயலக அல்லது உதவி அரச அதிபர் பிரிவு உள்ளிட்ட பல்வேறு விவரங்களையும் விண்ணப்ப படிவத்தில் பூர்த்தி செய்யுமாறு கிராம சேவையாளர்கள் கோரப்பட்டுள்ளனர்.

இது தவிர காணி, கட்டட, வர்த்தக நிலையங்களின் உரிமையாளர்கள் அல்லது நிறுவனத்தினரின் தற்போதைய தீர்மானமான வாடகை கோரல், சொந்தக் காணி, வீடு அல்லது வர்த்தக நிலையங்கள் மீண்டும் தேவை, இவற்றில் இவ்வளவு காலம் இருந்தமைக்கான வாடகையுடன் குறிப்பிட்ட சொத்துக்களை ஒப்படைத்தல் அல்லது இவை தொடர்பாக எதுவிதமான முடிவுகள் இல்லை போன்றவற்றையும் தெரிவிக்குமாறும் மேலும் கோரப்பட்டுள்ளது.

படையினர், பொலிஸார், கடற்படையினர் கடந்த 20 ஆண்டுகளுக்கு மேலாகக் குறிப்பிட்ட காணிகள், வீடுகள், வர்த்தக நிலையங்களில் நிலைகொண்டுகொள்ள நிலையில் இவற்றின் உரிமையாளர் பலர் வெளி மாவட்டங்களிலும் வெளிநாடுகளிலும் தங்கியுள்ளனர்.

இவர்களைக் கண்டுபிடிக்க முடியாத நிலையில் கிராம சேவையாளர்கள் உள்ளனர்.

எனினும் இவற்றின் உரிமையாளர்கள் உள்ளூரில் வசிப்பின் சம்பந்தப்பட்ட பகுதி கிராம சேவையாளர்களுடன் தொடர்பு கொண்டு விவரங்களைத் தெரிவிக்குமாறு வேண்டப்படுகின்றனர். (ம-8)

## 36 அடி அகலப் பாதையாகிறது யாழ். நகரின் கந்தப்பசேகரம் வீதி

யாழ்ப்பாணம், பெப்.23

யாழ்.நகரின் ஆஸ்பத்திரி வீதியிலுள்ள வர்த்தக நிலையங்களுக்குப் பின்புறமாக கே.கே.எஸ். வீதியில் இருந்து இராமையாச் செட்டியார் ஒழுங்கை வரையான கந்தப்பசேகரம் வீதி 36 அடிகள் கொண்ட அகலமான வீதியாக மாற்றி அமைக்கப்படவுள்ளது.

நேற்று முன்தினம் நடைபெற்ற வீதி அகலிப்புத் தொடர்பான கலந்துரையாடலில் இந்த முடிவு எடுக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக மாநகர சபை முதல்வர் திருமதி யோ.பற்குணராசா அனுப்பி வைத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

**தற்போது கந்தப்பசேகரம் வீதி 18 அடி அகலமாகவுள்ளது. மக்களின் நன்மை கருதி அந்த வீதியை 36 அடியாக அகலிக்க வீதியின் ஆதன உரிமையாளர்களுடன் மாநகர சபை நிர்வாகம் இணக்கப்பாடுடனான தீர்மானம் எடுத்துள்ளது.**

தற்போது கந்தப்பசேகரம் வீதி 18 அடி அகலமாகவுள்ளது. மக்களின் நன்மை கருதி அந்த வீதியை 36 அடியாக அகலிக்க வீதியின் ஆதன உரிமையாளர்களுடன் மாநகர சபை நிர்வாகம் இணக்கப்பாடுடனான தீர்மானம் எடுத்துள்ளது.

வீதியின் மத்தியிலிருந்து இரு பக்கமும் 18 அடியாக விட்டுத் தருவதற்கு ஆதன உரிமையாளர்கள் சம்மதம் தெரிவித்துள்ளனர் என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-15)

## கந்தரோடையில் கலாசார மண்டபம்

வலி.தெற்கு உடுவில் பிரதேசத்துக்கான கலாசார மண்டபம் ஒன்று 83 லட்சம் ரூபா செலவில் கந்தரோடை கற்பக்குளை பிரதேசத்தில் ரம்மியமான கிராமிய மருத நிலச் சூழலில் அமைக்கப்பட்டு வருகிறது.

இது எதிர்காலத்தில் கலைஞர்களின் ஆற்றுகைத் திறன் வெளிப்பாட்டுக்கும், ரசிகர்களின் நுகர்வுத் தேவையைப் பூர்த்தி செய்வதற்கும் களம் அமைத்துக் கொடுக்கும் என்றார். புதிதாக வலி. தெற்கு பிரதேசத்தின் பிரதேச செயலராக பொறுப்பேற்ற மு. நந்தகோபாலன், கடந்த வெள்ளிக்கிழமை பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற உடுவில் பிரதேச கலாசார பேரவையின் கூட்டத்தில் கலந்துகொண்டு தலைமையுரை ஆற்றுகையில் இவ்வாறு தெரிவித்தார்.

மேலும் இந்த ஆண்டு பேரவையின் கலாசாரவிழா முத்தமிழ் விழாவாக மிகவும் சிறப்பாக சித்திரை- வைகாசியில் நடத்தி முடிப்பது என்றும் அதற்கான வேலைகள் உடனடியாக ஆரம்பிப்பது என்றும் இந்தக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. (ந)

## சாவகச்சேரியில் நவீன சந்தை வரைபடம் மக்கள் பார்வைக்கு

தென்மராட்சி,பெப்.23

சாவகச்சேரி பொதுச் சந்தையின் மேற்குப் புறத்தில் பல மில்லியன் ரூபா செலவில் நிர்மாணிக்கப்படவுள்ள 52 கடைத் தொகுதிகள் பற்றிய நவீன சந்தை வரைபடம் பொதுச் சந்தையில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

இருமாடி கடைத் தொகுதியில் கடைகள் பெறவிரும்பும் சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்டவர்கள் மார்ச் 23 ஆம் திகதிக்கு முன்னர் நகரசபை அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளுமாறும் நகரசபை எல்லைக்குட்பட்டவர்களின் கோரிக்கைகள் போதிய அளவு கிடைக்காத பட்சத்தில் சாவகச்சேரித் தொகுதியில் உள்ளவர்களின் கோரிக்கைகள் பரிசீலனைக்கு எடுக்கப்படுமென தலைவர் இ.தேவசகாயம்பிள்ளை கூறியுள்ளார்.

புதிய நவீன சந்தை அமைக்கப்படவுள்ள இடத்தில் முன்னர் 36 கடைகள் இயங்கி 2000 ஆம் ஆண்டு யுத்த வேளையில் அனைத்துக் கட்டடங்களும் முழுமையாக சேதமடைந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-9)

## முருங்கைக்காய் விலை உயர்வு

குருநகர், பெப்.23

சந்தைகளில் மரக்கறி வகைகளின் விலை குறைவாக உள்ள போதிலும் முருங்கைக்காய் விலை உயர்வாக உள்ளதாக நுகர்வோர் தெரிவிக்கின்றனர்.

திருநெல்வேலி மரக்கறிச் சந்தையில் முருங்கைக்காய் கிலோ 500 ரூபாவாக விற்பனை செய்யப்படுகிறது. (த-51)

## முறிந்து வீழ்ந்தது மின்கம்பம்

தென்மராட்சி,பெப்.23

வாகனம் ஒன்றில் ஏற்றிச் சென்ற வாகனத்தில் வீதியின் குறுக்கே பொருத்தப்பட்டிருந்த தொலைத் தொடர்பு வயர் சிக்கியதில் ஒரு கம்பம் முறிந்து வீழ்ந்தது.

இதன்போது வீதியில் நின்ற இருவர் மயிரிழையில் உயிர் தப்பினர்.

இந்தச் சம்பவம் நேற்றுக் காலை சாவகச்சேரி நகர்ப் பகுதியில் இடம்பெற்றது.

சாவகச்சேரி ஹற்றன் நஷனல் வங்கிக்கு முன்பாக வீதியோரத்தில் நின்ற தொலைத் தொடர்புக் கம்பமே அடியுடன் முறிந்து வீழ்ந்தது.

தேசிய சேமிப்பு வங்கிக்கு முன்பாக உள்ள கம்பம் அரைவாசியில் முறிந்து சாய்ந்து காணப்படுகின்றது.

இதேவேளை, நேற்று முன்தினம் முற்பகல் 10.30 மணியளவில் ஏ-9 வீதியில் கற்கள் ஏற்றிச் சென்ற டிப்பர் வாகனம் நுணாவில் மத்தி கந்தசுவாமி ஆலயத்துக்கு அருகில் உள்ள மின்கம்பத்துடன் மோதியதில் மின்கம்பம் மூன்று துண்டுகளாக உடைந்தது.

மின் கம்பிகள் அறுந்து தொங்கின. நேற்று முன்தினம் மின்தடை என்பதால் பாதிப்பு ஏற்படவில்லை. டிப்பர் வாகனம் பலத்த சேதங்களுக்கு இலக்கானது. சாவகச்சேரி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-9)

## துரித கதியில் செயற்பாடுகள்

யாழ்ப்பாணம், பெப்.23

கச்சதீவு புனித அந்தோனியார் ஆலயத் திருவிழாவை முன்னிட்டு ஏற்பாடுகள் யாவும் துரித கதியில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

உள்ளூராட்சித் திணைக்களம் இதற்கான செயற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றது என்று உள்ளூராட்சி உதவி ஆணையாளர் எஸ். ஜெகூ தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்:

குடிதண்ணீர் எடுத்துச் செல்லக் கூடிய தாங்கிகள் மலசலகூடங்களில் பொருத்துவதற்குத் தேவையான பொருள்களை எடுத்துச் செல்வதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

கச்சதீவுக்குச் செல்வதற்கான போக்குவரத்து அனுமதி கிடைத்ததும் அங்கு சென்று உரிய வேலைகள் செய்து முடிக்கப்படும்.- என்றார். (ம-7)

## உக்காத கழிவுகளை பசளையாக்கும் திட்டம்

### 6 மில்லியன் செலவில் கட்டடம் அமைக்க முடிவு

சாவகச்சேரி நகர சபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் சேரும் உக்காத குப்பைகளை இயற்கைப் பசளையாக்கும் திண்மக் கழிவு முகாமைத்துவத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. 'பிலிசலு' என்னும் திட்டத்தில் 6 மில்லியன் ரூபா செலவில் பசளையாக்கக் கட்டடம் அமைக்கப்படவுள்ளது.

நகரசபை எல்லைக்குள் தினமும் சேகரிக்கப்படும் திண்மக் கழிவுகள் எரித்து அழிக்கப்பட்டு வருகின்றன. தினமும் சேரும் குப்பைகளை தரம் பிரித்து உக்காத கழிவுகளை பசளையாக்கும் செயற்றிட்டம் தென்னிலங்கைப் பகுதியில் 'பிலிசலு' அமைப்பால் மேற்கொள்ளப்பட்டு பெரு வெற்றியளித்துள்ளது.

**முதல் கட்டமாக ஒரு மில்லியன் ரூபா செலவில் வீதி நிர்மாணிக்கப்படவுள்ளது.**

சாவகச்சேரி தனங்கிளப்பு வீதியில் அமைக்கப்படவுள்ள இந்தக் கட்டடத்துக்குச் செல்வதற்கு முதல் கட்டமாக ஒரு மில்லியன் ரூபா செலவில் வீதி நிர்மாணிக்கப்படவுள்ளது.

கட்டடம் அமைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்படவுள்ளதால் வேலைகள் முடிவுற்றதும் இங்கு தயாரிக்கப்படும் பசளைகள் பொதுமக்களுக்கு நியாயமான விலையில் வழங்கப்படுமென நகரசபை தலைவர் இ.தேவசகாயம்பிள்ளை தெரிவித்தார். (ம-9)

## நடந்து சுவடப் போகமுடியவில்லை

### பருத்தியடைப்பு வீதியின் அவலம்

யாழ்ப்பாணம், பெப்.23

ஊர்காவற்றுறை பருத்தியடைப்பு வீதி மிகவும் மோசமாகச் சேதமடைந்துள்ளது.

மக்கள் குடியிருப்புகள் நிறைந்துள்ள இந்த வீதி கடந்த 30 வருடங்களுக்கு மேலாகத் திருத்த வேலைகள் இடம்பெறாத நிலையில் முழுமையாகச் சேதமடைந்துள்ளது.

இதனைத் திருத்தியமைக்கச் சம்பந்தப்பட்டவர்கள் முன்வரவில்லை எனவும் சாதாரணமாக பாதசாரி ஒருவர் நடந்து செல்வதற்குக் கூடக் கஷ்டப் படவேண்டிய நிலையில் இந்த வீதி உள்ளதாகவும் கூறப்படுகிறது.

மீன்பிடிக் கிராமமான பருத்தியடைப்பு, ஊர்காவற்றுறையின் முக்கிய கிராமம்.

எனவே, இந்த வீதியைப் புனரமைக்க உடன் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் பருத்தியடைப்பு மக்கள் கூறுகின்றனர்.

இதேவேளை, ஊர்காவற்றுறை வடக்கு வீதியில் நாரந்தனை பகுதியிலும் வீதி சேதமடைந்துள்ளது. (ம-7)

## 3 இற்கு மட்டுமே 'ஏ' தரச் சான்றிதழ்

சாவகச்சேரி நகர்ப் பகுதியில் இயங்கும் 21 உணவு கையாளும் நிலையங்களில் மூன்று கடைகளுக்கு மட்டுமே சுகாதாரத் திணைக்களத்தினரால் 'ஏ' தரச் சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளது.

ஐந்து கடைகள் 'சீ' தரத்துக்கு கணிப்பிடப்பட்டுள்ளதால் அவற்றை உரிய காலத்துக்கு முன்னர் மாற்றியமைக்குமாறும் குறித்த காலப் பகுதிக்குள் செய்யத் தவறின் இந்தக் கடைகள் 'சீல்' வைக்கப்படுமெனவும் சுகாதாரப் பகுதியினர் அறிவித்துள்ளனர்.

சாவகச்சேரி வைத்திய சாலைக்கு அருகில் உள்ள தேநீரகம் ஒன்றுக்கு புகையிலை உற்பத்திப் பொருள்கள் விற்பனையை நிறுத்தியுள்ளமைக்காக விஷேட சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடப்பட்டுள்ளது.

சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட சங்கத்தானை மோகன் கூல்பார், உதயம் உணவகம், பிரியன் உணவகம் ஆகிய உணவு கையாளும் நிலையங்களே 'ஏ' தரச் சான்றிதழ் பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

அண்மையில் சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட உணவு கையாளும் நிலையங்களின் உரிமையாளர்களுக்கான கலந்துரையாடலில் இந்தத் தகவல்கள் சுகாதாரப் பகுதியினரால் தெரிவிக்கப்பட்டன. (ம-9)

# மு.காங்கிரஸ் உட்பூசல்களால் கல்முனை மக்கள் பாதிப்பு

## அகில இலங்கை முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர் குற்றச்சாட்டு

எருவில்,பெப்.23

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸினுள் காணப்படுகின்ற உட்பூசல் காரணமாக பாதிக்கப்படுகின்றவர்கள் கல்முனை பிரதேசத்தைச் சேர்ந்த மக்களே. இதற்கான முழுப் பொறுப்பினையும் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைமை ஏற்க வேண்டும் என்று அகில இலங்கை முஸ் லிம் காங்கிரஸ் உறுப்பினர் ஏ.ஸி.முபீத் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

சில அரசியல் சக்திகளின் தான்தோன்றித்தனமான போக்குகளினாலும் கல்முனைப் பிரதேச அபிவிருத்தியினை தடுத்து நிறுத்த

**என்பதில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைமைத்துவம் கல்முனை ஒருபோதும் அபிவிருத்தி காணக்கூடாது மிகவும் உறுதியாக இருக்கின்றது.**

வேண்டும் என்ற நிலைப்பாட்டில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைமைத்துவம் கல்முனைப் பிரதேசம் ஒருபோதும் அபிவிருத்தி காணக்கூடாது என்பதில் மிகவும் உறுதியாக இருக்கின்றது.

இன்று மக்கள் மீது 10 தொடக்கம் 15 வீதமான வரிச்சுமை ஏற்படுத்தப்பட்டுள்ளது. வெளிநாட்டுத் தூதுவர்கள், உதவி செய்யக்கூடிய அரசு சார்ந்த அமைச்சர்கள், அரசியல்வாதிகள் மற்றும் கிழக்கு மாகாண ஆளுநர் போன்றோர் கல்முனை மாநகர அபிவிருத்திக்கான நிதியினை பெற்றுத் தரும்போது மக்களின் வரிச்சுமையினை பெருமளவு குறைக்க முடியும்.

கல்முனை மாநகரசபை எல்லைக்குட்பட்ட பிரதேசத்தில் வாழும் பெரும்பான்மையான மக்கள் விவசாயத்தையும் மீன்பிடியினையும் வியாபாரத்தினையும் தொழிலாகக் கொண்டவர்கள். கல்முனைத் தொகுதியே ஒரு மாநகரசபையாக திகழ்கின்றது. அகில இலங்கை முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் அமைச்சர் றிஸாத் பதியுதீன், கிழக்கு மாகாண சுகாதார அமைச்சர் எம்.எஸ்.சுபைர் மற்றும் பிரதியமைச்சர் எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லா ஆகியோரைக் கொண்டு நானும் கல்முனை மாநகர அபிவிருத்தியை முன்கொண்டு செல்ல வேண்டும் என்பதில் உறுதியாக இருக்கின்றோம்- என்றார். (ச-31)

## ஆறு கால்களுடன் கன்றுக் குட்டி



எருவில்,பெப்.23

படுவான்கரைப் பிரதேசத்தின் பெரியபோரதீவு காளி கோயிலுக்கு அண்மையில் எருமை மாட்டுப்பட்டி ஒன்றில் பிரசவித்த நாகு கன்று 6 காலுடன் பிறந்துள்ளது.

இந்த எருமை மாடு இரண்டாவது கன்றாக 6 கால்களையுடைய கன்றை ஈன்றுள்ளது. எருமை மாட்டுக் கன்றின் இருகால்களையும் சத்திர சிகிச்சை மூலம் அகற்ற நடவடிக்கை எடுத்துள்ளதாக மட்டக்களப்பு மாவட்ட கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்கள உதவிப் பணிப்பாளர் செல்லையா உதயராணி தெரிவித்தார்.

இந்த அதிசயத்தை அதிகளவான மக்கள் சென்று பார்வையிட்டு வருகின்றனர். (ச-31)

# கொழும்பு - ஹற்றன் விசேட ரயில் சேவை

கண்டி,பெப்.23

சிவனொளிபாதமலைக்கு வரும் யாத்திரீகர்களின் வசதி கருதி ஹற்றனுக்கும் கொழும்புக்குமிடையிலான விசேட ரயில் சேவை ஆரம்பிக்கப்படவுள்ளதாக ரயில்வே கட்டுப்பாட்டு மத்திய நிலையம் தெரிவித்துள்ளது

இதற்கிணங்க சனி, ஞாயிற்றுக்கிழமைகளிலும் பொது விடுமுறை நாள்களிலும் இந்த ரயில் சேவை செயற்படுத்தப்படவுள்ளதாக ரயில்வே கட்டுப்பாட்டு மத்திய நிலைய உயர் அதிகாரியொருவர் தெரிவித்தார்.

கொழும்பு கோட்டையில் இருந்து முற்பகல் 9.10 மணிக்கு புறப்படும் இந்த ரயில் மாலை 2 மணிக்கு ஹற்றன் ரயில் நிலையத்தை சென்றடையும். இந்த ரயில்

**இந்த ரயில் இரவு 10 மணிக்கு ஹற்றனிலிருந்து புறப்பட்டு மறுநாள் அதிகாலை 3 மணிக்கு கொழும்பு கோட்டையை வந்தடையும்.**

இரவு 10 மணிக்கு ஹற்றனிலிருந்து புறப்பட்டு மறுநாள் அதிகாலை 3மணிக்கு கொழும்பு கோட்டையை வந்தடையும் என்று அவர் குறிப்பிட்டார்.

இந்த ரயில் சேவையானது எதிர்வரும் மே மாதம் 6ஆம் திகதி வரை நடைமுறையில் இருக்கும் என்று அவர் மேலும் தெரிவித்தார். (ச)



எரிபொருள் விலை அதிகரித்தமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து மத்திய மாகாண சபையின் ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர்கள் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை சுலோகங்கள் எழுதப்பட்ட பதாதைகளை ஏந்திய வண்ணம் சபைக் கூட்டத்துக்குச் சென்றபோது..

# நகர சபையின் தீர்மானமின்றி பிரதான வீதியானது

மூதூர், பெப்.23

திருகோணமலை பிரதான வீதியை ஒருவழிப் பாதையாகத் திடீரென மாற்றிய விடயம் பொலிஸ் வட்டாரத்தினால் மேற்கொள்ளப்பட்ட ஒரு தன்னிச்சையான முடிவு என்று திருகோணமலை நகரசபைத் தலைவர் க.செல்வராஜா தெரிவித்தார்.

பிரதான வீதியை ஒருவழிப்பாதையாக மாற்றியமையால் வியாபாரிகள், மாணவர்கள், பொதுமக்கள் எனப் பலரும் பல கஷ்டங்களை எதிர்நோக்குகின்றனர் என்று அவர் தெரிவித்தார். இந்த விடயம் தொடர்பாக நகர சபையில் ஒருவழிப் பாதையை மாற்றி கனரக வாகனங்கள் செல்வதை மட்டும் தடைசெய்யும் படியும், ஏனைய வாகனங்கள் உட்செல்லவும், வெளிச் செல்லவும் வேண்டும் என்ற தீர்மானத்தை சபை ஏக மன

**பிரதான வீதியை ஒருவழிப் பாதையாக மாற்றியமையால் வியாபாரிகள், மாணவர்கள், பொது மக்கள் எனப் பலரும் பல கஷ்டங்களை எதிர் நோக்குகின்றனர்.**

தாக நிறைவேற்றியுள்ளது.

பொதுமக்களால் எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்ட கையொப்பப் பிரதியை கடந்தவாரம் திருகோணமலை பொலிஸ் அதிகாரியுடன் நடத்தப்பட்ட கலந்துரையாடலில் நகரசபைத் தலைவர் க.செல்வராஜா கையளித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (ச)

# சட்ட விரோத மணல் விற்பனை சோமாவதி வனத்தில் ஒருவர் கைது

சோமாவதி வனப்பகுதி வலயத்தில் சட்டவிரோத மணல் விற்பனையில் ஈடுபட்டு வந்த சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இதற்காகப் பயன்படுத்தப்பட்ட 3 டிரக்டர்களை பொலிஸார் பறிமுதல் செய்துள்ளனர்.

பொலன்னறுவை பொலிஸ் குற்றப்புலனாய்வுப் பிரிவினர் மற்றும் பொலன்னறுவை வன வள அதிகாரிகள் இணைந்து மேற்கொண்ட சுற்றி வளைப்பில் சட்டவிரோத மணல் விற்பனை நிலையம் கண்டறியப்பட்டுள்ளது.

இந்தச் சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்ட வேளையில் இரண்டு சந்தேகநபர்கள் தப்பிச் சென்றுள்ளனர்.(ச)

# படகுப் போக்குவரத்தில் மாடுகளுக்கே முதலிடம்

மட்டக்களப்பு,பெப்.23

மட்டக்களப்பு,மண்முனை படகுப் போக்குவரத்தில் மக்களை விட மாடுகளுக்கே அதிக முக்கியத்துவம் கொடுக்கப்படுகின்றது. இதனால், இந்தப் படகில் போக்குவரத்துச் செய்யும் பொதுமக்கள் பாதிக்கப்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது.

மட்டக்களப்பு மாவட்டத்தின் படுவான்கரைப் பிரதேசத்தையும் எழுவான்கரைப் பிரதேசத்தையும் இணைக்கின்ற முக்கிய போக்குவரத்துப் பாதையாக விளங்குகின்ற மண்முனைப் போக்குவரத்தில் தொடர்ந்தும் அசௌகரியங்களையே சந்திப்பதாக படகில் பயணிக்கும் மக்கள் தெரிவிக்கின்றனர்.

மக்கள் பயணம் செய்கின்ற இப்பாதைப் போக்குவரத்துப் படகில் பொதுமக்களுடன் மாடுகளையும், வாகனங்களையும் ஒரே நேரத்தில் ஏற்றிச் செல்வதாகவும், இதனால் இந்தப் பகுதியால் பயணம் செய்யும் ஆசிரியர்கள், மாணவர்கள், ஏனைய அரச அதிகாரிகளும் அசௌகரியங்களை எதிர்கொள்வதுடன் தங்களது கடமைகளுக்கு தாமதமாகவே செல்ல வேண்டி உள்ளதாக குற்றம் சுமத்துகின்றனர்.

எனவே மக்கள் போக்குவரத்துக்கு மற்றுமொரு படகினை ஒழுங்கு செய்து பொது மக்களின் பயணத்துக்கு முக்கியத்துவம் கொடுக்குமாறும் வேண்டுகோள்விடுக்கின்றனர்.(ச)

# தொழிலாளருக்காகக் குரல் கொடுக்க அரசியல்வாதிகள் முன்வர வேண்டும்

## இ.தொ.ஐ.முன்னணியின் மாவட்ட அமைப்பாளர் தெரிவிப்பு

கொழும்பு, பெப். 22

''எரிபொருள் விலையேற்றத்தால் தோட்டத் தொழிலாளர்களின் வாழ்க்கைப்பளு அதிகரித்துவிட்டது. அத்தியாவசிய பண்டங்களின் விலைகள் அபரிமிதமாக உயர்ந்துள்ளன. இவர்களுக்கு விமோசனம் கிடைக்க மலையக நாடாளுமன்ற உறுப்பினர்கள் உட்பட அரசியல்வாதிகள் செயற்பட முன்வர வேண்டும் என்று இலங்கைத் தொழிலாளர் ஐக்கிய முன்னணியின் மாவட்ட அமைப்பாளர் குமார் செல்வம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

பூண்டுலோயாவில் நடைபெற்ற கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்தநிகழ்வில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாட்டில் எரிபொருள்களின் விலையேற்றத்தால் அத்தியாவசியப் பொருள்களின் விலைகளும் உயர்ந்துவிட்டன. தொழிலாளர்களும், தோட்டத் தொழிலாளர்களும் இவற்றால் பெரும் பாதிப்புக்குள்ளாகின்றனர். கூட்டு ஒப்பந்தம் காரண

**அரசியல்வாதிகள் தொழிலாளர்களின் அவல நிலை சம்பந்தமாக நாடாளு மன்றத்தில் குரல் கொடுத்தால்தான் அவர்களுக்கு விமோசனம் கிட்டும்.**

மாகத் தோட்டத் தொழிலாளர்களின் சம்பளமும் இரு வருடங்களுக்கு ஒருமுறை போராட்டத்தின் மூலமாக உயர்த்தப்படுகின்றது. ஆனால், அரச ஊழியர்கள், தனியார் ஊழியர்கள் ஆகியோருக்கு ஒருநாள் அடையாள வேலை நிறுத்தத்தின் மூலமாகவே சம்பளம் உயர்த்தப்படுகின்றது.

நாட்டுக்கு அந்நிய செலாவணியை பெருமளவில் ஈட்டிக்கொடுக்கும் தொழிலாளர்களின் சம்பளத்தை அதிகரிக்கக் கூட்டு ஒப்பந்தம் முட்டுக்கட்டையாகவுள்ளது. அத்துடன், இன்றைய நிலையில் நிர்வாகங்கள் மேலதிகமாக இரண்டு கிலோ கொழுந்து பறிக்குமாறு மக்களை நிர்ப்பந்திக்கின்றன. நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களும் தொழிற்சங்கத் தலைவர்களும் மௌனிகளாக உள்ளனர்.

தொழிலாளர்களின் அவல நிலை சம்பந்தமாக நாடாளுமன்றத்தில் குரல்கொடுத்தால் விமோசனம் கிட்டும். மானியம், வீட்டு உரிமை, காணி உரிமை ஆகியவை அற்ற நிலையில் தொழிலாளர்கள் வறுமைக்கோட்டுக்குக்கீழ் தள்ளப்பட்டுள்ளனர். தொழிலாளர்களுக்காக குரல் கொடுத்துப் போராட்டம் நடத்த முன்வரும் எந்த ஓர் அரசியல் தலைவருக்கும் எமது முன்னணி உதவும்.

தோட்டத் தொழிலாளர்களுக்கு சமுர்த்தி திட்டங்கள், மானிய அடிப்படை ஆகியவற்றின் மூலமாக உணவுப் பொருள்கள் வழங்கப்படவேண்டும். அத்தோடு, நிர்ணயிக்கப்பட்ட விலைகளால் பொருள்கள் வழங்கப்படவேண்டும்- என்றார். (ச)

# தேசத்துக்கு மகுடம் கிழக்கு மாகாண சபை மூன்றாம் இடம்

மூதூர், பெப். 23

தேசத்துக்கு மகுடம் கண்காட்சியில் மாகாண சபைகளுக்கிடையில் நடத்தப்பட்ட கண்காட்சிக் கூடம் போட்டியில் முதலாம் இடத்தை ஊவாமாகாண சபையும், இரண்டாம் இடத்தை தென் மாகாணசபையும், மூன்றாம் இடத்தை கிழக்கு மாகாண சபையும் பெற்றுள்ளன.

# கைக்குண்டு வீச்சு

மட்டக்களப்பு, பெப்.23

மட்டக்களப்பு மாவட்டத்தின் காத்தான்குடி பிரதேசத்திலுள்ள வீடொன்றின் மீது நேற்றுப் புதன் கிழமை அதிகாலை கைக்குண்டுத் தாக்குதல் இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

காத்தான்குடி, பெரிய ஜும்ஆப் பள்ளிவாசல் வீதியிலுள்ள வீட்டின் மீதே கைக் குண்டொன்று வீசப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவத்தால் வீட்டின் முன்பக்க யன்னல், கண்ணாடிகள், கதவு ஆகியன சேதமடைந்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் விசாரணை மேற்கொண்டுவருவதாக காத்தான்குடிப் பொலிஸார் தெரிவித்தனர். (ச)

# ஐ.நா மனித உரிமைச் சபைக்கு எதிராக இலங்கை அரசு பிரேரணை

## வெளிப்படைத் தன்மை குறித்துக் கேள்வி எழுப்பும்

கொழும்பு, பெப்.23

ஐ.நா. மனிதஉரிமைகள் சபையை நெருக்கடிக்குள் தள்ளும் ஒரு நகர்வாக, அதன் வெளிப்படைத் தன்மை குறித்து வலியுறுத்தும் தீர்மானம் ஒன்றை ஜெனிவாவில் கொண்டு வர இலங்கை அரசு முயற்சிகளை மேற்கொண்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

**கியூபா, பாகிஸ்தான் ஆகிய நாடுகளுடன் இணைந்து இந்தத் தீர்மானத்துக்கு இலங்கை அரசு அனுசரணை வழங்கவுள்ளது.**

ஐ.நா மனிதஉரிமைகள் பேரவையின் நிதி, மற்றும் பணியாளர்கள் நியமனம் தொடர்பாக வெளிப்படைத் தன்மை பேணப்பட வேண்டும் என்று வலியுறுத்தும் இந்தத் தீர்மானத்தை இலங்கை அரசு கூட்டத் தொடர் ஆரம்பமாகும் நாளில் முன்வைக்கவுள்ளதாக ஜெனிவாவில் உள்ள இலங்கை இராஜதந்திர வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

கியூபா, பாகிஸ்தான் ஆகிய நாடுகளுடன் இணைந்து இந்தத் தீர்மானத்துக்கு இலங்கை அரசு அனுசரணை வழங்கவுள்ளது.

ஐ.நா. மனிதஉரிமைகள் பேரவைக்கு 80 வீதமான நிதியை அமெரிக்கா மற்றும் அதன் நட்பு நாடுகளான வலிமையான நாடுகளே வழங்குகின்றன.

அத்துடன் மனிதஉரிமைகள் சபையின் முக்கிய பதவிகளில் உள்ளவர்களில் பெரும்பாலானோர் மேற்படி நாடுகளின் வெளிவிவகார சேவைகளில் பணியாற்றியவர்களாவர்.

இந்தநிலையில், அபிவிருத்தியடைந்து வரும் நாடுகள் தொடர்பான ஐ.நா. மனித உரிமைகள் சபையின் செயற்பாடுகள் கடும் கவலையளிப்பதாக இலங்கை இராஜதந்திர வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

ஐ.நா மனிதஉரிமைகள் சபையின் வெளிப்படைத் தன்மையை வலியுறுத்தும் தீர்மானத்துக்கு, சீனா, ரஸ்யா மற்றும் அல்ஜீரியா போன்ற பல நாடுகள் ஆதரவு தெரிவித்துள்ளன என்றும் செய்திகள் வெளியாகியுள்ளன.

## இலங்கைக்கு எதிரான தீர்மானம்; முறியடிக்கப் பீரிஸ் பிரயத்தனம்

ஐ.நா மனிதஉரிமைகள் சபையின் கூட்டத்தொடரை முன்னிறுத்தி இலங்கை அரசு ஜெனிவாவில் முக்கியமானதொரு இராஜதந்திரப் போரை தொடங்கியுள்ளதாக வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

போரின் இறுதிக்கட்டத்தில் மீறல்கள் இடம்பெற்றதாக குற்றம்சாட்டி இலங்கைக்கு எதிராகக் கொண்டு வரத் திட்டமிடப்பட்டுள்ள தீர்மானத்தை தோற்கடிக்கவே இந்த இராஜதந்திரப் போர் தொடங்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

கடந்த 20ஆம் திகதி ஜெனிவா பயணமான வெளிவிவகார அமைச்சர் பீரிஸ் ஜெனிவாவில் இராஜதந்திரிகளுடனான சந்திப்புகளை தீவிரமாக மேற்கொண்டு வருகிறார்.

அமெரிக்கா இலங்கையின் நிலைப்பாடு தொடர்பில் மேற்குலக நாடுகளுக்கு ஆதரவழிக்க திட்டமிட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது. குறிப்பாக நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தத் தவறியுள்ளதாக காரணம் காட்டியே அமெரிக்க இந்தத் தீர்மானத்தைக் கொண்டுவர முனைகிறது.

ஆனால் ஆணைக்குழுவால் பரிந்துரைக்கப்பட்ட விடயங்களை நடைமுறைப்படுத்த எமக்கு கால அவகாசம் தேவை என்பதை இந்தச் சந்திப்புக்கள் மூலம் இராஜதந்திரிகளுக்கு எடுத்து விளக்கி வருகின்றோம் - என்றார். (10)

## மானியம் கேட்ட மீனவருக்கு மரணம் பரிசு லிபியா, சிரியா படுகொலைக்கு அத்திபாரம்

### சரத் பொன்சேகா குற்றச்சாட்டு

லிபியா மற்றும் சிரியாவில் இடம்பெற்றுக்கொண்டிருக்கின்ற மனிதப் படுகொலைகளே இலங்கையிலும் இடம்பெறுகின்றன. சிலாபம் மீனவரை படுகொலை புரிந்து அதற்கான அத்திபாரத்தை இலங்கை அரசு அமைத்துள்ளது என முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா குற்றஞ்சாட்டியுள்ளார்.

வைத்திய சிகிச்சைக்காக நேற்றுமுன்தினம் கொழும்பு தனியார் வைத்தியசாலைக்கு அழைத்துச்சென்றபோதே ஊடகவியலாளர்களிடம் மேற்கண்டவாறு அவர் தெரிவித்தார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

லிபியா மற்றும் சிரியாவில் இடம்பெறுகின்ற மனிதப் படுகொலைகளே இலங்கையிலும் இடம்பெறுகின்றன். சிலாபத்தில் மீனவரை படுகொலை செய்து இந்தக் கொடூரச் செயலுக்கான அத்திபாரத்தை அரசு இட்டுள்ளது.

இந்தக் கொடூரச் செயலில் இராணுவத்தினரையும், பொலிஸாரையும் ஈடுபட வேண்டாம் என நாம் கூறுகின்றோம். சிலாபம் மீனவர் அரசிடம் மானியம் கேட்டவுடன் குண்டுத் தாக்குதலை நடத்தியது. இந்தத் தாக்குதலை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம் - என்றார் அவர். (த-சி)

## ஆதிதிராவிடர் விடுதிகளில் இலங்கை மாணவருக்கு அனுமதி

சென்னை, பெப்.23

சென்னையில் இயங்கி வரும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை விடுதிகளில், முகாம்களில் இலங்கைத் தமிழ் மாணவர்களும் இணைந்துகொண்டு கற்கை நெறிகளைத் தொடர முடியும் என்று தமிழ் நாடு அரசு உத்தரவிட்டுள்ளது.

இது தொடர்பாக விடுக்கப்பட்டுள்ள அனுமதி கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட் டுள்ளதாவது:-

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறையின் கீழ் இயங்கி வரும் விடுதிகளில் 2011-2012 ஆம் ஆண்டில் முகாம்களில் வாழும் இலங்கைத் தமிழ் மாணவர்கள் தங்கிக் கல்வி கற்பதற்கு அரசு அனுமதி வழங்கியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி ஒவ்வொரு விடுதியிலும் 5 மாணவர்கள் வீதம் சேரலாம். எனவே தகுதியும் விருப்பமும் உள்ள மாணவர்கள் இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கற்கை நெறிகளை தொடரலாம் என தமிழ்நாடு அரசு அந்த அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது. (வ)


# VACANCIES

**சுற்றுலா வழிகாட்டி (Tour Guide)**

Tilko travels & tours இப்போது ஒருநாள் யாழ்ப்பாண சுற்றுலாவை சுற்றுலா பயணிகளின் வசதிக்காக ஆரம்பித்துள்ளார்கள். இதற்கு யாழ்ப்பாண வரலாறு பற்றிய அறிவும் சுற்றுலாத்துறை சார்ந்த அனுபவமு மிக்க சுற்றுலா வழிகாட்டி தேவை. தகுதியானவர்கள் உடனே தொடர்பு கொள்ளவும். மும்மொழிகளிலும் தேர்ச்சி பெற்றவர்களிற்கு முன்னுரிமை வழங்கப்படும்.

**வாகன சாரதி (Driver)**

30 ஆசனங்களைக் கொண்ட சுற்றுலா வாகனத்துக்கு சாரதி அனுமதிப்பத்திரமுள்ள (Heavy vehicle license) சாரதி தேவை. தகுதியானவர்கள் உடனே தொடர்புகொள்ளவும்.

TILKO hotels

Tilko Travels & Tours

Tel: 0777 696 443, 0770 780 393. Email: citystarkb@gmail.com


## மெய்வன்மைப் போட்டி

கிளிநொச்சி வன்னேரிக்குளம் மகா வித்தியாலய இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று பி.ப. 1.30 மணிக்கு பாடசாலை அதிபர் திருமதி ஜெ.சகாயமலர் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக கரைச்சி கோட்டக் கல்விப் பணிப்பாளர் அ.அமிர்தலிங்கமும் சிறப்பு விருந்தினராக பூநகரி கோட்டக் கல்வி அலுவலர் க.தர்மரட்ணம் பளை கோட்டக் கல்விப் பணிப்பாளர் அ.ஆனந்தசிவம் ஆகியோர் கலந்து கொள்ள உள்ளனர். (த-18)

## 31 ஆம் நாள் நினைவுதினம்

மலர்வு
02-08- 1942

உதிர்வு
25-01-2012



அமரர்
**அருட்பணி இ. பீற்றர் துரைரட்ணம்**
அடிகளார்
( முன்னாள் பங்குத்தந்தை, மிருசுவில்)

உலகில் நீயும் வாழ்ந்த காலம்
உயர்ந்த வாழ்வின் பயணமே
சேர்ந்த உறவும் இணைந்த உள்ளமும்
தொடர்ந்து வாழும் என்றுமே

எமது முன்னாள் பங்குத் தந்தை அமரர் அருட்பணி பீற்றர் துரைரட்ணம் அடிகளாரின் இறப்பின் 31 ஆம் நாளில் அவரது வாழ்வையும், பணியையும் நன்றியோடு நினைக்கின்றோம். இவரின் நினைவாக நாளை (24.02.2012) வெள்ளிக்கிழமை காலை 6.30 மணிக்கு மிருசுவில் புனித நீக்கிலார் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும்.

பங்கு மக்கள்,
புனித நீக்கிலார் ஆலயம்,
மிருசுவில்.

(C\9482) (6,8,10)

# மரண அறிவித்தல்

## பொன்னையா தங்கச்சிப்பிள்ளை



சரவணை மேற்கு, முதலாம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், கந்தர்மடம், ஆத்திசூடி வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பொன்னையா தங்கச்சிப்பிள்ளை நேற்று (22.02.2012) புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர் களான வேலுப்பிள்ளை - தங்கம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான நாகமுத்து - செல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற நாகமுத்து பொன்னையாவின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற கந்தையாவின் அன்புச் சகோதரி யும், காலஞ்சென்ற விசாலாட்சி யின் அன்பு மைத்துனியும் சிவபாக் கியம் (ஆஸ்திரேலியா), செல்வ நாயகம் (சுவிஸ்), செல்வராணி (வேலணை), மனோகரன் (வேலணை), மகேந்திரன் (டென்மார்க்), புஸ்பராணி (வேலணை), சாந்தகுமாரி (கொக்குவில்), விஜயகுமாரி (கந்தர்மடம்), தமிழ்ச்செல்வி (ஜேர்மனி), ஜெயசீலன் (கனடா) ஆகியோரின் பாசமிகு தாயும், செல்வநாயகம், தனலட்சுமி, செல்வராசா, கிருஷ்ண லீலா, இராஜலட்சுமி, இராசரத்தினம், தங்கராஜா, சாந்திநாதன், பிறேமராஜா, சிவதர்சினி ஆகியோரின் அன்பு மாமியும் சிவகுமார், சிவதர்மகுமார், சிவசந்திரகுமார், கிருஷாந்தி, பிரதீபன், பிரதீசன், சர்மிளா, பிரசாத், மனோஜா, ஷாம், ஜோசியா, திபோறா, ஜெயக்குமார், சசிகுமார், கென்ஷிகா, அபிஷா, கருனியா, டனுஷன், சங்குஜன், கீரவன், அன்ஷன், சியோளா, அஸ்விந் ஆகியோரின் அன்பு பேர்த்தியும் கபின், றேகன், தானியா, ப்ரித்திகா, மாதுஷா, அஜித், காலஞ்சென்ற அஜய் மற்றும் அலெக்ஸ், ப்ரித்திகா, வினித், அருண், தனுஷ், இசைவிழி, சஞ்சய், சுஜானுஜா, சுஜாந் ஆகியோரின் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

ஆத்திசூடி வீதி, கந்தர்மடம். தகவல்: பிள்ளைகள்.

# சீனாவுக்கு எதிராக இந்தியா ராணுவ பலத்தைப் பெருக்குகிறது

## அமெரிக்க ராணுவ உளவுத்துறை

வொஷிங்டன், பெப். 23

சீனாவுக்கு எதிராக இந்தியா ராணுவப் பலத்தை பெருக்கி வருகிறது என்று அமெரிக்க ராணுவத்தின் உளவுத்துறைத் தலைவர் தெரிவித்து உள்ளார்.

அமெரிக்காவின் தேசிய உளவுத்துறைத் தலைவர் ஜேம்ஸ் கிளாப்பர், இரண்டு வாரங்களுக்கு முன்னர் ராணுவ விவகாரங்களுக்கான நாடாளுமன்றக் குழுவிடம் அறிக்கை ஒன்றைக் கையளித்தார்.

அதில், 'இந்தியா தனது அண்டை நாடான சீனாவுக்கு எதிராகத் தனது எல்லையிலும், இந்து மகா சமுத்திரக் கடற் பகுதியிலும், ஆசியா-பசிபிக் மண்டலத்திலும் ராணுவபலத்தைப்பெருக்கி வருகிறது'' என்று குறிப்பிட்டு இருந்தார்.



இதேபோல், அமெரிக்க ராணுவத்தின் உளவுத் துறைத் தலைவரான ரொனால்ட் ராணுவ விவகாரங்களுக்கான நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழுவிடம் அவர் இது குறித்துத் தெரிவித்ததாவது:-

இந்தியா, சீனாவுக்கு எதிராகத் தரைப்படை பலத்தையும், தரைப்படை வீரர்களின் எண்ணிக்கையையும் அதிகரித்து வருகிறது. சீனாவை நோக்கி அதிநவீன போர் விமானங்களை நிறுத்தி வருகிறது.

அணு ஆயுதங்களைத் தாங்கிச் செல்லும் ஏவுகணைகளையும், பல்வேறு குண்டுகளை ஏற்றிச் செல்லும் ஏவுகணைகளையும் அடிக்கடி செலுத்தி, அவற்றின் திறனைப் பரிசோதித்து வருகிறது. கண்டம் விட்டு கண்டம் தாண்டி 6 ஆயிரம் கிலோ மீற்றர் தூரம் சென்று தாக்கக் கூடிய அணு ஆயுதம் தாங்கிய ஏவுகணைகளையும், பல்வேறு குண்டுகள், ஆயுதங்களை தாங்கிச் செல்லும் ஏவுகணைகளையும் இந்தியா உருவாக்கி வருவதாகத் தெரிவித்தார்.

கடந்த ஆண்டு மத்தியில் இந்தியாவும், சீனாவும் போர் ஒத்திகை நடத்தியுள்ளன. கடந்த செப்ரெம்பர் மாதம் இரு நாடுகளும் பொருளாதார ஒத்துழைப்பு அளிப்பது தொடர்பாக முதன் முதலாக பேச்சு நடத்தியுள்ளன.

கடந்த நவம்பர் மாதம் இரு நாடுகளின் எல் லைப் பிரச்சினை குறித்தும் பேச்சு நடத்தி உள்ளன. - இவ்வாறு அவர் மேலும் கூறியுள்ளார்.

## பான் கேக் அடுக்கி சாதனை படைத்தனர்



ஆஸ்திரேலியாவில் 76 சென்ரிமீற்றர்கள் வரை பான் கேக்கை கீழே விழாதவாறு ஒன்றின் மேல் ஒன்றாக அடுக்கி வைத்து உலக சாதனை படைக்கப்பட்டுள்ளது.

கோதுமை மா, முட்டை, பால் இவற்றைப் பயன்படுத்தி செய்யப்படும் தட்டையான வடிவமுடைய கேக் அமைக்கும் பந்தயத்தில் சிறுவர்கள் முதல் பெரியவர்கள் வரை கலந்து கொள்வார்கள்.

இதில் விநோதமான விடயம் என்னவென்றால் ஆஸ்திரேலியர்களுக்கு இந்த பான்கேக்கிற்கு கோதுமை மா, முட்டை, பால் பயன்படுத்துவது பற்றி இதுவரையில் தெரியாதாம்.

இந்த முறை நடைபெற்ற பந்தயத்தின் போது 76 சென்ரிமீற்றர்கள் வரை பான்கேக்கை கீழே விழாதவாறு ஒன்றின் மேல் ஒன்றாக அடுக்கி வைத்து உலக சாதனை படைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. இதுவரையில் 61 சென்ரிமீற்றர் உயரத்துக்கு அடுக்கியமையே சாதனையாக இருந்து வந்தது.

# ஒரே நாளில் விவாகரத்து ரூ.3 லட்சம் மட்டுமே செலவு

தம்பதியர் விவாகரத்து பெற முடிவு செய்தால் 24 மணி நேரத்தில் விவாகரத்து பெற்று விடுவதற்கு கரீபியன் பகுதியில் உள்ள டொமினிக்கன் குடியரசு நாட்டுக்குச் செல்லலாம்.

பிரிட்டனைச் சேர்ந்த குயிக் டைவொ்ஸ் என்ற சட்டக் குழுவின் இணையத் தளம் ஏற்பாடு செய்கிறது. இதற்குப் பிரிட்டன் , அமெரிக்க நாட்டு மக்களிடம் அதிக ஆர்வம் நிகழ்வதால் பெயர் பதிவு செய்வதில் கடும் நெருக்கடி நிலவுகிறது.

மேலும் இந்த விரைவு விவா கரத்துக்குத் தம்பதியரில் ஒருவர் மட்டும் நேரில் சென்றால் போதும். மற்றொருவரின் வாக்குமூலத்தை பவர் ஆப் அட்டார்னி மூலம் தெரி விக்கலாம். மொத்தம் சுமார் ரூ.3 லட்சத்து 60 ஆயிரம் செலவு செய்ய வேண்டும்.

இதில் அந்த நாட்டுக்குச் சென்று திரும்பும் விமானக் கட்டணம், உணவுவிடுதியில் தங்கும் செலவு, வழக்கறிஞர் மற்றும் நீதிமன்றக் கட்டணம் ஆகியவை அடங்குவது குறிப்பிடத்தக்கது

# சொத்துக் குவித்த அமைச்சர் சிக்கிக் கொண்டார்

வருமானத்துக்கு அதிகமாகச் சொத்துச் சேர்த்த வழக்கில் நேபாள அமைச்சருக்கு ஒன்றரை ஆண்டு சிறைத் தண்டனை விதித்து அந்தநாட்டு மேல்நீதிமன்றம் தீர்ப்புக் கூறியுள்ளது. நேபாளப் பிரதமர் பாபுராம் பட்டாராய் தலைமையிலான அரசில் தகவல், தொலைத் தொடர்புத் துறை அமைச்சராக இருந்தவர் ஜெயபிரகாஷ் குப்தா. இவர் தனது பதவியைத் தவறாகப் பயன்படுத்தி வருமானத் துக்கு அதிகமாகச் சொத்துக் குவித்ததாகச் சிறப்பு நீதி மன்றில் நேபாள ஊழல் கண்காணிப்பு ஆணையம் 2003 ஆம் ஆண்டு வழக்குத் தொடர்ந்திருந்தது. இந்த வழக்கில் குப்தாவுக்கு ஆதரவாக நீதிமன்றம் 2007இல் தீர்ப்புக் கூறியது. இந்தத் தீர்ப்பை எதிர்த்து மேன் நீதிமன்ற ஆணையம் வழக்குத் தொடர்ந்தது. இந்த வழக்கின் தீர்ப்பு நேற்று முன்தினம் வழங்கப் பட்டது. வருமானத்துக்கு எந்த வழியும் இல்லாமல் குப்தா ரூ.52.5 லட்சம் சொத்து குவித்துள்ளார் என்று கூறிய நீதிபதிகள், அவருக்கு ஒன்றரை ஆண்டு சிறைத்தண்டனை மற்றும் ரூ.52.5 லட்சம் அபராதம் விதித்துத் தீர்ப்பளித்தார். அமைச்சர் பதவியில் இருக்கும்போது ஒருவருக்கு சிறைத் தண்டனை வழங்குவது நேபாள வரலாற்றில் இது முதல் முறை.



மியன்மாரில் நடைபெறவுள்ள தேர்தலுக்கு தயாகும் ஆங் சாங் சூகி.

# இணையத் தளங்களுக்கு ஈரானில் திடீரெனத் தடை

தெஹ்ரான்,பெப்.23

நாடாளுமன்றத் தேர்தல் விரைவில் நடக்கவுள்ள நிலையில், இணையத்தளங்களை மக்கள் பார்க்க ஈரானில் திடீர் தடை விதிக்கப்பட்டுள் ளது.

கூகுள், யாஹூ உள்ளிட்ட இணையத்தளங்களே தடை செய்யப்பட் டுள்ளன.

ஈரானில் 2009ஆம் ஆண்டு அதிபர் தேர்தல் நடைபெற்றது. 2ஆவது முறையாக முஹமது அகமதி நிஜாத் வெற்றி பெற்று அதிபரானார். முறைகேடாகத் தேர்தல் நடைபெற்றதாக எதிர்க்கட்சிகள் கூறின. 4 ஆண்டுப் பதவிக்காலம் முடிவதை அடுத்து, அங்கு அதிபர் தேர்தல் விரைவில் நடக்கவுள்ளது. இதற்கிடையில், நாட்டில் புரட்சி வெடித்து குடியரசு நாடாக மாறியதன் 33 ஆவது ஆண்டு விழா எதிர்வரும் ஏப்ரல் 1ஆம் திகதி கொண்டாடப்பட இருக்கிறது. இதை விமரிசையாகக் கொண்டாட மக்கள் தயாராகி வரும் நிலையில், அதிரடி நடவடிக்கையாக இணையத்தளங்களுக்குத் திடீர் தடை விதிக்கப்பட்டுள்ளது. எச்டிடிபிஎஸ் எனத் தொடங்கும் எல்லா இணையங்களும் தடை செய்யப்பட்டுள்ளன.

கூகுள், யாஹூ மட்டுமின்றி இன்டர்நெட் பேங்கிங் சேவையைக் கூடப் பெற முடியாமல் மக்கள் அவதிப்படுகின்றனர் எனத் தகவல் வெளியாகி உள்ளது.

# 'பேஸ் புக்' - ஒரு குற்றப்பத்திரம்

ஜேர்மன் நீதிமன்ற வரலாற்றில் முதல்முறையாக ரூட்லிங்கென் என்ற நீதிமன்றத்தின் நீதிபதி குற்றவாளியின் குற்றத்தை நிரூபிக்க முகப் புத்தகத்தை ஆதாரமாகக் கொண்டுவர முயற்சி மேற்கொண்டு வருகின்றார்.

இந்த வழக்கில் ஓர் இருபது வயது இளைஞர் மற்றொருவரின் மின்னஞ்சலை இரகசியமாகப் படித்துப் பார்க்க முயன்றார் எனக் குற்றஞ் சாட்டப்பட்டது. இதை நிரூபிக்க அவரது முகப் புத்தகத்தைப் பறிமுதல் செய்து பார்த்தால் உண்மை தெரிந்துவிடும்.

எனவே அவரது முகப் புத்தகம் இடம்பெற் றுள்ள இணையத்தள சேவை இயக்குநரிடம் அதனைத் திறந்து படித்துப் பார்க்க ஆணை பிறப்பிக்க வேண்டும் என்று நீதிபதி கூறினார்.

இதற்கு அந்த இணையத் தள நிறுவனம், ஜேர்மனியின் தனிநபர் முகப்புத்தகங்கள் தலைமையகம் அயர்லாந்தில் செயற்பட்டு வருகின்றது. எனவே அயர்லாந்தில் உள்ள தலைமையகத்தை அணுகுமாறு நீதிமன்றத்துக்குப் பதிலளித்துள்ளது.

எனவே ரூட்லிங்கென் நீதிமன்றம் அயர்லாந்து தலைமையகத்திடம் குற்றஞ் சாட்டப்பட்டவரின் முகப் புத்தகத்தை திறந்து பார்க்க உதவி செய்யுமாறு கேட்டுக் கொண்டது.

அமெரிக்காவில் இது போன்று முகநூலை திறக்கும் இந்த முறை சாதாரணமாகப் பின்பற்றப்படுகிறது. ஆனால் ஜேர்மனிக்கு இது மிகவும் புதிய அனுபவம் என்று வழக்கறிஞர் கார்ஸ்டென் உல்பரிக்ட்டின் கருத்துத் தெரிவித்துள்ளார்.

# பணிப்பெண்மீது காரை ஏற்றிக் கொன்ற தம்பதியருக்குத் தூக்கு

பிலிப்பைன்ஸைச் சேர்ந்த வேலைக்காரப் பெண்ணைச் சித்திரவதை செய்து கார் ஏற்றிக் கொலை செய்த வழக்கில் கணவன், மனைவிக்குகுவைத் நீதிமன்றம் மரண தண்டனை விதித்துள்ளது.

பிலிப்பைன்ஸ் நாட்டைச் சேர்ந்த பெண் ஒருவர், குவைத்தில் உள்ள ஒரு வீட்டில் வேலை செய்து வந்தாா். அந்த வீட்டின் உரிமையாளர் மாற்றுத் திறனாளி. அவரும் அவரது மனைவியும் சேர்ந்து வேலைக்காரப் பெண்ணைக் கொடுமை செய்து வந்துள்ளனர். திடீரென ஒரு நாள் வேலைக்காரப் பெண் மர்மமான முறையில் மாயமானார். அவரைப் பற்றி எந்தத் தகவலும் கிடைக்காததால், அந்தத் தம்பதியின் மகன் அதிர்ச்சி அடைந்து பொலிஸுக்குத் தகவல் கொடுத்தார்.

இதையடுத்து, விசாரணையைப் பொலிஸார் தீவிரப் படுத்தினர். இதன்போது காரில் அந்தப் பெண்ணை ஏற்றிக்கொண்டு ஆள் நடமாட்டம் இல்லாத பாலைவனப் பகுதிக்குத் தம்பதி சென்றுள்ளனர். அங்கு போனதும், ஓடும் காரில் இருந்து அந்த பெண்ணை உதைத்து கீழே தள்ளினர். பின்னர், உயிருக்குப் போராடிய அவர் மீது பலமுறை காரை ஏற்றி சாகடித்திருக்கின்றனர் என்பது தெரியவந்தது.

இந்தத் தம்பதிக்கு குவைத் குற்றவியல் நீதிமன்றம் மரண தண்டனை விதித்துள்ளது.

# ஈரான் மீதான தாக்குதல் சிக்கலானது

## எச்சரிக்கும் அமெரிக்க இராணுவ அதிகாரிகள்

அணுஆயுத சர்ச்சை தொடர்பாக ஈரான் மீது இஸ்ரேல் போர் தொடுப்பது மிகவும் சிக்கலானதாகவே இருக்கும் என்று அமெரிக்காவின் முன்னாள் ராணுவ அதிகாரிகள் கணிப் பீடு செய்துள்ளனர்.

அணு ஆயுதங்களை ஈரான் தயாரித்து வருவதாகக் குற்றம் சாட்டி, ஐ.நா. மற்றும் அமெரிக்கா, பிரிட்டன் உள்பட பல நாடுகள் பொருளாதார தடை விதித்துள்ளன.

இதற்கு பதிலடி கொடுக்கும் வகையில், பிரிட்டன், பிரான்ஸ் ஆகிய நாடுகளுக்கான எண்ணெய் விநியோகத்தை 2 நாள்களுக்கு முன் ஈரான் அதிரடியாக நிறுத்தியது. அதே வேளை, அணுஆயுதத் திட்டங்களை கைவிட வேண்டும், தங்கள் நாட்டு பிரஜைகள் மீது தாக்குதல் நடத்தி வருவதை நிறுத்த வேண்டும். இல்லாவிட்டால் ஈரான் மீது ராணுவ நடவடிக்கை எடுக்கப்படும் என்று இஸ்ரேல் கூறிவருகிறது.

ஆனால், ஈரான் மீது இஸ்ரேல் போர் தொடுப்பது அவ்வளவு எளிதானது அல்ல என்று அமெரிக்க ராணுவ அதிகாரிகள் கணக்கிட்டுள்ளனர். இஸ்ரேலில் இருந்து ஈரான் சென்றடைய ஆயிரம் கிலோ மீற்றருக்கு மேல் பயணம் செல்ல வேண்டும். இதற்கு விமானஎரிபொருள்நிறையவே தேவைப்படும். இடையில் வானிலேயே விமானத்துக்கு எரிபொருள் நிரப்ப வேண்டி இருக்கும்.

அத்துடன் 100க்கும் அதிகமான விமானங்கள் இருந்தால் தான், ஈரானில் உள்ள பல பதுங்கு குழிகள், அணு சக்தித் திட்டங்கள் நடக்கும் இடங்களில் தாக்குதல் நடத்த முடியும். இதற்கு அதிக செலவாகும், சிக்கலானது என்று அமெரிக்க முன்னாள் ராணுவ அதிகாரிகள் கருத்து தெரிவித்துள்ளனர்.

# போனாலும் விடமாட்டோம் வந்தாலும் விடமாட்டோம்

இஸ்லாமாபாத், பெப்.23

பாகிஸ்தான் முன்னாள் அதிபர் பர்வேஷ் முஷாரப்பைக் கைது செய்ய சர்வதேச பொலிஸாரின் உதவி கோரப்படும் என உள்துறை அமைச்சர் ரகுமான் மாலிக் தெரிவித்துள்ளார்.



பாகிஸ்தானில் கடந்த 2007ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் நடைபெற்ற பொதுத் தேர்தல் பிரசாரத்தின் போது பாகிஸ்தான் மக்கள் கட்சி தலைவர் பெனாஸிர் பூட்டோ தற்கொலைத் தாக்குதலில் கொல்லப்பட்டார். தொடர்ந்து நடைபெற்ற விசாரணையில் பூட்டோவிற்கு அளிக்கப்பட்ட பாதுகாப்பில் ஏற்பட்ட குறைபாடே சம்பவத்திற்கு காரணம் என்பதால் இதற்கு முஷாரப் குற்றவாளி என முடிவானது. இந்நிலையில் முஷாரப் லண்டனில் குடியேறினார். இருப்பினும் அவரைக் கைது செய்வதற்கு கைது ஆணை பிறப்பிக்கப்பட்டது.

மேலும் தற்போது பாகிஸ்தானில் தேர்தல் நடைபெற இருப்பதை முன்னிட்டு அதில் போட்டியிட விருப்பம் தெரிவித்துள்ளார் முஷாரப். போட்டியிட வரும் முஷாரப்பை அரசியல் காரணங்களுக்காகப் பழிவாங்கும் விதத்தில் கைது செய்யப்பட்டு அவர் கொல்லப்படலாம் என செய்தி நிறுவனம் ஒன்று தகவல் தெரிவித்தது.

இந்த நிலையில் முஷாரப்பை கைதுசெய்ய சர்வதேச பொலிஸாரின் உதவி கோரப்படும் என உள்துறை அமைச்சர் ரகுமான் மாலிக் தெரிவித்துள்ளார். இது குறித்து கருத்து தெரிவித்த சட்டத்தரணி முஷாரப் மீது கைது ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ள நிலையில் சர்வதேச பொலிஸார் உதவி கோரியிருப்பது நல்லதுதான். ஆனால் இது எந்தளவிற்கு சாத்தியமாகும் என்பது தெரியவில்லை எனத் தெரிவித்துள்ளார். (ந)

## உருக்காலை வெடிப்பு 13 பேர் சாவு



*பீஜிங், பெப்.23*

*சீனாவின் லியோனிங் மாகாணத்தில் உருக்காலையில் ஏற்பட்ட வெடிவிபத்தில், 13 பேர் உயிரிழந்துள்ளனர்; 17 பேர் காயமடைந்தனர்.*

*சீனாவின், லியோனிங் மாகாணம் ஆன்ஷான் நகரில், ஆங்அங் உருக்கு ஆலையில் நேற்றுமுன்தினம் இரவு வெடிவிபத்து ஏற்பட்டது. 10 மீற்றர் சுற்றளவு கொண்ட வார்ப்பு இரும்பு திடீரென வெடித்ததால், அங்கிருந்த மணல் மூட்டைகளும், சுவரும் தகர்ந்தன.*


*சீனாவில் மிகப்பெரிய இயந்திரங்களை உருவாக்கும் தொழிற்சாலைகளுள் ஒன்றே ஆங்அங் உருக்கு ஆலை. இதன் கட்டட இடிபாடுகளில் இருந்து இது வரை, 10 பேரின் சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன.*

*வட்ட வடிவ இரும்பை உருவாக்குவதற்காக, அச்சு வார்க்கும்போது, இந்த விபத்து ஏற்பட்டதாகத் தொழிலாளர்கள் தெரிவித்துள்ளனர். (ந)*

## மீண்டும் அவதரிக்கும் இந்துக் கோயில்

இஸ்லாமாபாத், பெப்.23

பாகிஸ்தானின் கராச்சி நகரில், நீண்ட காலப் போராட்டத்துக்குப் பின் இந்துக் கோயில் ஒன்று புதுப்பிக்கப்பட்டு வருகிறது.



கராச்சியின் ஜாம்ஷெட் நகரின் அருகிலுள்ள 'சோல்ஜர் பஜார்' என்ற இடத்தில், 1,500 ஆண்டுகள் பழைமையான பஞ்சமுகி அனுமான் மந்திர் என்ற கோயில் உள்ளது. இந்தக் கோயிலின் மூலஸ்தானத்தில், எட்டு அடி உயரம் கொண்ட, சுயம்பு அனுமான் விக்கிரகம் இருக்கிறது. அதனால் அப்பகுதி இந்துக்கள் மத்தியில், இந்தக் கோயில் மிகவும் புகழ் பெற்று விளங்குகிறது. கராச்சியின் பல கோயில்களின் நிலைமையைப் போலவே, இக் கோயிலைச் சுற்றியிருந்த நிலங்களும் ஆக்கிரமிக்கப்பட்டன. இவற்றில் ஒரு பாதியை கோயில் நிர்வாகம் மீட்டிருக்கிறது. இன்னும் அது தொடர்பான வழக்குகளும் நடந்து வருகின்றன. அதே நேரம் கோயிலைப் புதுப்பிக்கும் பணிகளும் பல்வேறு இடையூறுகளுக்கிடையில் நடைபெற்று வருகின்றன. மொத்தம் 45 லட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான இந்தப் பணிகள், இடையில் நன்கொடைகள் வராததால் தடைப்பட்டன. எனினும், சிந்து மாகாணத்தின் சிறுபான்மை அமைச்சகம் அளிக்கும் நிதியுதவியைப் பெறாமல், ஏழை இந்துக்கள் மற்றும் முட்டாகிதா குவாமி இயக்கம் ஆகியோரின் உதவியால், நன்கொடைகள் திரட்டப்பட்டு வருகின்றன.

## சீனாவில் சந்திப்போம் அமெரிக்காவை

வடகொரியத் துணை வெளியுறவுத் துறை அமைச்சர் கிம் கி வான் - அமெரிக்கத் தூதர் கிளின்டேவிட் இடையிலான சந்திப்பு சீனாவில் இடம்பெறவுள்ளது.

வடகொரிய அதிபர் கிம் ஜோங், கடந்த ஆண்டு இறந்த பின் அவரது மகன் கிம் ஜோங் உன் புதிய அதிபராகப் பதவி ஏற்றுள்ளார்.

இவரது உத்தரவின்படி, துணை வெளியுறவு அமைச்சர் கிம் கி வான், பீஜிங் நகருக்கு சென்று, அங்குள்ள அமெரிக்கத் தூதர் கிளின் டேவிட்டை நாளை சந்தித்து பேச்சுக்களை நடத்தவுள்ளார்.

## பட்டினியால் இறந்த குடும்பத்தினர்

ஜப்பானில் டோக்கியோ அருகே உள்ள வீடொன்றில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த தாய், தந்தை, மகன் ஆகிய மூவரும் இறந்து கிடந்தனர். அவர்கள் இறந்து கிட்டத்தட்ட இரண்டு மாதங்கள் ஆகியிருக்கலாம் என்றும் அவர்கள் பட்டினியால் இறந்துள்ளனர் எனவும் போலிஸ் வட்டாரங்கள் கூறின.

மேலும் அந்தப் பெற்றோருக்கு 60 வயதிருக்கலாம் என்றும் மகனுக்கு 30 வயதிருக்கலாம் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

அவர்கள் தங்கியிருந்தது ஒரு வாடகை வீடு. அவர்கள் வீட்டு வாடகை ஆறு மாதங்களாக செலுத்தாமல் இருந்ததால் மின்சாரம், எரிவாயு விநியோகம் துண்டிக்கப்பட்டிருந்தன. தண்ணீரை மட்டுமே குடித்து அந்தக் குடும்பத்தினர் உயிர்வாழ்ந்திலாம் என்று நம்பப்படுகிறது.

## திருப்பி அனுப்ப வேண்டாம்

சியோல், பெப்.23

சீனாவுக்குள் நுழைந்த வட கொரியர்களைத் திருப்பி அனுப்பக் கூடாது எனத் தென் கொரியா தெரிவித்துள்ளது.

கடந்த 1950ம் ஆண்டு முதல் 1953ஆம் ஆண்டு வரை, நடைபெற்ற கொரியப் போரின் போது ஏராளமானவர்கள், வட கொரியாவிலிருந்து சீனாவுக்குள் அகதிகளாக நுழைந்தனர். அதைத் தொடர்ந்து பலர் சீனாவுக்குள் ஊடுருவி வருகின்றனர். இவர்கள் இங்கிருந்து தென் கொரியா செல்ல முயற்சிக்கின்றனர். இந்தநிலையில், தென்கொரியா செல்ல முயன்ற 30 வட கொரியர்களை மீண்டும் திருப்பி அனுப்ப, சீனா முடிவு செய்துள்ளது. இதற்குத் தென் கொரியா எதிர்ப்பு தெரிவித்துள்ளது.

வட கொரியர்களை மீண்டும் அவர்கள் நாட்டுக்குத் திருப்பி அனுப்புவதால், அவர்கள் கடும் தண்டனையை எதிர்கொள்ள நேரிடும். எனவே இந்த விஷயத்தில், ஐ.நா. தலையிட வேண்டும் எனத் தென் கொரியா கேட்டுள்ளது. தென் கொரியாவின் சியோல் நகரில் உள்ள ஐ.நா. தூதரகத்தின் முன்பாக வட கொரியர்கள் பலர் சீனாவின் இந்த நடவடிக்கையை எதிர்த்து, போராட்டங்களை நடத்தினர். (ந)



**யார் தடை செய்தாலும் நாம் எமது சகோதரத்துவ நாடுகளுடன் இணைந்திருப்போம்.**

*ஈரானிய ஜனாதிபதி அகமது நிஜாத் லெபனான் பயணத்தின்போது...*

## சிறிய விமானங்கள் தயாரிக்கின்றன சீனா – ரஷ்யா

சீனா ஓரியன்டல் குழுமம் மற்றும் ரஷ்யாவின் நிறுவனங்கள் இணைந்து சிறிய ரக விமானங்கள் தயாரிக்கவுள்ளன.

பீஜிங், பெப்.23

சிறிய ரக விமானங்கள் தயாரிக்க சீனா, ரஷ்ய நிறுவனங்கள் ஒப்பந்தம் மேற்கொண்டுள்ளன.

சீனா - ரஷ்யா இடையே ராணுவ ஒத்துழைப்பு தொடர்பான ஒப்பந்தங்கள் அவ்வப்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதன்படி சுகோய் ரக விமானங்களை சீனாவுக்கு ரஷ்யா வழங்கி வருகிறது. அத்துடன் ஜேஎப் 17 ரக ஜெட் விமானங்களுக்குத் தேவையான இயந்திரங்களையும் ரஷ்யா வழங்கி உள்ளது.

இந்நிலையில், சீனா ஓரியன்டல் அறிவியல் குழுமம் மற்றும் ரஷ்யாவின் சர்வதேச முதலீடு நிறுவனங்கள் இணைந்து, 400 சிறிய ரக விமானங்கள் தயாரிக்க ஒப்பந்தம் மேற்கொண்டன. ஒப்பந்தம் கையெழுத்தாகும் நிகழ்ச்சி அண்மையில் பீஜிங்கில் நடைபெற்றது. இதன்படி 4 இருக்கைகள் முதல் 12 இருக்கைகள் வரை உள்ள 400 சிறிய ரக விமானங்களை இந்த 2 நிறுவனங்களும் இணைந்து தயாரிக்கும். மேலும், விமான ஆராய்ச்சி மையம் அமைக்கவும் இந்த ஒப்பந்தத்தில் வழிவகுக்கப்பட்டுள்ளது என்று ஓரியன்டல் அறிவியல் குழும தலைவர் ஜுவாங் ஜோங் தெரிவித்துள்ளார். (ந)

## பாகிஸ்தானில் சிவராத்திரி

பாகிஸ்தானில், பஞ்சாப் மற்றும் லாகூர் உள்ளிட்ட இடங்களில், இந்து மற்றும் பஞ்சாபியர்களின் புகழ் பெற்ற கட்டாஸ் ராஜ் சிவன் கோவிலில் சிவராத்திரியை முன்னிட்டு ஏராளமான இந்துக்கள் வழிபாடு நடத்தினர்.

இந்தியாவிலிருந்து புனித யாத்திரை வந்தவர்களும், கட்டாஸ் ராஜ் கோவிலில் தரிசனம் செய்தனர். இன்னும் சில கோவில்களில் தீப மேற்றி வழிபட்டனர். இந்திய யாத்திரிகர்கள், ஆறாண்டுக்கு பின் இந்தக் கோவிலில் நேற்று தரிசனம் செய்து புனித நீராடினர். இவர்களுக்கு இலவச தங்குமிடம், உணவு, போக்குவரத்து ஆகியவற்றுக்கு குடிபெயர்ந்தோர் அறக்கட்டளை ஏற்பாடு செய்திருந்தது.

# ஈரான் மீதான பொருளாதாரத் தடையில் சுவிற்சர்லாந்தும் இணைகின்றது

அமெரிக்கா மற்றும் ஏனைய நாடுகளின் வேண்டுகோளுக்கு இணங்கி சுவிற்சர்லாந்து ஈரான் மீது பொருளாதாரத் தடை விதிக்கச் சம்மதித்துள்ளது. இதனால் சுவிற்சர்லாந்தின் எண்ணெய் மற்றும் ஏனைய பொருள்களின் இறக்குமதி முடங்கி விட்டது.

அமெரிக்கா மற்றும் சுவிஸ் வங்கி இரண்டிற்கும் நிண்ட நாள்களாகப் பிரச்சினை இருந்துவரும் நிலையில், சுவிஸ் உற்பத்தியாளர்கள் மீதும் அமெரிக்கா மிகக் கடுமையாக அதிருப்தி கொண்டுள்ளது.

ஈரான் மீது அமெரிக்கா கடந்த ஆண்டு விதித்த பொருளாதாரத் தடை வரும் ஜூலை மாதம் முதல் நடை முறைக்கு வருகின்றது என்பது குறிப்பிடத்தக்கது.

**கடந்த 6ஆம் திகதி தொடக்கம் அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா ஈரான் மீது பொருளாதாரத் தடை விதித்தார். ஈரான் அரசுக்கு சொந்தமான அசையும் மற்றும் அசையாச் சொத்துக்களுக்கும் தடை விதிக்கப்பட்டன.**

இந்த தடைக்குறித்து சுவிற்சர்லாந்து ஈரான் மீது மிகவும் வருத்தமடைந்த நிலையில், ஈரானின் அணு சக்தி பிரச்சினை குறித்து, சுவிஸ் ஈரானுடன் பேச்சு நடத்தியது. ஆனால் அது கடைசியில் தோல்வியில் முடிந்துள்ளது.


இதனால் வேறுவழியில்லாமல் உலகநாடுகளின் நெருக்கடிக்கு இணங்கி சுவிற்சர்லாந்தும் ஈரான் மீது பொருளாதாரத் தடைகளை விதிக்கத் தயாராகி வருகின்றது.

கடந்த பெப்ரவரி மாதம் 6ஆம் திகதி தொடக்கம் அமெரிக்க ஜனாதிபதி பாரக் ஒபாமா ஈரான் மீது பொருளாதாரத் தடைகளை நடைமுறைப்படுத்தினார். ஈரான் அரசுக்கு சொந்தமான அசையும் மற்றும் அசையாச் சொத்துக்களுக்கும் தடை விதிக்கப்பட்டன. இதனால் மத்திய வங்கியின் அனைத்து நடவடிக்கைகளும் முடக்கப்பட்டு விட்ட நிலையில் ஈரானின் நிதி நிறுவனங்களும் பாதிப்படைந்தன.

இந்தப் பிரச்சினையினால் கடந்த 2006ஆம் ஆண்டு தொடக்கம் சுவிற்சர்லாந்து ஈரானிலிருந்து எண்ணெய் இறக்குமதி செய்வதை நிறுத்திவிட்டது. தற்போது ஈரான் மீது மேலை நாடுகள் குறிப்பாக அமெரிக்கா விதித்துள்ள பொருளாதாரத் தடையினால் சுவிற்ஸர்லாந்தின் எண்ணெய் இறக்குமதியும் மருந்து மற்றும் இயந்திரங்களின் ஏற்றுமதியும் முடங்கிவிட்டன. (ந)

# பயங்கரவாதத் தடுப்பு நிலையம் மாநிலத்தின் உரிமையைப் பாதிக்காது

## முதல்வர்களுக்கு மன்மோகன் கடிதம்



டில்லி,பெப்.23

தேசிய பயங்கரவாதத் தடுப்பு நிலையம் அமைப்பதால் மாநிலங்களின் உரிமைகள் எந்த விதத்திலும் பாதிக்கப்படாது என்று பிரதமர் மன்மோகன் சிங் தமிழகம் உட்பட 7 மாநில முதல்வர்களுக்கு கடிதம் மூலம் தெரிவித்தார்.

மாநில அரசுகளைக் கலந்து ஆலோ சிக்காமலேயே தேசிய பயங்கரவாதத் தடுப்பு மையத்தை அமைத்ததற்கு தமிழ்நாடு உட்பட 7 மாநில முதல்வர்கள் கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர்.

தமிழ்நாடு முதல்வர் ஜெயலலிதா இந்த விவகாரம் தொடர்பாக பிரதமர் மன்மோகன் சிங்குக்கு 2 கடிதங்களை எழுதியிருக்கிறார். ஒரிசா முதல்வர் நவீன் பட்நாயக், மேற்குவங்கத்தின் மம்தா பானர்ஜி மற்றும் குஜராத்தின் நரேந்திர மோடி உள்ளிட்டோரும் மன்மோகனுக்கு கடிதம் எழுதியிருந்தனர்.

இந்த விவகாரம் குறித்து மாநில முதல்வர்களுடன் பேச்சு நடத்துமாறு பிரதமர் உள்துறை அமைச்சகத்துக்கு உத்தரவிட்டுள்ளார். இந்த நிலையில் தேசிய பயங்கரவாதத் தடுப்பு நிலையம் அமைப்பதால் மாநிலங்களின் உரிமைகளுக்கு பாதிப்பு ஏற்படாது என்று அவர் 7 மாநில முதல்வர்களுக்கு கடிதம் எழுதியுள்ளார்.

இது குறித்து அவர் எழுதிய கடித்தத்தில் தெரிவித்ததாவது:

தேசிய பயங்கரவாதத் தடுப்பு நிலையத்தை அமைத்து அரசியலமைப்புச் சட்டத்தின் அடிப்படைகளையோ, மாநில அரசுகளின் அதிகாரங்களையோ பாதிக்கச் செய்வது மத்திய அரசின் நோக்கம் அன்று.

புலனாய்வுத்துறை போன்று தீவிரவாதத்துக்கு எதிராக நடவடிக்கை களை ஒருங்கிணைப்பதே தேசிய பயங்கரவாதத் தடுப்பு நிலையத்தின் நோக்கம். அதனால்தான் அதை தனி அமைப்பாக இல்லாமல் புலனாய்வு அமைப்பான ஐபியின் அங்கமாக அமைக் கப்படுகிறது.

இதுகுறித்து முதல்வர்களுடன் பேச்சு நடத்துமாறு மத்திய உள்துறை அமைச்சர் சிதம்பரத்தைக் கேட்டுக் கொண்டுள்ளேன் - என்று அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

(வ)

# ஜெயலலிதாவுக்கு நீதிமன்றம் அழைப்பு



ஜெயலலிதா முதல் முறையாக முதல்வர் பொறுப்பு வகித்தபோது 1992 ஆம் ஆண்டில் – அவரது பிறந்த நாள் பரிசாக 2 கோடி ரூபாய் அளவுக்கு வந்த காசோலைகளை சொந்த வங்கிக் கணக்கில் வரவு வைத்துள்ளார்.

தமிழக முதல்வர் ஜெயலலிதாவுக்கு எதிரான பிறந்த நாள் பரிசு வழக்கை சென்னை உயர் நீதிமன்றம் ரத்து செய்ததை எதிர்த்து மத்திய புலனாய்வு நிறுவனமான சி.பி. ஐ. உச்சநீதிமன்றத்தில் தாக்கல் செய்த மனுவை ஏற்ற நீதிபதிகள், இது தொடர்பாக நான்கு வாரங்களுக்குள் பதில் அளிக்குமாறு ஜெயலலிதாவுக்கு அழைப்பாணை அனுப்பியுள்ள னர்.

ஜெயலலிதா முதல் முறையாக முதல்வர் பொறுப்பு வகித்தபோது 1992 ஆம் ஆண்டில் - அவரது பிறந்த நாள் பரிசாக 2 கோடி ரூபாய் அளவுக்கு வந்த காசோலைகளை ஜெயலலிதா தனது வங்கிக் கணக்கில் வரவு வைத்துக் கொண்டதாகவும் இதற்காக முறையாக அவர் கணக்குக் காட்டவில்லை என்றும் ஜெயலலிதா மீது சி.பி.ஐ. வழக்குத் தொடுத்தது.

இந்த வழக்கை தாக்கல் செய்ய சி.பி.ஐ. மிகுந்த கால தாமதம் செய்த தாகவும், இந்த வழக்கு அரசியல் நோக்கம் கொண்டது என்றும் எனவே வழக்கு விசாரணையை ரத்து செய்ய வேண்டும் என்றும் கோரி ஜெயலலிதா சென்னை உயர் நீதிமன்றத்தை நாடினார்.

அந்த மனுவை ஏற்று உயர் நீதி மன்றம் வழக்கை 30-9-2011 அன்று ரத்து செய்து உத்தரவிட்டது. இந்தத் தீர்ப்பை எதிர்த்து தற்போது சி.பி.ஐ. உச்ச நீதிமன்றத்தை நாடியுள்ளது.

# 20 ஆண்டுகளாக இந்தியாவில் உளவு பார்த்தவர் கைது



கடந்த 20 ஆண்டுக ளாக இந்தியாவில் தங்கியி ருந்து, பாகிஸ்தானுக்காக உளவு பார்த்த 39 வயது நப ரைப் புதுடில்லி பொலிஸார் நேற்றுமுன்தினம் கைது செய்தனர்.

இந்திய இராணுவம் தொடர்பான இரகசியத் தகவல்களை அவர் சேகரித்து, பாகிஸ்தானுக்கு அனுப்பி வந்தது தெரியவந்துள்ளது. இதுகுறித்து டில்லி பொலிஸ் குற்றப்பிரிவு துணை ஆணையாளர் அசோக் சந்த் தெரிவித்ததாவது:

பொலிஸாருக்குக் கிடைத்த ரகசியத் தகவலை அடுத்து, கடந்த 13 ஆம் திகதி, புதுடில்லி ரயில் நிலையத்தில் நின்று கொண்டிருந்த ஒருவரைப் பிடித்து விசாரித்தோம். கொல்கத்தாவைச் சேர்ந்த கம்ரன் அக்பர் என்பவர் 20 ஆண்டுகளாக அங்கு வசித்து வருகிறார் என்பது தெரிந்தது. அவர் டில்லியில் இந்திய ராணுவம் தொடர்பான, சில ரகசிய ஆவணங்களைப் பெறுவதற்காக வந்ததும் கண்டுபிடிக்கப்பட்டது.

அவர் டில்லியில் ஆவணங்களைப் பெற்றுக் கொண்டு, கொல்கத்தா செல்ல ரயிலில் ஏற முயன்றபோதுதான் பொலிஸாரிடம் சிக்கினார். அவர் தான் பெற்ற ஆவணங்களை, பாகிஸ்தான் ராணுவ நுண்ணறிவுப் பிரிவில் பணியாற்றும் சிலருக்கு அனுப்ப இருந்ததும் தெரியவந்தது.

கம்ரன் அக்பர், பாகிஸ்தானில் கராச்சி பகுதியைச் சேர்ந்தவர். அங்கு 1990 ஆம் ஆண்டு கல்வியை முடித்துக் கொண்டு, சில சிறிய வேலைகளைச் செய்து வந்தார். பின்னர், அட்டாரி எல்லை வழியாக, கொல்கத்தா வந்து, அங்கு தன் மாமா முகமது சலீம் வீட்டில் தங்கினார். அப்போது, ஆசிப் உசேன் என்ற பெயரில், இந்தியக் கடவுச்சீட்டைப் பெற்றார்.

அதன் மூலம் பாகிஸ்தான் விசா பெற்று, 1997 ஆம் ஆண்டு ஜூலை மாதம் பாகிஸ்தான் சென்றார். அவர் இந்திய கடவுச்சீட்டு வைத்துள்ளதை அறிந்த, பாகிஸ்தான் ராணுவ நுண்ணறிவுப் பிரிவினர், அவரைத் தங்களது செயல்களுக்கு பயன்படுத்திக் கொள்ள தேர்வு செய்தனர். அவருக்கு பயிற்சி அளிக்கப்பட்டது. தொடர்ந்து அவர், நேபாளம் வழியாக கொல்கத்தாவுக்கு அனுப்பப்பட்டார்.

பாகிஸ்தானுக்கு உளவு பார்க்கும் தன் பணிக்கு, ஹவாலா மூலம் பணத்தைப் பெற்று வந்துள்ளார். அவரிடம் தொடர்ந்து விசாரணை நடைபெற்று வருகிறது'' - என்றார் அவர்.

## நடுக்கடலில் தமிழக மீனவர் கொலை:

# இந்தியப் பொலிஸார் விசாரிக்க இத்தாலி எதிர்ப்பு

திருவனந்தபுரம், பெப்.23

நடுக்கடலில் தமிழக மீனவர்களை சுட்டுக் கொன்ற வழக்கில் கேரள பொலிஸார் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கையை ரத்து செய்யக்கோரி கேரள உயர் நீதிமன்றத்தில் இத்தாலி அரசு மனு தாக்கல் செய்துள்ளது.

கேரளாவில் கொச்சிக் கடல் பகுதியில் மீன் பிடித்துக் கொண்டிருந்த தமிழக மீனவர்கள் மீது இத்தாலி சரக்குக் கப்பல் பாதுகாப்பு ஊழியர்கள் நடத்திய துப்பாக்கிச்சூட்டில் 2 பேர் உயிரிழந்தனர். இது தொடர்பாக கேரள பொலிஸார் வழக்குப் பதிவு செய்து கப்பல் பாதுகாப்பு ஊழியர்கள் 2 பேரை கைது செய்துள்ளனர். இவர்களை ரகசிய இடத்தில் வைத்து பொலிஸார் விசாரித்து வருகின்றனர்.

இந்த நிலையில், கேரள உயர் நீதிமன்றத்தில் இத்தாலி வெளியுறவுத் துறை சார்பில் நேற்றுமுன்தினம் ஒரு மனு தாக்கல் செய்யப்பட்டது. அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

மீனவர்கள் சுடப்பட்ட சம்பவம் சர்வதேச கடல் எல்லையில் நடந்துள்ளதால், இந்தச் சம்பவம் பற்றி இந்திய பொலிஸார் விசாரணை நடத்துவதை ஏற்க முடியாது. இந்த வழக்கில் கைது செய்யப்பட்டுள்ள இருவரும் இத்தாலி குடிமகன்கள். மேலும், இவர்கள் இத்தாலி நாட்டு கடற்படையினர். எனவே, இவர்கள் மீது நடவடிக்கை எடுக்க இத்தாலிக்கு மட்டுமே அதிகாரம் உள்ளது.

மீனவர்களை சுடப் பயன்படுத்திய துப்பாக்கியை எந்தக் காரணம் கொண்டும் பொலிஸாரிடம் ஒப்படைக்க முடியாது. கரையில் இருந்து 33 கடல் மைல் தொலைவில் சம்பவம் நடந்ததாக பொலிஸ் ஆவணங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால், நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட ஆவணத்தில் 22.5 கடல் மைல் தொலைவில் சம்பவம் நடந்ததாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. இதில், முரண்பாடு உள்ளது. 12 கடல் மைலுக்கு மேல் நடந்த சம்பவம் பற்றி பொலிஸார் வழக்குப்பதிவு செய்ய முடியாது. எனவே, கேரளப் பொலிஸார் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கையை ரத்து செய்ய வேண்டும். இவ்வாறு அந்த மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# 29 பேரை தூக்கிலிருந்து காப்பாற்றிய பிரதீபா பாட்டீல்



டில்லி, பெப்.23

இந்திய ஜனாதிபதி பிரதிபா பாட்டீல், தன் பதவிக் காலத்தில் இதுவரை, 23 பேருக்கான தூக்குத் தண்டனையை, ஆயுள் தண்டனையாகக் குறைத்து, கருணை காட்டியுள்ளார் என்று தகவல் வெளியாகியுள்ளது.

தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ், சுபாஷ் அகர்வால் என்பவர் தாக்கல் செய்த மனுவுக்கு, ஜனாதிபதி மாளிகை சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ள பதில் வருமாறு:

பல்வேறு கொடிய குற்றங்களுக்காக தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டவர்கள், தண்டனையைக் குறைக்கும்படி, ஜனாதிபதியிடம் கருணை மனு தாக்கல் செய்வது வழக்கம். இதன்படி, ஜனாதிபதி பிரதிபா, தன்னிடம் தாக்கல் செய்யப்பட்ட கருணை மனுக்களைப் பரிசீலித்து, இதுவரை, 23 பேருக்கான தூக்குத் தண்டனையை, ஆயுள் தண்டனையாகக் குறைக்க உத்தரவிட்டுள்ளார். கடந்த, 1981 ஆம் ஆண்டிலிருந்து தற்போது வரை, ஜனாதிபதி பிரதிபா பதவிக் காலத்தில் தான், அதிக அளவில் (90 சதவீதம்) தண்டனை குறைக்கப்பட்டுள்ளது. இதேவேளை, முன்னாள் பிரதமர் ராஜிவ் கொலை வழக்கு குற்றவாளிகள் மூன்று பேர் உட்பட, ஐந்து பேரின் கருணை மனுக்களை அவர் நிராகரித்துள்ளார்.



பீகார் மாநில சட்டமன்றத்தில் வரவுசெலவுக் கூட்டத் தொடர் நேற்றுமுன்தினம் கூடியது. கூட் டத்தை ஆரம்பித்து வைத்துப் பேச வந்த சபாநாயகர் நாராயண் சௌத்ரியை, அந்த மாநில முதல்வர் நிதீஷ் குமார் வரவேற்கிறாா.

# ராஜீவ் கொலையின் ஆயுள்தண்டனை கைதியை பரோலில் விடுவிக்க எதிர்ப்பு

இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில், ஆயுள் தண்டனை விதிக்கப்பட்ட ரவிச்சந்திரனை பரோலில்' விட எதிர்ப்புத் தெரிவித்து, தமிழக அரசு சார்பில் மதுரை உயர் நீதிமன்றக் கிளையில் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

அருப்புக்கோட்டையைச் சேர்ந்த ரவிச்சந்திரன் முன்னாள் பிரதமர் ராஜீவ் கொலை வழக்கில், ஆயுள் தண்டனைக் கைதியாக மதுரை மத்திய சிறையில் உள்ளார்.

குடும்பச் சொத்து பிரச்சினைகளுக்குத் தீர்வு காண, ரவிச்சந்திரனை 30 நாள்கள் பரோலில் விடக்கோரி, அவரது தாய் ராஜேஸ்வரி ஏற்கனவே தமிழக அரசிடம் மனு அளித்தார். மனு மீது நடவடிக்கை எடுக்க உத்தரவிடக் கோரி, ராஜேஸ்வரி மதுரை உயர்நீதிமன்றக் கிளையில் மனு தாக்கல் செய்தார். இதை ஏற்கனவே விசாரித்த தனி நீதிபதி, ரவிச்சந்திரனை 15 நாள்கள் பரோ லில் விட அனுமதிக்க உத்தரவிட்டார்.


இதை எதிர்த்து தமிழக அரசு சார்பில், மதுரை மத்திய சிறை ஏ.டி.எஸ்.பி. அன்பழகன் தாக்கல் செய்த மேல் முறையீட்டு மனுவில் தெரிவித்ததாவது:

ஏற்கனவே, ரவிச்சந்திரன் 3 முறை பொலிஸ் பாதுகாப்புடன் பரோலில் சென்றுள்ளார். தற்போது, பொலிஸ் பாதுகாப்பு இல்லாமல், பரோலில் சென்றால் நிலைமை மோசமாகி விடும்.

இவர் பிரதமர் ராஜீவ் கொலை வழக்கில் சம்பந்தப்பட்டவர். வெளியே செல்ல விட்டால் மக்கள் அமைதிக்கு குந்தகம் ஏற்படும். கைதிக்கும் பாதுகாப்பு இருக்காது. இதை தனி நீதிபதி கருத்தில் கொள்ளவில்லை. இவர் ஏற்கனவே, பரோலில் சென்றபோது ஒரு லட்சத்து 39 ஆயிரத்து 391 ரூபாய் பாதுகாப்புச் செலவு ஆகியுள் ளது. அதை செலுத்தவில்லை. தற்போது, பரோலில் சென்றால், மேலும் கூடுதல் செலவாகும். தனி நீதிபதி உத்தரவிற்கு தடை விதிக்க வேண்டும்.' என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த மனு நீதிபதிகள் என்.பால்வசந்தகுமார், பி.தேவதாஸ் முன்னிலையில் விசாரணைக்கு வந்தது. அரசு கூடுதல் அட்வகேட் ஜெனரல் செல்லப்பாண்டி யன், ராஜேஸ்வரி சார்பில் சட்டத்தரணி லஜபதிராய் ஆகியோர் ஆஜராகினர்.

விசாரணையை எதிர்வரும் 29 ஆம் திகதிக்கு நீதிபதிகள் ஒத்தி வைத்தனர்.



# தமிழ் மொழி அது எம் உயிர் மொழி

தேன் சிந்துகின்ற தேனருவியாம்
செந்தமிழ் – எம் தாய்மொழியாம்
தமிழ் மொழியை தவத்தின் பயனாலே
நாம் பெற்று விட்டோம்.

தவத்தினால் பெற்ற – எம்
தாய்மொழியைத்
தலை வணங்கியே – அதன்
தாழ் பணிகின்றோம்.

தலை நிமிர்ந்து வாழவும்
தாய்மொழியில் பேசவும்
தமிழனுக்கு – அவன்
தலை விதியில் எழுதவில்லை

தமிழையே உயிராகக் கொண்ட
தவப்புதல்வன் பாரதி – எண்ணி
தற்பெருமை கொள்ளடா – நீ
தலை நிமிர்ந்து நில்லடா.

நிற்பதற்குத் தாய் மண்ணும்
நிழலாகக், தாய்மொழியும்
நினைக்கவே இனிக்குதடா – இனி
நிம்மதி வேறு ஏதடா?

தித்திக்கும் தேனருவி
திகட்டாத செம்மொழி – அது
திக்கற்று இன்று
திசைமாறிப் போகுதடா.

தலைநிமிர்ந்து தலையில்
தலைப்பாகை கட்டிய
தமிழன் இன்று தலை குனிந்தே
கூழைக் கும்பிடு போடுகின்றான்.
அன்னை மொழிதனை
அறவே ஒதுக்கிவிட்டு
அந்நிய மொழிக்கு – நீ
அடிமைப்பட்டு வாழ்கின்றாய்

'' அம்மா '' என்ற அமுத மொழியை
அகராதியிலே அழித்து –உன்
அன்னையை ''மம்மி'' என்கிறாய் – எம்
தாய் மொழியாம் தமிழ்மொழியை
அம்மிக் கல்லில் போடுகிறாய்.

ஏ! தமிழா
உன் உள்ளம் உருகவில்லையா?
உதிரம் பொங்கவில்லையா?
மெல்ல இனிச் சாகும் நம் தமிழை
உன் உயிர்மூச்சாகக் கொள்ளடா
உன் உடலைத் தாய் மண்ணுக்கே கொடுத்திடடா.

ஜ. சோபனா

# 'வைதிஸ் கொலைவெறி' பாடலை தமிழர்கள் தமக்கானதென

## கொண்டாடலாம்

தமிழ் மெல்லச் சாகிறது என்று அபாய மணி அடிக்கும் பலர், அந்தச் சாவை தடுக்க முன் வருவதில்லை. காலத்துக்காலம் ஒவ்வொன்றும் மாற்றமடைகையில், நாங்கள் இன்னும் பழைமை வாதம் பேசுவோமாயின் அடுத்த கட்டத்துக்கு எம்மால் செல்ல முடியாதென்பதுடன் எமது தமிழும் தப்பிப் பிழைக்காது.

எனவே இன்றைய இளைஞர்கள், நாளைய சமுதாயத்தை கட்டிக்காக்க வேண்டியவர்கள், விரும்புகின்ற வடிவில் தமிழைக் கொடுக்க வேண்டும். இன்றைய இளைஞர்களுக்குத் தனித் தமிழ் என்பது தொலைந்துபோன ஒன்றுதான்.

தனித் தமிழை கைவிட்டு ஆங்கிலத்துடன் கலந்த தமிழ்தான் இளைஞர்களுக்கு பிடித்ததென்றால், அதனை அவர்களுக்கு ஊட்டுவதுதான் சரி. இந்தப் பாடலில் 5 தமிழ் வார்த்தைகள் உள்ளடக்கப்பட்டிருப்பதே தமிழ் இன்னும் சாகவில்லை என்பதை எடுத்துக் காட்டுகின்றது.

எனவே 'வை திஸ் கொலை வெறி' பாடலைத் தமிழர்கள் தமக்கான தென சொந்தம் கொண்டாட முடியும்.

*எஸ்.தனுசன், கல்வியன்காடு.*




## கொண்டாட முடியாது

'' **வை** திஸ் கொலைவெறி'' என்னும் பாடலை தமிழர்கள் தமக்கானதெனச் சொந்தம் கொண்டாட முடியாது.

கல்தோன்றி மண் தோன்றாக் காலத்து முன் தோன்றியதான நம் தமிழ் மொழிக்கு அந்திம காலம் நெருங்கி விட்டதோ எனும் அச்சத்தை உண்டு பண்ணுகின்றது இது போன்ற பாடலுக்கு கிடைத்திருக்கும் வரவேற்பு! ஒரு பாடலின் உயிர் நாடி என்பது என்ன? ரம்மியமாய் வருடும் இசையா? கவர்ந்திழுக்கவல்ல குரலா? கனிந்திருக்கும் வரிகளா?

ஒரு பாடலை வரிகளற்ற இசையாகக் கேட்பதைக் காட்டிலும் வரிகளோடுதான் கேட்க முற்படுகின்றோம். ஏனெனில் ஒரு பாடலின் உயிர்நாடி அதன் வரிகள்தான்!


தமிழ் தெரியாத பாடகிகள் கூட தமிழ் பாடலை பாடுகையில் அதன் அர்த்தம் அறிந்து அதற்கு உயிர்கொடுத்து பாடுகிறார்கள்! அப்படியிருக்க ''வை திஸ் கொலைவெறி'' பாடலில் காதலின் தோல்வியில் புலம்பும் உருக்க மான வரிகளோ குழலிசை போல வருடிச் செல்லும் இனிதிலும் இனிதான பாடகர் குரலோ இல்லவே இல்லை. இந்தப் பாடலின் இசை கூட அத்தனை வசீகரமானதாக இல்லை.

தமிழோடு ஆங்கிலம் கலந்து பேசுதல் நாகரிகம் என்கிறதான இன்றைய இளைஞர்களின் மயக்கமான சிந்தனைதான். இந்தப் பாடலை உயர்த்திடச் செய்தது.

ஐந்தே தமிழ் வார்த்தைகளோடு வந்திருக்கும் பாடலை ஆங்கிலப் பாடல் என்று கூறுதலே தமிழுக்கு நாம் செய்யும் மரியாதை! எத்தனையோ பாடல்கள் கவித்துமான தமிழ் வரிகளோடு வந்திருக்க இதுபோன்ற பாடல்களை வரவேற்பது நம் மொழியைப் பெரும் பின்னடைவுக்கே இட்டுச் செல்லும். மெட்டுக்கும், துட்டுக்கும் பாடல் எழுதும் கவிஞர்கள் சிலர் இது போன்ற பாடல்களை எழுதி வந்து கொண்டே இருந்தாலும் தமிழை பெருமளவில் அம்மணமாக்கி அபாய அறிவிப்பை விடுத்துச் சென்ற பாடல் இதுதான்! இனிவரும் காலங்களிலாவது தமிழ்ச் சமூகம் இதுபோன்ற பாடல்களை புறக்கணிப்புச் செய்வது நம் தாய்மொழிக்குச் செய்யும் பேருதவியாக இருக்கும்.

*தி.வைதேகி, யாழ்ப்பாணம்.*

# கல்லூரி நட்பு



தாயின் தொப்புள் கொடியில்
இருந்து கூடவே பிறப்பது அன்பு
பள்ளியிலே தொடர்கின்றது
ஆழ்மையான நட்பின் ஆழம்.

உயர்கல்வி எனும் உணர்வலையில்
உத்தம நண்பர்கள் நாம்
உள்ளமதனைப் பறி கொடுக்காது
ஊசலாடி நட்பின் ஆழத்தை வளர்ப்போம்




நம் நட்புக்குள் ஆயிரம் சண்டைகள்
வந்தாலும் நட்புதான் என்று சொல்லி
அன்பு, நட்பு என்னும் வலையில்
இருந்து தாய் எம்மைச் சேர்ந்து வைப்பாள்

நேசம், பாசம், காதல் கொண்டது
உண்மையான நட்பு, மனம்விட்டு
பேசுகின்ற மாமரத்து பச்சைக்கிளி நான்.
கல்லூரிப் பருவம் அதில் வருகின்ற நட்பு
உண்மையான நட்பு என்றும் கைவிடாது.

சரண்யா குலேந்திரன்
13 A (2013), யா/ சாவகச்சேரி இந்துக்கல்லூரி



# கல்வியில் சிகரத்தைத் தொட....



குழந்தை கருவிலிருந்தே கற்க ஆரம்பிக்கின்றது. படித்த அறிவு சாலியின் பிள்ளைகள் மரபு ரீதியாக அறிவு சாலியாக வருவது இயற்கை. ''எந்தக் குழந்தையும் நல்ல குழந்தைகள் மண்ணில் பிறக்கையிலே, அவர்கள் நல்லவராவதும் தீயவராவதும் அன்னை வளர்ப்பினிலே'' என்ற பாடல் வரிகள் மூலம் குழந்தை பிறக்கும்போது கள்ளங்கபடமற்றது. உலகில் நற்பிரஜையாக திகழ்வது அன்னையின் பங்களிப்பினிலேயே என கவிஞர் கண்ணதாசன் சுட்டிக் காட்டியுள்ளார்.

கற்கும் கல்வியின் இலக்கை அடைய மாணவர்கள் தியாகங்களைச் செய்ய வேண்டும். அதிகாலையில் எழுந்து சில நிமிடங்கள் தெய்வத்தை தியானித்து மனதை ஒரு நிலைப்படுத்தி கற்பதன் மூலம் நினைத்த அடைவைப் பெற முடியும்.

''இளமையில் கல்வி சிலையில் எழுத்து'' என்பர். ஒவ்வொருவரதும் கல்வியின் அத்திபாரம் சரியாக அமைய வேண்டும். மாணவர்கள் கற்றவற்றை ஐயம் திரிபறக் கற்க வேண்டும். அதிகளவு பயிற்சிகளை மேற்கொள்வதுடன் மீண்டும் மீண்டும் கற்க வேண்டும். அதிகாலையில் எழுந்து கற்றல் மிகச் சிறந்தது. மாணவர்கள் பொறாமைப்படாது போட்டிபோட்டுக் கற்க வேண்டும். முதல் நிலைக்கு வர வேண்டும் என்ற உயர் நோக்குடன் கற்றால் கல்வியின் சிகரத்தை அடையலாம். புத்தகங்களை மட்டும் கற்று அறிவுசாலியாகத் திகழ முடியாது. குறித்த இலக்கை அடைய முடியாது. கணினி, இணையம், பத்திரிகை, வானொலி, தொலைக்காட்சி போன்றவற்றின் மூலம் அறிவுசார் விடயங்களைத் தேடிக் கற்றுக்கொள்ள வேண்டும்.

இரவில் நித்திரைக்குச் செல்கின்ற போதோ, ஓய்வெடுக்கும் போதோ கற்ற விடயங்களைச் சிந்தித்து மனதில் பதிப்பதன் மூலம் சிறந்த பெறுபேற்றைப் பெற்று இலக்கை அடையலாம். பசி, நித்திரை பாராது கஷ்டப்பட்டு கற்றாலே கல்வியின் சிகரத்தை அடைய எத்தனிக்க முடியும். மாணவர்கள் கடமையைச் சரிவரச் செய்வதன் மூலம் கற்கும் கல்வியின் சிகரத்தை அடைய முடியும். ✱

எஸ்.சாருகா, சாவகச்சேரி

## விமர்சனம்

பாடசாலை அதிபர்கள், கல்வி நிர்வாகத்தினரிடையேயான உட்பூசல்களும், பழிவாங்கல்களும் இன்றைய கல்வி சமூகத்தை பாதிப்பது தொடர்பில் இளம் சமூகத்தினர் தங்கள் விமர்சனங்களை அனுப்பலாம்.

தரமான விமர்சனங்கள் பிரசுரமாவதோடு சிறந்த விமர்சனங்களுக்குப் பரிசுகளும் வழங்கப்படும்.

## இளைஞர், யுவதிகளே!

*உங்களின் திறமைகளை வெளிக்கொணரவும் பிரச்சினைகள் பற்றிப் பேசவும் தேடல்களுக்குத் தீனி போடவும் 'இளவல்கள் வட்டம்' என்ற இந்தப் பகுதி மலர்ந்துள்ளது. இந்தப் பகுதிக்கான உங்கள் படைப்புக்களையும் ஏதாவது சந்தேகங்களையும் விமர்சனங்களையும் கீழேயுள்ள படிவத்தோடு இணைத்து அனுப்பிவையுங்கள்.*

**'இளவல்கள் வட்டம்',**

*'உதயன்', 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.*

பெயர் :-..............................................

முகவரி :- ..............................................

..............................................

.......................... ..............................
திகதி கையொப்பம்

# கேட்டீர்களா? வியளம்

### மின்சார மோட்டரைத் துலாவுக்கு பாரமாக கட்டிய காலத்தில்...


சிரித்திரன் சுந்தர் கருத்துச் செறிவுடன் சமூக விமர்சனம் செய்யும் அருமையான கேலிச் சித்திரங்களையும் துணுக்குகளையும் தந்தவர். சமூக விமர்சனத்துக்காக அவர் படைத்த மிஸ்ரர் அன்ட் மிஸிஸ் டாமோடிரன், சவாரித்தம்பரும் சின்னக் குட்டியும், மைனர் மச்சான் முதலிய பாத்திரங்கள் புகழ் பெற்றவை. எரிபொருள் விலையேற்றம், மின்சாரக் கட்டண உயர்வு ஆகியன மக்களை வாட்டுவது ஒரு புறமிருக்க, அதனால் பழைய பாரம்பரியங்கள் நினைவூட்டப்படுவது முரண் நகையானதாகும். அவ்வேளை சுந்தர் அவர்கள் தவிர்க்க முடியாமல் நினைவுக்கு வருகிறார்.



1990களின் ஆரம்பத்தில் ஆர்.பிரேமதாஸ ஜனாதிபதியாக இருந்த சமயத்தில் வடபகுதி மீது பொருளாதாரத் தடை விதிக்கப்பட்டது. எல்லாப் பொருள்களுக்கும் தட்டுப்பாடு. பனங்களியில் உடை தோய்த்தது அந்தக் காலத்தில் தான். மண்ணெண்ணெய் மருந்தாகப் பாவிக்கப்பட்ட காலமது. எரிபொருளைச் சிக்கனமாகப் பயன்படுத்தும் குப்பி விளக்குகள், சிக்கன அடுப்புக்கள் அக்காலத்தில் பயன்படுத்தப்பட்டன.

பழையபடி ஆடுகால்கள் சீர்செய்யப்பட்டு துலாக்கள் ஏற்றப்பட்டன. துலா மிதித்து பட்டை மூலம் நீரிறைக்கப்பட்டது.காற்றாடி மூலம் நீர் பெறும் வழிமுறைகளும், சாண எரிவாயுவைப் பயன்படுத்தி மின்சாரம் உற்பத்தி செய்யும் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டன. மில்க்வைற் கனகராஜா முன்னுதாரணமாகத் தனது வீட்டில் சாண எரிவாயுத் தொட்டியை அமைத்திருந்தார். வட்டக்கச்சி பண்ணை உட்பட பல இடங்களிலும் இவ்வாறான எரிவாயுத் தொட்டிகள் நிறுவப்பட்டு மின்சாரம் பெறப்பட்டன.

இந்த நிலைமையைச் சுட்டுவதற்கு சுந்தர் சவாரித் தம்பரையும் சின்னக்குட்டியையும் பேச விட்டார். சவாரித் தம்பர் உன்னுடைய மின்சார மோட்டர் எங்கே? என்று கேட்கிறார். அதற்கு, துலாவுக்குப் பாரத்துக்குக் கட்டியிருக்குது என்று சின்னக்குட்டியர் பதிலளிக்கிறார். ஒரு காலத்தில் பிரதானமாக விளங்கிய துலா வழக்கிழந்து போக, அந்த இடத்தை மின்மோட்டர் நிறைத்தது.



இன்னொரு காலத்தில் துலா மீண்டும் வர மின்மோட்டர் தேடுவாரற்றிருந்தது. ஓடமும் ஒரு நாள் வண்டியில் ஏறும் வண்டியும் ஒரு நாள் ஓடத்தில் ஏறும் என்பது இதைத்தானே! தேவைதான் எப்போதும் கண்டுபிடிப்புகளை உருவாக்குகிறது. எனவேதான் அந்தப் பொருளாதாரத் தடையில் இருந்து மீண்டெழ பழைய முறைகள் கைக்கொள்ளப்பட்டன. எம்மிடம் புதிய வாழ்க்கை முறைக்குச் சமதையான பழைய வாழ்க்கைக் கோலங்களும், அது சார்ந்த பொறிமுறைகளும் நடைமுறைகளும் உள்ளன என்பதை நாம் மறந்து விடலாகாது. ஆனால் புதியவற்றை உள்வாங்கும் போது வசதியாகப் பழையவற்றை மறந்து விடுகிறோம்.பழைய பொருள்களை, கருவிகளை அழித்தோ, விற்றோ விடுகிறோம்.பின்னர் திடீரென ஏற்படும் மாற்றங்களினால் தடுமாறுகின்றோம்.

இப்போது எரிபொருள் விலை எகிறி விட்டது. மின்சாரக் கட்டணங்களும் உயர்ந்து விட்டன. இந்த உயர்வு ஒவ்வொரு குடும்பத்திலும் எதிரொலிக்கிறது. அரசியல்வாதிகளும் இதனைக் கையிலெடுத்து துவிச்சக்கர வண்டிகளிலும், மாட்டு வண்டிகளிலும் பவனி வந்து தமது எதிர்ப்பைப் பறை சாற்றுகின்றனர். அரசாங்கம் தனது மக்கள் மீது அக்கறையற்று கடுஞ் சுமையை ஏற்படுத்துகிற நிலையில், அவ்வாறு தமது எதிர்ப்பை வெளிப்படுத்துவது அவசியந்தான். அதேவேளை பழைய நமது வாழ்வின் நன்மைகளை எடுத்துக் கூறி எவரிலும் தங்கியிருக்காத சுயசார்புப் பொருளாதாரக் கட்டமைப்பை விருத்தி செய்யக் கூடிய வழிமுறைகளை அவர்கள் பரிந்துரைக்கலாமல்லவா? ஏனெனில் காலத்துக்குக் காலம் எரிபொருள்களின் விலைகளை அரசாங்கங்கள் அதிகரிக்கத்தான் போகின்றன. எதிர்க் கட்சிகள் என்பவை நிழல் அரசாங்கங்கள் என்பதை உணர்ந்து செயற்படுவது இன்றியமையாததாகும். எனவே மாற்று வழிகளையும் அவை மக்களுக்குப் பரிந்துரைக்க வேண்டும்.

விழிச்சான் குஞ்சு.

# பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவ இளைஞர்கள் முன்வரவேண்டும்

## பேராசிரியர் தயா சோமசுந்தரம் தெரிவிப்பு

வலி.வடக்கு,பெப்.23

பாதிக்கப்பட்ட மக்களையும், அமைப்புக்களையும் இன்று மீளக் கட்டியெழுப்ப வேண்டிய தேவையுள்ளது. இதற்கு இளைய தலைமுறையினர் தமது பங்களிப்பை முழுமையாக வழங்க முன்வர வேண்டும் என உள நல வைத்திய நிபுணர் பேராசிரியர் தயா சோமசுந்தரம் தெரிவித்தார்.

'தூபபி' சுயதொழில் முயற்சி நிறுவனத்தால் நடத்தப்பட்ட தையல் பயிற்சி நெறியைப் பூர்த்தி செய்த ஐந்தாவது அணியினருக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு அருட் திரு யூட் சுதர்சன் தலைமையில் அண்மையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே பேராசிரியர் தயா சோமசுந்தரம் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்;

**பாதிக்கப்பட்ட மக்களையும், அமைப்புக்களையும் இன்று மீளக் கட்டியெழுப்ப வேண்டிய தேவையுள்ளது.**

இன்று யாழ்ப்பாணத்தில் அதி உயர் பதவிகளிலும், முக்கிய இடங்களிலும் பெண்கள் அதிகம் காணப்படுகின்றார்கள். பெண்கள் இத்தகைய சமூக மீள் கட்டுமானப் பணியில் முக்கிய பங்கை வகிக்க வேண்டியது அவசியமாகும்.

இத்தகைய தையல் பயிற்சிகள் முழுமையான பொருளாதார அபிவிருத்தி மாற்றத்தைக் குடும்ப சமூக மட்டத்தில் கொண்டு வரும் என்று குறிப்பிட முடியாது.

ஆனாலும் கூட ஓரளவுக்குப் பொருளாதார ரீதியாக உதவி செய்யும் என்பதுடன் சுயதேவையையும் பூர்த்தி செய்து கொள்ள முடியும்.

கிடைத்த பயிற்சியை நல்ல முறையில் பயன்படுத்த வேண்டும். பயிற்சி பெற்று விட்டோம் என்ற நிலையுடன் நின்று விடாது, இதனை ஒரு தொழிலாகத் தொடர்ந்து மேற்கொள்ள வேண்டும்.

தரமானதாகக் காணப்படுமாக இருந்தால் உற்பத்திப் பொருளின் சந்தை வாய்ப்புக்களை இலகுவில் பெற்றுக் கொள்ள முடியும்.

பயிற்சிகளைப் பெற்று விட்டோம் என்ற நிலையுடன் நில்லாது மேலும் பயிற்சிகளையும் பெற்றுக் கொள்வதன் மூலம் திறமைகளை அதிகம் வளர்த்துக் கொள்ளக் கூடியதாக இருக்கும் என்றார். (எ-86)

# கல்வியுடன் விளையாட்டிலும் மாணவர்கள் ஈடுபடவேண்டும்

## உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர்

குருநகர்,பெப்.23

மாணவர்கள் தமது பாடசாலைக் கல்வியுடன் விளையாட்டிலும் பங்கேற்க வேண்டியது அவசியம். விளையாட்டில் ஈடுபடும் மாணவர்கள் சிறந்த பயிற்சியைப் பெற்றுக் கொள்ள வேண்டும் என யாழ்.வலயக் கல்விப் பணிமனையின் உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் சண்.தயாளன் தெரிவித்தார்.

யாழ்.சென்ஜேம்ஸ் மகா வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி கடந்த 15 ஆம் திகதி புதன்கிழமை பி.ப.2 மணிக்கு யாழ். சென்ஜேம்ஸ் மகாவித்தியாலய விளையாட்டு மைதானத்தில் அதிபர் த.ஞானப்பிரகாசம் தலைமையில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே சண். தயாளன் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தெரிவிக்கையில்:

இன்று இங்கு நடைபெற்ற விளையாட்டு நிகழ்வுகளின் போது ஆரம்ப நிலைகளில் மாணவர்களின் பங்குபற்றல் சிறப்பாக இருந்தது. ஏனைய போட்டிகளில் மாணவர்களது எண்ணிக்கை குறைவாகக் காணப்பட்டது. மாணவர்கள் கோட்ட மட்ட, வலய மட்டப் போட்டிகளில் பங்கேற்பது குறைவாகக் காணப்படுகிறது. இவ்விளையாட்டு மைதானம் சிறந்த வீரர்களை உருவாக்கியது. இங்கிருந்து விளையாட்டு வீரர்கள் அகில இலங்கைப் போட்டிகளில் பங்குபற்றினார்கள்.

30 ஆண்டுகளுக்கு முன்னர் குருநகர் பாடுமீன் விளையாட்டுக் கழகம் அகில இலங்கை ரீதியில் சிறந்த விளையாட்டுக் கழகமாக விளங்கியதுடன் அதன் சில வீரர்கள் தேசிய உதைபந்தாட்டப் போட்டியிலும் கலந்து கொண்டார்கள்.

விளையாட்டில் வெற்றி பெறுவதற்கு, சிறந்த பயிற்சி அவசியம். பயிற்சியின்போது ஒழுக்கத்தைப் பின்பற்ற வேண்டும். இவ்விளையாட்டுப் போட்டியின் இடைவேளையின்போதே இந்த மண்ணுக்குரிய நடன நிகழ்ச்சி அதன் இசைக்கேற்ப மாணவர்களால் நடித்துக் காண்பிக்கப்பட்டது. மாணவர்கள் திறமையுள்ளவர்களாக வளர வேண்டும் - என்றார். (எ-51)

# கலைமாமணி பட்டம் வழங்கி கௌரவிப்பு

வடமராட்சி,பெப்.23

வடமராட்சி அல்வாய் குமுழடி அதிசய விநாயகர் ஆலயத்தின் மஹோற்சவத்தில் கம்பராமாயணம் தொடர் சொற்பொழிவு அண்மையில் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் சிறப்பு சொற்பொழிவு நிகழ்த்திய சைவப் புலவர் பண்டிதர், பொன் சுகந்தனுக்கு கலை மாமணிப் பட்டம் வழங்கி கௌரவிக்கப்பட்டது.

உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரியின் முன்னாள் அதிபர் கி.நடராஜாவினால் ஆலய நிர்வாகத்தின் சார்பாக பண்டிதர் பொன் சுகந்தனுக்கு இந்தக் கலைமாமணிப் பட்டம் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இதனை விட பண்டிதர் பொன் சுகந்தன் பல ஆலயங்களில் நிகழ்த்திய சொற்பொழிவுகளுக்கு சொல்வேந்தன், சொல்லின் சிகரம், சொல் இசை வாரிதி, தமிழ் ஞான வித்தகர், கவிவேந்தர், பல்கலை அரசு போன்ற விருதுகளைப் பெற்றுள்ளார்.

இலக்கிய வரலாறுகளை சித்திரிக்கும் வகையில் இவரது சொற்பொழிவுகள் நிகழ்த்தப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (எ)

# மாணவரின் உடலையும் உளத்தையும் சம காலத்தில் வலுவூட்ட வேண்டும்

## கல்வி அபிவிருத்தி தர மேம்பாட்டின் இணைப்பாளர்

யாழ்ப்பாணம், பெப். 23

மாணவர்களின் உடலையும், உள்ளத்தையும் சம காலத்தில் சிறப்பாக வலுவூட்ட வேண்டியுள்ளது. இதற்கான அடிப்படைகள் முன்பள்ளிகளிலும், ஆரம்பப் பாடசாலைகளிலும் வழங்க வேண்டும் என யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரியின் கல்வி அபிவிருத்தி தர மேம்பாட்டின் இணைப்பாளர் பா.தனபாலன் தெரிவித்தார்.

யாழ்.சண்டிலிப்பாய் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் கடந்த 11 ஆம் திகதி சனிக்கிழமை நடைபெற்ற விளையாட்டுப் போட்டி, பாடசாலை அதிபர் தி.தேவதயாளன் தலைமையில் நடைபெற்றது. இந்தப் போட்டியில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே தனபாலன் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தெரிவிக்கையில்:

இன்றைய சிறுவர்களே நாளைய தலைவர்கள், நாளைய நற்பிரஜைகள், நாளைய தேச நிர்மாணிகள். எமது தேசத்தை வலுவூட்டும் அவர்களுக்கான தேர்ச்சிகளையும், பன்முக ஆற்றல்களையும், வீரத்தையும், விவேகத்தையும் முழுமையாக வழங்க வேண்டிய பொறுப்பு எம் எல்லோர் கையிலுமுள்ளது. அதற்காக நாம் பல அர்ப்பணிப்புக்களைச் செய்ய வேண்டியுள்ளது. இதற்கான சூழ்நிலைகள் தற்போது எமது மண்ணில் பலவீனமாகவே உள்ளது. இவ்வாறான பலவீனங்களை நீக்க வேண்டிய பொறுப்புடையவர்கள், தம் பொறுப்புக்களைத் தட்டிக் கழிக்க முடியாது.

விளையாட்டின் மூலம் சிறார்களிடையே தலைமைத்துவ ஆற்றல் பெருகும். ஒழுக்க விதிகளுக்குக் கட்டுப்படும் இயல்பு, ஒற்றுமை, சுறுசுறுப்பு, மன உறுதி, எதையும் தாங்கும் இதயம் ஆகிய பண்புகள் வளரும். அவர்களுடைய தசைநார்கள் உறுதிபெறும். ஞாபகசக்தி, சிந்திக்கும் ஆற்றல் பெருகும்.ஓங்கி இருக்கும் மாணவர்களும் உள்வாங்கப்படுவார்கள், சமூகமயமாக்கல் செயன்முறை வலுவடையும். சமூக விழுமியங்களையும் விளையாட்டின் பயனாகக் கற்கக் கூடியதாக இருக்கும்.

எனவே பாடசாலையின் கற்றல் - கற்பித்தல் கலைத்திட்டத்தில் மிக முக்கிய கூறாக விளையாட்டுக்களும், விளையாட்டுப் போட்டிகளும் நிகழ்த்தப்பட வேண்டும். இந்தத் தேர்ச்சிகளை எந்தத் தனியார் கல்வி நிலையங்களிலும் வழங்க முடியாது என்றார். (எ-29)

உதயன் தொடர்புகளுக்கு

**தலைமையகம்:**
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி:021-222 9933,
222 9944, 5679933, 5679944
விளம்பரம்:021-5671111
விநியோகம்: 021-5677222
**தொலைநகல்**
செய்தி: 021-5678844,
விளம்பரம்: 021-2229731
**மின் அஞ்சல்**
செய்தி : news@uthayan.com
கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

**வன்னிப் பணிமனை:**
ஏ-9 வீதி, கரடிப்போக்கு,
கிளிநொச்சி (புனித திரேசா வித்தி. முன்பாக)
தொலைபேசி: 021 228 0065
தொலைநகல்: 021 228 0066
**நெல்லியடிக் கிளை:**
பிரதான வீதி, நெல்லியடி (HNB அருகே)
தொலைபேசி : 021-5673377,
021 226 2395
**சாவகச்சேரிக் கிளை:**
நவீன சந்தை மேல்மாடி,
சாவகச்சேரி
தொலைபேசி: 021 227 0323

விளம்பர முகவர்கள்: 'சதா பொன்ஸ்' –மாலு சந்தி, அல்வாய் : 021 226 3206, 'நெல்லியடி மொடேன் ஸ்ரோர்ஸ்' – பஸ் நிலையம், நெல்லியடி : 021 490 1519, 'மீசாலை கஜானன்' – கண்டி வீதி, மீசாலை தெற்கு : 021 227 0399, 'மன்னார் சிவசாந்தி' – தாழ்வுபாடு வீதி, மன்னார் : 0752824478, 'கொடிகாமம் அருள்நாயகி' – பஸ் நிலையம், கொடிகாமம் : 0774937585, 'மல்லாவி புவனேஸ்வரி புத்தகசாலை' – மத்திய சந்தையடி, மல்லாவி : 0778175116, 'கோபி எலைக்சிற்றி' – முல்லைத்தீவு நகர் : 0779598917, 'அன்பரசன்' – சிவன் கோயிலடி, ஒட்டுசுட்டான் : 0775035571, 'சுஹா ரவல்ஸ்' – 98, பிரதான வீதி, மன்னார் : 023 222 3311

## இவர்கள் ஏன் அரசியலுக்கு வந்தார்கள்?

நேற்று வழக்கமான கடையில் வழக்கமான உணவை உண்டுவிட்டு காசு கொடுத்தபோது ஒரு திகைப்பு. வழக்கமான கட்டணமாக இல்லாமல் சற்று அதிகமாக இருந்தது. நண்பனுடன் எப்படித் திரும்பத் திரும்பக் கணக்குப் பார்த்தாலும் கணக்கு உதைத்தது. பரிமாறியவரிடம் கணக்குப் பிழைக்கிறதே என்று இழுத்தபோது அவர் ''இல்லையே!'' என்று திடமாகப் பதிலளித்தார்.

பின்னர் ஆற அமர இருந்து, உண்டவைகள் ஒவ்வொன்றினதும் காசுகளை ஒவ்வொன்றாகக் கணக்குப் பண்ணியபோதுதான் உண்மை வெளிச்சத்துக்கு வந்தது. திரும்பத் திரும்பக் கணக்குப் பார்த்த எங்கள் இருவருக்கும் எரிபொருள் விலை கூடிவிட்டமை திரும்பவும் நினைவுக்கு வரத் தவறியமையே இந்தக் குழப்பங்கள் எல்லாவற்றுக்கும் காரணம்.

எரிபொருள் விலை ஏறிவிட்டதால் உணவுப் பொருள்களின் விலைகளையும் அதிகரித்துவிட்டார்கள். அதனால்தான் வழமைக்கு மாறான கணக்கு வந்துவிட்டது. இருவருக்கு மட்டும்தான் என்றில்லை வடக்கில் அனேகருக்கு இந்த மறதிப் பிரச்சினை இருக்கிறது என்றே தோன்றுகிறது. அதனால்தான் எரிபொருள் விலை உயர்வைக் கண்டித்துப் போராட்டங்களோ கோஷங்களோ ஆர்ப்பாட்டங்களோ இங்கு நடைபெறவில்லை.

வடக்கில் மன்னார் விவசாயிகள் மற்றும் மீனவர்களைத் தவிர வேறு எவரையும் எரிபொருள் விலை உயர்வு பாதிக்கவில்லைப் போலும். எனவேதான் மன்னார் மீனவர்கள், விவசாயிகள் தவிர்ந்த ஏனைய எவருக்கும் போராட்டங்கள் செய்யத் தோன்றவில்லை. இல்லையேல் கடந்த 30 ஆண்டுகாலத்தில் அனுபவிக்கக்கூடாததை எல்லாம் அனுபவித்துவிட்டோம், இது என்ன பெரிய விடயம் என்ற மனோ நிலை மக்களின் இந்த மந்த நிலைக்குக் காரணமாக இருக்கலாம்.

என்ன காரணமாக இருந்தாலும் எந்த ஒரு விடயத்துக்காகவும் உரத்துக் குரல் கொடுக்க அஞ்சும் நிலைமை ஒன்று வடக்கில் இருக்கிறது என்பதை யாரும் மறுப்பதற்கில்லை. தெற்கில் இத்தகைய போராட்டங்களுக்கு அரசியல்வாதிகள் தலைமை வகிக்கும்போது வடக்கில் அத்தகைய அரசியல் தலைமைகளையும் காணவில்லை.

எதிர்த்தரப்பு தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களும் இதில் அக்கறை செலுத்துவதில்லை. உள்ளூராட்சி மன்றங்களின் உறுப்பினர்களும் அதில் அக்கறை செலுத்துவதில்லை. கீழ் மட்டத்தில் இத்தகைய போராட்டங்களுக்கு ஆதரவில்லை என்று மேலே இருப்பவர்களும், மேலே இருப்பவர்கள் இதில் அக்கறை காட்டாமல் நாம் என்ன செய்ய முடியும் என்று கிராமிய மட்ட அரசியல்வாதிகளும் பொறுப்புக்களைத் தட்டிக் கழிக்கும் நிலையையே காணமுடிகிறது.

தெற்கில் மாகாண சபைகளிலும் உள்ளூராட்சி மன்றங்களிலும் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் மாட்டு வண்டிகளில் சென்றும் சபைக் கூட்டங்களுக்கு நடந்து சென்றும் தமது எதிர்ப்பைக் காட்டுகிறார்கள். குறைந்தது நான்கு பதாகைகளைப் பிடித்தபடியாவது ஒரு சிறிய போராட்டத்தை நடத்துகிறார்கள். இங்குதான் எதுவும் நடக்கக் காணோம்.

உள்ளூராட்சிமன்றங்களின் அரசியல்வாதிகளுக்கும் இந்தப் பிரச்சினைகள் எல்லாம் மக்களின் பிரச்சினைகள் போல் தெரியவில்லைப்போலும். பழியை நாடாளுமன்ற உறுப்பினர்களின் மேல்போட்டு விட்டு போராட்டம் நடத்த அவர்களும் பயந்துபோய்க் கிடக்கிறார்கள். பிறகு ஏன் இவர்கள் அரசியலுக்கு வந்தார்கள்?

# இலங்கையை நெருங்கி வரும் சதி?

தமிழில்: வீஎஸ்ரீ

இந்த மாத இறுதியில் ஜெனிவா மனித உரிமைகள் பேரவை அமர்வின்போது இலங்கைக்கு எதிராக மனித உரிமை மீறல் குற்றச்சாட்டு அல்லது போர்க் குற்றச் குற்றச்சாட்டுத் தொடர்பான பிரேரணை சமர்ப்பிக்கப்படவுள்ளமை உறுதியாகியுள்ளது. இலங்கையில் ஜனநாயக ரீதியிலான ஆட்சி நிர்வாகத்தை, நிலை நிறுத்த அரசு எத்தகைய செயற்பாடுகளை முன்னெடுக்கிறது என்பதை அரசு, ஐ.நா சபைக்கு உறுதிப்படுத்த வேண்டியுள்ளமை இதனூடாக வெளிப்படுத்தப்படுகிறது. ஏனைய அனைத்தையும் ஒரு புறம் ஒதுக்கி வைத்தாலும் ஆள்கள் கடத்தப்படும் கலாசாரம் முடிவின்றித் தொடர்வது சகலரும் அறிந்ததொன்றே. இது அரசின் மீதான அவநம்பிக்கையை அதிகரிக்க வைப்பதாக அமைகிறது.

இந்த ஜனநாயக மீறல்களை சுட்டிக்காட்டுவதை மேற்கின் சதியென அரச தரப்பு காட்ட விளைகின்றது.

இலங்கையைத் தம் வசப்படுத்தும் மேற்குலகச் சதியெனக் கூறுவதற்கான ஆதாரமெதுவும் உள்ளதாகத் தோன்றவில்லை. சதாம் ஹுசேன் எதேச்சாதிகார ஆட்சியை அகற்ற ஈராக் வசம் இரசாயன ஆயுதங்கள் உள்ளதாகக் குற்றம் சாட்டியே மேற்குலக நாடுகள் ஈராக் மீது போர் தொடுத்தன. ஈராக் வசம் அத்தகைய ஆயுதங்கள் எதுவும் இல்லை என்பதை மேற்குலக நாடுகள் முன்னரே தெரிந்து வைத்திருந்தன என்பது அனைவருக்கும் தெரியும். இதற்காக அப்போதைய அமெரிக்க ஜனாதிபதி மீதும், பிரிட்டன் பிரதமர் மீதும் சர்வதேச நீதிமன்றத்தில் வழக்குத்தாக்கல் செய்ய இயலும் என் மனித உரிமைகள் பேரவை தற்போது தெரிவிக்கிறது. பொய்யான காரணத்தை முன் வைத்து மேற்குலக நாடுகள் ஈராக்கை ஆக்கிரமித்த போதிலும், அதற்காக அந்நாடுகள் மீது வழக்கு தொடரப்படும் என நம்ப இயலாதுள்ளது.

இதுபோல் லிபியா மீதான மேற்கின் கரிசனையும் விமர்சனத்துக்குள்ளாகின்றது.

இலங்கையில் பிரிவினை ஏற்படுத்த மேற்குலக நாடுகள் சதி செய்வதான குற்றச்சாட்டுக்குப் பொருந்தி வரத்தக்க காரணம் எதனையும் முன்வைக்க இயலவில்லை. அத்தகைய பிரிவினை வாதத்தை ஊக்குவித்த வேறு தரப்புக் குறித்த வரலாற்றுப் பதிவுகள் பல உண்டு. ஆரம்பத்தில் இலங்கையில் பிரிவினைவாதத்தை ஊக்குவித்த முக்கிய தரப்பு இந்தியாவே. மேற்குலக சார்புக் கொள்கை கொண்ட ஜே.ஆரின் தலைமையிலான அரசுக்குப் பாடம் புகட்டும் நோக்கில், இலங்கைப் பிரிவினை வாதத் தமிழ் ஆயுதக் குழுக்களுக்கு ஆயுதங்கள், பயிற்சிகள் வழங்கி இந்தியா அவர்களை ஊக்குவித்தது. அந்தக் கால கட்டத்தில் இந்தியா மேற்குலக நாடுகளுக்கு எதிராகவும், ரஷ்யாவுடன் அந்நியோன்யமாகவும் செயற்பட்டது. இன்று மேற்குலக நாடுகள் இலங்கைக்கு எதிராகச் சதி செய்கின்றன என்ற வாதம் இன்றைய யதார்த்தத்துடன் பொருந்தி வருவதாக இல்லை.

இந்தியா, அந்த வேளையிலும் பிரிக்கப்படாத இலங்கைக்குள்

> “ தமது அமைப்பு மீது விதிக்கப்பட்ட தடையை நீக்கிக் கொள்ள வைப்பிப்பதற்காகவே பிரபாகரன் போர் நிறுத்த உடன்பாட்டுக்கு ஒப்புக் கொண்டதாகவும் கூறப்பட்டது

தமிழ் மக்களுக்கு நியாயமான உரிமைகளுடனான தீர்வு வழங்கப்பட வேண்டுமென்றே தொடர்ச்சியாகக் கூறி வந்துள்ளது. பின்னர் போராளிகளை நிராயுதபாணிகளாக்க படையையும் இலங்கைக்கு அனுப்பி வைத்தது. ஏனைய குழுக்கள் தமது ஆயுதங்களை ஒப்படைத்த போதிலும், விடுதலைப் புலிகள் அமைப்பு அவ்விதம் செய்யாது இந்திய அமைதி காக்கும் படையையே எதிர்த்துப் போரிட்டது. இலங்கை அரசின் வேண்டுகோளுக்கிணங்க பின்னர் இந்திய அமைதிகாக்கும் படை இலங்கையிலிருந்து விலக்கிக் கொள்ளப்பட்டது.

அமெரிக்காவும் பிரிட்டனும் 1997 ஆம் ஆண்டிலேயே விடுதலைப் புலிகள் அமைப்பைத் தடை செய்து விட்டிருந்தன. இந் நாடுகளால் தமது அமைப்பு மீது விதிக்கப்பட்ட தடையை நீக்கிக் கொள்ள வைப்பிப்பதற்காகவே பிரபாகரன் போர் நிறுத்த உடன்பாட்டுக்கு ஒப்புக் கொண்டதாகவும் கூறப்பட்டது. ஆயினும் இவ்விரு நாடுகளும் விடுதலைப்புலிகள் மீதான தடையை நீக்கிக் கொள்ளவில்லை. அது மட்டுமல்லாது சமாதானப் பேச்சுக்களிலிருந்து விடுதலைப்புலிகள் அமைப்பு வெளியேறியபோது ஐரோப்பிய ஒன்றிய நாடுகளும் விடுதலைப் புலிகள் அமைப்பைத் தடை செய்ய வேண்டுமென அமெரிக்கா கூறியிருந்தது. அதையேற்று ஐரோப்பிய ஒன்றிய நாடுகளும் விடுதலைப் புலிகள் அமைப்புக்குத் தடைவிதித்தன. இச் சம்பவங்கள் எவையும் மேற்குலக நாடுகளின் சதி என்ற தற்போதைய குற்றச்சாட்டுக்களுடன் பொருந்துவனவாக இல்லை.

விடுதலைப்புலிகளுடனான யுத்தம் இடம்பெற்ற வேளையில் சர்வதேச கடற்பரப்பில் வைத்து விடுதலைப்புலிகளின் 11 கப்பல்களை இலங்கைக் கடற்படை தாக்கி அழித்ததாக அரசு பெருமை பேசிக் கொண்டது.

ஆயினும் இலங்கைக் கடற்படைக்கு அதற்கான திறன் தனித்து வாய்த்திருக்கவில்லை எனவும் மற்றொரு தரப்பால் விமர்சிக்கப்பட்டது. அமெரிக்க மற்றும் இந்திய அரசுகளின் உளவு நிறுவனங்கள் வழங்கிய துல்லியமான இரகசியத் தகவல்கள் காரணமாகவே இலங்கைக் கடற்படையால் விடுதலைப் புலிகளது கப்பல்களைத் தாக்கியழிக்க முடிந்ததாகவும் விமர்சனங்கள் முன் வைக்கப்பட்டன. இந்தியாவால் விடுதலைப் புலிகளின் ஆயுதக் கப்பல்கள் தடுத்து நிறுத்தப்பட்டுக் கைப்பற்றப்பட்டதான செய்திகள் இதனை உறுதி செய்வதாக அமைந்தன.

இதே போன்று, இலங்கை அரசுக்கு ஆயுத உதவி வழங்கத் தயாராகவுள்ளதாகவும், இராணுவத்துக்கு பயிற்சிகள் மற்றும் ஆலோசனைகள் வழங்கத் தயாராகவுள்ளதாகவும் அமெரிக்கா அறிவித்ததுடன், அவற்றை நிறைவேற்றியும் வைத்துள்ளது.

1987 ஆம் ஆண்டில் விடுதலைப்புலிகளுக்கு எதிராகத் தாம் மேற்கொண்டு வரும் யுத்தத்தில் எந்த ஒரு வெளிநாடும் தமக்கு உதவ முன் வரவில்லை என ஜே. ஆர். தெரிவித்து வந்தார். ஆனால் இறுதி யுத்த வேளையில் அத்தகைய நிலை நிலவவில்லை. ஒரு தொலைபேசித் தொடர்பு மூலமே இராணுவத்தினருக்குத் தேவையான யுத்த உபகரணங்களை இலங்கை அரசால் தருவித்துக் கொள்ளத்தக்க நிலையே நிலவியது. அமெரிக்காவுடன் நல்லுறவு பேணி வந்த பாகிஸ்தானே இலங்கை அரசுக்கான யுத்த உபகரண விநியோகத் தரப்புக்களில் முக்கிய பாத்திரம் வகித்துச் செயற்பட்டது. இவற்றின் அடிப்படையில் நோக்கும் போது, கூறப்படும் விதத்தில் அல்லாத வேறு மாறுபட்ட விதத்திலான சர்வதேச சதியொன்று இலங்கை அரசுக்கு எதிராக மேற்கொள்ளப்படுவதாக எண்ணத் தோன்றினாலும் அதனை எந்த விதத்திலும் நிர்ணயிக்க இயலாதுள்ளது.

யுத்தத்தின் இறுதிக் கட்டத்தில் மேற்குலகம் பிரபாகரனைக் காப்பாற்றுவதற்கான முயற்சிகளில் ஈடுபடுவதாக இலங்கை குற்றம் சாட்டியிருந்தது.

ஆனால் அது சம்பந்தப்பட்ட தரப்பினரால் ஏற்றுக் கொள்ளப்படாமையும் இந்நாளில் கண்டுபிடிக்கப்பட்டது. இது கைகூடியிருந்தால் அதனை ஒரு சதியென ஏற்றிருக்கலாம்.

அந்த வகையில் சர்வதேச சதி என்ற குற்றச்சாட்டு, யுத்த களத்தில் இடம்பெற்ற சம்பவங்களுடன் ஒப்பிட்டுப் பார்க்கையில் சிறிதளவும் பொருந்தி வருவதாக இல்லை. ஆயினும் அத்தகையதொரு கதை ஏதோ விதத்தில் உருவாகியுள்ளது அல்லது உருவாக்கப்பட்டுள்ளது. இதுவும் மற்றொரு யானை- புலி ஒப்பந்தக் கதையா என்பதை வரலாறு நிரூபித்துக் காட்டக் கூடும். ஆனால் தற்போதைய நிலைப்பாட்டின் அடிப்படையை வைத்து எம்மால் இந்த விதத்திலேயே தீர்மானிக்க முடிகிறது.

எது எவ்வாறிருந்த போதிலும், இந்தியாவும், அமெரிக்கா தலைமையிலான மேற்குலக நாடுகளும் இலங்கை விடயத்தில் தொடர்ச்சியாக தலையீடுகளை, சில வேளைகளில் அழுத்தம் எனக் கருதத்தக்க வகையிலான தலையீடுகளை மேற்கொண்டே வந்துள்ளன. ஆரம்ப முதலே தமிழ் மக்களது பிரச்சினைகளுக்கு அரசியல் ரீதியான தீர்வைப் பெற்றுக் கொடுப்பது குறித்தே இந்தியா அக்கறை காட்டிச் செயற்பட்டு வந்துள்ளது. திஸ்ஸ விதாரண தலைமையிலான சர்வகட்சிக்குழு மூலம் அரசியல் தீர்வுத் திட்டமொன்றை உருவாக்கி நடைமுறைப்படுத்தவுள்ளதாக இலங்கை அரசு இந்தியாவுக்கு உறுதி வழங்கியிருந்தது. பின்னர் 13 + என்ற அரசமைப்புக்கான 13 ஆவது திருத்தத்துக்கு அப்பால் சென்று அதிகாரப் பகிர்வுத் திட்டம் மூலம் தீர்வு காணவிருப்பதாக உறுதி வழங்கியது.

அமெரிக்க அரசின் உயர்

(22 ஆம் பக்கம் பார்க்க)

# திருநெல்வேலி புதிர்ச்சந்தை

யாழ். குடாவின் மிகப் பிரதான சந்தைகளுள் திருநெல்வேலி பொதுச் சந்தையும் ஒன்று. நீண்டகாலமாக அதில் நிலவிய குறைபாடுகள் நிவர்த்தி செய்யப்பட்டுள்ளன. அது பற்றி அங்காடித் தெருவில் சந்தித்தவர்கள் பேசுகின்றனர்.


■ லக்ஸ்மன்

நல்லூர் பிரதேசத்தின் முக்கிய இடத்தில் அமைந்துள்ள இந்தச் சந்தை யாழ். மாவட்டத்தின் பொருளாதார வளத்தை ஏற்படுத்திக் கொடுக்கும் முக்கிய மையங்களில் ஒன்றாகும். இதன் சமூக பொருளாதாரத்தைக் கருத்தில் எடுத்து நல்லூர் பிரதேச சபையின் செயலாளர் மே.சாந்தசீலன் எடுத்த கடும் முயற்சி இது அமைவதற்கு காரணமாக இருந்தது. மரக்கறி மொத்த வியாபாரத்திற்கான ஒரு கட்டடம், மீன்சந்தைக் கட்டடம் என்பன ஒரு மாடிக் கட்டடமாக உயர்த்திப் புனரமைக்கவும் கீழ்த்தளத்தில் முடிவு பெறாத ஏனைய கடைகளுக்கான கட்டடங்களை நிர்மாணித்தல் என வரையறை செய்யப்பட்டு முதலில் மீன்சந்தை, மலசலகூட கட்டடங்கள் புனரமைக்கப்பட்டன. மீன்சந்தைபுனரமைப்புக்கு ரூபா 3,987 864 உம் மலசலகூட முழு வேலைகளுக்குமான மதிப்பீடாக ரூபா 3,342, 286 நிதி பயன்படுத்தப்பட்டுள்ளது.

நாளாந்த வியாபாரம் பாதிப்படையாதவாறு இந்தக் கட்டடப் பணிகள் இடம்பெற்று வந்தன. சந்தை வியாபாரிகளினதும் நுகர்வோரினதும் வரவேற்பைப் பெற்றிருந்தது. சந்தைக் கட்டடம் விரைவில் நிறைவடைய வேண்டும் என்பதிலும் நல்லூர் பிரதேச சபை கவனம் செலுத்தியிருந்தது. சந்தைக் கட்டடத்தின் ஆரம்ப மதிப்பீட்டுத் தொகை அண்ணளவாக ரூபா 85,000,000 ஆக இருந்துள்ளது.

புதிய சந்தைக் கட்டடத்தின் மேல்மாடியில் ஏறி இறங்குவதில் சிரமங்கள் இருப்பதாகக்கூறப்பட்டபோதும் மேல்மாடிக் கடைகள் நல்லமுறையில் உள்ளன. கிழக்குப் பகுதியில் உள்ள மாடியிலும் மேலும் சில கடைத் தொகுதிகள் வரக் கூடிய சாத்தியங்கள் உண்டு. சந்தை வசதியாக அமைந்துள்ளது.





**பரமேஸ்வரன் - மரக்கறி வியாபாரி**

மேலுக்கு வந்து போவது மிகவும் குழப்பமாக இருக்கிறது. உற்பத்தியாளர்கள் தமது பொருள்களை மேலே கொண்டுவர மிகவும் கஷ்டப்படுகிறார்கள். வடக்குப் பக்கத்தில் படிகள் உள்ளது. இதற்கு குறுக்குச் சுவர்கள் கட்டப்பட்டுள்ளன. அதனால் சில வியாபாரிகளுக்கான கடைகளின் அளவுகள் குறைந்துள்ளன. கீழே உள்ளமாதிரி கடைகளைக் கொஞ்சம் விசாலமாக அமைத்திருக்கலாம். பாதிக்கப்பட்ட வியாபாரிகளுக்கு இடவசதிகள் தேவை. அவர்களுக்கு உரிய வசதிகள் செய்து தரப்படும் எனக் கூறப்பட்டுள்ளது. கீழே கட்டட வேலைகள் இடம்பெறும் போது அந்தப் பகுதியில் உள்ள வியாபாரிகளுக்கும் மேல் கட்டடத்தில் இடம் ஒதுக்கிக் கொடுக்க வேண்டும். நான் இங்கே 1974 இல் இருந்துவியாபாரம் செய்கின்றேன். மேலே நல்ல காற்றோட்ட வசதிகள் உண்டு. குடிதண்ணீர் வசதி செய்து தரப்படுவதுடன் மலசலகூடத்தையும் நல்ல முறையில் ஏற்படுத்தித் தரவேண்டும். ஏறி இறங்குவது ஒரு கஷ்டம் என்ற போதும் சந்தைக் கட்டடம் நல்ல முறையில் அமைக்கப்பட்டுள்ளது. ஏனைய வியாபாரிகளுக்குள்ள பிரச்சினைகளையும் கேட்டுத் தெரிந்துகொண்டு மாற்று வசதிகள் ஏற்படுத்திக் கொடுத்தல் நன்று.

**திருமதி சின்னம்மா- மரக்கறி வியாபாரி**

பூசனிக்காய் வியாபாரம் செய்யும் திருமதி சி.சின்னம்மாவுக்கு ரொம்பவும் மனக்கவலை. அவரது கடை மிகவும் சிறிதாக உள்ளதாம். இதற்குள் எப்படி இருந்து வியாபாரத்தைக் கவனிக்க முடியும். கீழே வசதியாக இருந்தேன். இங்கு பாருங்கள் இருக்க இடமேயில்லை என்கிறார். அவர் கூறுவது சரிதான். பெரும் சிரமங்களின் மத்தியில் ஒருமாதிரி ஒடுங்கியபடி தனது வியாபாரத்தைக் கவனித்தார்.

**எஸ். மதியோகநாதன்- நுகர்வோர் .**

முன்னைய சந்தையைவிட இது வசதியாக உள்ளது. நடைபாதைகள் விசாலமாக இருக்கிறது. காற்றோட்ட வசதிகள் உண்டு. மழை காலத்திலும் கூட மக்கள் சிரமமின்றித் தமக்குத் தேவையானவற்றை நின்று நிதானித்து வாங்கிக் கொள்ள முடியும். சந்தையை துப்புரவாக வைத்துக் கொள்வதில் வியாபாரிகள், பொதுமக்கள் கவனம் செலுத்த வேண்டும்.

கொஞ்சம் வயது போனவர்களுக்குத்தான் ஏறி இறங்குவதில் கஷ்டம் இருப்பதைக் காணமுடிகின்றது. மற்றப்படி நல்லூர்ப் பிரதேச சபை தனது சொந்த நிதியில் இருந்து வசதியான ஒரு காய்கறிச் சந்தையை அமைத்துள்ளமை வரவேற்கத்தக்கது.

**என்.றொக்சன் - வியாபாரி**

எனக்கு வியாபாரம் செய்ய இடம்போதாது. பக்கத்துக் கடையில் உள்ள பொருள்களுடன் எனது பொருள்களும் கலந்துவிடும் நிலை இருக்கிறது. கீழே கடை இருந்தபோது நாட்டாண்மைகள் பொருள்களை எடுத்துவர ரூபா 20 அறவிட்டனர். இப்போது ரூபா 40 அறவிடுகின்றார்கள். ஏறியிறங்க வேண்டியுள்ளதால் இது தவிர்க்க முடியாதென்பது நாட்டாண்மைகளின் கூற்று. பிரதேச சபை தங்களது வசதிப்படி கட்டடத்தை அமைத்துவிட்டது. கட்டுவதற்கு முன் எல்லா வியாபாரிகளுடனும் கலந்துபேசி அவர்களது கருத்துக்களைக் கேட்டிருக்க வேண்டும். ஒரு ஐந்து ஆறு பேர்களிடமே கருத்துக் கேட்டிருந்தது. ரூபா ஒன்றரைக் கோடி குத்தகைக்கு விடும் இந்தச் சந்தையில் வியாபாரிகளுக்கான வசதிகள் அனைத்தும் நல்ல முறையில் இடம்பெற்றிருக்க வேண்டும் என்கிறார்.

# ஆசிரியத்தைக் கொடுக்கும் ஆசிரியர்கள்

■ பஞ்சவர்ணன்

எழுத்தறிவித்தவன் இறைவன் எனக் கூறி பாரதி ஆசிரியர்களை தெய்வமாகத் பார்த்தான் . ஏனெனில் ஆசிரியர்கள் பாடம் நடத்துவதோடு அவர்கள் பங்க முடிவதில்லை, மாணவர்களுக்கு ஒழுக்கத்தையும், அறிவையும் ஊட்டுபவர்களாக இருப்பதுடன் வழிகாட்டியாகவும், அவர்களை உயர்த்தும் ஏணியாகவும் இருக்கின்றார்கள். ஆனால் இன்று பரீட்சைக்குத் தயார்படுத்துகின்றார்களே அன்றி வாழ்க்கைக்குத் தயார்படுத்த ஆசிரியர்கள் தயாராக இல்லை . சில சந்தர்ப்பங்களில் தமக்கு இரையாகக் கூட மாணவர்களைப் பாவிக்கிற ஆசிரியர்கள் இருப்பதும் வேதனைக்குரியது. கல்வித்துறை சமூகத்தின் கண்கள் .

ஆனால் கல்விச் சமூகத்தின் சமகாலச் செயற்பாடுகள் அவர்களின் தரத்தைக் குறைத்து மதிப்பிடத் தூண்டுகிறது. பாடசாலைப் பரிசளிப்பு, விழா விளையாட்டுப் போட்டி, கண்காட்சி மற்றும் கலை கலாசார விழாக்கள் நடைபெறுவது வழமை. இவ்வாறான விழாக்களை மாணவர்களுக்காகத் தான் கல்விச் சமூகம் ஒழுங்குபடுத்தி வைத்துள்ளது.

ஆனால் சமகால நிகழ்வுகளை எடுத்துநோக்கினால் யாருக்காக அந்த விழா எடுக்கப்படுகிறது என்ற வினா எழுகின்றது .

ஏனெனில் மாணவர்களின் அறிவையும் ,தலைமைத்துவத்தையும் பண்பையும் வளர்க்கும் நோக்குடன் அமைய வேண்டிய விழாக்கள் பாடசாலை அதிபருக்கும், அங்கு முக்கிய புள்ளிகளாக இருக்கின்ற ஆசிரியர்களுக்கும், பிரதம மற்றும் சிறப்பு விருந்தினர்களாக அழைக்கப்படுகின்றவர்களுக்கும் எடுக்கப்படுகின்ற விழாவாகத் தோன்றுகின்றது.

அவர்களுக்கே மாலை மரியாதைகளும், விருந்தோம்பல்களும் தடல்புடலாக நடைபெறுவதைக் காணலாம்.

மூத்த அதிகாரிகள், அயல் பாடசாலை அதிபர்கள் விருந்தினர்களாக அழைக்கப்பட்டு மாணவரின் பெற்றோரினது பணத்தில் அதிபரும், ஆசிரியர்களும் அவர்களை மனங்குளிரக் கவனித்து தமது பதவி உயர்வுகளுக்கும், சலுகைகளுக்கும் கருவியாக்குவது கேவலமானதாகவே படுகின்றது. விருந்தினர்களாக அழைக்கப்படுவதன் நோக்கம் மாணவர்களுக்கு அவர்கள் உதாரண புருஷர்களாகக் காட்டுவதற்கே தவிர அதிபரின் தனிப்பட்ட செல்வாக்கை உயர்த்துவதற்கு அல்ல.

ஒரு பாடசாலை, அப்பாடசாலையுடன் தொடர்புடைய தனியார் துறையில் பிரகாசிக்கும் ஒருவரிடம் புரெஜெக்ரர் ஒன்றுக்காக விண்ணப்பம் கோரி இருந்தது. அதற்கு அவர், அதிபரிடம் அந்த பாடசாலைக்கு புரொஜெக்ரர் அவசியம் தான் என்பதை விளக்கி ஓர் கடிதத்தை தமக்கு அனுப்பி வைத்தால் நாம் அதை இலவசமாகத் தந்துதவுவதாகத் தெரிவித்தார்.

அதிபர் அவருக்கு கடிதம் அல்ல, ஒரு புத்தகமே அனுப்பி இருந்தார். சும்மா அல்ல, அவரது மேலதிகாரியுடைய வாழ்த்துச் செய்தியும், உறுதிப்படுத்தலும் கூடவே சேர்த்திருந்தார். ஆனால் அது அதிபருடைய '' புகழ்பாடும்'' புத்தகமாகவே இருந்தது கண்டு கடிதம் கேட்டவர்கள் வியந்து நின்றார்கள்.

பாடசாலைகள் தற்போது '' பஸ்'' களை தம்மகத்தே வைத்திருப்பது ஏதோ ஒரு கலாசாரமாக மாறி வருகின்றது. அது உண்மையில் பயன் உடையதோ இல்லையோ '' பஸ்'' எடுப்பதற்கு படாதபாடு படுகிறார்கள் அதில் பஸ்ஸூற்கு பாடசாலையின் பெயர் பெரிதாகப் பொறிப்பதும் வழமையாக உள்ளது. ஒரு பாடசாலை பாடசாலையின் பெயருடன், அதிபரின் பெயரையும் அதே அளவில் பெருப்பித்து விலாசம் காட்டுவதை என்னென்று சொல்வது.

ஆசிரியரை மாணவர்களும் பெற்றோர்களும் தாமாகவே விரும்பி அவர்களுக்கு விழா எடுப்பார்களாக இருந்தால் அது தான் உண்மையான விசுவாசம். அப்படியானால் யாழ்ப்பாணத்தில் அருமையாக ஓரிரு மணி விழாக்களும், பிரியாவிடை விழாக்களுமே நடைபெறும்.

இன்று கல்வி என்பது பொருளியல் முதலீடாக மாறி உள்ளது. சதையுள்ள செயற்படும் மனிதக் கருவிகளாக ஆசிரியர்களை இன்று காணக்கூடியதாக உள்ளது. இதனால் மலட்டுக் கல்வியே மாணவரிடையே விதைக்கப்படுவதால் வளமான எச்சங்கள் தோன்றும் என்பது சந்தேகமே!

பாடசாலை ஒன்றில் ஒரு மாணவனுக்கு விபத்து ஏற்பட்டால் மூன்றாவது நபரே கூட்டி வருவதைக் காணக் கூடியதாக உள்ளது. ஆசிரியர்கள் தமது பிள்ளைகள் போன்று மாணவர்களைப் பார்க்காத தன்மை இங்கு புலனாகின்றது.

ஆனால் விபத்துக்குள்ளான பிள்ளையின் பின்னணி '' பெரியதாக'' இருந்தால் எண்ணெயாக நிற்கும் ஆசிரியர்கள் பலர் உள்ளதும் குறிப்பிடப்பட வேண்டியதே!

ஆசிரியர்களின் பார்வையில் மாணவர்கள் அனைவரும் சமமாகத் தெரிய வேண்டும். மாணவர்களிடையே ஆண்கள், பெண்கள் இல்லாதவர் குழப்படியானவர்கள், ஒழுக்கமானவர்கள், பெற்றோர் வசதியோ பிரத்தியேக அந்தஸ்து உடையவர்கள், இல்லாதவர்கள் போன்ற வேறுபாடுகள் காட்டக்கூடாது.

ஆனால் அந்த வேறுபாடு இன்று அதிகரித்துள்ளதைக் காணக்கூடியதாக உள்ளது.

யாழ் நகரை அண்டிய பிரபல ஆரம்பப் பாடசாலையில், அந்தக் குழந்தை மாணவர்களிடம் பெற்றோரின் அந்தஸ்துக்கு ஏற்ப பரீட்சைக்கு புள்ளி இடுவது கொடுமையோ கொடுமை, எனக்கூறி பல பெற்றோர் புலம்புவது பாவச்செயல். வெள்ளை உள்ளம் கொண்ட குழந்தைகள் உள்ளத்தில் இவர்கள் என்னத்தை விதைக்கிறார்கள் என்பது பெரிய வினாவே!

ஆசிரியர்களின் ஒழுக்கம் என்பதும் கேள்விக்குறியாகவே உள்ளது. வகுப்பறையில் கைத்தொலைபேசி சம்பாசனை ஊடாக மாணவருக்கு தங்களது விலாசத்தைக் காட்டும் ஆசிரியர்கள், ஆசிரியர்களா!

'' ரிங்கிங் டோன்'' கேட்டால் 'இங்கிரிமென்ட் கட்' என சுற்றறிக்கை வந்து, அதை என்று அமுல்படுத்துகிறார்களோ அன்றுதான் ஆசிரிய சமூகம் உருப்படும் என்றார் ஒரு மூத்த ஆசிரியர்! ✱

# கடவுளை மாற்றாதே! அவரை உணர்ந்து கொள்

அடிக்கடி கட்சி மாறுகிற மனிதர்கள் போன்று கடவுளை மாற்றுகிற மனிதர்கள் சிலர் உள்ளனர். பரபரப்பாகப் புகழ் அடைகிற புதுப்புதுக் கோயில்கள், புதுப்புதுச் சாமிகள், புதுப்புது வழிபாட்டு முறைகள், இவர்களுக்கு ஒருவகை உற்சாகத்தைக் கொடுக்கும்.

கொஞ்ச நாள் இந்தக் கோயில், கொஞ்ச நாள் அந்தக் கோயில் என்று வணங்குகிற சாமியை அடிக்கடி மாற்றிக் கொள்வார்கள். அது மட்டும் இல்லை. அந்தச் சாமியை விட இந்தச் சாமிக்குத்தான் சக்தி அதிகம், அதற்குக் குறைவு என்றெல்லாம் விதவிதமாய்க் கயிறு திரிப்பார்கள்.

ஆயிரம் ஆயிரம் தெய்வ வழிபாடுகள் இருந்தாலும் ஆறே ஆறு வழிபாடுகள் போதும் என்று வகைப்படுத்தினார் ஆதி சங்கரர். அதிலும் ஏதேனும் ஒரு தெய்வ வடிவை ஆதர்சமான - ஆதாரமான - வடிவம் என்று உறுதியாகப் பற்றி அதிலேயே இறுகி அதன் வழிமுத்தி பெறுவது நேரான வழிபாட்டு முறை என்றும் விளக்கினார்.

அதற்காகப் பிற தெய்வ வழிபாடுகளை வெறுக்க வேண்டியதில்லை. எங்கு, எந்தத் தேவதையை வழிபட்டாலும் அங்கு தன் இஷ்ட தேவதையை நினைந்து வழிபடலாம். இதுவே சரியான வழி.

தேவாலயத்திலும், மசூதியிலும் கூடத் தன் இஷ்டதெய்வமான முருகனையோ அம்பிகையையோ வழிபடலாம். இதற்குக் கொஞ்சம் பக்குவமும் பயிற்சியும் தேவை.

சின்னச் சின்ன உலகியல் நன்மைகளைக் கருதி வெவ்வேறு தெய்வ வடிவகளாகப் பரம்பொருளை வணங்குதல் வழிபாட்டின் ஆரம்பநிலை. வளர்ச்சி உற்றவர்கள் ஒரே தெய்வத்திடம் சகல வகை நன்மைகளையும் பெற்று உயிரின் நிறைவு இலட்சியமாகிய முத்தியையும் பெறுவார்கள். பலப்பல தெய்வ வடிவங்களை வணங்கும் போது சந்தோஷம் வரலாம். ஆனால் நிறைவு - திருப்தி -பூரணத்துவம் வாய்ப்பது கடினம்.

பகவான் இராமகிருஷ்ணர் ஒரு உதாரணம் சொல்கிறார். ஒருவன் தன் வயலில் கிணறு வெட்டப் புறப்பட்டான். பத்து அடி தோண்டினான். தண்ணீர் வரவில்லை. வேறிடத்தில் பதினைந்து அடி தோண்டினான். பயன் இல்லை. இன்னும் ஓர் இடத்தில் பதினைந்து அடி தோண்டிப் பார்த்தான். தண்ணீர் வரவே இல்லை. இவன் அங்கும் இங்குமாக பத்து, பதினைந்து என்று அறுபது அடி தோண்டி தன் உழைப்பு, பலம், காலம் எல்லாவற்றையும் வீணாக்கி விட்டான். அதற்குப் பதிலாக ஒரே இடத்தில் தன் உழைப்பு முழுவதையும் செலவிட்டு அறுபது அடி தோண்டி இருந்தால் அவனுக்குக் கண்டிப்பாகத் தண்ணீர் கிடைத்திருக்கும்.

ஆத்ம சாதனையும் அப்படித்தான். ஒரே உபாசனமே மூர்த்தியைத் தேர்ந்து கொண்டு, ஒருவகை வழிபாடு, ஒரு மூல மந்த்ரஜபம் என்று தீர்க்கமாகச் செய்தால், சித்தி, மூத்தி எல்லாம் கண்டிப்பாக வந்து சேரும். சுவாமி இரண்டாம் பட்சம், பக்தனது தீர்க்கமும் மூர்க்கமும் தான் முக்கியம்.

வைணவர்கள் இந்த உணர்வை '' பதிவிரதாதர்மம்'' அதாவது கற்புள்ள மனைவி தன் கணவனைத் தவிர வேறு ஆண் மகனை விரும்பாத மாதிரி என்று எழுதுகிறார்கள். பெருமாள் பக்தர்கள் இன்னும் இறுகி, பெருமாளிலே காதல் கொண்டு தொழுவர். திருமலை வாழும் வேங்கடவனைத் தொழக்கூட விரும்புவதில்லை. ''அரங்கனைப் பாடிய வாயால் குரங்கனைப் பாடுவேனா'' என்று முறுக்கிக் கொள்கிறார்கள். திருமாலின் வேறு வேறு சொரூபங்கள் என்றாலும் ஒன்றில் லயித்தவர் மற்றொன்றில் லயிப்பது இல்லை. குறுகிய மனோபாவம் என்று இவர்களைக் குற்றாவளிக் கூண்டில் நிறுத்தக் கூடாது.

திடபக்திக்கு ஓர் அழகான சம்பவம் சொல்கிறேன். ஒரு வைணவக் குரு தம் சீடர்களுக்குப் பாடம் சொல்லிக் கொண்டிருந்தார். அப்போது ''நாராயணனே பரம் பொருள் . அவனுக்கு மேலான தெய்வம் இல்லை'' என்று வியாக்கியானம் செய்தார். பவ்யமாக எழுந்த ஒரு சீடர், வாய் பொத்தி குருவிடம் கேட்டார், ''சுவாமி! நீங்கள் நாராயணனே முழுமுதற் கடவுள்; அவனுக்கு மேல் எவரும் இல்லை என்கிறீர்கள். ஒரு வேளை வேறு எவராவது அப்படி இருந்துவிட்டால், நம் வழிபாடு வீண்தானே; அதனால் நாராயணன் தான் முழுமுதற் கடவுளா? வேறு எவருமே கிடையாதா? என்கிற என் ஐயத்தை சுவாமி தீர்க்க வேண்டும்'' என்றார்.

குரு சீடரைப் பார்த்து ''இந்தக் கேள்விக்கு விடை கூற என்னால் முடியாது. நம் வீட்டு வாசலில் பிச்சை கேட்டு ஒரு பரம பாகவதர் நாள்தோறும் வருகிறாரே.. அவரிடம் கேள். ஆனால் பிச்சை போட்ட பின் கேள்'' என்றார்.

பன்னிரண்டு இடங்களில் திருமண் பூசியபடி பரமபாகவதர், ''நாராயணா'' என்ற படி பிச்சை கேட்டார். சந்தேகக்கார சீடர் பிச்சை இட்ட பின்னர், ''ஐயா ஒரு சந்தேகம். நாராயணன் தான் முழுமுதற் கடவுளா? அவரைத் தவிர வேறு யாராவது முழுமுதற் கடவுளாக இருந்து விட்டால் நம் வழிபாடு வீணாகி விடாதா?'' என்றார்.

அடுத்த விநாடி வாங்கிய பிச்சை உட்பட தாம் கொண்டு வந்ததையும் தெருவில் எறிந்து விட்டுப் பாகவதர் ஓட ஆரம்பித்தார். பின்னால் ஓடி அவரைப் பிடித்துக் கொண்ட சீடரோ, ''ஏன் இப்படி ஓடிகிறீர்? என் கேள்விக்குப் பதில் என்ன?'' என்றார்.

''நாராயணன் தான் பரம்பொருள் என்கிற திட விசுவாசம் இல்லாதவன் வீட்டில் இத்தனை காலம் பிச்சை எடுத்தோமே என்று எனக்கு வருத்தமாக இருக்கிறது. அப்படி வைராக்கியம் இல்லாதவன் இட்ட பிச்சையோடு நான் பல வீடுகளில் திரட்டிக் கொண்டு வந்த பிச்சையும் கலந்துவிட்டதால் மொத்தத்தையும் எறிந்துவிட்டு இன்று பட்டினி கிடக்கத் தீர்மானித்தேன்'' என்றார் அந்த பரம பாகவதர்.

இது வைராக்கியமா? குறுகிய மனோபாவமா?

தன் வழிபாட்டில் உறுதியாக விளங்கி பிறர் வழிபாட்டைக் குறை சொல்லாத தெளிவே இன்றைய அவசியம். எம்மதமும் சம்மதம் என்று உளறிக் கொண்டு எல்லாவற்றையும் குழப்பவும் கூடாது. என் கடவுளே சிறந்தது என்று சண்டை போடவும் கூடாது. கடவுளை மாற்றுவதை விட உணர முயற்சி செய்யுங்கள்.



சுகி.சிவம்



# தனித்துவமான கட்டட வடிவமைப்போடு திகழும் அச்சுநகர் புனித சூசையப்பர்

ஞானி

(கடந்த வாரத் தொடர்ச்சி)



அச்சுவேலி புனித சூசையப்பர் தேவாலயம் கட்டட வடிவமைப்பில் தனித்துவமான கலை அம்சங்கள் கொண்டதாக மிளிர்கின்றது. யாழ். மறை மாவட்டத்தில் வேறு எந்த தேவாலயத்திலும் காணமுடியாத ''டோம்'' மிக உயரமான தூபியைக் கொண்டது.

கோட்டை மன்னார் சென் செபஸ்ரியார் மற்றும் நீர்கொழும்பு சென் செபஸ்ரியார் தேவாலயங்களில் மட்டும் தான் இந்தக் கட்டட வடிவமைப்பு உள்ளது. அங்கிருந்து மாதிரி வடிவமைப்பு எடுக்கப்பட்டே இங்கும் நிறுவப்பட்டது.

மிகவிசாலமான பெரிய தேவாலயமான அச்சுவேலி புனித சூசையப்பர் ஆலயம் வரலாற்றுப் புதுமை கொண்டதும், நம்பி வழிபடுவோரினதும் அச்சுவேலிப் பகுதி மக்களினதும் பெரும் நம்பிக்கைக்கும் உரியது. 4 ஏக்கருக்கு மேற்பட்ட விஸ்தீரணமான வளாகத்தில் கோயில் கொண்டு அருள்பாலிக்கும் புனித சூசையப்பருக்கு வருடாந்த உற்சவங்கள் ஒன்பது தினங்கள் நடைபெறுகின்றன. வருடாந்த திருவிழாவின் இறுதிநாள் மே முதலாம் திகதி தொழிலாளர் தினத்தில் மிக விமர்சையாகக் கொண்டாடப்படுகின்றது.

அச்சுவேலிப் பங்கில் புனித சூசையப்பர் ஆலயம், புனித அந்தோனியார் ஆலயம், நவக்கிரி புனித றீட்டம்மா ஆலயம் என மூன்று தேவாலயங்கள் அமைந்துள்ளன.

அச்சுவேலிப் பங்கு ஆரம்பத்தில் கரவெட்டிப் பங்குடன் இணைந்திருந்தது. பின்னர் அச்சுவேலி புத்தூர்ப் பகுதியை உள்ளடக்கியதாக அச்சுவேலிப் பங்கு உருவாக்கப்பட்டது. தற்பொழுது உள்ள அச்சுவேலிப் பங்கில் புனித சூசையப்பர் ஆலயம், புனித அந்தோனியார் ஆலயம், நவக்கிரி புனித றீட்டம்மா ஆலயம் என மூன்று தேவாலயங்கள் அமைந்துள்ளன. அச்சுவேலி பங்குத் தந்தைக்கான வதிவிட குருமனை புனித சூசையப்பர் தேவாலய வளாகத்தில் அமைந்துள்ளது.

1505ஆம் ஆண்டு இலங்கைக்கு எதிர்பாராதவிதமாக வந்து சேர்ந்த போர்த்துக்கீசரால் இலங்கையில் றோமன் கத்தோலிக்க கிறிஸ்தவ சமயம் பரப்பப்பட்டது. அதை அடுத்து 1618 இல் இலங்கையைக் கைப்பற்றிய டச்சுக்காரரால் (ஒல்லாந்தரால்) கிறிஸ்தவ சமயம் பரப்பப்பட்டது. போர்த்துக்கீசரும், ஒல்லாந்தரும் சமயங்களை சுதேசிகளுக்கு பரப்புவதில் மாறுபட்ட நடைமுறைகளைக் கையாண்ட போதிலும் றோமன் கத்தோலிக்க, கிறிஸ்தவ சமயங்களில் நம்பிக்கை வைத்து மக்கள் தத்தமது சமயங்களாக ஏற்றுக் கொண்டதோடு சமரச சன்மார்க்கத்தை ஏற்றுக் கொண்ட நிலையில், தத்தமது மனக்குறையைப் போக்கும் வகையில் விரும்பியவர்கள் விருப்பத்துக்கு ஏற்ப வழிபடுவதைக் காணலாம்.

அச்சுவேலியில் றோமன் கத்தோலிக்க சமயஸ்தாபிதம் சிற்றம்பல முதலியாரின் மகள் திருமதி மரியம் செட்டியார் காக்கைப்பிள்ளை (டொன் மரியா) ஆகியோருடன் ஆரம்பமாகிய போதிலும் 1900 ஆம் ஆண்டுக்கு முந்திய காலப்பகுதியில் அச்சுவேலி நகரை உள்ளடக்கிய அச்சுவேலிப் பங்கில் 400 குடும்பங்கள் வரையில் வாழ்ந்தனர்.

1900 இற்கு பிந்திய இடப்பெயர்வை அடுத்து கணிசமான தொகையினர் புலம்பெயர்ந்த நிலையில் தற்பொழுது புனித சூசையப்பர் ஆலயத்திற்குரிய குடும்பங்கள் என்ற வகையில் 80 குடும்பங்கள் வரையில் உள்ளனர்.

தொடர்ச்சியாக ஐந்து முதலியார் பரம்பரையால் நிர்வகிக்கப்பட்டுவந்த சூசையப்பர் ஆலயத்தில் 50 இற்கு மேற்பட்ட குருமார் அருட் பணியாற்றியுள்ளனர். ஆரம்பகாலத்தில் வெள்ளைக்கார வெளிநாட்டு குருமாரும் பிற்காலத்தில் சுதேசிகளும் பணியாற்றி உள்ளனர்.

அச்சுவேலி புனித சூசையப்பர் தேவாலயத்தின் குருக்களாக சட்டமேதை ஜீ.ஜீ.பொன்னம்பலத்தின் உடன் பிறந்த சகோதரர் வணபிதா ஜீ.ஜீ.பாலசுந்தரம் பணியாற்றிய 1940-1949 காலப்பகுதியில், பாலசுந்தரம் அடிகளாரின் வழிகாட்டலோடு சேர் சிற்றம்பலம் காடினர் (சிலோன் தியேட்டர் ஹாக்கிலீஸ் பூட்சிற்றி நிறுவனங்களின் உரிமையாளரும் பிரபல தொழிலதிபர்) அச்சுவேலி ஆஸ்பத்திரி, அச்சுவேலி புனித திரேசாள் மகளிர் கல்லூரி, அச்சுவேலி லங்காமாதா மடம் என்பனவற்றை நிறுவியதோடு, வறிய மக்களின் வாழ்வாதாரத்துக்கும் சமய, சமூகப்பணிகளையும் பெருமளவில் அச்சுவேலியில் மேற்கொண்டார். அத்துடன் அச்சுவேலி புனித சூசையப்பர் தேவாலய திருப்பணிப் பணியை மேற்கொண்டு தற்போதைய கட்டடக் கட்டமைப்புக்கு கொண்டு வந்தார். அத்துடன் ஆலயத்துக்கும், விளையாட்டு மைதானத்துக்குமான காணிகளையும் கொள்வனவு செய்து வழங்கியுள்ளார். இந்தக் காலப்பகுதி புனித சூசையப்பர் தேவாலய வளர்ச்சியிலும் அச்சுவேலி அபிவிருத்தியிலும் பொற்காலம் எனக் கொள்ளத்தக்கது.

1968-1972 காலப்பகுதியில் தேவாலயக் குருக்களாகப் பணியாற்றிய வணபிதா வெண்டக்கோன் காலத்தில் தேவாலயத்தின் விசாலமான முன் மண்டபம் நிர்மாணிக்கப்பட்டது. ஆலய வளாகத்தில் வாசகர்சாலையும் ஞானப்பிரகாசர் படிப்பகமும், கலை அரங்கமும் நிறுவப்பட்டன. 1988 ஆம் ஆண்டு வணபிதா றொக்ளோ அடிகளின் காலத்தில் ஆலயம் புனரமைக்கப்பட்டது.

அந்தக் காலப்பகுதியில் தேவாலய அருள் பணிச்சபையின் செயலாளராக ஸ்ரெனிஸ்லஸ் மாஸ்ரர் பணியாற்றியுள்ளார். 2005 ஆம் ஆண்டு தேவாலயத்தில் 175 ஆவது ஆண்டு விழா கோலாகலமாகக் கொண்டாடப்பட்டது.

அச்சுவேலி புனித சூசையப்பர் தேவாலயத்தின் குருமாராகப் பலரும் அரும்பெரும் பணியாற்றிய போதிலும் அவர்களின் பட்டியலைப் பெற்றுக் கொள்ள முடியவில்லை. வணபிதா குளாஸ் அடிகள், வில்வராஜசிங்கம், ஓ.எம்.ஐ, டெலகேயம், நல்லையா, பஸ்தியாம்பிள்ளை, நோபேட், குரூஸ் ஓ.எம்.ஐ, பெரிய சிங்கராஜர், சிங்கராஜர், மென்போட், யேசுரத்தினம், ஜோம்ஸ், ரவிச்சந்திரன், ஜெபநேசரத்தினம், கருணாரத்தினம், சோதிநாதன், பீற்றர் துரைரத்தினம் உள்ளிட்ட பலரும் காலத்துக்கு காலம் ஆலயத்தின் குருக்கள்மாராக இருந்து அரும்பணி ஆற்றியுள்ளனர். தற்பொழுது வணபிதா அன்ரனிபாலா அடிகள் பணியில் உள்ளார்.

தேவாலயத்தின் அருட்பணிச்சபையின் தலைவராக வணபிதா அன்ரனிபாலாவும், செயலாளராக கொ.கொட்பிறிவில் யோசேப் (ஜீவன்) பொருளாளராக பி.மரியதாஸ் ஆகியோரும் குடும்ப ரீதியில் நிர்வாகக்குழு உறுப்பினர்களும் பணியாற்றி வருகின்றனர். ஆலயப் பராமரிப்பாளர் பணியை யோன்ராஜா ஜீவரன் மேற்கொண்டு வருகிறார். தேவாலயப் பணிகள் மேலும் சிறப்பதாக.

(முற்றும்)

# நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகள் குப்பைக் கூடைக்குள்

## அதனாலேயே சர்வதேச அழுத்தம் அதிகரிப்பு என்கிறார் திஸ்ஸ

கொழும்பு, பெப்.23

நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை அரசு குப்பைத் தொட்டியில் போட்டுள்ளதனால் சர்வதேசத்தின் அழுத்தம் அதிகரித்துள்ளது என்று ஐ.தே. கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க குற்றஞ் சாட்டியுள்ளார்.



**எதிர்ப்பு தெரிவிக்கும் மக்களின் உயிருக்கு அரசு விலை நிர்ணயம் செய்கிறது.**

கொழும்பில் நேற்று புதன்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தங்களுக்கு கிடைத்துள்ள அதிகாரத்தை பொது மக்களுக்கு எதிராகப் பயன்படுத்த வேண்டாம் என்று இராணுவம் மற்றும் பொலிஸாரிடம் ஐக்கிய தேசியக் கட்சி கேட்டுக் கொண்டுள்ளது என்று அவர் தெரிவித்தார்.

எரிபொருள், மின்சாரம், பஸ் கட்டண உயர்வால் வாழ்க்கைச் சுமை அதிகரித்திருப்பதைக் கண்டித்து அதற்கு எதிர்ப்புத் தெரிவிப்பது நியாயமான விடயம் என்று அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

கட்டுநாயக்க ஆர்ப்பாட்டத்தில் சுட்டுக் கொல்லப்பட்ட ரொஷேன் சானக்கவுக்கு 10 லட்சம் ரூபா நட்டஈடு வழங்கிய அரசு, சிலாபம் துப்பாக்கிச் சூட்டில் கொலை செய்யப்பட்ட அந்தோனி பெனாண்டோவுக்கு 5 லட்சம் ரூபா நட்டஈடு வழங்குவதாகத் தெரிவித்ததாக அவர் குறிப்பிட்டார்.

எதிர்ப்புத் தெரிவிக்கும் மக்களின் உயிருக்கு அரசு விலை நிர்ணயம் செய்வதாக அவர் தெரிவித்தார்.(ச)

# ஐந்து நாடுகள் மட்டுமே இலங்கைக்கு ஆதரவு

## சிங்களப் பத்திரிகை தகவல்

கொழும்பு,பெப்.23

ஐ.நா. மனித உரிமை பேரவை அமர்வுகளின் போது இதுவரை ஐந்து நாடுகள் மட்டுமே இலங்கைக்கு ஆதரவளிப்பதாக உறுதியளித்துள்ளன என்று சிங்களப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

சீனா, ரஷ்யா, கியூபா, பாகிஸ்தான் மற்றும் ஈரான் ஆகிய நாடுகளே இவ்வாறு ஆதரவளிப்பதாக உறுதியளித்துள்ளன.

26 அரச சார்பற்ற நிறுவனங்கள் இலங்கைக்கு எதிராக குற்றச்சாட்டுக்களை முன்வைக்க தயாராகி வருவதாக சிங்களப் பத்திரிகையொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இதேவேளை, கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையை மனித உரிமைகள் பேரவை அமர்வுகளில் சமர்ப்பிக்குமாறு சில நாடுகள் விடுத்த கோரிக்கையை இலங்கை அரசு நிராகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

(ச)

# தீ விபத்து

கொழும்பு,பெப்.23

கம்பளை - அம்புலுவெவ பல்லுயிர் வன வளாகத்தில் ஏற்பட்ட திடீர் தீயினால் இதுவரை 300 ஏக்கர் நிலப்பரப்பு எரிந்துள்ளதாக கம்பளைப் பொலிஸார் தெரிவித்தனர்.

தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர இரண்டு தீயணைப்பு வாகனங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளபோதும், தீ பரவி வருவதால் விமான படையினரின் உதவியும் நாடப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.




எரிபொருள் விலையேற்றத்தை கண்டித்து ஐக்கிய தேசிய கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் நாடாளுமன்ற கட்டடத் தொகுதிக்கு முன்னால் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

# ஈழத்தமிழருக்காக நீதிகேட்டு தமிழகத்தில் கையெழுத்து வேட்டை

ஈழத்தமிழர்களுக்கு எதிராக இலங்கை அரசு மேற்கொண்ட போர்க்குற்றம் தொடர்பான சுயாதீன விசாரணையை சர்வதேச சமூகம் ஆரம்பிக்க வேண்டும் என்று தமிழ் நாட்டில் உள்ள உறவுகள் கையெழுத்து வேட்டையில் இறங்கியுள்ளன.

தமிழர்களுக்கு நீதிகேட்டு தமிழக உறவுகள் குறிப்பாக அரசியல் தலைவர்களான வைகோ, நெடுமாறன், சீமான் ஆகியோர் உட்பட பலரும் உணர்வெழுச்சியுடன் கையெழுத்து அஞ்சல் அட்டைகளை ஏற்பாடு செய்து வருகின்றனர்.

இதேவேளை ஐக்கிய நாடுகள் சபையிடம் மார்ச் 5 ஆம் திகதி ஈழத்தமிழர்களுக்கு நீதி கேட்பதற்காக பெல்ஜியத்திலிருந்து ஆரம்பிக்கப்பட்ட நீதிக்கான நடைப்பயணம் தொடர்கின்றது.

எம் உறவுகளுக்காக புலம் பெயர்ந்து வாழுகின்ற அனைத்து தமிழர்களும் இந்த வரலாற்றுக் கடமையில் தம்மையும் இணைத்துக்கொள்ள வேண்டும். அதன் மூலம் உலகத்தமிழர் அனைவரினதும் ஒருமித்த குரல் ஒலிக்கட்டும். அது சர்வதேசத்தின் மனச்சாட்சியை தட்டியெழுப்பி எமக்கான நீதியைப் பெற்றுத் தரட்டும் என்று நீதிக்கான நடைப்பயணத்தை மேற்கொள்ளுபவர்கள் கோரியுள்ளனர்.

அவரவர் வாழுகின்ற நாடுகளின் தமிழர் ஒருங்கிணைப்புக்குழுவின் பிரதிநிதிகளோடு தொடர்பு கொண்டு அல்லது www.walk&for & justicc.org என்ற இணையத்தளம் ஊடாக இந்த அஞ்சல் அட்டைகளைப் பெற்றுக் கொள்ளலாம் என்று நீதிக்கான நடைப்பயணத்தை மேற்கொள்ளும் உணர்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

(வ)

# ரணில், திஸ்ஸவுக்கு நீதிமன்றம் அவகாசம்

கொழும்பு,பெப்.23

ஐக்கிய தேசியக்கட்சி தேர்தலில் ரணில் விக்கிரமசிங்க தலைவராகத் தெரிவு செய்யப்பட்டமை சட்டவிரோதமானது என்று தெரிவிக்கும் படி கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவுக்கு எதிர்ப்புத் தெரிவிக்க கொழும்பு மாவட்ட நீதிமன்றம் பிரதிவாதிகளுக்கு கால அவகா சம் வழங்கியுள்ளது.

இந்த மனு நேற்று புதன்கிழமை விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது எதிர்ப்புத் தெரிவிக்க பிரதிவாதிகளான ரணில் விக்கிரமசிங்க மற்றும் திஸ்ஸ அத்தநாயக்க ஆகியோருக்கு நீதிமன்றம் எதிர்வரும் மே மாதம் 9 ஆம் திகதி வரை கால அவகாசம் வழங்கியுள்ளது.

ரணில் விக்கிரமசிங்க தலைவராகத் தெரிவு செய்யப்பட்டதை ஆட்சேபித்து தென் மாகாணசபை ஐ.தே .க உறுப்பினர் மைத்திரி குணரத்ன மனுதாக்கல் செய்துள்ளார்.

ஐ.தே.க. தலைவர் இரகசிய வாக்கெடுப்பின் மூலமே தெரிவு செய்யப்பட வேண்டிய நிலையில், அண்மையில் இடம்பெற்ற தேர்தலில் இரகசியத்தன்மை பேணப்படவில்லை என்று மைத்திரி குணரத்ன தனது மனுவில் சுட்டிக்காட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(ச)

# இலங்கைக்கு எதிரான சவாலை எதிர்நோக்க எப்போதுமே தயார்

## முன்னாள் சட்ட மா அதிபர் தெரிவிப்பு

கொழும்பு,பெப்.23

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை அமர்வுகளில் இலங்கைக்கு எதிராக விடுக்கப்படக்கூடிய சவால்களை எதிர்நோக்கத் தயார் என்று முன்னாள் சட்ட மா அதிபர் மொஹான் பீரிஸ் தெரிவித்தார்.

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை உரிய முறையில் நடைமுறைப்படுத்துவதற்கான சகல ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன என்று அவர் தெரிவித்தார்.

எதிர்வரும் 27 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள அமர்வுகளின்போது வெற்றிகரமாக இலங்கையின் நிலைப்பாட்டை முன்வைக்க முடியும் என்று அவர் தெரிவித்தார்.

ஆணைக்குழுவின் அறிக்கையை உரிய முறையில் நடைமுறைப்படுத்தவில்லை என்று யாரும் இலங்கை மீது குற்றம் சுமத்த முடியாது என்று அவர் தெரிவித்தார்.

மனித உரிமைகளை பாதுகாக்கும் நோக்கில் மனித உரிமை செயற்திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்பட உள்ளது என்று அவர் மேலும் தெரிவித்தார். (ச)

# பௌத்த பிக்குவுக்கு மரண தண்டனை

கொழும்பு,பெப்.23

இலங்கையில் பிக்கு ஒருவருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

தங்காலை உயர்நீதிமன்ற நீதிவான் சந்திரசேன ராஜபக்ஷவினால் மரண தண்டனை உத்தரவு விதிக்கப்பட்டது.

12 ஆண்டுகளுக்கு முன்பு இடம்பெற்ற படுகொலைச் சம்பவம் ஒன்றுடன் தொடர்புடைய குற்றச்சாட்டின் அடிப்படையில் இந்த மரணதண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

கோமதிய சரண தேரர் என்ற பிக்குவுக்கே இவ்வாறு தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. பிக்குவாக மாறுவதற்கு முன்னதாக சந்தேக நபர் குற்றச் செயலில் ஈடுபட்டார் என்று குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இந்தப் பிக்கு, மஹா கும்புரகே தர்மதாச என்ற நபரை 2000 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 19 ஆம் திகதி படுகொலை செய்ததா என்று குற்றம் சுமத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(ச)

# ஈராக்கில் இலங்கைத் தூதரகம்

ஈராக்கில் மீண்டும் இலங்கைத் தூதரகத்தை நிறுவுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது.

தூதரகத்தை நிறுவும் பணிகளை மேற்பார்வை செய்யும் நோக்கில் வெளிவிவகார அமைச்சின் மேலதிக செயலாளர் டபிள்யூ. எம். செனவிரத்ன ஈராக்குக்கு சென்றுள்ளார். ஈராக்கில் மீண்டும் தூதரகம் நிறுவப்பட வேண்டுமென அண்மையில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வெளிவிவகார அமைச்சுக்கு தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# தமிழ் –முஸ்லிம் பிரிவினையால் பேரினவாத சக்திகளுக்கே பயன்

## யோகேஸ்வரன் எம்.பி. கூறுகிறார்

**வெவ்வேறு அரசியல் கட்சிகளாக இருந்தாலும் தமிழ், முஸ்லிம் சமூகங்கள் ஒருமித்த கருத்துக்களையே கொண்டிருக்கின்றது.**

மட்டக்களப்பு,பெப்.23

கடந்த காலங்களில் இரண்டு சமூகங்களுக்கு இடையில் ஏற்பட்ட சில கசப்பான உணர்வுகளினால் தனித்தனியாக அரசியல் அபிலாசைகளுக்காக குரல் எழுப்ப வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. இதனால் சிறுபான்மை இனமான தமிழர்களுக்கோ, முஸ்லிம்களுக்கோ எந்த விமோசனமும் கிடைக்கவில்லை. இதனால் பேரினவாத சக்திகளே பயன்பெற்றார்கள் என்று தமிழ் தேசிய கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சீனித்தம்பி யோகேஸ்வரன் தெரிவித்தார்.

கல்குடா தொகுதி முஸ்லிம் பிரதேசத்திலுள்ள 110 மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு கடந்த ஞாயிற்றுக்கிழமை செம்மண்ணோடை அல் - ஹம்றா வித்தியாலயத்தில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

35 வருடங்களுக்கு முன்பு எமது அரசியல் வரலாற்றை நோக்கினால் கிழக்கில் பல முஸ்லிம் அரசியல் தலைமைகளை உருவாக்கிய பெருமை தமிழரசு கட்சிக்கு உரியது.

வெவ்வேறு அரசியல் கட்சிகளாக இருந்தாலும் இரு சமூகங்களும் ஒருமித்த கருத்தை கொண்டிருக்கிறோம். குறிப்பாக எமது கட்சி இனப் பிரச்சினைக்கான தீர்வொன்றை காணும்போது முஸ்லிம்களுக்கான அதிகார பகிர்வும் இடம்பெறவேண்டும் என்று உள்நாட்டிலும் சர்வதேசத்திலும் தமது நிலைப்பாட்டை வெளிப்படுத்தியுள்ளது.

எமது மாவட்டத்தை எடுத்துக் கொண்டால் 1977 ஆண்டுக்கு மேற்பட்ட அரசியலை நோக்கினால் கல்குடா தொகுதியில் முஸ்லிம்கள் ஐக்கிய தேசியக் கட்சியில் போட்டியிட்ட தேவநாயகம் தமிழரசுக் கட்சியில் போட்டியிட்ட மாணிக்கவாசகம் மற்றும் சம்மந்த மூர்த்தி போன்றோரை ஆதரித்தார்கள்.

இது இனங்களுக்கிடையிலான ஒற்றுமைக்கு அடித்தளமாக அமைந்தது. தற்போது அப்படியான அரசியல் இல்லை. தேர்தல் காலங்களில் சில தரப்பினரால் இனவாதமே முன்னிலைப்படுத்தப்படுகிறது. இந்த நிலை மாறவேண்டும்- என்றார்.

## 3ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி

மலர்வு
14 ★ 04 ★ 1942



உதிர்வு
26 ★ 02 ★ 2009

### திருமதி பாக்கியலட்சுமி திவாகரமூர்த்தி
**(சின்னமணி)**
**திதி: 23-02-2012**

அம்மா என்றழைக்காத உயிருமுண்டோ
உன்னை விட ஒரு பொருள்-உலகில் உண்டோ
ஆலமரம் சரிந்த பின் விழுதுகள் தான் என்ன செய்யுமோ
அம்மா உன்னை நினைக்காத நாள் தான் உண்டோ
தங்கள் ஆத்ம சாந்திக்காய் இறைவனை
வேண்டுகின்றோம்.

கே.கே.எஸ். வீதி,
கோண்டாவில். (14928) (7,9,10)

கணவர்,
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

## மரண அறிவித்தல்கள்

### பொன்னையா மாசிலாமணி
*(ஓய்வுபெற்ற ஊழியர், இலங்கை வங்கி)*



மந்துவில், கொடிகாமத்தைப் பிறப்பிடமாகவும் 4ஆம் ஒழுங்கை, அரசடி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னையா மாசிலாமணி (ஓய்வுபெற்ற ஊழியர், இலங்கை வங்கி) (22.02.2012) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னையா மற்றும் தெய்வானை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற செல்லையா - செல்லாட்சி தம்பதியரின் பாசமிகு மருமகனும் இராஜேஸ்வரி (ஓய்வுபெற்ற ஆசிரியை)யின் அன்புக் கணவரும் இந்துஜனின் அன்புத் தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.02.2012) வியாழக்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

4 ஆம் ஒழுங்கை, அரசடி வீதி,
யாழ்ப்பாணம். (14927)(2-6-7)

தகவல்:
**குடும்பத்தினர்.**

### பொன்னுத்துரை இராஜமனோகரன்
*(உரிமையாளர்: S.P.R & Sons இல.01, யாழ்ப்பாண வீதி, வவுனியா)*



பாண்டியன்தாழ்வு, சுண்டிக்குளியைப் பிறப்பிட மாகவும் இல.75, கற்குழி, வவுனியாவை வசிப்பிட மாகவும் கொண்ட பொன்னுத்துரை இராஜமனோகரன் (ராசா) (19.02.2012) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னுத்துரை - பூமணி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை - மகேஸ்வரி தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற கருணைநாயகியின் அன்புக் கணவரும், கோபிராஜ், திவிராஜ், புவிராஜ், தர்மினி ஆகியோரின் அன்புத் தந்தையும் நிஷாந்தப்பிரியாவின் பாசமிகு மாமனும் சறோஜினிதேவி (மனோ), காலஞ்சென்ற புலேந்திரன் (சுட்டி), சுந்தரேஸ்வரி (சுண்டிக்குளி, ஓய்வுபெற்ற Ward Sister), காலஞ்சென்றவர்களான சந்திரசேகரன், பொன்மணி, கிருஷ்ணராஜா ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ் சென்ற ஞானச்சந்திரன் (முன்னாள் அரசாங்க அதிபர், முல்லைத்தீவு), ஆனந்தராஜா (சுண்டிக்குளி), கதிர்காமநாதன் (திருவையாறு, கிளிநொச்சி), சிறீமணி ஆகியோரின் மைத்துனரும், காலஞ்சென்ற அகிலநாயகி, துவாரகாதேவி, காலஞ்சென்றவர்களான விவேகானந்தன், மகேந்திரராஜா, புஸ்பநாயகம், Dr.விபுலானந்தன் (கனடா), தனலட்ஷ்மி ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (24.02.2012) வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தோணிக்கல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித் தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
இல.75, கற்குழி, வவுனியா. (14923)(2-6-7) **குடும்பத்தினர்.**

## மெய்வன்மைப் போட்டிகள்

சுன்னாகம், பெப். 23

நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரியின் இல்ல மெய்வன்மைப்போட்டி நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு பிரதி அதிபர் தயாராணி மனோகரன் தலைமையில் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். கல்வி வலயப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் இ.குணநாதனும் சிறப்பு விருந்தினராக நவக்கிரி அ.மி.த.க. பாட சாலையின் இளைப்பாறிய அதிபர் க.சி.பகவத்சிங்கும் கலந்துகொள்வர்.

(வ-38)

* * *

வடமராட்சி,பெப்23

மருதங்கேணி இந்துத் தமிழ்க் கலவன் பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று வியாழக் கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு அதிபர் எஸ். ஸ்ரீராமச் சந்திரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வுக்குப் பிரதம விருந்தினராக வடமராட்சி வலய நிர்வாகப் பிரதிக் கல்விப் பணிப் பாளர் எஸ். புஸ்பலிங்கம் கலந்து கொள்வார். சிறப்பு விருந்தினராக மருதங்கேணி கோட்டக்கல்வி அதிகாரி கே.பொன்னையா கலந்து கொள்வார்.

(வ-8)

## சமாதி தின நிகழ்வு

கொழும்பு, பெப்.23

திருகோணமலை சிவயோக சமாஜ ஸ்ரீமத் சுவாமி கெங்கா தரானந்தாவின் இருபத்தோராவது சமாதி நினைவு தின நிகழ்வுகள் நாளை வெள்ளிக் கிழமை பிற்பகல் 5 மணிக்கு வெள்ளவத்தை இராம கிருஷ்ண மிஷன் விரிவுரை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் திருமதி சாந்தி நாவுக்கரசன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் தீபாராதனை, பஜனை களைத் தொடர்ந்து திருமதி சிவா கனகசிங்கம் வரவேற்புரை நிகழ்த்துவார்.

சிறப்புரையை அருள்மொழியரசி, கலாபூஷணம் திருமதி வசந்தா வைத்தியநாதனும் அருளுரையை கொழும்பு இராம கிருஷ்ண மிஷன் தலைவர் ஸ்ரீமத் சுவாமி சர்வரூபானந்தாஜி மஹாராஜும் வழங்குவர்.

(வ-8)

## சமய சந்நிதிகளில்

வடமராட்சி, பெப்.23

புலோலி கிழக்கு ஸ்ரீ முதலியம்பாள் (மனோன்மணி அம்பாள்) கோயில் வருடாந்தப் பெருந்திரு விழா எதிர்வரும் 26 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும்.

எதிர்வரும் 6 ஆம் திகதி திங் கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு ரதோற்சவமும் மறுநாள் 7 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 8 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும்.

சிவஸ்ரீ வை. சிவராசாக்குருக்கள் பிரதம குருவாக இருந்து பெருந் திருவிழாவை நடத்தி வைப்பார்.

பெருந்திருவிழாக் காலங்களில் தினமும் மாலை 7மணிக்கு சிவஸ்ரீ தியாக சோமஸ்கந்தக் குருக்கள் சமயச் சொற்பொழிவு நிகழ்த்துவார்.

(வ-8)

## சர்வதேச கிருஷ்ண பக்திக் கழகத்தின் ஆராதனை விழா



கோண்டாவில், நந்தாவில் அம்மன் கோயில் வீதியில் அமைந்துள்ள

சர்வதேச கிருஷ்ண பக்திக் கழக - யாழ்ப்பாணக்கிளையில்

ஸ்ரீரங்கநாதரின் திருப்பாதக் கமலங்களுக்கு பக்தர்கள் தங்கள் கைகளினால் வலம்புரிச் சங்கினால் பால் வார்த்து, தூமலர்களைத் தூவி பகவத் நாமங்களைப் பாடி வழிபட ஒரு சந்தர்ப்பம். அதன் மூலம் பொது மக்கள் அனைவரும் நன்மை பெறவேண்டும். நம் நாட்டில் ஒழுங்கும், அமைதியும், செழிப்பும் வளரவேண்டும் என்பதையே குறிக்கோளாகக் கொண்டு செய்யப்படுகின்றது.

**24.02.2012 வெள்ளிக்கிழமை**
**25.02.2012 சனிக்கிழமை**
**26.02.2012 ஞாயிற்றுக்கிழமை**

காலை 7 மணிமுதல் பிரார்த்தனையும், அபிஷேகமும் ஆரம்பமாகும். அனைவரும் வந்து அருள் பெறுக.

*(14932) (45-6-7)* **நிகாய் கோகுலம்**

## 32 ஆவது ஆண்டு திருமண வாழ்த்துக்கள்

23-02-1980



### ஆசீர்வாதம் இம்மனுவல்
### இம்மனுவல் இராஜேஸ்வரி

கையோடு கை சேர்த்து
இதயங்கள் இரண்டும்
இணைந்து வெள்ளி விழாக் கண்டு
மனதை மனத்தால் அரவணைத்து
இன்று முப்பத்திரண்டாவது
திருமண விழாக் காணும் நீங்கள்
நூற்றாண்டு காலம் வாழ்வை நோக்கி
உறவினர் வாழ்த்துக்களோடு என்றென்றும் நிறைவுடன்
எந்த நிலையின் போதும் மாறா அன்புடன் வாழ வேண்டும் நீங்கள் !
வாழ்த்துகின்றோம் நாங்கள்.

7/6, மத்திய கிழக்கு வீதி,
குருநகர்,
யாழ்ப்பாணம்.
021 222 1263. (14497) (4,7,10)

வாழ்த்துபவர்கள்:
டயானா, எட்னா (மகள்மார்),
நெலின், சிறிதரன் (மருமக்கள்),
ஜசு, செரோ, அஜிஸ் (பேரப்பிள்ளைகள்)

## 4 ஆம் ஆண்டு நினைவலைகள்



மண் மகிழ:
12-09-1967

மனம் நெகிழ:
29-02-2008


### அமரர் வைத்தீஸ்வரன் மகேஸ்வரன்
(மோகன்)
திதி: அபரபக்க அட்டமி

நெடுவானை அலங்கரித்த நிலா, தொடுதூரம் விட்டு தேய்ந்தொழிந்து போய்ச்சு. நித்தம் நினைந்திருந்த இளங்காற்று எங்கோ சித்தம் அறியாது கலைந்திற்று. ஓயாது ஆர்ப்பரித்த அலையுமிங்கு அமைதியாச்சு. நான்காண்டு போயிற்று, என் நெஞ்சத்தில் இடி வீழ்ந்து இதயம் எனைப் பிரிந்து இருளாச்சு வாழ்வு. தினம் தினம் பெருகிறது விழிநீர். தூயவனே! நினைக்காணாது தவிக்கின்றேன், தடுமாறி நிற்கின்றேன். நீயில்லா வாழ்வு எனை மலைசுமக்க வைக்கிறது. இருள் கவிய கலங்குகிறேன். இதம் நீங்கி வாடுகிறேன். என்னவனே! உனை நிதம் தேடித் தொழுகின்றேன். நான்கல்ல ஆண்டுகள் எத்தனைதான் ஆனாலும் இருப்பேன் உன் நினைவில்,எப்போதும் என்றென்றும்.

நினைவுகளைச் சுமந்தபடி

பொட்டண சுட்டி வளவு, பொலிகண்டி கிழக்கு,
வல்வெட்டித்துறை. 077 150 1413 (12674) (6,7,10)

மனைவி சூரியா
குடும்பத்தினர்.




ஐந்து மாவட்டங்களிலும் ஓரளவு மேகக் கூட்டத்துடன் கூடிய காலநிலை நிலவும்.

# திருநெல்வேலிச் சந்தையின் கழிவுநீர்க் குழி மூடப்படும்

## நல்லூர் பிரதேச சபை அறிவிப்பு

திருநெல்வேலி, பெப்.23

திருநெல்வேலி பொதுச் சந்தைக்குப் பின்புறமாக உள்ள கழிவு நீர்க் குழியை மூடுவதற்கான நடவடிக்கை வெகுவிரைவில் மேற்கொள்ளப்படும் என நல்லூர் பிரதேச சபை உத்தியோகத்தர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்த நீர்க்குழி மூடப்படாது இருப்பதனால் அந்தப் பகுதியின் சுகாதார நிலைமை பாதிக்கப்படும் நிலையில் உள்ளது. மேலும் நுளம்புகள் பெருகக்கூடிய வாய்ப்பும் அதிகமாக உள்ளன.

இது மூடப்படுவதன் அவசியம் குறித்து நல்லூர் பிரதேச சபைக்கு கோரிக்கை விடுக்கப்பட்டது. இதனையடுத்தே இந்தக் குழியை மூடுவதற்கு நடவடிக்கை எடுக்கப் படவுள்ளதாக நல்லூர் பிரதேச சபையினர் அவித்துள்ளனர்.

இதேவேளை இந்தக் குழியில் சில திருத்த வேலைகள் மேற்கொள்ளப்பட வேண்டியிருப்பதாலேயே அது இதுவரை மூடப்படவில்லை. அவற்றைத் திருத்தி அமைக்கும் ஏற்பாடுகள் தற்போது மேற்கொள்ளப்பட்டுள்ளன. இந்த வேலைகள் முடிவடைந்த பின்னர் வெகு விரைவில் குழியை மூடிவிடுவதற்குரிய வேலைகள் இடம் பெறும். அதுவரை உரிய மருந்துகள் அடிக்கப்பட்டு தொற்று நோய்த் தடுப்பு நடவடிக்கைகள் செய்யப்படும் எனப் பிரதேச சபையினர் மேலும் தெரிவித்துள்ளனர். (எ-7)

**இந்த நீர்க்குழி மூடப்படாது இருப்பதனால் நுளம்புகள் பெருகக்கூடிய வாய்ப்பு அதிகமாக உள்ளது.**

## பசுபதி என்ற பதம் எதனை உணர்த்துகிறது?

பசு என்றால் மிருகம். புலன்கள் மிருகங்களுக்கு ஒப்பிடப் பட்டுள்ளன. பசு என்றால் புறநோக்குக் கொண்டது என்பதாகும். உள்நோக்கு அல்லது அகநோக்கு உடையவரை 'பசுபதி' என்பர். அதாவது மிருகங்களுக்கு அதிபதி அல்லது எம்பிரான் சிவன் ஆவார்.

மனிதன் பசுபதியாக, புலன்களை வென்றவனாக, வருவதற்கு முயற்சிக்க வேண்டும். பசுவாக - புலன்களுக்கு அடிமையாக இருக்கக் கூடாது.

புலன்களை வெல்ல வேண்டுமானால் அவற்றுக்கு ஆதரவு கொடுக்கக் கூடாது. இது முக்கியமானதாகும்.



**சாயி சிந்தனை**

# மின்சாரத்தை எதிர்பார்த்து நிற்கும் அராலிக் கிராமத்தின் இரு வீதிகள்

யாழ்ப்பாணம் பெப். 23

சங்கானைப் பிரதேச செயலக ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் இரு தடவைகள் அராலி கிராமத்தின் இரு வீதிகளுக்கு மின்சார இணைப்பு வழங்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டும் இதுவரை இணைப்பு வழங்கப் படவில்லை.

இவ்வாறு ஏ.எல் அம்பாள் சனசமூக நிலைய உறுப்பினர்கள் கவலையுடன் தெரிவித்துள்ளனர்

''இந்த நூற்றாண்டிலும் நாம் இருளில் வாழ்கின்றோம். ஏனைய அயல் வீதி மக்கள் மின் ஒளியில் வாழும் போது நாம் புறக்கணிக் கப்பட்டவர்களாக வாழுகின்றோம். ஜே-163 கிராம அலுவலர் பிரிவில் உள்ள அராலி கிழக்கு அம்மன் வீதிக்கு 200 மீற்றருக்கான மின் கம்பமும் ஏ-எல் மைதான வீதிக்கு150 மீற்றருக்கான மின் கம்பங்களும் இடப்பட்டு மின்சார வசதி செய்து கொடுக்கப்படவேண்டும். ஆனால் கடந்த 100 வருடங்களாக அதாவது எமது கிராமம் தோன்றிய காலத்தில் இருந்து இதுவரை மின் கிடைக்கவில்லை'' என்று தெரிவித்தார் உறுப்பினர் ஒருவர்.

வலி. மேற்குப் பிரதேச சபை, பிரதேச செயல்கம், வடக்குப் பிரதிப் பொது முகாமையாளர், மின்சார சபை ஆகியவற்றுக்கு கடிதம் எழுதியும் பயனில்லை.

போர் முடிவுக்குப் பின் வடக்கின் வசந்தம் ஊடாக மின்சாரம் தமக்கு கிடைக்கும் என நினைத்து, வீட்டு மின் சுற்றுச் செய்து இரண்டு ஆண்டுகள் கழிந்தும் மின் கிடைக்கவில்லை யென மக்கள் தெரிவிக்கின்றனர். (ந)

**வலி.மேற்குப் பிரதேச சபை,பிரதேச செயலகம், வடக்குப் பிரதிப் பொது முகாமையாளர் மின்சாரசபை ஆகிய வற்றுக்கு கடிதம் எழுதியும் பயனில்லை.**

## ஆங்கில ஆசிரியர்களுக்கு செயலமர்வு

வடமராட்சி, பெப்.23

வடமராட்சிக் கல்வி வலயத்தில் ஆங்கிலம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான செயலமர்வு எதிர் வரும் 25 ஆம் திகதி சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு புலோலி மெதடிஸ்த மிஷன் பாடசாலையில் உள்ள ஆசிரியர் நிலையத்தில் நடைபெறவுள்ளது. (ந-8)

## சைவசமய கல்விச் சுற்றுலா

தென்மராட்சி, பெப்.23

தென்மராட்சிக் கல்வி வலயப் பாடசாலைகளில் தரம் 6 தொடக்கம் தரம் 11 வரையான வகுப்புகளில் சைவ சமயப் பாடம் கற்கும் மாணவர்களும் தரம் 12, 13 ஆகிய வகுப்புகளில் இந்து சமயம், இந்துநாகரிகம் பாடம் கற்கும் மாணவர்களும் தல யாத்திரைகளுக்கு அழைத்துச் செல்லப்படவுள்ளனர்.

இதற்கான ஏற்பாடுகள் வலயக் கல்வி அலுவலகத்தினரால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மாணவர்கள் தல யாத்திரை மேற்கொள்வது தொடர்பாக அந்த வகுப்புகளில் இந்து சமயம், இந்து நாகரிகம் ஆகிய பாடங்கள் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு கலந்துரையாடல் நடத்தப்படவுள்ளது.

நாளை வெள்ளிக்கிழமை பி.ப. 2.30 மணிக்கு வலயக் கல்வி அலுவலக மண்டபத்தில் நடைபெறவுள்ள இது தொடர்பான கலந்துரையாடலில் குறித்த பாட ஆசிரியர்களையும் அதிபர்களையும் கலந்துகொள்ளுமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் கு. பிரேமகாந்தன் அறிவித்துள்ளார்.

(ந-9)

**கண்ணீர் அஞ்சலி**



யாழ்ப்பாணம், மின்சார நிலைய வீதியில் அமைந்துள்ள சிவசம்பு களஞ்சிய உரிமையாளர்

**செ.கைலாயநாதன்**

அவர்களின் மறைவுக்கு எமது அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம். அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.

C.S.K.கைலாசபிள்ளை அன் சன்ஸ்
உரிமையாளரும், ஊழியர்களும்.R.M.ரட்ணம்.
(14908) (2-6-7)

**5 ஆம் ஆண்டு நினைவஞ்சலி**

மலர்வு: 14 . 11 . 1941



உதிர்வு: 19 . 02 . 2007

அமரர் சிவசம்பு மனோகரசீலன்
(உரிமையாளர், சுரேக்கா ரெக்ஸ்)
(முன்னாள் தலைவர், மானிப்பாய் வர்த்தக சங்கம், மானிப்பாய் வட்ட லயன்ஸ் கழக உறுப்பினர்)

ஆண்டுகள் ஐந்து சென்றாலும்
ஆறாது எம் துயர்
என்றென்றும் எம் மனதில்
நிலை கொள்ளும் உங்கள் ஆத்மா
சாந்தி பெற வேண்டுகின்றோம்.

உங்கள் நினைவுகளுடன் வாழும்:
மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

நாவலடி லேன்,
மானிப்பாய்.

**தவறிவிட்டது**

(20.2.2012)திங்கட்கிழமை புதுக்காட்டு சந்திக்கும் யாழ்ப்பாணத்துக்கும் இடையில் பஸ் வண்டியில் செல்லும் போது பென்ரன் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து தொடர்பு கொள்ளவும். சன்மானம் வழங்கப்படும்.
தொடர்பு : 077 4220797, 077 5759786

**ஆசிரியர் தேவை**

Education Service Centre இல் சிங்களம், ஆங்கிலம், கணிதம், விஞ்ஞானம், கொம்பியூட்டர் ஆகியன கற்பிப்பதற்கு ஆசிரியர்கள் உடன் தேவை.
தொடர்பு: 021 222 9373, 077 511 4873

**தவறிவிட்டது**

17.02.2012 வெள்ளிக்கிழமை அன்று யாழ் - கொழும்பு பஸ்சில் ஒரு தொகைப்பணம் தவறி விட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து ஒப்படைத்து உதவவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.
தொடர்புகளுக்கு : 077 4538015

**கோழிப்பண்ணை விற்பனை**

நவாலி வடக்கு, மானிப்பாய்
நவீன 3 பண்ணைக் கட்டடம் உட்பட அலுவலகம், செக்குறுட்டிக் கட்டடம் 5½ பரப்புடன் சகல வசதிகளுடன் நல்ல விலையில் விற்பனைக்குண்டு. தொலைபேசி:
0778350478, 0776704364

**MOORTHY GUEST HOUSE**
**மூர்த்தி கெஸ்ற் கவுஸ்**
250 ஆசனங்களுடன் குளிரூட்டப்பட்ட மண்டபம்
62/20 Stanly Road Jaffna (2nd Floor)
T.P:- 021 221 9399
A/C Non A/C Rooms, hall



Call Doctors
0776458253
வைத்தியரை வீட்டிற்கே அழைத்திடுங்கள்
jaffnaonline.info/doc

**Doctor on Call**

வயோதிபம்,நீரிழிவு,குருதி அழுத்தம், நாட்பட்ட நோய்கள் முதல் தொடர் பராமரிப்பு தேவைப்படும் அல்லது எந்த நோயானாலும் வைத்திய சேவையை உங்கள் வீட்டிலேயே பெற விரும்பும் நிலையில் நீங்களோ உங்கள் அன்புக்கு உரியவர்களே இருந்தால் ,எம்முடன் வருடாந்த ஒப்பந்தம் ஒன்றை செய்து கொள்வதன் மூலம் MBBS வைத்தியர்களின் சேவையினை குடா நாட்டின் எப்பகுதியிலும் உங்கள் வீட்டிலேயே பெறமுடியும்.
விபரங்களுக்கு : 0776458253

**முதலாம் ஆண்டு நினைவஞ்சலி**



மண்ணுலகில் 18.02.1942
விண்ணுலகில் 06.03.2011

அமரர்
**கணபதிப்பிள்ளை சண்முகலிங்கம்**
(ஓய்வுபெற்ற அதிபர் யா/ நாயன்மார்கட்டு மகேஸ்வரி வித்தியாசாலை)
(சமாதான நீதிவான்)

திதி : துதியை 23.02.2012

ஆண்டொன்று சென்றதுவோ ஓயவில்லை எம் துயரம்
நீறாகியப் போனதுவே எம் நெஞ்சம் அப்பாவே
சீராக எம்மைச் சிறப்போடு வாழவைத்த
தந்தையே உம்மை தரணியிலே காண்பதெப்போ!

என்றென்றும் உம் நினைவில்
மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், சகோதரர்கள், உறவினர்கள்.

132, திருமகள் வீதி,
அரியாலை,
யாழ்ப்பாணம்.

## தருவது வித்தியா — இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:** அலைச்சல் குறைந்து ஓய்வு எடுக்கும் நாள். மனைவி, குழந்தைகள், குடும்பத்தினருடன் சந்தோஷமாக பொழுதைக் கழிப்பீர்கள். விரும்பிய உணவு வகைகளைச் சாப்பிடுவதில் நாட்டம் செல்லும். நண்பர் ஒருவர், கடந்த காலத்தில் செய்த உதவியை நினைத்துப் பார்ப்பீர்கள். உறவினர்களின் பாராட்டுக்களைப் பெறலாம். வளமான நாள்.

**இடபம்:** கணவன், மனைவி இடையே அன்யோன்யம் அதிகரிக்கும். விலகிச்சென்ற சொந்தங்கள் விரும்பி வந்து சேரலாம். குடும்ப பெரியவர்களிடம் அனுசரணையாக நடந்து கொள்வீர்கள். மறக்க முடியாத சம்பவம் ஒன்று நடக்கலாம். சிலரின் விமர்சனங்களையும், அறிவுரையாக ஏற்று உங்களை மாற்றிக் கொள்ள முற்படுவீர்கள். பணவரவு உண்டு.

**மிதுனம்:** நீங்கள் செல்லும் இடத்தில், உங்களின் பழைய நண்பர் ஒருவரைப் பார்க்கலாம். கேளிக்கை, கொண்டாட்டங்களில் நாட்டம் செல்லும். உறவினர் ஒருவரின் ரகசியங்களை பற்றி அறிந்து கொள்வீர்கள். குடும்பப் பிரச்சினைகளில் நினைத்தது ஒன்றாகவும், நடப்பது ஒன்றாகவும் அமையலாம். மறைமுக போட்டி, எதிர்ப்புகளைச் சந்திக்கலாம்.

**கடகம்:** முக்கியமான வேலை ஒன்றுக்காக நீண்ட நேரம் காத்திருக்கலாம். உறவினர்கள் சிலர், உங்களின் மனம் நோகும் வகையில் பேசலாம். எப்படியும் முடிந்து விடும் என்று நினைத்த காரியம் ஒன்று, முடியாமல் போகலாம். சிக்கனமாக இருக்க நினைத்தாலும், ஏதாவது ஒரு வகையில் செலவுகளைச் சந்திக்கலாம். பயணத்தடை நேரும்.

**சிங்கம்:** ஆசைப்பட்டது நடக்கும் நாள். நண்பர்கள் சிலருடன் கூட்டாகச் சேர்ந்து, சில காரியங்களைச் செய்வீர்கள். உறவுப்பெண்கள் சிலர் கேட்ட பொருள்களை வாங்கிக் கொடுப்பீர்கள். வழக்கமான பணிகள், தங்கு தடையின்றி முடிவுக்கு வரும். வியாபாரிகள் புதியவர்களுக்கு கடன் கொடுக்க நேரிடலாம். நீண்ட தூரப் பயணங்கள் செல்லலாம்.

**கன்னி:** ஊக்கம், உற்சாகமாகச் செயற்படும் நாள். போட்டி, பந்தயங்களில் வெற்றி காண்பீர்கள். சந்தோஷமாகப்பேசி நீங்கள் மகிழ்வது மட்டுமின்றி, மற்றவர்களையும் மகிழ்விப்பீர்கள். எந்த வேலையையும், நாளை என்று பிற்போடாமல் இன்றே செய்வீர்கள். எதிர்பார்த்த பணவரவுகளை மட்டுமின்றி, எதிர்பாராத பணவரவுகளையும் பெறலாம்.

**துலாம்:** வெறுப்பு, விரக்தி ஆள்கொள்ளும். வீட்டுச்செலவுகள் கட்டுக்கடங்காமல் செல்லும். சிறிய தவறு ஒன்று, பெரிய பிரச்சினையாகி தொந்தரவு கொடுக்கலாம். குடும்ப உறுப்பினர்கள், உங்களின் யோசனைக்கு எதிராகப் பேசி எரிச்சல் உண்டாக்கலாம். மற்றவர்களால், உங்களின் சில வேலைகளில் தடை ஏற்படலாம். மனக்குழப்பங்களைச் சந்திக்கலாம்.

**விருச்சிகம்:** விருந்தினர்கள் வருகையால், வீட்டில் சிரமங்களைச் சந்திக்கலாம். நண்பர்கள் உங்களை புரிந்து கொள்ளாமல் நடக்கலாம். ஒவ்வாத உணவு வகைகளைச் சாப்பிட்டுவிட்டு அவதிப்படலாம். ஓய்வெடுக்க நினைத்தாலும், அது முடியாத அளவுக்கு ஏதாவது ஒரு வகையில், வேலை நெருக்கடிகளைச் சந்திக்கலாம். நினைத்த ஒன்று நடக்காமல் போகலாம்.

**தனுசு:** எதிலும் பொறுப்புடன் செயற்பட்டு பாராட்டுப் பெறுவீர்கள். காலை நேரத்தில், சில நல்ல செய்திகளைக் கேட்கலாம். கடன் மிகுதிகள் வசூலாகி திருப்தி தரும். சில வேலைகளை ஆரம்பத்தில் தவறாகச் செய்து விட்டு, பின்னர் திருத்திக் கொள்வீர்கள். தொல்லை கொடுத்தவர்கள், தோள் கொடுக்க முன்வருவர்.

**மகரம்:** வழக்கத்துக்கு மாறாக, கூடுதல் நேரம் ஓய்வெடுக்கலாம். சிலரின் அன்புக் கட்டளைகளுக்கு அடிபணிய நேரிடலாம். வெளியிடங்களுக்குச் செல்லும்போது, சிலரிடம் வாக்கு வாதங்கள் செய்ய நேரிடலாம். உறவினர் ஒருவரின் வருகையால், வீட்டில் கலகலப்பு உண்டாகும். ஒரு செலவைப் பற்றி கவலைப்படும் போது, மற்றொரு செலவு உண்டாகலாம்.

**கும்பம்:** எந்தக் காரியமும், தாமதமின்றி வெற்றிகரமாக முடியும் நாள். பெரிய மனிதர்கள் சிலரின் உதவி கிடைக்கும். சகோதரிகள் நலனில் அக்கறை காட்டுவீர்கள். நண்பர்கள் சிலர் மீது, கோபம் வந்தாலும் அதை வெளிக் காட்டாமல் நடந்து கொள்வீர்கள். இளைய உடன் பிறப்புக்கள் தொடர்பான விடயங்களில், பட்டும் படாமல் நடந்து கொள்வது நல்லது.

**மீனம்:** எதையும் ஒன்றுக்கு, பலமுறை யோசித்துச் செய்ய வேண்டிய நாள். ஏதோ ஒரு வழியில் அலைச்சல்களைச் சந்திக்கலாம். குடும்பத் தேவைகளை நிறைவேற்றி வைப்பீர்கள். கடன் பிரச்சினைகளை, வராத பணவரவுகளை நினைத்துக் கவலைப்படுவீர்கள். கோயில், இறைவழிபாடு தொடர்பான காரியங்களுக்காகச் செலவு செய்யலாம்.

**நாளை**

மாசி 12 வெள்ளிக்கிழமை 24.02.2012
திதி: திருதியை முழுவதும்
நட்சத்திரம்: உத்தரட்டாதி பி.இ. 05.38 வரை
சுபநேரம்: 06.30- 08.00 வரை,
ராகு காலம்: 11.00- 12.30 வரை

## சுடோக்கு
### எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 1 | | | 8 | 4 | | 2 | |
| 3 | | | | 6 | 2 | 1 | 7 | |
| | | | | | | | | 8 |
| 4 | | 6 | 2 | | | 5 | 8 | |
| | 5 | | 1 | 4 | 6 | | 3 | |
| | 2 | 3 | | | 5 | 6 | | 9 |
| 2 | | | | | | | | |
| | 4 | 8 | 6 | 3 | | | | 7 |
| | 3 | | 4 | 2 | | | 1 | |

### சுடோக்கின் நேற்றைய விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 7 | 3 | 6 | 1 | 4 | 9 | 5 | 2 | 8 |
| 8 | 4 | 1 | 5 | 3 | 2 | 6 | 9 | 7 |
| 9 | 2 | 5 | 8 | 6 | 7 | 3 | 4 | 1 |
| 3 | 8 | 2 | 6 | 7 | 1 | 4 | 5 | 9 |
| 1 | 7 | 9 | 4 | 5 | 3 | 2 | 8 | 6 |
| 6 | 5 | 4 | 2 | 9 | 8 | 7 | 1 | 3 |
| 2 | 1 | 3 | 7 | 8 | 4 | 9 | 6 | 5 |
| 5 | 9 | 8 | 3 | 2 | 6 | 1 | 7 | 4 |
| 4 | 6 | 7 | 9 | 1 | 5 | 8 | 3 | 2 |


# நினைவஞ்சலிகள்

**31 ஆம் நாள் நினைவஞ்சலி** — **முதலாம் ஆண்டு நினைவஞ்சலி**





| | | |
|---|---|---|
| 26-04-1942 | பிறப்பு | 06-07-1960 |
| 24-01-2012 | இறப்பு | 30-01-2011 |

அமரர்
**வின்சன் பிலோமினா**
(நாகம்மா)

அமரர்
**யேசுதாசன் சகாயநாயகி**
(அமுதா)

இரக்கம் நிறைந்த இறைவா, இந்த உலகில் உமக்கு உகந்தவர்களாக வாழ்ந்து, உமது திருப்பாதம் வந்தடைந்த உமது அடியார்களும் எங்கள் அன்புக்குரியவர்களுமான வின்சன் பிலோமினா, யேசுதாசன் சகாயநாயகி அவர்களை, உமது கருணைக் கண்ணால் பார்த்தருளும். அவர்கள் என்றும் உமது வான்வீட்டில் மகிழ்வுடன் வாழ, உமது பேரிரக் கத்தை அவர்கள் மேல் பொழிந்தருளும். உமது மகன் கிறிஸ்து வழியாக உம்மை மன்றாடுகிறோம்.

- ஆமேன்.

இவர்களின் ஆன்ம இளைப்பாற்றிற்காக 2012-02-23 வியாழக்கிழமை காலை 06.00 மணிக்கு மரியன்னை பேராலயத்தில் நடைபெறும் இரங்கல் திருப்பலியில் பங்குகொண்டு இருவருக்குமாக செபிக்கு மாறும், இவர்களின் இல்லத்தில் நடைபெறும் மதிய போசன விருந்திலும் பங்கு கொள்ளுமாறும் அன்புடன் அழைக்கின்றோம்.

**120/5, சொலமன் லேன்,**
**கொய்யாத் தோட்டம்,**
**யாழ்ப்பாணம்.** (14876) (10) **குடும்பத்தினர்.**



# மரண அறிவித்தல்

## செல்லையா கைலாயநாதன்

( சிவசம்பு களஞ்சியம், யாழ்ப்பாணம் )



இணுவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும், கந்தர்மடத்தை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா கைலாயநாதன் 18.02.2012 சனிக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லையா மற்றும் பராசக்தியின் அன்பு மகனும், கனகசபாபதி (ஓய்வு பெற்ற உதவிப் பணிப்பாளர், சுங்க இலாகா) மற்றும் காலஞ்சென்ற குணபூசனி அம்மாளின் மருமகனும் அருந்ததியின் அன்புக் கணவரும் பிரியதர்சினி, சிவதர்சன் (HNDIT, IIS) ஆகியோரின் பாசமிகு தந்தையும் கார்த்திகேசு, கணேசநாதன் (கனடா), பூலோகநாயகி, இலட்சுமணநாதன் (சிவசம்பு களஞ்சியம்), மகேஸ்வரி (U.K) ஆகியோரின் அருமைச் சகோதரனும் சண்முகநாதன் (ஓய்வு பெற்ற நிறைவேற்று அதிகாரி ஸ்ரீலங்கா இன்சூரன்ஸ்), தேவபாலன் (U.K), பரமேஸ்வரி, தனலட்சுமி (கனடா), கௌரி (U.K) ஆகியோரின் மைத்துனரும் ஆனந்தீஸ்வரனின் (U.K) அன்புச்சகலனும் சிவாகரன் (பிரதம போதனாசிரியர் அஞ்சல் பயிற்சிக் கல்லூரி யாழ்ப்பாணம்), சுதாகரன் (ஆசிரியர், கிளி/சுண்ணாவில் அ.த.க பாடசாலை பூநகரி), பவித்திரா (முகாமைத்துவ உதவியாளர் யா/போதனா வைத்தியசாலை), ஜனனி (U.K), தீபன் (U.K), நீதன் (U.K) ஆகியோரின் அன்பு மாமனும் திருக்கழுக்குன்றன் (U.K), கௌரி (ஜேர்மனி), கல்யாணி (பிரான்ஸ்), நந்தினி, எல்லாளன் (பிரான்ஸ்), செவ்வேள் (U.K), அமரர் ஜெனார்த்தனன், தீபா (கனடா), சிவராம் (கனடா), மாதுளா (கனடா), ஜெயந்தன் (U.K), நிஷாந்தன் கனகசபாபதி (U.K) ஆகியோரின் சிறிய தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை இன்று (23.02.2012 ) வியாழக்கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக இணுவில் காரைக்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**23, அம்மன் வீதி,**
**கந்தர்மடம்.** (14910)(6-7-8)

தகவல்:
**குடும்பத்தினர்**

# நவாலி இடிகுண்டுப் பகுதிக்கு மின்சாரம் வழங்கக் கோரிக்கை

மின்சாரம் வழங்கப்படுமென்று தெரிவித்து இரண்டு வருடங்கள் கடந்த நிலையிலும் மின்சாரம் வழங்கப்படவில்லை. இதன் காரணமாகக் கட்டுடை இடிகுண்டுப் பிரதேசம் இருளிலேயே மூழ்கியுள்ளது.

நவாலி, பெப்.23

கட்டுடை இடிகுண்டுப் பகுதிக்கு மூன்று தடவைகள் மதிப்பீடு செய்யப்பட்டு மின்சாரம் வழங்கப்படுமென்று தெரிவித்திருந்தும் இரண்டு வருடங்கள் கடந்த நிலையிலும் இதுரை மின்சாரம் வழங்கப்படவில்லை. இதன் காரணமாக கட்டுடை இடிகுண்டுப் பிரதேசம் இருளிலேயே மூழ்கியுள்ளது.

சண்டிலிப்பாய்ப் பிரதேச ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் மின்சாரம் வழங்கப்படுமென்று தெரிவிக்கப்பட்டும் இதுவரை மின்சாரம் வழங்கப்படாமையினால் இந்தப் பகுதி மக்கள் பெரிதும் கவலையடைந்துள்ளனர்.

மேற்படி பிரதேசத்துக்கு வடக்கின் வசந்தத்தின் கீழ் மின்சாரம் வழங்கக் கோரி சண்டிலிப்பாய் பிரதேச செயலர் ஊடாக இலங்கை மின்சார சபையின் வடக்குப் பொது முகாமையாளர் சுன்னாகம் மின்பொறியியலாளர் ஆகியோருக்கு இந்தப் பகுதி பொது அமைப்புக்களும், சனசமூக நிலையங்களும் பிரேரணை ஒன்றை அனுப்பி வைத்துள்ளன.

(ந-100)

## பண்ணைப் பாலத்தில் சறுக்கியதில் விபத்து

யாழ்ப்பாணம், பெப்.23

பண்ணைப் பாலத்தின் ஊடாக மோட்டார் சைக்கிளில் பயணித்தவர்கள் மோட்டார் சைக்கிள் சறுக்கி வீழ்ந்ததில் காயமடைந்தனர்.

நேற்றுக் காலை 9 மணியளவில் நடைபெற்ற இந்த விபத்தில் யாழ்ப்பாணம் நோக்கி மோட்டார் சைக்கிளில் வந்துகொண்டிருந்த இரு இளைஞர்களே காயமடைந்தனர்.

மோட்டார் சைக்கிளைச் செலுத்தி வந்த நபர் பாலத்தில் உள்ள தண்ணீரை கவனிக்காது வந்ததால் இந்த விபத்து ஏற்பட்டுள்ளது. காயமடைந்த இருவரும் சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

(ம)

## "இதயமாற்றமே இன்றைய தேவை"

**தவக்காலச் சிந்தனை**

திருநீற்றுப் புதனுடன் கிறிஸ்தவர்களுக்கு தவக்காலம் ஆரம்பமாகின்றது. தவக்காலத்தின் நாற்பது நாள்களும் தவத்தையும், செபத்தையும், பிறரன்புச் செயல்களை முதன்மைப்படுத்தி மனமாற்றம் பெற அழைப்பு விடுக்கும் காலமாகும். நெற்றியில் சாம்பல் மூலம் சிலுவை அடையாளம் இடப்பட்டு "மனம் திரும்பி நற்செய்தியை நம்புங்கள்" என்ற அறைகூவலோடு ஆரம்பிக்கப்படுகின்றது. இறைவனுக்கு ஏற்புடைய காலமாக, பாவ அழுக்குகள் நீக்கப்பட்டு பரிசுத்தத்தை அணிந்து கொள்ள இறைவார்த்தையின் ஒளியில் அகமாற்றம் காண எம்மை இறைவன் தேடிவரும் காலமாகும். இன்றைய கால கட்டத்தில் சமூக சீரழிவுகளின் மத்தியில் ஆரோக்கியமற்ற சமூகத்தை சீராக்க காலத்தின் கட்டாயமாக தேவைப்படுவது செபமும் பிறரன்புச்செயல்களுமே. இதுவே உண்மைத்தனமான, அகரீதியான மன மாற்றத்திற்கு இட்டுச் செல்லக் கூடியது.

இறைவார்த்தையின் பின்புலத்தில் இதயமாற்றமே இறைவனுக்கு உவப்பானது என்ற செய்தி முதலாவது வாசகத்தில் கொடுக்கப்படுகிறது. கடவுளின் இரக்கத்திலும் நம்பிக்கை கொண்டு இறைவனிடம் முழுமையான இதயத்தோடு திருந்தி, திரும்பி வர வேண்டுமென்ற அறைகூவல் யோவேல் இறைவாக்கினரால் விடுவிக்கப்படுகின்றது. மனிதனை மாசுபடுத்துவது உள்ளத்தில் இருந்து வெளியே வரும் தீமைகளே. உள்ளமே தீமைகளின் உறைவிடமாக கருதப்படுவதால் உள்ளங்களில் உள்ள கறைகள் கழுவப்பட்டு, மாசுகள் நீக்கப்படுகின்றபோதே வெறுமையில் இறைவனை அனுபவிக்க முடியும். இத்தகைய உள்ளார்ந்த மனமாற்றமே இறைவனிலேயே மனிதனைக் குறித்து மனமாற்றம் ஏற்படுத்தும் என்பதே இறைவார்த்தை விடுக்கும் செய்தியாகும். நாற்பது நாள்களும் நாம் செய்யும் நோன்பு, செப தவமுயற்சிகள் கிறிஸ்தவர்களாகிய எம்மை சடங்கு ரீதியான தவக்கால நிகழ்வாக மாற்றிட அனுமதிக்க முடியாது. மனிதர்களின் கவனயீர்ப்பு கொண்ட வெளிவேடத்தன்மை கொண்ட செபங்கள், நோன்பு இறைவன் முன்னிலையில், உவப்பானவையல்ல என்பதை யேசு தெளிவுபடுத்துகின்றார். நம்முடைய செபத்தையும் தபத்தையும் நினைத்து பெருமை பாராட்டிக் கொள்ளாமல், தாழ்ச்சி நிறைந்த இதயத்தோடு இறைவனை அணுகும் போதே இறைவன் கைம்மாறு அளிபார் என்பதே உண்மை. வெளிவேடமற்ற, பரிசேயத்தனம் இல்லாத தப முயற்சிகளும் பிறரன்புச் செயல்களுமே இறைவனுக்கு ஏற்புடையது என்பதை உணர்ந்து வாழ்வோமே? நாற்பது நாள்கள் புனித வாழ்வை நோக்கிய பயணம் என்பதை உணர்ந்து அகக் கண்களை திறந்து வாழ்வில் ஒளியேற்றிவிட முயற்சி செய்வோமா?

அருட்கலாநிதி. ஸ்ரனி அன்ரனி. அ.ம.தி

## பாட்டால் வந்த வினை

### நடத்துனரை விட்டுச்சென்றது பஸ்

பயணித்துக் கொண்டிருந்த பஸ்ஸில் நடத்துநரை விட்டுச் சென்ற சம்பவம் ஒன்று காலியில் இடம்பெற்றுள்ளது.

காலி வீதியூடாகப் பயணித்துக் கொண்டிருந்த பஸ்ஸில் பாட்டின் சத்தம் காதைப் பிளந்ததாலும் பயணிப்போரின் எண்ணிக்கை அதிகரித்து இருந்ததன் காரணமாகவும் நடத்துநர் பஸ்ஸில் ஏறாதது கூடத் தெரியாத நிலையில் சாரதி பஸ்ஸை செலுத்திச் சென்றுள்ளார்.

பஸ்ஸில் நெரிசல் அதிகரித்ததனால் ஓரிடத்தில் நடத்துனரால் பஸ்ஸில் தொற்றிக் கொள்ள முடியவில்லை. பாட்டுச் சத்தம் காரணமாக நடத்துநர் குரல் கொடுத்தது சாரதிக்குக் கேட்கவில்லை. சுமார் ஐந்து பஸ் நிறுத்தங்களை பஸ் கடந்த நிலையில் வேகமாக வந்த ஒட்டோ ஒன்று பஸ்ஸை முந்திச்சென்று வழி மறித்தது. அதிலிருந்து "பாட்டை நிறுத்து" என்று நடத்துநர் ஆவேசத்துடன் ஒட்டோவில் இருந்து இறங்கிவந்த பின்னர் தான் சாரதிக்கு நிலைமை புரிந்தது.

-(ந)

## விஞ்ஞான ஒலிம்பியாட்

யாழ்ப்பாணம், பெப்.23

தரம் - 7 மாணவர்களுக்கான மாகாணமட்ட விஞ்ஞான ஒலிம்பியாட் தெரிவுப் பரீட்சை நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 9மணிக்கு நடைபெறவுள்ளது.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மாவட்ட மாணவர்களுக்கு யாழ். இந்து மகளிர் கல்லூரியிலும், வவுனியா, முல்லைத்தீவு மாவட்ட மாணவர்களுக்கு வவுனியா சி.சி.த.க. பாடசாலையிலும் நடைபெறும்.

இந்தத் தெரிவுப் பரீட்சைக்கு 2010 ஆம் ஆண்டு தரம்-5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்து ஒலிம்பியாட்போட்டிக்காக தெரிவு செய்யப்பட்ட மாணவர்கள் பங்குபற்ற முடியும். (ம-14)

## பொதுக்கூட்டம் பிற்போடப்பட்டது

யாழ்ப்பாணம்,பெப்.23

இன்று வியாழக்கிழமை பி.ப 2 மணிக்கு நடைபெற இருந்த யாழ். மாநகர சபையின் 2012 ஆம் ஆண்டுக்கான இரண்டாவது மாதாந்தப் பொதுக்கூட்டம் தவிர்க்க முடியாத காரணத்தால் பிற்போடப்பட்டுள்ளது.

இந்தக் கூட்டத்திற்கான திகதி பின்னர் அறிவிக்கப்படும் என யாழ். மாநகர முதல்வர் பணிப்புரை விடுத்துள்ளார் என்று சபையின் செயலாளர் திருமதி ரு. சத்தியானந்தன் தெரிவித்துள்ளார்.

(ந)

## ஞானச் சுடர் 170 ஆவது இதழ் வெளியீடு

வடமராட்சி, பெப். 23

தொண்டமானாறு சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப்பேரவையின் மாதாந்த வெளியீடான ஞானச்சுடர் ஆன்மிக சஞ்சிகையின் 170 ஆவது, மாசிமாத இதழ் வெளியீட்டுவிழா நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பேரவை உறுப்பினர் கே. அருணகிரிநாதன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் நூல் வெளியீட்டுரையை இளைப்பாறிய ஆசிரியை திருமதி புனிதவதி சண்முகலிங்கமும் மதிப்பீட்டுரையை யாழ்.பல்கலைக்கழக முதுநிலை விரிவுரையாளர் திருமதி நாச்சியார் செல்வநாயகமும் நிகழ்த்துவார்கள்.

(ந-8)

**தவறிவிட்டது**

2 சிறி2688 இலக்கமுடைய காரின் பதிவுப்புத்தகம், வரிப்பத்திரம், காப்புறுதிப்பத்திரம் போன்ற முக்கிய ஆவணங்கள் அடங்கிய (File Cover) கொக்குவில் சந்திக்கும் உடுவிலுக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் பின்வரும் இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு தயவாகக் கேட்டுக்கொள்கிறேன்.

உதயசூரியன் லேன், உடுவில்.
077 9181056
021 2223717
(14933)(6-7-8)

**கண்ணீர் அஞ்சலி**

எமது சபையில் முகாமை உதவியாளராகக் கடமையாற்றும்
செல்லையா ஜெயச்சந்திரன் அவர்களின்
அன்புத் தந்தை
**வேலன் வின்சிலோ செல்லையா**
நேற்று (22.02.2012) புதன்கிழமை அன்று இறைபதமடைந்ததையிட்டு அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தினைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்தித்துக் கொள்கின்றோம்.

ஊழியர் நலன்புரிச் சங்கம்
வலிகாமம் வடக்கு பிரதேசசபை, காங்கேசன்துறை (மல்லாகம்)

**யா/மகாஜனக் கல்லூரி**
தெல்லிப்பழை
புதிய விளையாட்டு அழகியல் பல்வளாகத்
**திறப்பு விழா**
**24.02.2012 - 12.00 p.m**
யா/ மகாஜனக் கல்லூரியின் பார்வையாளர் அரங்கு, அழகியல், விளையாட்டு வகுப்பறைகள் கொண்ட பல்வளாக புதிய கட்டடம் 24.02.2012 அன்று 12.00 மணிக்கு வைபவரீதியாகத் திறந்து வைக்கும் நிகழ்வு இடம்பெறும்
பிரதம விருந்தினர்
**கௌரவ கோத்தபாய ராஜபக்ஸ** RWP.RSP.PSC
(செயலாளர் - பாதுகாப்பு, நகர அபிவிருத்தி அமைச்சு)
கௌரவ விருந்தினர்
**தேசமாண்ய க.பாலேந்திரா**
*இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க நிகழ்வுக்குத் தங்களை அன்போடு அழைக்கின்றோம்*
- அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்.

The new aesthetics and sports complex of Mahajana College is ceremoniously declared open
**on 24.02.2012 at 12.00 p.m**
Chief Guest
**Hon. Gotabaya Rajapaksa RWP. RSP. PSC**
(Secretary, Ministry of Defence and Urban Development)
Guest of honour
**Desamanya K.Balendra**
*We cordially invite you to the historical occasion*
Mahajana College, Tellippalai
(C/9481)(2-6-7)
- Principal, Staff & Students.

UNIVERSITY OF WESTMINSTER




Immersed in the academic, business and professional life of a leading world city, the University of Westminster is situated in the heart of London. They combine over 170 years of educational achievement with forward looking courses attuned to the latest developments in Business, Science, technology & culture

www.wmin.ac.uk

- ARCHITECTURE, PROPERTY & CONSTRUCTION
- BIOSCIENCES
- BUSINESS & MANAGEMENT
- COMPUTING
- ELECTRONIC ENGINEERING
- FASHION
- FILM & TV
- HEALTH & NUTRITION
- INTERNATIONAL RELATIONS
- JOURNALISM
- LAW
- TRANSPORT PLANNING & LOGISTICS
- SOCIAL SCIENCES & HUMANITIES
- TOURISM

Presentation & Interview by
**Professor Dik Morling**
(University of Westminster)

Date: Saturday 25th February 2012
At : GNANAM HOTEL, Jaffna
Time: 9. 30am- 2pm

For information call:
**0776852323**
Official Representative in Sri Lanka
WEST 1 International
29/17A, Visaka Road, Colombo 4
T : +94 11 2594463
E: west1intl@eureka.lk

## கச்சதீவுத் திருவிழாவை முன்னிட்டு துப்புரவுப் பணிகளில் இராணுவம்

யாழ்ப்பாணம்,பெப்.23

கச்சதீவு திருவிழாவை முன்னிட்ட ஏற்பாடுகளில் அந்தப் பிரதேச கடற்படை அதிகாரி சமன் குமாரா - தலைமையில் கடற்படையினரால் சிறந்த முறையில் துப்புரவு செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

திருவிழாவுக்காக அங்கு வருகைதரவுள்ள முக்கிய பிரமுகர்கள் தங்கக் கூடியதாக தற்காலிக தங்குமிட வசதிகள் அமைக்கப்பட்டுள்ளன.

ஆலயப் பகுதிகள் மக்கள் தங்கியிருக்கக் கூடியதாகவும் துப்புரவுப்பணிகள் இடம்பெற்றுள்ளன.

கடந்த வருடம் நடைபெற்ற இறுதி நாள் திருவிழாவின் போது கடற்படையினர் யாத்திரிகர்களுக்கு வழங்கியது போன்று இந்த முறையும் உணவு வழங்க முன்வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ந-7)

# இலங்கையை.....

(14 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அமெரிக்க அரசின் உயர் மட்டப் பிரதிநிதிகளுக்கும் இலங்கை அரசு அத்தகைய உறுதி மொழியையே வழங்கியிருந்தது.

அவை இவ்வாறான ஜனநாயக விரோத நடவடிக்கைகளை இவ்வளவு காலமும் வலியுறுத்தியே வந்துள்ளன. ஆனால் அது இலங்கையின் நொண்டிச்சாட்டுகளால் தட்டிக் கழிக்கப்பட்டிருக்கின்றது.

இறுதி யுத்த வேளையில் தமிழ் நாட்டில் உருவான எதிர்ப்பு அலைகளை இந்திய மத்திய அரசு ஏதோ வகையில் தணித்துக் கொண்ட போதிலும், இலங்கை அரசு தமக்கு வழங்கிய உறுதி மொழியை நிறைவேற்றும் விதத்தில் இனப்பிரச்சினைக்கு பொருத்தமான தீர்வொன்றை முன்வைக்கும் எனவே நம்பியது.

அமெரிக்காவும் கூட அத்தகைய எதிர்பார்ப்பிலேயே இறுதி யுத்தத்தில் இலங்கை அரசுக்கு உதவி வழங்கியது.

யுத்தம் முடிவடைந்து மூன்று ஆண்டுகள் கழியும் இவ் வேளையில் அரசு இனப்பிரச் சினைத் தீர்வுக்கான உருப் படியான எந்த முயற்சியையும் முன் னெடுக்காது காலத்தை இழுத் தடிப்பதை இந்த நாடுகள் தற்போது உணர்ந்து கொண்டுள்ளன.

திஸ்ஸ விதாரண தலைமையிலான சர்வகட்சிக் குழுவின் பரிந்துரை அறிக்கை கிடப்பில் போடப்பட்டுவிட்டது. யார் என்ன சொன்னாலும் எதிர்பார்க்கப்படும் விதத்திலான தீர்வை வழங்க இயலாதெனக் தற்போது தீர்வே எட்டப்படுமென அரசு தெரிவித்து வருகிறது. ஆனால் அவை யாவும் பேச்சளவில் மட்டுமேயன்றி நடைமுறைச் சாத்தியமான தொன்றாகத் தோன்றவில்லை.

இந்தச் சின்னஞ்சிறு நாடான இலங்கை தமக்குத் தண்ணி காட்டி ஏமாற்ற முயல்வதாக அமெரிக்காவும் இந்தியாவும் தற்போது எண்ணத் தலைப்பட்டுள்ளன போலும். தமக்கு வாக்குறுதி வழங்கித் தனது காரியத் தைச் சாதித்துக் கொண்ட பின்னர் இலங்கை தம்மை ஏமாற்றி முட்டாள்கள் ஆக்க முனைகிறது என அந் நாடுகள் கருதுவது நியாயமே.

இப்போது இலங்கை அரசுக்கு ஏற்படுத்தப்பட்டுவரும் நெருக்குவாரங்கள் அத்தகைய எண்ணங்களின் பிரதிபலிப்பே. இது இலங்கையைப் பொறுத்த வரை ஒரு நல்ல அறிகுறியல்ல.

சர்வதேச சமூகத்தை இனியும் ஏமாற்றுவது எப்படி என அரசு திட்டம் போடுமானால் அது பெரும் தவறொன்றாக ஆகிவிடும். தான் நாட்டின் இனப் பிரச் சினைத் தீர்வு விடயத்தில் சர்வதேச சமூகத்துக்கு வழங்கிய உறுதி மொழியை செயலுருவில் நிறைவேற்றுவது குறித்தே அரசு இன்று அக்கறை காட்டியாக வேண்டும்.

அப்போது தான் இந்த நாட்டினதும் அரசினதும் கௌரவம் தப்பிப்பிழைக்கும். வழங்கிய உறுதி மொழியை அதே விதத்தில் நிறைவேற்ற இயலாது போகுமானால் அதற்கான பொருத்தமான மாற்று வழியொன்றை அரசு கைக்கொண்டாக வேண்டியது அவசியமாகிறது. *


### வீடு வாடகைக்கு உண்டு

நல்லூரில் யாழ். பல்கலைக்கழகத்துக்கு அண்மையில் மூன்று (3) படுக்கை அறைகளைக் கொண்ட வீடு சிறிய குடும்பத்துக்கு வாடகைக்கு உண்டு.

தொடர்பு: Bshans2@gmail.com

(14938)(2-6)


### முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



**கு.சாந்தினி**

பிறப்பு:11-03-1974

இறப்பு: 06-03-2011

பாசத்தின் உறைவிடமே!
பண்பின் ஒளி விளக்கே
அறிவின் இருப்பிடமே
ஆண்டு ஒன்றாகியும்
ஆறவில்லை எம் மனம்
போகும் இடமெல்லாம் உங்கள் விம்பம்
கேட்கும் ஒலிகள் எல்லாம் உங்கள் குரல்
ஆறுதல் கிடைக்காமல் தவிக்கின்றோம்
காலங்கள் எத்தனை கடந்தாலும்
மாறாது உங்கள் நினைவலைகள்

மீசாலை கிழக்கு,
மீசாலை.

என்றும் நினைவுடன்:
சாந்தரூபன் (மகன்)

(14661) (2.6.7)

## விஷமிகளால் மூட்டும் தீயால் வயல்கள் அழியும் அபாயம்

தென்மராட்சி,பெப்.23

தென்மராட்சி தெற்கு நெல்வயல் பகுதியில் விஷமிகளால் வைக்கப்படும் தீயால் நெற்பயிர்களும் வயல்களில் வைக்கப்பட்டுள்ள நெற்குவியல்களும் எரிந்து போகும் அபாயநிலை காணப்படுகின்றது.

இதனால் நெல் அறுவடை முழுமையாக முடியும் வரை வயல்களில் எவரும் வைக்கோலுக்கு தீயிட வேண்டாமென மறவன் புலோ கமக்கார அமைப்பின் செயலாளர் ந.திருநீல கண்டன் அறிவித்துள்ளார்.

இம்முறை இயந்திரத்தின் மூலம் நெல் அறுவடை இடம்பெறுவதால் வைக்கோல் வயல்களில் பெருமளவு தேங்கியுள்ளது.

இந்த வைக்கோலுக்கு விஷமிகளால் வைக்கப்படும் தீ அருகில் காணப்படும் வயல்களுக்கும் தாவி எரிகின்றன.

தீ பரவி அறுவடை செய்யாத வயல்களிலும் வயல்களில் வைக்கப்பட்டுள்ள நெற்குவியல்களையும் எரித்து அழிவை ஏற்படுத்தி வருகிறது.

மறவன்புலோ கமக்கார அமைப்புக்குட்பட்ட கைதடி - நாவற்குழி, மறவன் புலோ, தச்சன்தோப்பு, கோவிலாக்கண்டி ஆகிய பகுதிக ளில் உள்ள நெல் வயல்களில் முழுமையாக அறு வடை முடியும்வரை எக் காரணம் கொண்டும் தீ வைக்க வேண்டாம் என்று கூறப்பட்டுள்ளது.

(ம-9)

## ஆரம்ப சுகாதார நிலையங்களை அமைத்துத் தருமாறு கோரிக்கை

சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக் குட்பட்ட மட்டுவில், மிருசுவில், எழுதுமட்டுவாழ், தெற்கு ஆகிய பகுதிகளில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைத்துத் தருமாறு அந்தந்தப் பிரிவு மக்கள் சுகாதாரத் திணைக்களத் திணைக் கோரியுள்ளனர்.

மட்டுவில், மிருசுவில் ஆகிய பகுதிகளில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைப்பதற்கான காணிகள் பொதுமக்களால் வழங்கப்பட்ட போதிலும் இங்கு இதுவரை உரிய கட்டடம் அமைக்க சுகாதாரத் திணைக் களத்தினர் பின்னடித்து வருவதாகவும் தெரிவித்தனர்.

மட்டுவில் பகுதியில் சன சமூக நிலையமொன்றிலும் மிருசுவில் பகுதியில் கொடிகாமம் வைத்தியசாலையிலும் தற்போது ஆரம்ப சுகாதார நிலையச் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

**மட்டுவில், மிருசுவில் ஆகிய பகுதிகளில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைப்பதற்கான காணிகள் பொது மக்களால் வழங்கப்பட்ட போதிலும் இங்கு இதுவரை உரிய கட்டடம் அமைக்கப்படவில்லை.**

அண்மையில் மீளக் குடியமர அனுமதிக்கப்பட்ட எழுதுமட்டுவாழ் தெற்குப் பிரிவில் பெரும் எண்ணிக்கையான மக்கள் மீளக் குடியமர்ந்துள்ளதால் ஆரம்ப சுகாதார நிலையத்தினை ஆரம்பிக்குமாறும் அறிவித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டது. (ம-9)




# திக்கம், கற்கோவளம் அணிகள் இறுதியாட்டத்தில் மோதத் தகுதி

யாழ்ப்பாணம்,பெப்.23
பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான ஆண்களுக்கான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் அரையிறுதி ஆட்டங்களில், திக்கம் இளைஞர் விளையாட்டுக் கழகம், கற்கோவளம் உதயதாரகை விளையாடடுக் கழகம் ஆகிய அணிகள் வெற்றி பெற்று இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றுள்ளன.

முதலில் இடம்பெற்ற அரை இறுதியாட்டத்தில் திக்கம் இளைஞர் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து கொற்றாவத்தை சிவானந்தா விளையாட்டுக் கழக அணி மோதிக் கொண்டது.

இரண்டு அணியினரும் ஆட்டநேர முடிவில், தலா ஒரு கோலைப் பெற்றமையால் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது.

வெற்றி தோல்வி காண்பதற்காக 5 சமநிலை தவிர்ப்பு உதைகள் வழங்கப்பட்டன. இதில் திக்கம் இளைஞர் விளையாட்டுக் கழக அணி 3:2 என்ற கோல்கணக்கில் வெற்றி பெற்று இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது.

இரண்டாவது அரை இறுதியாட்டத்தில் கற்கோவளம் உதயதாரகை விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக்கழக அணி மோதிக்கொண்டது.

இதில் கற்கோவளம் உதயதாரகை விளையாட்டுக்கழக அணி 1:0 என்ற கோல்கணக்கில் வெற்றியீட்டி இறுதியாட்டத்திற்குத் தகுதி பெற்றது.
(த-23)

## பருத்தித்துறை ஐக்கியம் கிண்ணத்தை வென்றது

யாழ்ப்பாணம்,பெப்.23
பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான பெண்களுக்கான வலைப்பந்தாட்ட சுற்றுப் போட்டித் தொடரின் இறுதியாட்டத்தில் பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக்கழக அணி சம்பியனானது.

கடந்தவாரம் திக்முனை விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்ற பெண்களுக்கான வலைப்பந்தாட்டப் போட்டியின் இறுதியாட்டத்தில் பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து சென் தோமஸ் விளையாட்டுக்கழக அணி மோதிக்கொண்டது.

இதில் பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக்கழக அணி 35:15 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றி கொண்டு சம்பியனானது.
(த-23)

## மன்னார் லீக் நடத்தும் உதைபந்தாட்டப் போட்டி

யாழ்ப்பாணம்,பெப்.23
மன்னார் உதைபந்தாட்ட லீக்கின் ஆதரவுடன் மன்னார் சின்னக்கடை கிறின்பீல்ட் விளையாட்டுக்கழகம் பிறவுண்ஸ் கம்பனியின் அனுசரணையுடன் நடத்தும் 11 பேர் பங்குகொள்ளும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி நாளை வெள்ளிக்கிழமை காலை 8 மணிக்கு மன்னார் பொது விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இதில் மன்னார், மடு, முருங்கன், சின்ன பண்டிவிரிச்சான், தேவன்பிட்டிப் பகுதிகளைச் சேர்ந்த 17 விளையாட்டுக் கழகங்கள் பங்கு கொள்ளவுள்ளன எனப் போட்டி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.
(த-23)

## எல்லே இரு பிரிவுகளிலும் சென். தோமஸ் சம்பியன்

யாழ்ப்பாணம்,பெப்.23
பருத்தித்துறைப் பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான ஆண், பெண் இருபாலாருக்குமான எல்லே போட்டியில் இரு பிரிவுகளிலும் சென். தோமஸ் அணி சம்பியனாகியது.

இந்தப் போட்டியில் வெற்றி பெற்ற அணிகளின் விவரம் வருமாறு:

ஆண்கள் பிரிவு

சென். தோமஸ் விளையாட்டுக் கழகம் முதலாமிடம், வல்வை ஐக்கிய விளையாட்டுக் கழகம் இரண்டாமிடம்.

பெண்கள் பிரிவு

சென்.தோமஸ் விளையாட்டுக் கழகம் முதலாமிடம், பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகம் இரண்டாமிடம்.
(த-23)

## கபடிப் போட்டி சனியன்று

யாழ்ப்பாணம்,பெப்.23
பருத்தித்துறைப் பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான ஆண், பெண் இருபாலாருக்குமான கபடிப் போட்டி நாளை மறுதினம் சனிக்கிழமை மனோகரா விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம் பெறவுள்ளது.

அன்று காலை 8 மணிக்கு போட்டிக்கான ஒழுங்கு நிரல் தயாரிக்கப்பட்டு போட்டிகள் யாவும் இடம்பெறும் எனவும், விளையாட்டு உத்தியோகத்தர் வசந்தன் தெரிவித்தார்.
(த-23)

## எல்லே போட்டிகள்

யாழ்ப்பாணம்,பெப்.23
வவுனியா வடக்கு பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான ஆண், பெண் இருபாலாருக்குமான எல்லே போட்டி ஞாயிற்றுக்கிழமை குளவி சுட்டான் பொது விளையாட்டு மைதானத்தில் காலை 8 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை இடம்பெறவுள்ளன.
(ம-23)

## பெண்களுக்கான கிரிக்கெட்

யாழ்ப்பாணம்,பெப்.23
வவுனியா வடக்கு பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான பெண்களுக்கான கிரிக்கெட் போட்டியில் புளியங்குளம் உதய சூரியன் விளையாட்டுக் கழகம், சின்ன அடம்பன் பாரதி விளையாட்டுக் கழகம் ஆகியன முதல் இரண்டு இடங்களையும் பெற்றன.
(ம-23)

## வவுனியா வடக்கு பிரதேச போட்டிகள்

யாழ்ப்பாணம்,பெப்.23
வவுனியா வடக்கு பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான ஆண், பெண் இருபாலாருக்குமான கபடிப் போட்டியும், பெண்களுக்கான வலைப்பந்தாட்டப் போட்டியும் நாளை மறுதினம் சனிக்கிழமை ஒலுமடு அ.த.க.பாடசாலை மைதானத்தில் இடம்பெறவுள்ளன என்று விளையாட்டு உத்தியோகத்தர் தெரிவித்துள்ளார்.
(த-23)

# மாறவேண்டிய தருணமிது

இந்தியக் கிரிக்கெட் அணிக்கு மூன்று விதமான ஆட்டங்களுக்கும் தனித்தனி அணித்தலைவர்களை நியமிக்க வேண்டிய தருணம் ஏற்பட்டுள்ளது என்று இந்திய அணியின் முன்னாள் அணித் தலைவர் கங்குலி தெரிவித்துள்ளார்.

இதுகுறித்துக் கங்குலி கூறியதாவது, டெஸ்ட், ஒரு நாள், 'ரி-20' ஆட்டம் என்ற 3 வகைகளுக்கும் தனித்தனி அணித்தலைவர்களை நியமிப்பது தொடர்பாக தெரிவுக் குழுவினர் முடிவெடுக்க வேண்டிய தருணம் ஏற்பட்டுள்ளது என்றார்.

சுழற்சிமுறையில் வீரர்களை களமிறக்கும் டோனியின் முடிவு குறித்துப் பேசிய அவர், எப்போதுமே 11 வீரர்களும் சிறந்த களத்தடுப்பு வீரர்களாக இருக்கும் வகையில் அணியைத் தெரிவு செய்ய முடியாது.

ஆஸ்திரேலிய அணியில் 11 வீரர்களும் மிகச்சிறந்த களத்தடுப்பு வீரர்கள் என்று கூற முடியாது. அதே போன்று பந்துவீச்சுக்குச் சாதகமான மைதானங்களில் ஓட்டங்கள் குவிப்பதும் முக்கியமானது.

டோனி சமபலம் வாய்ந்த அணியையே பெற்றுள்ளார். அதனால் அவர் வீரர்களால் சரியாகக் களத்தடுப்பு செய்ய முடியாததால் சுழற்சி முறையை கடைப்பிடித்ததாகக் கூறி தப்பித்துவிட முடியாது. சராசரியாக 15 ஓட்டங்கள் மட்டுமே அடிக்கும் ஒரு வீரர் சிறப்பாகக் களத்தடுப்பு செய்கிறார் என்பதற்காக அவரை அணியில் வைத்து எதைச் சாதிக்க முடியும் என்று கேள்வியெழுப்பினார்.

இதேபோல் நீண்ட காலமாக மோசமாக விளையாடி வரும் வீரர்களை அணியில் வைத்திருக்கக்கூடாது. அப்படிப்பட்ட வீரர்களை, மற்ற வீரர்களைவிட திறமையான வீரர்கள் என்று அனைத்து அணித் தலைவர்களுமே நினைக்கிறார்கள் என்பதை ஒப்புக்கொள்கிறேன்.

ஒரு வீரர் சரியாக விளையாடாத பட்சத்தில் அவர் திறமையானவர் என்பதற்காக நீண்ட நாள்கள் அணியில் வைத்திருக்கக்கூடாது. 2015 ஆம் ஆண்டு உலக கிண்ணத்தைக் கருத்தில் கொண்டு ரெய்னாவுக்கு முக்கியத்துவம் கொடுத்து வருகிறார் டோனி. ஆனால் ரெய்னாவோ இப்போதே சரியாக விளையாடவில்லை. ரெய்னா தன்னை மேம்படுத்திக் கொள்ளாவிட்டால் 2015 ஆம் ஆண்டு உலகக் கிண்ணத்தில் கடுமையாகப் போராட வேண்டியிருக்கும் என்று தெரிவித்தார்.
(5)

## கரப்பந்தாட்ட வெற்றியாளர்

சுன்னாகம்,பெப்.23
தெல்லிப்பழை கோட்ட மட்டத்தில் நடத்தப்பட்ட பெண்களுக்கான கரப் பந்தாட்டப் போட்டியில் வெற்றியீட்டிய பாடசாலைகளின் விவரம் வெளியாகியுள்ளது.

19 வயதுப் பிரிவில் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி, மல்லாகம் மகா வித்தியாலயம், இளவாலை மெய்கண்டான் மகா வித்தியாலயம் ஆகியன முறையே முதலாம், இரண்டாம், மூன்றாம் இடங்களைப் பெற்றுள்ளன.

17 வயதுப் பிரிவில் அளவெட்டி அருணாசலம் வித்தியாலயம், அளவெட்டி அருணோதயக் கல்லூரி, இளவாலை மெய்கண்டான் மகா வித்தியாலயம் ஆகியன முறையே முதலாம், இரண்டாம், மூன்றாம் இடங்களைப் பெற்றுள்ளன.

15 வயதுப் பிரிவில் அளவெட்டி அருணாசலம் வித்தியாலயம், அளவெட்டி அருணோதயக் கல்லூரி, வயாவிளான் மத்திய மகா வித்தியாலயம் ஆகியன முறையே முதலாம், இரண்டாம், மூன்றாம் இடங்களைப் பெற்றுள்ளன.
(ம-38)

## ஆண்கள் பிரிவில் சின்ன அடம்பன் பெண்கள் பிரிவில் கனகராயன்குளம்

யாழ்ப்பாணம்,பெப்.23
வவுனியா வடக்குப் பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான இருபாலாருக்குமான கரப்பந்தாட்டப் போட்டியில் இறுதியாட்டத்தில் ஆண்கள் பிரிவில் சின்ன அடம்பன் பாரதி விளையாட்டுக் கழகமும், பெண்கள் பிரிவில் கனகராயன் குளம் ஐக்கிய விளையாட்டுக் கழக அணியும் சம்பியனாகின.

முதலில் இடம்பெற்ற ஆண்களுக்கான ஆட்டத்தில் சின்ன அடம்பன் பாரதி விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து புளியங்குளம் உதய சூரியன் விளையாட்டுக் கழக அணிமோதிக் கொண்டது.

3 செற்களைக் கொண்ட ஆட்டத்தில் சின்ன அடம்பன் பாரதி விளையாட்டுக் கழகம் 2:0 என்ற செற்கணக்கில் வெற்றி பெற்றது.

பெண்களுக்கான இறுதியாட்டத்தில் கனகராயன் ஐக்கிய விளையாட்டுக்கழக அணியை எதிர்த்துச் சின்ன அடம்பன் விளையாட்டுக் கழக அணி மோதிக் கொண்டது.

3 செற்களைக் கொண்ட போட்டியில் கனகராயன் குளம் ஐக்கிய விளையாட்டுக் கழகம் 2:1 என்ற செற்கணக்கில் வெற்றியீட்டியது.
(ம-23)






பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டியில் இல்லங்களின் அணிவகுப்பு இடம்பெறுகிறது. வெற்றி பெற்ற வீரர்களுடன் சான்றிதழ் வழங்கிக் கௌரவித்த மேசைப் பந்தாட்டப் பயிற்றுனர் செ. சோமசுந்தரம் ஆசிரியர் எஸ். சிவகுமாரன் ஆகியோர் உள்ளனர்.
(ம-8)



# தொடரை வென்றது தென்னாபிரிக்கா

துடுப்பாட்டத்தில் டுமினியும் பந்து வீச்சில் போத்தாவும் அசத்த நியூஸிலாந்துக்கு எதிரான மூன்றாவது 'ரி-20' ஆட்டத்தில் தென்னாபிரிக்க அணி 3 ஓட்டங்களால் வெற்றியைப் பெற்றுக் கொண்டது. இதன் மூலம், 3 ஆட்டங்கள் கொண்ட 'ரி-20' தொடரை 2-1 என்ற கணக்கில் தென்னாபிரிக்கா வெற்றி கொண்டது.

நியூஸிலாந்துக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டு தென்னாபிரிக்க அணி விளையாடி வருகின்றது. முதலில் இடம்பெற்ற இரண்டு 'ரி-20' ஆட்டங்களிலும் இரு அணிகளும் தலா ஒரு ஆட்டத்தில் வெற்றிபெற்றிருந்தன. இந்த நிலையில் மூன்றாவது ஆட்டம் நேற்று ஆரம்பமானது. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற நியூஸிலாந்து அணி முதலில் களத் தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தது.

அதற்கமைய களமிறங்கிய தென்னாபிரிக்க அணி கடந்த ஆட்டத்தில் அதிவேக சதம் கடந்த லெவியை 11 ஓட்டங்களுடன் இழந்தது. அல்பன் மோர்கல் 10, அம்லா 22 பந்துகளில் 33 ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்தனர். 7.1 பந்து பரிமாற்றங்களில் 59 ஓட்டங்களுக்கு 3 இலக்குகளை இழந்த நிலையில் இணைந்த டீ. வில்லியர்ஸ், டுமினி தென்னாபிரிக்க அணியின் ஓட்ட எண்ணிக்கையை வலுப்படுத்தும் முயற்சியில் ஈடுபட்டனர். இவர்களது அதிரடியில் தென்னாபிரிக்கா வலுவான இலக்கை நோக்கி நகர்ந்தது. 35 பந்துகளில் 62 ஓட்டங்களை இணைப்புக்காக பகிர்ந்த நிலையில் டுமினி 20 பந்துகளில் 38 ஓட்டங்களுடன் 'ரன் அவுட்டானார்'. தொடர்ந்து டீ வில்லியர்ஸும் 29 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க தென்னாபிரிக்காவின் சுருதி குறைந்தது. இறுதியில் 20 பந்து பரிமாற்றங்களின் நிறைவில் 7 இலக்குகளை இழந்து 165 ஓட்டங்களை மாத்திரம் பெற்றுக் கொண்டது. பார்னெல் 22, றொபின் பீற்றர்ஸன் 11 ஓட்டங்களை ஆட்டமிழக்காமல் பெற்றுக் கொடுத்தனர். நியூஸிலாந்து அணி சார்பில் ரிம் சவுத்தீ, நிக்கோல் தலா 2 இலக்குகளைக் கைப்பற்றினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடத் தொடங்கிய நியூஸிலாந்து அணிக்கு நிக்கோல், குப்தில் அதிரடியான ஆரம்பத்தை அமைத்தனர். 6 பந்து பரிமாற்றங்களில் 65 ஓட்டங்களை முதலாவது இலக்குக்காக பகிர்ந்த நிலையில் நிக்கோல் 19 பந்துகளில் 33 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். அதன் பின்னர் குப்திலும் 26 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க நியூஸிலாந்தின் அதிரடி அடங்கியது.

தொடர்ந்து இணைந்த ரைடர், பரன்டன் மக்கலம் ஜோடி சுமாராக ஆடியது. மக்கலம் 18 ஓட்டங்களுடனும் ரைடர் 52 ஓட்டங்களுடனும் வெளியேறியதைத் தொடர்ந்து நியூஸிலாந்து அணி தென்னாபிரிக்காவிடம் சரணடையத் தொடங்கியது.

இருப்பினும் இறுதிக் கணம்வரை வெற்றி யார் பக்கம் சரியலாம் நிலையில் ஆட்டத்தின் போக்கு சென்ற போதும் தென்னாபிரிக்க அணி இறுதிக் கட்டத்தில் வெற்றியை தனதாக்கியது. நியூஸிலாந்து 20 பந்து பரிமாற்றங்களில் 7 இலக்குகளை இழந்து 162 ஓட்டங்களைப் பெற்றது. பந்து வீச்சில் ஆபிரிக்க அணி சார்பில் போத்தா 20 ஓட்டங்களுக்கு 2 இலக்குகளை கைப்பற்றினார். அவரே ஆட்ட நாயகனாகவும் தெரிவானார். (5)

# யூசுப் ரெடி



இந்திய கிரிக்கெட் அணியின் சகலதுறை வீரர் யூசுப் பதான் முழங்காலில் ஏற்பட்ட உபாதையில் இருந்து மீண்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. இந்த நிலையில் மட்டுப்படுத்தப்பட்ட பந்து பரிமாற்ற ஆட்டங்களில் இந்திய அணியில் மீண்டும் விளையாட எதிர்பார்த்துள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

எனினும் கடந்தாண்டு இடம்பெற்ற மேற்கிந்தியத் தீவுகள் மற்றும் இங்கிலாந்து அணிகளுக்கு எதிராக போட்டியில் அவர் திறமையை வெளிப்படுத்த தவறியிருந்தார்.

இந்த நிலையில் ஐ.பி.எல் தொடரில் திறமையை வெளிப்படுத்துவதன் மூலம் தேர்வாளர்களின் கவனத்தை யூசுப் பதான் ஈர்க்கும் சாத்தியம் உள்ளதாக சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. (5)

# கூல் டோனியை கூலாக்கும் சாக்ஷி



தொடர்ந்து பன்னாட்டுத் துடுப்பாட்ட அவையின் கண்டனங்களுக்கு ஆளாகியுள்ள மகேந்திர சிங் டோனிக்கு அவரது மனைவி சாக்ஷி ஆறுதல் கூறியுள்ளார்.

இந்திய கிரிக்கெட் அணி கடந்த சில போட்டியில் தடுமாறி விளையாடி வருகிறது. இதற்கு அணித்தலைவர் மகேந்திர சிங் டோனி மீது எதிர்ப்புகள் எழுந்துள்ளன. சுழற்சி முறையில் வீரர்களை தெரிவு செய்வது, களத்தடுப்பை நியாயப்படுத்துவது போன்ற காரணங்களால் டோனி மீது அனைவரும் எதிர்ப்பு காட்டி வரும் நிலையில், அவருடைய மனைவி சாக்ஷி ஆறுதலான வார்த்தைகளை டுவிட்டரின் மூலம் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து சாக்ஷி டுவிட்டரில், உங்களை (டோனி) பற்றி மற்றவர்கள் என்ன நினைக்கிறார்கள் என்பது குறித்து கவலைப்படாதீர்கள், உங்களின் வெற்றிக்கு எப்போதும் நான் ஆதரவாக உள்ளேன். தற்போது நிலவிவரும் சுழ்நிலை என்றோ ஒரு நாள் கண்டிப்பாக மாறும். தற்போதைய நிலையில், உங்களை இகழ்பவர்கள் மீண்டும் புகழும் நிலை வரும் என்று அவர் கூறியுள்ளார். (5)

# சிக்கலில் இந்திய அணி

இந்திய அணி முக்கோண ஒரு நாள் தொடரின் இறுதி ஆட்டத்துக்கு முன்னேறுவதில் பெரும் சிக்கல் உள்ளது. இலங்கை, ஆஸ்திரேலிய அணிகளுக்கு இன்னும் 3 லீக் ஆட்டங்கள் இருப்பதால் பிரச்சினை இல்லை. ஆனால், இந்திய அணிக்கு 2 ஆட்டங்கள் ( பெப்ரவரி 26,- ஆஸ்திரேலியாவையும், பெப்ரவரி 28- இலங்கை) தான் உள்ளன. இந்த இரண்டிலும் போனஸ் புள்ளியுடன் வெல்ல வேண்டும். பின்னர், இலங்கை, ஆஸி. அணிகளின் வெற்றி, தோல்வியை பொறுத்து இந்திய அணியின் இறுதிக்கான வாய்ப்பு அமையும்.

'வோட்டர் போய் டோனி'


தடை காரணமாக நேற்று முனதினம் இடம்பெற்ற இலங்கையுடனான ஆட்டத்தில் பங்கேற்க முடியாத டோனி, மைதானத்தில் களமிறங்கி அதிர்ச்சி அளித்தார். இந்த முறை வீரர்களுக்கு தண்ணீர் எடுத்து வரும் பணியை கச்சிதமாக செய்தார். அப்போது ரெய்னா, ஹேறாக்லிக்கு ஆலோசனை வழங்கினார்.

'ரன் அவுட்டை' வீணாக்கிய சேவக் - இந்திய ஊடகங்கள் பாய்ச்சல்

நேற்று முன்தினம் 40 ஆவது ஓவரை அஷ்வின் வீசினார். இரண்டாவது பந்தை வீசுவதற்கு முன் இலங்கை வீரர் திரிமன்னே 'கிறீஸிக்கு' வெளியே நிற்பதை பார்த்தார். உடனே, 'பெயில்சை' தகர்த்து 'ரன் அவுட்' கோரினார். நடுவர் பால் ரீபல், அணித்தலைவர் சேவக்கிடம் விவாதித்தார். இந்த நேரத்தில் சச்சின் உள்ளிட்ட மூத்த வீரர்கள் தலையிட்டு முறையீட்டை வாபஸ் பெறும் படி கூறியுள்ளனர். இதனை சேவாக் ஏற்க, கண்டம் தப்பினார் திரிமன்னே. அப்போது 44 ஓட்டங்களில் இருந்த இவர், இறுதியில் 62 ஓட்டங்கள் எடுத்து, இந்தியாவுக்கு தொல்லை கொடுத்தார்.

இங்கிலாந்துக்கு எதிரான டிரன்ட்பரிட்ஜ் டெஸ்டில், இயன் பெல்லுக்கு 'ரன் அவுட்' கொடுத்ததை இந்திய அணியினர் வாபஸ் பெற்றது பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியது. விதி முறைப்படி ஆட்டமிழப்பு என்ற நிலையில் விளையாட்டு உணர்வை காட்டி தோல்வி அடைய வேண்டியது அவசியம் தானா என்பதை இந்திய வீரர்கள் யோசிக்க வேண்டும்.

இது குறித்து சேவாக் கூறுகையில், அஷ்வின் முறையீடு செய்த போது, நடுவர் பால் ரீபல் முடிவு எடுக்கும் பொறுப்பை என்னிடம் அளித்தார். ஆட்டமிழப்புக் கேட்டால் தருவதாக கூறினார். நான் முறையீடு கேட்டு அவரும் ஆட்டமிழப்பு கொடுத்தால்; விளையாட்டு உணர்வுடன் நடந்து கொள்ளவில்லை என்று விமர்சிப்பர். இதன் காரணமாகவே திரிமன்னவுக்கு இன்னொரு எச்சரிக்கை கொடுப்பது என்று முடிவு செய்தோம். ஆட்டமிழப்பையும் வாபஸ் பெற்றோம், என்றார். (5)



# டோனியுடன் முஷ்டியை முறுக்கும் சேவாக்

இந்திய அணியின் முன்னணி வீரர்கள் களத்தடுப்பில் மந்தமாகச் செயல்படுவதால், சுழற்சி முறையில் தேர்வு செய்யப்படுவர் என்ற டோனியின் கருத்துக்கு மதிப்பு அளிக்காமல் சேவாக் செயற்பட்டதாக இந்திய அணியின் முன்னாள் வீரர்கள் தெரிவித்துள்ளனர். இலங்கையுடன் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் சச்சின், சேவாக், கம்பீர் ஆகிய மூவரும் இடம் பெற்றனர். ஆனால் டோனி தலைமை தாங்குகின்ற ஒரு நாள் ஆட்டத்தில் இவர்கள் மூவரில் யாராவது இருவரே இடம்பெறுவர்.

ஆட்டம் முடிவடைந்த பின்னர் இது குறித்து சேவாக் கூறியதாவது:

டோனி என்ன சொன்னார், என்ன நடைமுறைப்படுத்துகிறார் என்று எனக்கு தெரியாது. ஆஸ்திரேலியாவில் அடுத்த உலகக் கிண்ணத் தொடர் நடப்பதால் இளம் வீரர்களுக்கு வாய்ப்பு அளிக்க வேண்டும் என்று தான் வலியுறுத்தினார். நாங்கள் கடந்த 10 ஆண்டுகளாக ஒரே மாதிரி தான் களத்தடுப்பு செய்கின்றோம். ஜெயவர்தனா அடித்த பந்தை பறந்து சென்று நான் பிடியெடுத்ததை பார்த்தீர்கள் அல்லவா?

இந்தப் பிரச்னை பற்றி டோனியிடம் நான் பேச வேண்டிய அவசியமில்லை. அவர் தான் அணியின் தலைவர். அவரும் பயிற்சியாளரும் சேர்ந்து முன்னணி வீரர்களுக்கு இனியும் ஓய்வு கொடுக்க விரும்பினால், எனக்கு எவ்வித பிரச்னையும் இல்லை. என்னை பொறுத்தவரை அனைத்து ஆட்டங்களிலும் விளையாடத் தயாராக இருக்கிறேன்.

நாங்கள் ஒற்றுமையாக இருக்கிறோம். அணித்தலைவர் என்ற முறையில் தான் விரும்பியவற்றை டோனி சொல்லலாம், செய்யலாம். அவர் தான் கடந்த இரண்டு ஆண்டுகளாக ஊடகங்களிடம் பேசி வருகிறார். இதில், எங்களுக்கு சம்மதம் தான்.

இலங்கைக்கு எதிரான ஆட்டத்தில் துடுப்பாட்ட வீரர்கள் சோபிக்கத் தவறினர். எனது ஆட்டமும் சரியில்லை. கடந்த 5 முறை 'தேர்ட்மன்' அல்லது 'ஸ்லிப்' திசையில் பிடி கொடுத்து ஆட்டமிழக்கிறேன். தொடர்ந்து பயிற்சி மேற்கொண்டு முன்னேற்றம் காண வேண்டும் - என்றார். (5)

# பயங்கரவாதச் சட்டம் மூலம் மக்களை ஒடுக்குகிறது அரசு

## நாடாளுமன்றில் அனுரகுமார எம் பி சாடல்

கொழும்பு, பெப்.23

இன்றைய அரசு பயங்கரவாத தடைச் சட்டத்தையும் தண்டனைக் கோவை தடைச் சட்டத்தையும் பயன்படுத்தி நாட்டு மக்களைச் சித்திரவதைக்கு உள்ளாக்குகிறது.

நாடாளுமன்றத்தில் உருவாக்கப்பட்ட சட்டங்களை தமக்கு ஏற்ற வகையில் மாற்றியும் நீக்கியும் சர்வதிகாரப் போக்கைக் கடைப்பிடிக்கிறது என்று ஜே.வி.பிநாடாளுமன்ற உறுப்பினரான அனுரகுமார திஸாநாயக்க குற்றம் சுமத்தினார்.

நாடாளுமன்றத்தில் சபாநாயகரின் அனுமதியுடன் விசேட உரை ஒன்றை நிகழ்த்திய அனுரகுமார திஸாநாயக்க மேலும் கூறியதாவது:-

அவசரகாலச் சட்டமும் பயங்கரவாதத் தடைச் சட்டமும் இரட்டைச் சகோதரர்கள். அவசரகாலச் சட்டத்தை நீக்கி விட்டதாகக் கூறும் ஜனாதிபதி அரசமைப்பின் மூலம் அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களைப் பயன்படுத்தி பயங்கரவாதத் தடைச் சட்டத்தை மேலும் வலுவுள்ளதாக மாற்றி அமைத்துள்ளார்.

பொதுமக்கள் தமது உரிமையை வெளிப்படுத்தவும் தமது அடிப்படை உரிமைகளுக்காக ஒன்று கூடி ஆர்ப்பாட்டங்களை நடத்தவும் குரல் எழுப்பவும் அரசமைப்பில் உத்தரவாதம் அளிக்கப்பட்டுள்ளது.

சட்டத்தின் முன் சகலரும் சமன் என்று கூறுகின்றோம். ஆனால் இங்கு ஜனநாயக விரோத அடக்கு முறைகளையே கையாளுகின்றது.

தமது நியாயபூர்வமான கோரிக்கைகளை முன்வைத்து ஆர்ப்பாட்டம் செய்யும் போது சுட்டுக் கொல்கின்றனர். அதி உயர் நீதிமன்ற வாயிலில் இருந்து கடத்தப்படுகின்றனர்.

அரச ஊழியர் சேமலாப நிதியை கொள்ளையடிக்க முற்படும்போது அதனை தடுக்கும் வகையில் போராட்டம் நடத்திய ஊழியர்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்ததால் நெவில் என்ற ஊழியர் கொல்லப்பட்டார்.

சிலாபத்தில் ஆர்ப்பாட்டம் செய்தபோது அன்ரனி பெர்ணாண்டோ என்ற மீனவர் கொல்லப்பட்டார். விவசாயிகள் ஆர்ப்பாட்டம் செய்த போது பொலிஸார் கண்ணீர்ப் புகைக் குண்டுகளை வீசி தாக்கி உள்ளனர்.

தனியார் பல்கலைக்கழகம் அமைக்கப்படுவதை எதிர்த்து ஆர்ப்பாட்டம் செய்த மாணவர்கள் தாக்கப்பட்டனர். பல மாணவர்கள் கல்வியைத் தொடர முடியாது தடையும் விதிக்கப்பட்டுள்ளது.

அப்படியானால் இறப்பர் குண்டுகளையும் கண்ணீர்ப் புகை சிலிண்டர்களையும் கவசக் கண்ணாடிகளையும் வகைதொகை இன்றி இறக்குமதி செய்வது ஏன்?இதற்கு அரசு பதில் அளிக்க வேண்டும் என அனுரகுமார திஸாநாயக்க கூறினார். (த-2)


## மரண அறிவித்தல்

### வேலுப்பிள்ளை வின்சிலோ செல்லையா

(ஓய்வூதியர்)



சித்தன்கேணியைப் பிறப்பிடமாகவும் அம்பிகாபதி வீதி, சங்கானையை வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை வின்சிலோ செல்லையா நேற்று (22.02.2012) புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை -பொன்னம்மா தம்பதியரின் ஏகபுதல்வரும், காலஞ்சென்ற திருமதி சிவபாக்கியத்தின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை- செல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், சரோஜினிதேவி, செல்வச்சந்திரன் (யா/பண்ணாகம் மெய்கண்டான் மகா வித்தியாலயம்), ஹரிச்சந்திரன், ரஞ்ஜினிதேவி (பிரான்ஸ்), சிவாஜினிதேவி, ரவிச்சந்திரன் (சவுதி அரேபியா), லோஜினிதேவி (சுவிஸ்), ஜயச்சந்திரன் (வலிகாமம் வடக்கு பிரதேச சபை) ஆகியோரின் அன்புத் தந்தையும், அருமைலிங்கம் (யா/இந்துக் கல்லூரி), சந்திரலீலா, பிறேமநந்தினி, ஜெகநாதன் (பிரான்ஸ்), ரஹீம் (பஹ்றின்), சுந்தரம் (சுவிஸ்), தேவரஞ்ஜினி, அமுதவதி ஆகியோரின் அன்பு மாமனும், தாட்ஷாஜினி, வேல்வாசன்,தாரணி, ஜனார்த்தனன், ஹரீத்தனன், ஜஸ்மினி, செலுஜன், கதீஷ், ரஸானா, ரஸ்னா, ரம்ஸான், தமிழினி, கலியுகன், டினோஜன், ஆரூரன், ஆரமிலன், சைந்தவி ஆகியோரின் பாசமிகு பேரனும், ரஹ்மான், ரம்லா ஆகியோரின் அன்புப் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23-02-2012) வியாழக் கிழமை மு.ப 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் சங்கானை கரைச்சி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சங்கானை மேற்கு,
சங்கானை.

(1495776) (6,7,10)

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### திருமதி சுவாமிநாதபிள்ளை பவானம்மா



புத்தூர் வீதி, மீசாலை வடக்கு, மீசாலையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சுவாமிநாதபிள்ளை பவானம்மா நேற்று (22.02.2012) புதன்கிழமை காலமானார்

அன்னார் காலஞ்சென்றவர்களான அம்பிகைபாகன் - அன்னம்மா தம்பதியரின் அன்பு மகளும், சுவாமிநாதபிள்ளையின் அன்பு மனைவியும், நாகேந்திரத்தின் அன்புச் சகோதரியும், சிவகௌரியின் பாசமிகு தாயும், சிவநேசனின் மாமியும், பிற்ஸிலா, பியூலா, கிதியோன், யோன்கீநாத் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.02.2012) வியாழக்கிழமை பி.ப 2 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் வேம்பிராய் இந்து மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் எற்றுக்கொள்ளவும்.

புத்தூர் வீதி,
மீசாலை வடக்கு, மீசாலை.

தகவல்:
சி.சிவநேசன் (மருமகன்)

### திருமதி அருமைத்துரை தனசேகரியம்மா



கலட்டியைப் பிறப்பிடமாகவும் கொக்குவில், காந்திஜீ கிராமத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அருமைத்துரை தனசேகரியம்மா நேற்று (22.02.2012) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா மற்றும் பாக்கியம் தம்பதியரின் அன்பு மகள் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.02.2012) வியாழக்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் உடுவில் அப்போஸ்தகர் சபையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கொக்குவில் மேற்கு,
காந்திஜீ வீதி.

தகவல்:
போதகர் அருமைத்துரை
(கணவர்)

# கண்ணீர் அஞ்சலி

தாய் வயிற்றில் ரத்தினமாய்
தரணியிலே உத்தமனாய்
ஊரார்க்கு நண்பனுமாய்
உறவுகளுக்கோ உவப்புடையவனாய்
எதிரிகளும் நலம்பெற வேண்டுபவனே
முதல் முதலாய் தாயின் கருத்தறந்த கண்மணியே
காலனவன் கட்டியிழுத்த கொடுமையினால்
கதியிழந்து கிடக்கிறதே சொந்தமெல்லாம்
மழலையிலே நீ நெஞ்சுதைத்த உள்ளமெலாம்
இன்று நெஞ்சறுந்து கிடக்குதையா உன் பிரிவால்
நீ நலம்பெற வேண்டிய இதய மெலாம் இன்று
உன் ஆத்ம சாந்திக்காய் வேண்டுதையா

இவர் பிரிவால் துயருறும் குடும்பத்தாருக்கு
எமது ஆழ்ந்த அனுதாபங்கள்



T.C.ஜோண் கிலெமன்ரைன்
B.Sc (Hons)
(ஆசிரியர், புனித சவேரியார் கல்லூரி, மன்னார்)

பிரிவால் துயருறும்
பர்லசிங்கம்-பத்மா குடும்பம், சேகர்-தனலஷ்மி குடும்பம்,
மோகன்-தேன்மொழி குடும்பம்

## கௌரவம் பெற்ற கலைஞர்களுக்கு வாழ்த்து

கலாசாரத் திணைக்களம் அலரிமாளிகையில் 30.08.2011 இல் நடத்திய இசை விழாவில், இசைப்பணிக்காக அரச விருது வழங்கி ·கௌரவிக்கப்பட்ட

**சங்கீத பூசணம் S.கணபதிப்பிள்ளை** அவர்களையும்

அழகன் முருகன் என்ற இளங்கலைஞர் மன்ற இறுவெட்டுக்கு இசையமைப்பும் நெறியாழ்கையும் செய்த

**இசைக்கலைமணி என்.செல்வச்சந்திரனையும்**

ஜோன் த.சில்வா ஞபாகார்த்த கலையரங்கில் 17.02.2011 இல் கலாபூஷணம் அரச விருது வழங்கி கௌரவிக்கப் பட்ட கலாநிதி **நா.வி.மு.நவரத்தினம்**

**சங்கீதவித்துவான் செல்வி.பாக்கியலட்சுமி நடராசா**

**சங்கீத பூஷணம் வி.சிவஞானசேகரம்**

நாதஸ்வர கீதபானு **ஆர்.கேதீஸ்வரன்** அவர்களையும்

மன்றம் பாராட்டி வாழ்த்துகின்றது.

**- இளங்கலைஞர் மன்றம்.**

## மரண அறிவித்தல்

### குமாரசாமி வாலாம்பிகை



அளவெட்டி வடக்கு, கூத்தன்சீமாவைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட குமாரசாமி வாலாம்பிகை நேற்றுமுன்தினம் (21.02.2012) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற குமாரசாமியின் அன்பு மனைவியும், சுலோசனா, ஜெகமூர்த்தி (இந்தியா), கல்பனா (பிரான்ஸ்), சிவமூர்த்தி, குபேரமூர்த்தி (கொலண்ட்), ரஞ்சனா, காஞ்சனா (லண்டன்), மோகனா (ஜேர்மனி), ஆகியோரின் அன்புத் தாயும், சிவபாதம், லதாங்கி, கரிஸ்கந்தராஜா, ஜமுனா, கயல்விழி, உதயசங்கர், முரளிதரன், மணிவண்ணன் ஆகியோரின் மாமியும், ஜீவந்தினி, சீராளன், கானவாருதி, பாலமுருகன், அருள்குமரன், லாவண்யா, மயூரன், கரிகரன், லக்ஷ்மன், வைஷ்ணவன், வாகீசன், கிருஸ்ணவி, சாறுயன், மாதுஷன் ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (24.02.2012) வெள்ளிக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கேணியடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கூத்தன்சீமா,*
*அளவெட்டி வடக்கு, அளவெட்டி.*

*தகவல்:*
*குடும்பத்தினர்.*

## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலையில் கடமையாற்றி அண்மையில் ஓய்வுபெற்ற ஆசிரியர் திருமதி மா. இராஜேஸ்வரி அவர்களின் அன்புக் கணவர்

### பொன்னையா மாசிலாமணி

நேற்று (22.02.2012) புதன்கிழமை காலமான செய்தியறிந்து துயரடைவதோடு, அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினரக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு, அவரின் ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*ஆசிரியர் நலன்புரிக் கழகம்,*
*யா/கைதடி முத்துக்குமாரசுவாமி மகாவித்தியாலயம்.*

## கண்ணீர் அஞ்சலி



### T. கிளமன்ட் ஜோண் (ஆசிரியர்)

கலங்கரை தீபமொன்று
கலையிழந்து போனது
கண்ணில்லா காலனவன்
கரம்கொண்டு சென்றது
எங்கள் துயர்தனில் தோள் தந்த நண்பனே
இன்று நீரே துயர் தந்து சென்றதேனோ
உணர்வற்ற ஜடங்களாய்
உண்மை புரியாமல் உழல்கின்றோம் நாம்

*மறைவால் தவித்திடும்:*
பரியோவான் கல்லூரி கணிதபிரிவு நண்பர்கள் / 1999 A/L

## ஐவருக்குப் பிணை

யாழ்ப்பாணம், பெப்.23

யாழ். நவீன சந்தைக் கட்டடத் தொகுதியில் வர்த்தகர் ஒருவரின் கடைக்குள் புகுந்து பணத்தையும், புடைவைகளையும் அபகரித்தனர் என்ற குற்றச்சாட்டில் விளக்க மறியலில் வைக்கப்பட்ட ஐந்து பேரும் நேற்று பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

நகர்த்தல் பத்திரம் மூலம் வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. பிணை விண்ணப்பம் செய்யப்பட்டதையடுத்து அதனைப் பரிசீலித்த நீதிவான் மா. கணேசராஜா சந்தேக நபர்களைப் பிணையில் விடுவித்தார்.

முறைப்பாட்டாளரின் கடையைச் சுற்றியுள்ள ஏனைய வர்த்தகர்களது எழுத்து மூல சத்தியக் கடதாசிகளும் பெறப்பட்டன. பொலிஸாரும் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டனர். விசாரணையின் பின்னர் பணக் கொடுக்கல் வாங்கல் பிரச்சினை ஏற்பட்டது. அதனால் சந்தேக நபர்கள் ஐந்துபேரும் அதிகாரத் தோரணையில் முறைப்பாட்டாளரான வர்த்தகரின் முன்னிலையில் புடைவைகள் பெற்றுக்கொண்டனர். அவரின் சம்மதத்துடனேயே அவை எடுக்கப்பட்டன. என நகர்த்தல் பத்திரம் சமர்ப்பித்த சட்டத்தரணி மு.றெமீடியஸ் பிணை விண்ணப்பம் செய்திருந்தார். அதனை ஆராய்ந்த பின்னர் சந்தேக நபர்கள் பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

ஒவ்வொருவரும் தலா பத்தாயிரம் ரூபா ரொக்கப் பிணையிலும், இரண்டு இலட்சம் ரூபா பெறுமதியான மூன்று ஆள் பிணையிலும் பிணையெடுப்பவர் அரச உத்தியோகத்தராக இருத்தல் வேண்டும் என்றும், யாழ். நீதிமன்ற எல்லைக்குட்பட்டவர்களாக இருத்தல் வேண்டும் என்றும் உத்தரவிட்டு பிணையில் விடுவித்தார். இது தொடர்பான வழக்கு எதிர்வரும் செவ்வாய்க்கிழமை விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படும். (த-4)

## இலங்கை பெற்றோல் குண்டுவீச்சில் தமிழக மீனவர்கள் படுகாயம்

நாகப்பட்டினம், பெப். 23

நடுக்கடலில் மீன்பிடித்துக் கொண்டிருந்த தமிழக மீனவர்கள் மீது இலங்கைக் கடற்படையினர் பெற்றோல் குண்டுகளை வீசி தாக்கியதில் பல மீனவர்கள் காயமடைந்துள்ளனர் என தமிழக நாளேடுகள் தெரிவித் துள்ளன.

நாகப்பட்டினம் கீச்சாக்குப்பத்தைச் சேர்ந்த மீனவர்கள் நேற்றுமுன்தினம் மீன்பிடிக்க படகுகளில் கடலுக்குச் சென்றனர். நடுக்கடலில் மீன்பிடித்துக் கொண்டிருந்த நாகை மீனவர்களை நோக்கி இலங்கைக் கடற்படையினர் பெற்றோல் குண்டுகளை வீசித் தாக்குதல் நடத்தியுள்ளனர். இந்தத் தாக்குதலில் பல மீனவர்கள் படுகாயமடைந்தனர்.

இந்த சம்பவத்தை கேள்விப்பட்டதும் மீனவர்கள் வாழும் பகுதிகளில் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

தமிழக மீனவர்களை இலங்கைக் கடற்படையினர் தொடர்ந்து தாக்கி வருவதும், சிறைபிடித்துச் செல்வதும் வாடிக்கையாகிவிட்டது. இதனைத் தடுக்க எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்று மீனவர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை ஆசிரியர்
திருமதி ஸ்ரீலதா ரட்ணேஸ்வரன் அவர்களின் மாமி

### திருமதி சுப்பிரமணியம் கண்மணி

அவர்கள் காலமானதையிட்டு அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தாருக்கு ஆழந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

*நலன்புரிச் சங்கம்,*
*யா/ கோப்பாய் மகாவித்தியாலயம்.*

**கணினித்திருத்தம் (Computer repair)**

உங்கள் கணினிகள் பழுதடைந்து விட்டனவா உடன் உங்கள் வீடுகளுக்கே வந்து உரிய முறையில் திருத்தித் தருகிறோம் அழையுங்கள்.

**0779086737 GUNAA BEST PC**
**No.6 cathedra road Jaffna.**

**ஏணிப்படி விற்பனைக்கு**

கடைப்பாவனையிலுள்ள தரமான ஏணிப்படி உடன் விற்பனைக்கு உள்ளது.

விபரங்களுக்கு : 0779398876

## 31ம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

| தோற்றம்: | | மறைவு: |
|---|---|---|
| 04 | | 25 |
| ★ |  | ★ |
| 07 | | 01 |
| ★ | | ★ |
| 1967 | | 2012 |

கடந்த 25.01.2012 அன்று அமரத்துவம் அடைந்த எமது அன்புத்தெய்வம்

### அமரர் ரூபமூர்த்தி தேவராசா (ராசு)

அவர்களின் அந்தியேட்டிக்கிரியைகள் நாளை (24.02.2012) வெள்ளிக்கிழமை காலை 5 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, அன்னாரது அஸ்தி கீரிமலை தீர்த் தக்கேணியில் கரைக்கப்படும். அதனைத் தொடர்ந்து நடைபெறும் சபிண்டீகரண நிகழ்விலும் மதிய போசன நிகழ்விலும் கலந்துகொண்டு அன்னாரின் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

*அவித்தாப்புலம்,*
*ஊரிக்காடு வல்வெட்டித்துறை*

*குடும்பத்தினர்.*

## மரண அறிவித்தல்கள்

### கந்தையா மனோன்மணி



அத்தியடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா மனோன்மணி (21.02.2012) செவ்வாய்க்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னுத்துரை - இலட்சுமிப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மகளும் காலஞ்சென்ற கந்தையாவின்(Hong Hong Bank) அன்பு மனைவி யும் காலஞ்சென்றவர்களான பொன்னம்மா, மகேஸ்வரி, முத்துக்குமாரசாமி, மற்றும் பரமேஸ்வரியின் அன்புச் சகோதரியும் குணரட்ணராஜா, லோகநாதன்( Agro Industry-கோண்டாவில்), மோகனாம்பாள்(வடிவு), சிவநேசன் (லண்டன்), ஆகியாரின் அன்புத் தாயும் நாகேஸ்வரி, புஸ்பகாந்தா, சித்தி ஆகியோரின் அன்பு மாமியும் கௌரி, காயத்திரி, கௌசி, றாக்கேஸ் (றோஸன்), கயன்தன் (டெனி), சங்கீத்தா ஆகியோரின் அன்புபேத்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.02.2012) வியாழக் கிழமை பிற்பகல் 2 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத் துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

***42, அம்பலவாணர் வீதி,***
***அத்தியடி, யாழ்ப்பாணம்.***

***தகவல்:***
***பிள்ளைகள்.***

### சுப்பிரமணியம் கண்மணி



கைதடியைப் பிறப்பிடமாகவும், கோப்பாய் தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் கண்மணி நேற்று (22.02.2012) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சரவணை - செல்லாச்சி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான கந்தையா - பொன்னம்மா தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற சுப்பிரமணியத்தின் அன்பு மனைவியும், சின்னத்துரை, செல்லத்துரை, அமுதலிங்கம் ஆகியோரின் பாசமிகு சகோதரியும், புஸ்பராணி, லலிதா, றஞ்சன், சற்குணசிங்கம், ரவீந்திரன், ரவிச்சந்திரன், றட்ணேஸ்வரன் ஆகியோரின் அன்புத் தாயும், பாலசுப்பிரமணியம், சிவராசா, ராதா, விஜயகுமாரி, கண்மணி, ஸ்ரீலதா ஆகியோரின் அன்பு மாமியும், உமாரஷிகா - ராஜ் குமார், உமாரமணன், விஜிதா, சோபிதா - சொர்ணன், கீர்த்திகா, கண்ணன், நிஷான், நிருஜா, நிதர்சன், சுயிவா, தர்சனா, அபிஷனா, சாருஜா, சானுஜன், நிஷானி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், லக்சிகா, லக்சாயினி ஆகியோரின் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.02.2012) வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடை பெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோப்பாய்க் கந்தன்காடு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*பழைய வீதி, கோப்பாய் தெற்கு,*
*கோப்பாய்.*

*தகவல்:*
*மகன் (வவா).*

### மார்ச் மாத முதல் வாரத்தில் கூட்டமைப்பு இந்தியாவுக்கு

»1 நடுநிலை வகிப்பதும் இலங்கை அரசை ஆதரிப்பதான அர்த்தத்தையே கொடுக்கும் என்பதால் புதுடில்லி அத்தகைய நிலைப்பாட்டை எடுக்காது என்றே கொழும்பிலுள்ள இந்திய ராஜதந்திரிகள் நம்புகின்றனர். எனினும் இறுதி முடிவு புதுடில்லியில் உள்ள அதிகாரிகள் மற்றும் அரசியல் தலைவர்களாலேயே மேற்கொள்ளப்படும் என்றும் அவர்கள் கூறுகின்றனர். (உ-01)

## கோத்தபாயவின் இரகசிய கருத்தரங்கு நுவரெலியாவில்

»1 பட்டுள்ளதாக தெரியவந்துள்ளது.

இந்த இரண்டு நாள் கருத்தரங்கில், ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷ, அமைச்சர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கலந்து கொள்வர் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

கருத்தரங்கைக் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ ஆரம்பித்து வைத்து முக்கிய உரை ஒன்றை நிகழ்த்தவுள்ளதுடன், முப்படைகளினதும் உயர் அதிகாரிகள் பலரும் உரையாற்றவுள்ளனர்.

எனினும் ஆளும்கட்சியின் அமைச்சர்கள் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு ஒழுங்கு செய்யப்பட்டுள்ள இந்த இரகசிய கருத்தரங்கிற்கான நோக்கம் என்ன என்று இதுவரை தெரியாதுள்ளதாக மூத்த அமைச்சர் ஒருவர் கூறியுள்ளார்.

இது போன்ற கருத்தரங்குகளை, நாடாளுமன்ற உறுப்பினர்களுக்குப் பாதுகாப்பு அமைச்சு ஏற்பாடு செய்வது தொடர்பாக, நாடாளுமன்ற நிலையியல் கட்டளைச் சட்டத்திலோ அல்லது பொதுச் சட்டத்திலோ எந்தக் குறிப்பையும் காண முடியவில்லை என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த இரண்டு நாள் கருத்தரங்கிற்காகத் தியத்தலாவ பிரதேசத்தின் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

அத்துடன், கோத்தபாய ராஜபக்ஷவின் கீழ் உள்ள நகர அபிவிருத்தி அதிகார சபையின் உத்தரவுக்கு அமைய, சட்டவிரோத குடியிருப்பாளர்கள் பாதுகாப்புக் காரணங்களுக்காக தியத்தலாவ பகுதியில் இருந்து அகற்றும் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படுகின்றன.

இலங்கை மீது போர்க்குற்ற விசாரணை அழுத்தங்களும், ஜெனிவாவில் ஐ.நா மனித உரிமைகள் சபையின் கூட்டத்தொடரும் நடைபெறவுள்ள சூழலிலேயே இந்தக் கருத்தரங்கு ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

போர்க்குற்றங்களுக்குப் பொறுப்புக் கூறும் பொறிமுறை ஒன்றை உருவாக்குவது தொடர்பாக, அரசுக்குள் மாற்றுக் கருத்துகள் இருக்கின்ற நிலையில், இதுபற்றி இந்த இரகசியக் கருத்தரங்கில் கலந்துரையாடப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

தகவல்கள் வெளியே கசியாத வகையில், இறுக்கமான சூழலில் இந்தக் கருத்தரங்கை நடத்த வேண்டும் என்பதற்காகவே, கொழும்புக்கு வெளியில் உள்ள - முற்றிலும் இராணுவ மயப்பட்டதொரு பகுதிக்குள் இது ஒழுங்கு செய்யப்பட்டிருக்கலாம் என்றும் கருதப்படுகிறது. (த)

## சவேந்திர சில்வாவால் ஆசிய நாடுகளுக்கு கடும் அழுத்தம்

»1 தமிழ் அமைப்புகளும், இந்த நியமனம் தொடர்பாக மறுபரிசீலனை செய்யுமாறு ஆசிய நாடுகள் குழுவிடம் முறைப்படியாகவும், மறைமுகமாகவும் அழுத்தம் கொடுத்துள்ளன.

கடந்த வெள்ளியன்று இதுகுறித்துக் கலந்துரையாடிய இந்தியா, பங்களாதேஷ், பாகிஸ்தான் ஆகிய நாடுகள், இலங்கை தமது பிரதிநிதியை விலக்கிக் கொள்ள வேண்டும் என்று கோரியுள்ளன.

சர்ச்சைக்குரிய ஒருவரை இந்தப் பதவிக்கு இலங்கை நிறுத்தியது குறித்து இந்தியா, பங்களாதேஷ் ஆகிய நாடுகள் ஏமாற்றமடைந்துள்ளன.

இந்த நியமனத்தினால், ஐ.நா. பொதுச்செயலர் பான் கீ மூனும் கடும் நெருக்கடிகளைச் சந்தித்து வருகிறார்.

இந்த விவகாரத்தில் ஐ.நா பொதுச்செயலருக்கு எந்தத் தொடர்புமில்லை என்று அவரது பேச்சாளர்கள் திரும்பத் திரும்பக் கூறினாலும், அவர் இதுகுறித்து அக்கறைப்படாமல் இருப்பதான குற்றச்சாட்டு இருந்து வருகிறது.

இதற்கிடையே, போர்க் குற்றச்சாட்டுகள் மற்றும் தெரிவு தொடர்பான சர்ச்சைகளுக்கு நடுவே, இலங்கை அரசு மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வாவுக்கு உயர்ந்தபட்ச வசதிகளை செய்து கொடுத்துள்ளது.

அண்மையில் இவர் தனது பணியகப் பாவனைக்காக பிந்திய ரகத்தைச் சேர்ந்த பி.எம். டபிள்யூ ஏழு இலக்க வரிசை வாகனத்தை வாங்கியுள்ளார்.

நியூயோர்க்கில் இதன் பெறுமதி ஒரு இலட்சம் டொலருக்கும் அதிகமாகும். இலங்கை வெளிவிவகார அமைச்சே இதற்கான நிதியை வழங்கியுள்ளது.

இத்தகைய வசதிகள் ஐ.நாவுக்கான இலங்கையின் நிரந்தர வதிவிடப் பிரதிநிதி பாலித கொஹன்னவுக்கு இல்லை.

அதைவிட சவேந்திர சில்வாவின் வீட்டுக்கான கொடுப்பனவை மாதாந்தம் 5000 டொலரில் இருந்து 11,500 டொலராக வெளிவிவகார அமைச்சு அதிகரித்துள்ளதும் குறிப்பிடத்தக்கது. (த-சி)

## இறுதி போர்க் குற்றச் சாட்சியான அமெ. ஊடகவியலாளர் படுகொலை

»1 இராணுவத்தின் துப்பாக்கிச் சூட்டில் படுகாயமடைந்து ஒரு கண்ணை இழந்திருந்தார்.

போரின் இறுதிக்கட்டத்தில் சரணடைய முன்வந்த விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் பா.நடேசன் உள்ளிட்டோருடன் இவர் இறுதிவரை தொடர்பில் இருந்தவர் என்பதுடன் அதுபற்றிய உண்மைகளையும் வெளிப்படுத்தியிருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (த)

## ஜெனிவாவுக்கு கொண்டு செல்லும் திட்டத்தை மூடி மறைக்கிறது அரசு

»1 எழுப்பினார்.

நேற்று நாடாளுமன்றத்தில் இவ்விடயம் தொடர்பாக விசேட உரை ஒன்றை நிகழ்த்திய ரணில் விக்கிரமசிங்க சபையில் மேலும் பல விடயங்களைச் சுட்டிக்காட்டினார்.

ஜனாதிபதியினால் நியமிக்கப்பட்ட நல்லிணக்க ஆணைக்குழு 18 மாத தேடல்களின் பின் சமர்ப்பித்த அறிக்கையைச் சபை முதல்வர் இந்த நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்தார்.

அப்போது அவர் கூறியதை இங்கு நினைவுபடுத்த விரும்புகின்றேன். நல்லிணக்க ஆணைக்குழு இறுதிக்கட்டத்தின் போது இடம்பெற்ற சம்பவங்கள், குற்றச்சாட்டுகள், மனித உரிமை மீறல்கள், இனப்பிரச்சினைத்தீர்வு என பல விடயங்கள் தொடர்பாகப் பல பரிந்துரைகளை முன்வைத்துள்ளது.

அந்தப் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதற்குக் கட்சி வேறுபாடுகளுக்கு அப்பால் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என அரசின் தரப்பில் கேட்டுக்கொள்கிறேன் - என்று சபை முதல்வர் இந்த நாடாளுமன்றத்தில் கேட்டுக்கொண்டார்.

இந்த அறிக்கை தொடர்பாக இரண்டு அரசியல் கட்சிகள் தமது கருத்துக்களை முன்வைத்துள்ளன.

ஐக்கிய தேசியக் கட்சி இந்த அறிக்கையை முற்றாக ஏற்றுக்கொள்ளாவிட்டாலும் தேசிய நலன் கருதி ஆதரவு வழங்க முன்வந்தோம்.

ஜெனிவாவில் நடைபெறவுள்ள மனித உரிமைகள் பேரவை நமது நாட்டைப் பொறுத்தவரையில் மிகவும் முக்கியமான ஒன்று. அங்கு பல்வேறு கேள்விகளுக்குப் பதில் அளிக்கப்பட்டே ஆக வேண்டும் என்ற நிலையும் ஏற்பட்டுள்ளது.

வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் மற்றும் பெருந்தோட்டக் கைத்தொழில் துறை அமைச்சர் மஹிந்த சமரசிங்க ஆகியோரை மேற்கோள் காட்டி வெளியாகி உள்ள செய்திகள் எம்மை அதிர்ச்சி அடையச் செய்துள்ளன.

இலங்கைக்கு எதிராகச் சுமத்தப்பட்டிருக்கும் குற்றச்சாட்டுக்கள் இலங்கை அரசால் நியமிக்கப்பட்ட நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகள் தொடர்பாக இலங்கை அரசின் தேசிய செயல்ப்பாட்டுத் திட்டம் தொடர்பான அறிக்கை ஒன்று ஜெனிவா மனித உரிமைகள் பேரவையில் இலங்கை அரசினால் முன்வைக்கப்படும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதேவேளை இறுதிக்கட்ட யுத்தத்தின்போது இடம்பெற்ற சம்பவங்களுடன் தொடர்புடையவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும் என ஐ.நா. வதிவிடப் பிரதிநிதி கூறுகின்றார்.

இவற்றை எல்லாம் உற்று நோக்கும்போது இந்த அரசு நாடாளுமன்றையே புறக்கணிக்கின்றது என்றே தோன்றுகின்றது என ரணில் விக்கிரமசிங்க கோரிக்கை விடுத்தார். (த-2)

## இந்தியா செல்வோருக்கு மலேரியா தடுப்பு மாத்திரை

யாழ்ப்பாணம், பெப்.23

இந்தியாவுக்குச் செல்வோர் மற்றும் ஆபிரிக்க நாடுகளூடாக ஐரோப்பிய நாடுகளுக்குச் செல்வோர் மலேரியா தடுப்பு மாத்திரையான குளோரோ குயின் (Chloro Quin) மாத்திரையைப் பெற்றுச் செல்ல வேண்டும்.

சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைகளில் அல்லது அருகிலுள்ள வைத்தியசாலைகளில் இந்த மாத்திரையை இலவசமாகப் பெற்றுச் செல்ல முடியும் என யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

அவரது பணிமனையில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு கேட்டுக்கொண்டார்.

இதுபற்றி அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

யாழ். மாவட்டத்தில் 1990 ஆம் ஆண்டு காலப்பகுதியில் பெரும் பிரச்சினையாக மலேரியா நோய் காணப்பட்டது. அது படிப்படியாகக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டது.

ஆனால் கடந்த வருட இறுதியிலும் இவ்வருட ஆரம்பத்திலும் மலேரியாத் தொற்றுக்குள்ளாகியிருப்பவர்கள் யாழ். மாவட்டத்தில் கண்டறியப்பட்டனர். அவர்கள் பற்றிய ஆராய்ச்சியில் ஈடுபட்டபோது அவர்கள் இந்தியா சென்று வந்தவர்கள் மற்றும் ஆபிரிக்க நாடுகளூடாக ஐரோப்பிய நாடுகளுக்குச் செல்லும் பொருட்டு தற்காலிகமாக ஆபிரிக்காவில் தங்கியிருந்தவர்கள் என்பது தெரியவந்தது.

அதன் பிரகாரம் அவர்களுக்குச் சிகிச்சையளிக்கப்பட்டது. இத்தகைய நாடுகளுக்குச் சென்று வருவோர் மருத்துவப் பரிசோதனை செய்தல் வேண்டும்.

இவ்வாறான நாடுகளுக்குச் செல்பவர்கள் ஒரு வாரத்துக்கு முன்னர் இருந்து இங்கு குளோரோ குயின் மாத்திரையைப் பாவித்தல் வேண்டும். நீங்கள் செல்லும் நாடுகளில் தங்கியிருக்கும்போதும் இந்த மாத்திரைகளைப் பாவித்தல் வேண்டும். மீண்டும் யாழ்ப்பாணத்துக்குத் திரும்பி வந்த பின்னரும் இரண்டு வாரங்களுக்கு இந்த மாத்திரைகளைப் பாவிக்க வேண்டும். அப்பொழுதுதான் மலேரியாத் தொற்று ஏற்படுவதிலிருந்து பாதுகாத்துக்கொள்ள முடியும்.

வன்னியிலிருந்து வந்த அல்லைப்பிட்டியைச்சேர்ந்த இரண்டு பேருக்கும் மலேரியாத் தொற்று இருக்கின்றமை கண்டறியப்பட்டு சிகிச்சையளிக்கப்பட்டது. தற்போது இந்நோய்த் தொற்று கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளபோதும் மக்கள் அதுபற்றி விழிப்பாக இருத்தல் வேண்டும்.

இந்தச் சந்திப்பில் பிராந்திய தொற்றுநோய் தடுப்புப் பிரிவு வைத்திய அதிகாரி எஸ்.சிவகணேசன், சுகாதாரக் கல்வித்திட்ட அதிகாரி எஸ். பிரணவன் ஆகியோரும் கலந்துகொண்டு விளக்கமளித்திருந்தனர். (த-4)

## ஜெனிவா கூட்டத்தொடரில் அமெ. உயர்மட்ட அதிகாரி

»1 ஐதந்திரி பார்வையாளராகக் கலந்துகொள்வாரென்றும் இலங்கைக்கெதிரான தீர்மானம் நிறைவேற்றப்படுவது அமெரிக்க பிரதிநிதியின் இந்த பிரசன்னம் உதவியாக இருக்குமென்றும் கொழும்பிலுள்ள மூத்த அமெரிக்க இராஜதந்திரி ஒருவர் 'உதயனு'க்குத் தெரிவித்தார்.

அமெரிக்க வெளியுறவுத்துறை அமைச்சர் ஹிலாரி கிளின்டன் தற்போது லண்டனில் தங்கியிருக்கிறார். அவர் அங்கிருந்து ஜெனிவா செல்வாரா என்ற கேள்விக்குப் பதிலளித்த மேற்படி இராஜதந்திரி, அது குறித்த பகிரங்க கருத்து வெளியிட முடியாதென்றும் ஆனால், அமெரிக்காவின் உயர்மட்ட பிரதிநிதியொருவர் ஜெனிவாவில் இருப்பது உறுதி என்றும் திட்டவட்டமாகத் தெரிவித்தார். (த-சி)

## மேற்குலகுக்குத் தகுந்த பாடம்

»1 நாட்டில் பல்வேறு சர்ச்சையை ஏற்படுத்தியுள்ள தற்போதைய சூழ்நிலையில், இலங்கைக்கு எதிரான மேற்குலகின் நடவடிக்கைகளுக்கு அமைச்சர் விமல் வீரவன்ஸ, 'எதிர்ப்பு பிளஸ்' எனப் பெயரிட்டுள்ளார்.

2004ஆம் ஆண்டு ரணில் விக்கிரமசிங்கவைத் தோற்கடிக்காமலிருந்திருந்தால் இன்று நாடு இரண்டாகப் பிளவுபட்டிருக்கும் என்றும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

பத்தரமுல்லையில் இடம்பெற்ற வீடமைப்புத்திட்ட நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரை நிகழ்த்தும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். (த-சி)

## நியாயத்தை நேரில் கூறிவிட்டேன் தீர்வை தருவது அரசின் பொறுப்பு

»1 டும். பின்னர் தெரிவுக்குழுவுக்குச் செல்லலாம் என்ற கூட்டமைப்பின் நிலைப்பாடு குறித்து ஏற்கனவே ஜனாதிபதியுடனான சந்திப்பின்போது நான் வலியுறுத்தியிருந்ததை நேற்றுமுன்தினம் நடந்த சந்திப்பின் போதும் சுட்டிக்காட்டினேன்.

இது எனது தனிப்பட்ட பிரச்சினையல்ல. என்னால் தனியாகத் தீர்மானிக்க முடியாது. ஒட்டுமொத்த தமிழரின் உணர்வுகளைப் பிரதிபலிக்கவேண்டிய கடப்பாடு எனக்குள்ளது. நாங்கள் அநீதியாகச் செயற்படவில்லை. நியாயமான முறையில் ஒரு தீர்வையே கேட்கிறோம். இதனை நான் வலியுறுத்திக் கூறிவிட்டேன்.

எமது தரப்பில் என்னென்ன நியாயங்களோ, எவற்றைச் சொல்லவேண்டுமோ அவற்றைச் சொல்லிவிட்டோம். இனி அவர்கள் என்ன செய்யவேண்டுமென்பதை அவர்களே தான் தீர்மானிக்கவேண்டும் - என்றார் சம்பந்தன் எம்.பி.

## எண்ணெய்க்கான வேள்வியில் எரிகின்ற சிந்தனைகள்

»14 எண்ணெய்க்கான வேள்வியில் எரிகின்ற சிந்தனைகள் என்ற தலைப்பில் நேற்றைய உதயனின் 14ஆம் பக்கத்தில் வெளியான கட்டுரையின் தொடர்ச்சி தவறுதலாக விடப்பட்டுவிட்டது. அந்தத் தொடர்ச்சியை இங்கே காணலாம். அந்தக் கட்டுரையை ஆக்கியவரின் பெயர் செந்தூரி. தவறுதலாக அதுவும் நித்தியபாரதி என்று பிரசுரமாகிவிட்டது. இந்தத் தவறுகளால் வாசகர்களுக்கு ஏற்பட்ட இடைஞ்சல்களுக்கு உதயன் வருத்தம் தெரிவித்துக்கொள்கிறான்.

தொடர்ச்சி இதோ....

தன்னால் பாதுகாக்கப்பட வேண்டியவர்கள் எனும் கடப்பாட்டுக்குரிய அப்பாவித் தமிழ் மக்களை, அடைத்த கொலைக்களத்தினுள் அடிமாடுகளாய் நிறுத்தி தடை செய்யப்பட்ட ஆயுதங்களால் சகட்டு மேனியாகச் சிதைத்தபோது கண்டு கொள்ளாத அதே உலக தேசங்களின் பொருளாதார சுயலாபத்திற்காக இலங்கை இப்போது தன் தலைக்கு மீறிய பொருளாதார சுமையை சுமக்கவேண்டியுள்ளது.

தமிழின அழித்தொழிப்பிற்கு ஆக்கமும் ஊக்கமும் கொடுத்த அத்தனை பேரினதும் அத்தனை தேசங்களுக்குமான நன்றியறிதலாக தனக்கு மீறிய விரல் வீக்கத்தைத் தன் மீது திணித்துக் கொண்டுள்ள இத்தீவு மனித உரிமைக் கூட்டத் தொடரின் முடிவில் எடுக்கப்படும் தீர்மானங்களின் இறுதியில் மீண்டும் ஒருமுறை தோற்றுத் தலை குனியப் போவது ஏறத்தாழ உறுதியாகிப் போனது.

சுதந்திர வர்த்தக வலய ஊழியரின் சாவினை அடுத்து நீர்கொழும்பு மீனவனையும் காவு வாங்கிய ஆர்ப்பாட்ட ஊர்வலங்களின் வேரினைப் புரிந்துகொள்ளாது குருத்திலைகளை கிள்ளியெறிவதில் எவ்வித பயனும் ஏற்பட்டு விடப்போவதில்லை.

அகிம்சை, அமைதிப் போராட்டங்கள் வெற்றி பெற வேண்டும் எனின் நியாயம் கேட்பவனின் கோரிக்கைகளை விட நியாயம் கோரப்படுபவனின் ஜனநாயக பண்பு ஒரு சதவீத மேனும் மிதப்பினை கொண்டிருக்க வேண்டும். அப்போதுதான் நீதி வாழ்வு பெறும்.

காந்தியின் போராட்டத்தை விட பிரிட்டிஷ்காரரின் ஜனநாயகத்தின் மீதான கொள்கைப் பிடிப்பு இவ்விடத்திற்குச் சாலச் சிறந்த உதாரணம்.

"பேயரசு செய்தால் பிணந் தின்னும் சாஸ்திரங்கள்" வேறென்ன சொல்ல முடியும் நம்மால்?

# ஆங்கிலம்

ஒரு மணிநேர இலவச கற்கைநெறி

**23.02.2012 வியாழன்**

1 : காலை 8.00 – 9.00 2 : காலை 10.00 – 11.00
3 : மாலை 3.00 – 4.00 4 : மாலை 5.00 – 6.00

அனுமதி இலவசம், பயிற்சி புத்தகம் இலவசம்
பயிற்சிக்கான சான்றிதழ் இலவசம்

(பாடசாலை மாணவர்கள் பயிற்சியில் சேர்த்துக்கொள்ளப்பட மாட்டார்கள்)

**இந்த விளம்பரத்துடன்** வகுப்புக்கு வரும் அனைவருக்கும் ஆங்கில கற்கைநெறிக்கான **CD** முற்றிலும் இலவசம்

**MyWay English**
182 ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்
077 33 63 456


# பல்கலை கல்விசாரா ஊழியர் அடையாள வேலை நிறுத்தம்

## சம்பள முரண்பாட்டை நீக்கக் கோரி

யாழ்ப்பாணம், பெப். 23

பல்கலைக்கழக ஊழியர்களின் சம்பள முரண்பாட்டினை நீக்கக் கோரி நாடளாவிய ரீதியில் கல்வி சாரா ஊழியர்கள் இன்றும் நாளையும் அடையாள வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளனர்.

அனைத்துப் பல்கலைக்கழகத் தொழிற்சங்கங்களின் கூட்டுக் குழு இந்த வேலை நிறுத்தத்துக்கான ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளது.

பல்கலைக்கழக ஊழியர்களின் சம்பள மீளாய்வு குறித்து தொழிற்சங்கங்களின் கூட்டமைப்புப் பிரதிநிதிகளுக்கும், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுக்குமிடையில் கடந்த இரண்டாம் திகதி இடம்பெற்ற பேச்சுக்களின் பின் சம்பள மீளாய்வுக்காக கடந்த 16ஆம் திகதி வரை காலக் கெடு விதிக்கப்பட்டிருந்தது.

கோரிக்கைகள் நிறைவேற்றப்படாத நிலையில் அனைத்துப் பல்கலைக்கழகங்களிலும் கல்வி சாரா ஊழியர்கள் இன்றும் நாளையும் அடையாள வேலைநிறுத்தத்தில் ஈடுபடவுள்ளனர். எதிர்வரும் 29ஆம் திகதி முதல் தொடர் வேலை நிறுத்தப் போராட்டத்தில் குதிக்கவுள்ளனர்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலும் இந்த வேலை நிறுத்தப் போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளதாகவும் மாணவர் விடுதிகளுக்கான நீர் வழங்கல்சேவைகள்மற்றும்பாதுகாப்புச்சேவைகள் தடைப்படாவண்ணம் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என்றும் யாழ். பல்கலைக்கழக ஊழியர் சங்கம் அறிவித்துள்ளது.

இதேவேளை-

வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபடுபவர்களுக்கு எதிராக சம்பள மற்ற விடுப்பு உட்பட கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு அறிவித்திருப்பதாக அறியவருகின்றது.

இன்றைய கல்வி சாரா ஊழியர்களின் வேலை நிறுத்தப் போராட்டத்துக்கு தமது முழு ஆதரவினையும் வழங்க விருப்பதாக யாழ். பல்கலைக்கழக விஞ்ஞான ஆசிரியர் சங்கம் அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (த)


## TIPPER வாடகைக்குத் தேவை

3 cube Tipper கிளிநொச்சியில் Road வேலைக்கு நீண்டகால வாடகைக்கு அல்லது குத்தகைக்குத் தேவை.

**தொடர்பு :- 0718182087**

## ஆஸ்திரேலியா 5 வருட குடும்ப விசா

ஆலோசனை இறுதி நாள் 25.02.2012

மன்னார், வவுனியா மக்களுக்காக விசேடமாக திசைகாட்டியின் இடம் பெயர் சேவை நடத்தப்படுகின்றது.

**S. சஜீந்திரன்**

வடக்கு மாகாண முகாமையாளர்,
திசைகாட்டி (பிறைவேற்) லிமிட்டெட்,
பதிவு இல. PV 82703
0773454304 எந்நேரமும்.



115ஏ, இரத்தினபுரம் வீதி, கிளிநொச்சி.
021 228 5544.

# மணல் விற்பனைக்குண்டு

நாற்பது வருடங்களாக கட்டிட வேலைகளுக்கும், பூச்சு வேலைகளுக்கும் சிறந்ததெனும் நாமத்தைப் பெற்ற உப்புத் தன்மையற்ற மணல் 26 வருடங்களின் பின் இப்போது யாழ்ப்பாணத்தில்.

4 டிரக்டர் - 24000/-
அரிந்த கல்லும் விற்பனைக்குண்டு.
(கல்லு 1 -38/-)

தொடர்புகளுக்கு
கண்ணா
0776766499


## சாவகச்சேரி ஆஸ்பத்திரிக்கு சாதனங்கள்

ஜப்பானிய நிறுவனமொன்றினால் யாழ். குடாநாட்டில் மேற்கொள்ளப்பட்டு வரும் போசாக்கு மேம்பாட்டுத் திட்டத்தில் சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்கான தகவல் தொடர்புச் சாதனங்கள் நேற்று வழங்கப்பட்டுள்ளன.

ஜப்பானிய சமூக அபிவிருத்தி நிதிய (ஜே.எஸ்.டி.எப்) திட்டத்தின் கீழ் சாவகச்சேரி அலுவலகத்துக்கு ஒலிபெருக்கிச் சாதனங்கள், புகைப்படப் பிரதி இயந்திரம், மடிக் கணினி இயந்திரம், பிரிண்டர், பக்ஸ் இயந்திரம் உட்பட பல்வேறு சாதனங்கள் வழங்கப்பட்டுள்ளன.

சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் மேற்கொள்ளப்பட்டு வரும் போசாக்கு மேம்பாட்டுத் திட்டத்தை மேலும் விஸ்தரித்து விழிப்புணர்வை மக்களிடையே ஏற்படுத்துவதற்காக இந்த சாதனங்கள் வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

(ந-9)


## யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி இல்லமெய்வல்லுநர் போட்டி - 2012

தலைவர் : திரு. வீரவாகு கணேசராசா
இடம் : கல்லூரி மைதானம்
காலம் : 24.02.2012 வெள்ளிக்கிழமை பி.ப. 1.30 மணி
பிரதம விருந்தினர் : திரு. மதியாபரணம் சிவகுமாரன் அவர்கள் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கம் ஆஸ்திரேலியா, விளையாட்டுத்துறை செயற்குழு தலைவர், சிட்னி
பரிசு வழங்கல் : திருமதி ஜெயா சிவகுமாரன் நிர்வாக உத்தியோகத்தர், பொதுத்துறை, சிட்னி

அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்.
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி

# SAAMSON ENGLISH 3 மாத ஆங்கில பயிற்சி நெறி

## எமது ஆங்கில பயிற்சி எவ்வாறானது?

* எழுத்துப் பயிற்சி இல்லை
* இலக்கணக்கற்றல் இல்லை
* C,D புத்தகக் கற்றல் இல்லை

ஆங்கிலத்தில் உள்ள அனைத்து வசன அமைப்புக்களையும் விளக்கி, மாணவர்களை ஒருவரோடொருவர் உரையாடற் பயிற்சியில் ஈடுபடுத்துவதன் மூலம் மட்டுமே நாம் ஆங்கிலத்தை பழக்கப்படுத்துகிறோம்.

**புதிய பயிற்சிப்பட்டறை ஆரம்பம் 25/02/2012**

சனி, ஞாயிறு பிரிவுகள்:- 09 - 11, 11 - 01, 02 - 04, 04 - 06
வார நாள் (திங்கள், புதன்) :- 08 - 10, 10 - 12, 01 - 03, 03 - 05

* ஒரு பிரிவில் 20 பேருக்கு மட்டும் அனுமதி
* 25.02.2012 இல் இணையும் அனைவருக்கும் பயிற்சி கட்டணம் 3500/- பின்னர் 6500/-

SAAMSON ENGLISH | 279, மணிக்கூட்டுக்கோபுர வீதி, யாழ்
TEL:077 621 4567

## உழவு இயந்திரம் விற்பனைக்கு

நல்ல நிலையில் உள்ள Englend 240, இல NP HR XXXX உழவு இயந்திரம் ஒன்று விற்பனைக்குண்டு.

தொடர்புகளுக்கு:
0776015249, 0776059769
கச்சாய் வீதி, பளை.

## செங்கல் விற்பனைக்கு உண்டு

வீட்டுக்கு குளிர்ச்சி தரும் உறுதியான செங்கற்கள் உங்கள் இருப்பிடம் தேடி விநியோகிக்கப்படும்.



பல வடிவங்களில் பல்வேறு அளவுகளில் நிலப்பதிப்புக் கற்கள் மற்றும் பூகற்கள் (Grill) விற்பனைக்கு உண்டு,
வன்னி மற்றும் யாழ்ப்பாணம் போன்ற பிரதேசங்களுக்கு விநியோகம் செய்யப்படும்

**பிரணவன் என்ரபிறைசஸ்**
பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
077 3818799

## ஆஸ்திரேலியா 5 வருட குடும்ப விசா ஆலோசனை

இறுதி நாள் 25.02.2012. இதற்காக இன்று முதல் சனிக்கிழமை வரை 3 நாள்களும் எமது விசேட கருமபீடம் காலை 7 மணிமுதல் இரவு 7 மணிவரை சேவை வழங்கக் காத்திருக்கும்.

**A. பிரவீணா**



முகாமையாளர்,
திசைகாட்டி (பிறைவேற்) லிமிட்டெட்,
பதிவு இல. PV 82703
37, சிவகுருநாதர் ஒழுங்கை,
பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்

021 221 9016, 0756438555
www.thisaikaddi.lk

## வீடு விற்பனைக்கு

மானிப்பாய், சங்கரப்பிள்ளை வீதியில் பாடசாலை, வங்கி (Bank) பிரதானவீதிக்கு அருகில் 2¼ பரப்புக்காணியுடன் கூடிய வீடு விற்பனைக்குண்டு. தரகர் தேவையில்லை.

தொடர்பு:
0752654815, 0774702015

## CHEMISTRY COURT

80, அரசடி வீதி, யாழ்ப்பாணம்

CHEMISTRY
2014 A/L
English Medium
Sat, Sun - (7-8) am
Tamil Medium
Mon, Fri - (3.30 - 5.00) pm
By : Rajah

## Diploma in Web Development

குறுகியகாலத்தில் அதிக சம்பளத்துடன் வேலை வாய்ப்புக்களையோ or சுயதொழில் வாய்ப்புக்களையோ தேடி நிற்கும் மாணவர்களின் சிறந்த தெரிவு....

நீங்கள் வீட்டில் இருந்து கொண்டே அதிகளவு பணம் ஈட்டிக்கொள்ளுங்கள்



New Batch Starts on 25.02.2012
காலை 10.00 மணி

அனுமதிக்கு முந்திக் கொள்ளுங்கள்

**Institute of Informatics Studies**
இல 100 மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பேசி :- 021 222 2831 தொ.நகல் :- 021 222 6933


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 23.02.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.